
# உயிர்க்கும் நினைவுகள்
# Blooming Memories



Jaffna Christian Union (J.C.U)

Jaffna.

# உயிர்க்கும் நினைவுகள்

# *Blooming Memories*

RESPONDING TO CHURCH UNITY

"நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி... யோவா 17:21"
"That they may be one as we are one... *John 17:22*"


வெளியீடு

**யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்**

**446, பிரதான வீதி,**

**யாழ்ப்பாணம்.**

நூலின் பெயர்:

உயிர்க்கும் நினைவுகள்

நூலின் வகை:

சுனாமி சார்ந்த பல் தரவுத் தொகுப்பு

ஆசிரியர் :

வி. பி. தனேந்திரா (யாழ். ராதவல்லி)

பக்கங்கள் :

IV + 110

முதற் பதிப்பு :

வைகாசி 2006

வெளியீடு :

யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்
446, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

கணினி - வடிவமைப்பு :

ஜெயந்த் சென்ரர்
28 , மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

அட்டை உட்பக்க பட வடிவமைப்பு:

திரு. அ. ஜுட்சன்

அச்சுப்பதிப்பு :

ஏ. சி. எம். அச்சகம்
யாழ்ப்பாணம்.

# பொருளடக்கம்

## உள்ளத்திலிருந்து / Message


வி. பி. தனேந்திரா ..... 01
டி.ஆர். அருமைநாயகம் ..... 03
Rev. Annappah Jeyakumaran ..... 04
Ven. S.P.Nesakumar ..... 20
அருள்பணி என்.ஜே. ஞானப்பொன்ராஜா ..... 24
Rev.Dr.Jayasiri Peiris ..... 27
Michelle.Y ..... 32
அருள்பணி மேஜர் நியூட்டன் எஸ்.ஜேக்கப் ..... 35
ஆர். கரிகரன் ..... 48
Rev.S.C. Arnold ..... 53
அருள்பணி எஸ்.கே. கதிர்காமர் ..... 57
Rev. Solomon Milton ..... 58
அருள்பணி. ஆர். யோன்செல்வம் ..... 74
Rev. Isaac Selvaratnam ..... 90


## மாளாத நினைவுகள் / Immortal Memories


Rani Sinnathamby ..... 10
Rev.Dr.David. G.Palmer ..... 28
Rev.Dr.D.S. Dharmapalan ..... 33
மேஜர் மு. கோகிலா ..... 38
அருள்பணி வீ.ந. தர்மகுலசிங்கம் ..... 45
பி.எ.எஸ். சுபியான் மௌலவி ..... 46
எ.என். சின்னத்துரை ..... 48
அருள்பணி ஏ.சி. கிறிஸ்ரோப்பர் ..... 57
அருள்பணி யே. பிரான்சிஸ் ..... 74
அருள்பணி பி. தேவதாஸ் ..... 76


## பல்துறை சார்ந்த சுனாமிக் கட்டுரைகள்


சுனாமியும் மீள் புனரமைப்பும்
**ப. இராஜேஸ்வரன்** ..... 05

ஆற்றுப்படுத்தலில் நம்பிக்கையை வளர்த்தல்
**வீ.பீ. தனேந்திரா** ..... 11

சுனாமியும் பண்டைக்காலமும்
**நா. நவநாயகமூர்த்தி** ..... 15

26.12.2004 ஆழிப்பேர் இடுக்கு அலைகளின் அகோரத்தாண்டவம்
**பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள்** ..... 17

இயற்கை அனர்த்தங்கள் வருவதை முன்னறிவிக்கும் விலங்குகள்
**இரா. சடகோபன்** ..... 25

இறைவனின் செயற்பாட்டைக் குறித்து மனிதன் கேள்வி எழுப்புகின்றான்
**அருள்பணி அ. ஸ்ரீபன்** ........ 31
சுனாமியும் வரும் காலங்களும்
**தார்மிகி** ........ 37
இறைபுகழ் தேடும் ஒரு மாற்றுப் பார்வை
**அருள்பணி. கலாநிதி தியான்சந்த் கார்** ........ 39
சாபமா? பாடமா? ........ 49
அந்தமானைப் பாருங்கள் அழிவு ........ 55
'ரிச்டர் புள்ளி' என்றால் என்ன?
**என். மொஹமட் அஸ்லம்** ........ 59
கடற்கோளை முன்கூட்டியே அறியும் உள்ளுணர்வு
**ராஜதிலகம்** ........ 63
சுனாமி அனர்த்தமும் அதன் பின் விளைவுகளும்
**க.வேல்தஞ்சன்** ........ 65
மீண்டும் கடல் அமைதிகொண்டு தானும் வழமைக்குத் திரும்பி எம்மையும் அழைக்கின்றது
**அருள்கலாநிதி அ.பீ. ஜெயசேகரம்** ........ 69
சுனாமியும் அதன் தாக்கங்களும்
**அருள்கலாநிதி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி** ........ 71
சுனாமி பற்றி சுவையான தகவல்கள் ........ 77
சுனாமியும் புனைவுகளும்
**அப்துல் றஸாக்** ........ 87

## கவிதைகள்

இறந்தோருக்கு அஞ்சலி வாழ்வோருக்கு எச்சரிக்கை
**சா.பி. கிருபானந்தன்** ........ 04
வாழ்வளித்த தாயே நீயே சாவும் அளித்தாய்
**புதுவை இரத்தினதுரை** ........ 29
துயரை வளர்த்தோம்
**சோ. பத்மநாதன்** ........ 47
பாலுக்கு ஓர் குழந்தை பாலூட்ட ஓர் அன்னை
**எஸ். சபா** ........ 62
எங்கள் கடலுக்கு என்ன நடந்தது?
**யாழ்வீரன்** ........ 81
இயற்கை சமநிலைகாண அர்ப்பணிப்புடன் காப்புரணாவோம்
**யோசப்பாலா** ........ 83
வேர்களிலிருந்து அரும்புவோம்
**அமுதமொழியன்** ........ 61

## பத்திரிகை ஆசிரியர் தலையங்கம்

'பாதுகாவலன்' ஆசிரியர் **(அருள்பணி ருபன் மரியாம்பிள்ளை)** ........ 36
'பாதை' ஆசிரியர்குழு ........ 47

'தொடுவானம்' ஆசிரியர் ........ 54
'தேவதாயின் குரல்' ஆசிரியர் (அருள்பணி ஜெ.இ.ஜெயசீலன்) ........ 58
'வெட்டாப்பு' ஆசிரியர் (அருள்பணி பீ. ஜோசப்) ........ 61
'ஆத்மா' ஆசிரியர் குழு ........ 62
'மன்னா' ஆசிரியர் (அருள்பணி நேசன்) ........ 68
'தினக்குரல்' ஆசிரியர் ........ 75
'உதயன்' அசிரியர் ........ 80
'ஈழநாதம்' ஆசிரியர் ........ 82
'நீரோடை' ஆசிரியர் (பெனடிக்ற் இயூஜின் *அ.ம.தி.*) ........ 84
'தெளிவு' ஆசிரியர் (வீ.பீ. தனேந்திரா) ........ 85
'நமது ஈழநாடு' ஆசிரியர் ........ 86
'வலம்புரி' ஆசிரியர் ........ 90

## யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் சுனாமி மற்றும் போர் நிவாரணப் பணிகளின் செயற்பாட்டுத் தகவல்கள்

உடனடி நிவாரணப் பணிகள்
**கே.ஜே. ஜெகதாஸ், வீ. டானியல் ஜெயரூபன்** ........ 91
மணற்காடு
**கே.ஜே. ஜெகதாஸ்** ........ 92
பருத்தித்துறை
**ரீ. அஜந்தன்** ........ 94
வல்வெட்டித்துறை
**வீ. டானியல் ஜெயரூபன், வீ.டி. ஜெயக்குமார்** ........ 96
மாதகல்
**செல்வி ஆர். அமித்தா** ........ 100
காரைநகர்
**ஏ.சீ. விஜயபதி, ஏ.ஏ. றோசினி** ........ 103
நெடுந்தீவு
**ஏ.சீ. விஜயபதி** ........ 104
யாழ்ப்பாணம்
**ஏ.சீ. விஜயபதி** ........ 104
Office Setup & Administration
**D.R. Arumaynayagam** ........ 106
We Gratefully Acknowledge ........ 107
Sumary Accounts ........ 108
J.C.U. Staff - 2005 ........ 108
J.C.U. Staff - 2006 ........ 109
நன்றிகள் ........ 110

## நூல் ஆசிரியரின்
## உயிர்க்கும் வரிகள்...

“மனதிலுறுதி வேண்டும் / வாக்கினிலே யினிமை வேண்டும் / நினைவு நல்லது வேண்டும் / நெருங்கின பொருள் கைப்படவேண்டும் / கனவு மெய்ப்பட வேண்டும் / கைவசமாவது விரைவில் வேண்டும் / தினமுமின்பம் வேண்டும் / தரணியிலே பெருமை வேண்டும் / காரியத்திலுறுதி வேண்டும்” (பாரதி)

வடக்கு – கிழக்கில் வாழும் மக்கள் கடந்த பல வருடங்களாகத் தொடர் மனஅழுத்தங்களில் வாழ்ந்து வருகிறார்கள். இதில் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் ஆழிப்பேர் அடுக்கு அலைகளினால் பாதிக்கப்பட்ட மக்கள் படும் துன்பங்கள் நீண்டது. இரு தசாப்த கால யுத்த வடுக்களில் இருந்து சமாதான உடன்பாட்டில் தேறிவந்த இம்மக்களை 'சுனாமி' இயற்கைப் பேரழிவு தாக்கியது. இப்பேரழிவு உலகத்தையே அதிரவைத்தது. எம்மவருக்கு இது புதிய அனுபவம். இந்த பாதிப்பின் அனுபவத்தில் இருந்து 'மீண்டு எழ' புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் அரச – அரசு சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றது. இங்கு குறித்த இலக்கில் வெற்றி காணுகின்றபோது மீண்டும் யுத்த மேகம் வடக்கு – கிழக்கு எங்கும் கருக்கொண்டதுபோல மனித உயிர்கள் வன்முறைச் செயல்களால் பறிக்கப்படுகின்றது.

இறைவா! இவற்றுக்குத் தீர்வு இல்லையா! என்ற ஏக்கப் பெருமூச்சு அனைத்து உள்ளங்களிலும் ஓங்கி ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. அதன் சித்தரிப்பாக இந்த நூலின் அட்டைப்படத்தில், அந்தத் தயார் தலையில் கைவைத்து அழுது புலம்பும் காட்சியை வடிவமைத்துள்ளோம்.

மரணங்கள் மலிந்த பூமி எங்கள் நாடு; தர்மத்தைப் போதிக்கின்ற சமயங்கள் நிறைந்ததும் எங்கள் நாடு. அன்பை – நீதியை – தர்மத்தை – உண்மையை – சகோதரத்துவத்தை விதைக்க வேண்டியதுதான் சமயங்களின் கடமை. இதுதான் கிறிஸ்தவம் – இந்து – பௌத்தம் – இஸ்லாம் ஆகிய மதங்களின் அடிப்படைத் தத்துவங்கள். இந்த மதங்கள் நிறைந்த எமது நாட்டில் மேலோங்கியிருப்பது வன்முறை – அநீதி – மரணம் – காட்டிக்கொடுப்பு – துன்பம் இவ்வாறு மறையான செயல்கள் நீண்டு செல்லும்.

தாயுமானவர் 'பராபரக் கண்ணி' என்ற பாடலில் “எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல், வேறென் றறியேன் பராபரமே” என்கிறார். இந்த வேண்டுதலை அனைவரும் தினம் உச்சரித்து, பின்பற்ற வேண்டியது அவசியமானதுவாகும்.

இவ்வுலகில் வாழும் மனிதன் துன்பங்கள் இன்றி வாழவேண்டும். அவ்வாறு துன்பம் வருகின்றபோது அடுத்துள்ள மனிதன் அவனை ஆற்றித்தேற்றவேண்டும். மாறாக, அவனை மேலும் துன்புறுத்தக்கூடாது.

'சுனாமி'யின் அகோரத்தாண்டவம் கண்டு உலகமே கண்ணீர் வடித்தது. இனம், மதம், மொழி, வயது, பால் வேறுபாடு இல்லாமல் அனைவரையும் பாதித்தது.

“மனிதர் நோக மனிதர் பார்க்கும் / வாழ்க்கை இனியுண்டோ?” என்ற பாரதியின் ஏக்கத்திற்கு விடை காண்பதுபோல உதவிக்கரம் நீண்டுவோர், “இல்லை என்ற கொடுமை – உலகில் / இல்லையாக வைப்பேன்” என்று பாரதி தன் மொழியில் கூறியதுபோல் பாதிப்புற்ற கடற்கரைப் பிரதேசங்களுக்குப் படைசூழ்ந்தனர். அவர்கள் ஆற்றிய சமூகத்தொண்டு ஏராளம். அதாவது உணவு ஊட்டினார்கள்; உடைமைகள் கொடுத்தார்கள்; உடன் இருந்து நம்பிக்கை வளர்த்தார்கள்; மீண்டும் வாழ்வதற்கான உந்து சக்தியை வழங்கினார்கள்: இத்தகைய சமூக ஆதரவு தாராளமாய் கொடுக்கப்பட்டது.

இந்த சமூக ஆதரவுப் பணியில் மதம், மொழி, இனம், வயது, பால் போன்ற வேறுபாட்டை யாரும் பார்க்கவில்லை. இதனால், நீண்ட நாள் யுத்தம் சுனாமியுடன் நீங்கிவிடும் என அனைவரும் நம்பி எதிர்பார்த்தனர். ஆனால், இன்று அந்த நிலைமை மோசமானதாக மாறிவருகின்றமை வேதனைதருகின்றன.

இலங்கையில் தற்கொலை புரிவோரின் வீதம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என்ற மனவருத்தமான ஆய்வுச்செய்தி பரவலாகப் பேசப்படுகின்றது. உலகிலேயே தற்கொலை செய்வோர் வீதத்தில் முன்னணியில் நிற்கும் நாடு இலங்கை. 1990ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரையான 13 வருட காலத்தில் 63ஆயிரம் பேர் தற்கொலை புரிந்து கொண்டனர். (ஆதாரம்: 'புதியபூமி' மே, 2006) இதற்குப் பொருளாதாரமே காரணம் எனக்கூறப்படுகின்றது. அதாவது வறுமை, வேலையின்மை, போதிய வருவாய் கிடையாமை, குடும்பச் சச்சரவு, கலாசார சீரழிவு, யுத்தம், குற்றப் பழியுணர்வு, மிகை மன அழுத்தம் என இதற்கான காரணம் பல. இவற்றை தீர்க்காவிட்டால் தற்கொலை செய்வோரையும் தடுக்கமுடியாது.

எனவே, தொடர்ந்தும் துன்ப அனுபவத்தின் ஊடாக நகர்ந்து செல்லும் மக்களின் மட்டில் அனைவரும் கவனம் செலுத்தவேண்டும். அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டை செய்தால் மட்டுமே பணிநிறைவுற்றது எனக்கருதக்கூடாது. மாறாக, உள்ளத்தை மேம்படுத்தக்கூடிய வழிமுறைகளைக் கண்டுபிடித்து செயற்படுத்துவதும் மிக அவசியம்.

மகிழ்ச்சி என்பது மனம் சார்ந்த விடயம். வாழ்க்கையைப் பயனுள்ளதாக்குவதும், திருப்தியானதாக்கிக் கொள்வதும் மனம்தான். நாம் விரும்புகின்றபடி எமது வாழ்வில் எல்லாமே நிகழ்ந்துவிடுவது இல்லை. ஆனால், ஒன்றுமட்டும் உண்மை; நாம் எமது ஆற்றல்களை இனம்கண்டு கொண்டால் அதில் இருந்து பல சாதனைகளைப் படைக்க முடியும். இந்தப் பணி காலத்தின் தேவையாகும்.

எனவே, புனரமைப்புப் பணியில் ஈடுபடுகின்ற அரச – அரசு சார்பற்ற நிறுவனங்களே, நீங்கள்...

“மக்களிடம் செல்லுங்கள், அவர்களுடன் வாழுங்கள், அவர்களிடம் கற்றுக்கொள்ளுங்கள், அவர்கள் மீது அன்பு செய்யுங்கள், அவர்களுக்குத் தெரிந்ததுடன் ஆரம்பியுங்கள், அவர்களிடம் உள்ளதிலிருந்து கட்டியெழுப்புங்கள், நல்ல தலைவர்களுடன், பணி நிறைவாகி இலக்கும் எய்தப்படுகையில் 'நாங்களே செய்து முடித்தோம்' என மக்கள் மகிழ்வார்கள்.”

(லா ஓ ரிசு, சீனா, 700 கி.மு)

பாதிப்புற்ற மக்கள்மீது எவரும் கட்டுப்பாடு விதிக்கக்கூடாது. அந்தக் கட்டுப்பாட்டை அவர்களே தமக்கு விதிக்கவேண்டும். எவரும் அவர்களை ஆதிக்கம் செலுத்தவோ, அடிமைகளாக்கவோ, தங்கிவாழவோ தூண்டக்கூடாது. மாறாக, உழைத்து வாழ சக்திகொடுக்க வேண்டும். சமூகத்தில் நீங்கள் ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள் என்பதை வலியுறுத்திக் கூறவேண்டும்.

இன்றைய சூழலில் புனரமைப்பு நிறுவனங்கள் சார்ந்த பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றது.

'சுனாமிக்கு வந்த பணத்தை சுரண்டல் செய்துதான் அவர் முன்னேறினவர்.'

'நெடுகலும் கூடிக் கூடிக் கதைக்கினம், பெரிசா ஒண்டும் செய்யேல்ல.'

'தேவையுள்ள பிரதேசத்தை இனங்காணாது பணிசெய்யுறம் என்ற போர்வையில் பணிசெய்யினம்.'

'ஒழுங்கான முறையில் சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்காமல் இருக்கினம்.'

'சுயதொழில் ஊக்குவிப்பைக் கொடுத்தாலும், அவற்றைப் பொருத்தமற்று எல்லோருக்கும் ஒரே மாதிரி கொடுக்கினம்.'

'பாதிப்புற்ற மக்களுக்கு ஒதுக்கும் பணத்தைவிட; தங்கள் நிர்வாக வேலைகளுக்கும், சொகுசான போக்கு வரத்துக்கும், தங்குமிட வசதிக்கும், உணவுக்கும் அதிகம் செலவு செய்யினம்.'

'எல்லா நிறுவனமும் ஒரே பிரதேசத்தில் நிறையப்பணியாற்றினம், சில பிரதேசங்கள் இன்னமும் கவனிப்பாரற்று மீள்கட்டுமானப் பணிகள் தேக்க நிலையிலிருக்குது.'

இவ்வாறு அரச – அரசு சார்பற்ற நிறுவனங்கள் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகள் நீளும். இவற்றை மனங்கொண்ட நாம் இந்த நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்கள் மத்தியில் இருக்கின்ற மன அழுத்தங்களையும் ஊடறுத்துப் பார்த்தல் அவசியம்.

'சுனாமி அடிச்சு முடிஞ்சுது. அந்த மக்களும் கொஞ்சம் கொஞ்சமாகத் தேறி வருகினம். ஆனால், நாங்கள் நிம்மதியற்று தவிக்கிறம்.'

'நெடுகலும் தரவு சேகரிக்க நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்குது.'

'பாதிப்புற்ற மக்களிடம் போனால் என்ன கொண்டந்தனீங்கள் எண்டு கேட்கினம். என்னத்தைச் சொல்ல.'

'அந்த அம்மாவோட கதைக்கேக்க என்ர உள்ளம் நெகிழ்ந்துபோச்சு; இரவு நித்திரை இல்லை. கொஞ்ச நாளா ஒரே குழப்பம்.'

'பணத்தை மில்லியன் கணக்கில் செலவு செய்தாச்சு. இனி பில் கொடுத்து கணக்கு முடிக்கிறதில வாழ்க்கை வெறுத்துப்போகும்.'

'மேல் இடத்தில இருக்கிறவை வகுக்கும் திட்டங்களை குறிப்பிட்ட பிரதேசங்களில் செய்யமுடியாது. அடிக்கடி இலக்குகளை மாத்திக்கொண்டு இருக்கினம்.'

பாதிப்புற்ற மக்களுக்குப் பணியாற்றும் ஒவ்வொருவரும் மன அழுத்தம் கொண்டவர்களாகத்தான் இருக்கின்றார்கள். அவர்கள் எந்தப் பதவியில் இருந்தாலும் தமது பணிகளை முன்னெடுக்கும்போது பல சவால்களைச் சந்திக்கின்றார்கள். எனவே, அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டும். மாறாக, ஆற்றுப்படுத்தத் தவறினால் அவர்கள் மனநோயாளிகளாக மாற சந்தர்ப்பம் வெகுதொலைவில் இல்லை.

எனவே, 'முடியாது' என்று சோர்ந்து போகாது; 'முடியும்' என்ற எண்ணத்துடன் தொடர்ந்தும் பயணிக்க வேண்டும். சமூகப் பணி ஓர் அர்ப்பணிப்பான பணி. இவற்றைச் செய்ய எம்மை நாமே தயார்ப்படுத்தி, எமது உள்ளத்தை வலிமையுடையதாக்கி, எம்மை நாமே அடிக்கடி மீள்பார்வை செய்து ஆற்றுப்படுத்தல் வேண்டும். ஒய்வு நேரங்களில் ஆரோக்கியமான பொழுதினைக் கழிக்கவேண்டும். மிகை அழுத்த வேலைகளை சகபணியாளர்களுடன் பகிர்ந்து செய்தல்வேண்டும். உடனுக்குக் உடன் பணிகளை செய்து, அதற்குரிய அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். உயர் பதவியில் இருப்போர் எப்போதும் தமக்கு கீழ் பணியாற்றும் பணியாளர்கள் மீது கவனம் செலுத்தவேண்டும். அவர்கள் மனங்கள் நோகாதபடி அவதானமாக நடக்கவேண்டும். வார்த்தைப் பிரயோகங்களை இனிமையாகவும், அன்பு நிறைந்ததாகவும் பாவித்தல் வேண்டும். இந்த மாதிரியான விடயங்களில் அதிகம் கவனம் செலுத்தும்போதே குறித்த இலக்கை விரைவாக அடைய முடியும்.

'சுனாமி' பற்றி அநேக நூல்கள் வெளிவந்துள்ளது. அந்த வரிசையில் யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் வெளியீடாக "உயிர்க்கும் நினைவுகள்" என்னும் இந்நூல் 'சுனாமி' பற்றிய பலதரப்பட்ட அம்சங்களைக்கொண்டு வெளிவருகின்றது. இந்நூலில் யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் மேற்கொண்ட புனரமைப்புப் பணிகள் பற்றிய விபரங்களை படங்களாகவும், அறிக்கைகளாகவும் வெளியிடுவதோடு, இதில் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளினும் வெளிவந்த தரமான ஆக்கங்களையும் உள்ளடக்கியுள்ளோம். அவை அறிவியல், இறையியல், உளவியல், கவிதைகள், துணுக்குகள், ஆசிரியர் தலையங்கங்கள் எனப் பல்துறைசார்ந்து இருக்கின்றன. இவை அனைத்தும் மீள் பிரசுரங்கள். மேலும், யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்துடன் நெருக்கமானவர்கள் பலர் தமது கருத்தியலை வார்த்தைகளாக வடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, இந்நூல் வெளிவர அனுமதி தந்த யாழ். கிறிஸ்தவ ஒன்றிய நிர்வாக சபைக்கும், பணவுதவிகளை செய்தவர்களுக்கும், ஆக்கங்களை எழுதியோருக்கும், அதனை பிரசுரித்த பத்திரிகைகள் – சஞ்சிகைகளுக்கும், யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் நெருங்கிய நண்பர்களுக்கும் எமது அன்பு நிறைந்த நன்றிகள் பல...

*30 மே 2006*

**வி. பி. தனேந்திரா**

*(யாழ். ராதவல்லி)*



# தலைவரின் உள்ளத்திலிருந்து...

ஞாயிற்றுக்கிழமை 26 டிசம்பர் 2004ஆம் ஆண்டு அதிகாலை 6.29 மணிக்கு பெரும் உயிரழிவையும், சொத்தழிவையும் ஏற்படுத்திச் சென்ற, உலக சமூகத்தையே உறையவைத்த 'சுனாமி' அரக்கன் என்பவன் யார்? எங்கிருந்து உருவாகினான்?...

இன – மத, ஆண் – பெண், ஏழை – பணக்காரன், மழலை – முதியோர் என்ற வயது வேறுபாடின்றி அனைவரையும் சமத்துவமாக வாரி எடுத்துக்கொண்டது. தரைமட்டமாகிய வதிவிடங்கள், பாடசாலைகள், கோயில்கள், கரையெங்கும் இடிபாடுகள், வீதிகளில் தூக்கிவீசப்பட்ட மீன்பிடிக்கலங்கள், எங்கும் அழுகுரல்கள், ஒப்பாரிகள். இலங்கைத் தீவின் தென்கரை, கிழக்குக் கரை, வடக்குக் கரைப் பிரதேசங்கள் அனைத்தும் 'சுனாமி' அனர்த்தத்தால் சிதைந்து போயின. சுனாமிக்கு இரையாகிய 35,322 சடலங்கள் மீட்கப்பட்டன. மேலதிக அழிவுகள், சேதங்கள் பற்றிய விபரங்கள் பக்கம் 14 இல் தரப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் பருத்தித்துறை முனைப்பகுதி, வல்வெட்டித்துறை, வடமராச்சிப் பகுதிகள், முல்லைத்தீவு கடற்கரைப்பகுதியிலிருந்து உயிர்தப்பி சாவகச்சேரிப் பகுதிகளுக்கு வந்து, உறவுகளை இழந்து பரிதவித்த மக்கள் பட்ட துன்பம் சொல்லமுடியாதவை.

இந்த நிலையில் பல நிறுவனங்கள் மக்களுக்குப் பேருதவி வழங்கும் பணியில் ஈடுபட்டன. இப்பணியில் யாழ்ப்பாண கிறீஸ்தவ ஒன்றியமும் உடனடி நிவாரணப் பணியில் அருள் பணி என். ஜே. ஞானப்பொன்ராஜா தலைமையில் ஈடுபட்டது. யாழ் குடாநாட்டில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நாம் விரைந்து சென்று எம்மால் இயன்ற பணியை தெய்வ பயத்துடனும், தெய்வ பக்தியுடனும் மேற்கொண்டோம். எல்லாச் சபைகளின் மதகுருமார்கள் தோழோடு தோள்கொடுத்து எமக்கு உதவி நல்கினர். தொடர்ந்தும் உதவுகின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கான பல்வகை உணவுப்பொருட்கள், உடைகள், குழந்தைகளுக்கான பால்மா, நுளம்பு வலை முதலியன கொண்டுசென்று வழங்கினோம். இவைபற்றிய விபரங்கள் இம்மலரில் தொடர் கட்டுரைகளில் இடம்பெற்றுள்ளன. எம்மைப்போல பல நிறுவனங்கள் மக்களுக்குப் பேருதவி வழங்கும் பணியில் ஈடுபடுகின்றனர்.

எமக்கு கொழும்பு தேசிய கிறீஸ்தவ சங்கம் எங்களால் இனம்காணப்பட்ட திட்டங்கள் அனைத்திற்கும் நிதி உதவி வழங்க நாங்கள் இந்தப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளுகிறோம். வெளிநாடுகளிலிருந்தும் எமக்கு மெச்சத்தக்க அளவில் நிதி உதவி கிடைத்தமையால் எமது பணி மேலும் வலுவடைந்துள்ளது. உதவி நல்கியோர் விபரங்கள் வேறு பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மதவேறுபாடின்றி எல்லா மக்களுக்கும் உதவி செய்து வருகின்றோம். கடலில் மீன்பிடி பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு கட்டுமரங்களும் வழங்கினோம். சுனாமியால் மட்டுமன்றி போர் விளைவால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் துணை புரிகின்றோம்.

இப்பணியாற்றும் குழு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கூடி, பணிகள், செலவுகள் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிர்வாகக் குழுவின் ஆலோசனையுடன் செயல்திட்டங்களை மேற்கொள்கின்றது. இதில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நபர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டுவதோடு எனது நன்றிகளையும் கூற விரும்புகிறேன்.

எமது புனரமைப்புப் பணியில் இதுவரை ரூபா 16,632,030.57 செலவு செய்துள்ளோம். இதற்கான பணத்தில் எழுபத்தைந்து வீதத்தை தேசிய கிறீஸ்தவ சபை எமக்கு வழங்கியுள்ளது. அமெரிக்காவிலிருந்து வணபிதா. டி. எஸ். தர்மபாலன், ஒஸ்ரவில் ஐக்கிய மெதடிஸ்த சபை நண்பர்களிடமிருந்தும், நான் கனடா சென்றிருந்த வேளை அங்குள்ள தமிழ் கிறிஸ்தவ திருச்சபை, தூய மாகிறட் தமிழ் அங்கிலிக்கன் திருச்சபை இரண்டின் சபைக் குருவானவர்களும், எங்கள் யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்படும் பணியைப் பற்றி அவர்களின் சபை மக்களுக்கு எடுத்துரைக்கும்படி என்னைப் பணித்ததன்பேரில் அந்த சபை மக்களின் மனதில் ஏற்பட்ட நம்பகத்தன்மை அவர்களை நிதி உதவி செய்ய ஏவியது. அத்துடன் வேறு சில தனிப்பட்ட நண்பர்களின் நிதி உதவியினாலும் நாங்கள் இந்தப் பணியை பெருமளவில் செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் எமது நன்றிகள்.

போரினாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்டுச் சொத்து அனைத்தையும் இழந்த மக்களுக்குக்கு கட்டுப்பாடற்ற முறையில் நாம் ஆற்றிவரும் அனைத்துப் பணிகளையும் மக்கள் அனைவரும் அறியவேண்டும் என்ற நோக்குடனேயே இச் சிறப்பு மலரை வெளியிடுகின்றோம். எமது ஒன்றியத்தின் இலக்கியத்துறை பொறுப்பாளர் திரு. வி. பி. தனேந்திரா இம் மலரை வெளியிடப் பணியாற்றி வருகின்றார். இவருக்கும் எமது நன்றிகள்.

இம்மலருக்கான ஆசி உரை தந்தவர்களுக்கும், கட்டுரை எழுதி வழங்கியவர்களுக்கும், மலர் வெளியிட நிதி உதவி செய்தவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள்.


இப்பணியாற்ற எனக்கு அருள்புரிந்து துணை செய்த இறைவனுக்கு எனது உளம் நிறைந்த துதிகளும், ஸ்தோத்திரங்களும் உரித்தாகுக.

யாழ்ப்பாண கிறீஸ்தவ ஒன்றியத்தின் பணிகள் தொடர்ந்து பிரகாசிக்க இறைவனை வேண்டிநிற்கும்...

**டி. ஆர். அருமைநாயகம்**
தலைவர்,
யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்

# இறந்தோருக்கு அஞ்சலி
# வாழ்வோருக்கு எச்சரிக்கை

சா.பி. கிருபானந்தன்



அம்மையப்பனே இறைவா!
இனம், நாடு, மதம், சாதி, வர்க்கம், நிறம்,
நீதிமான், கெட்டவன்
என்ற வரையறைகளில் மனிதம்!
நல்லோர் மேலும் தீயோர் மேலும்
கதிரவனை உதித்தெழச் செய்கிறவர்
நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றவர்
மேலும் மழை பெய்யச்
செய்கிறவர்.

(மத். 5:45)

உமக்கும், நீர் எமக்குத் தந்த
இயற்கைக்கும் எவ்வித
வரையறையுமில்லையே இறைவா!

நான் அமர்வதையும் எழுவதையும்
நீர் அறிந்திருக்கின்றீர்
நான் நடப்பதையும் படுப்பதையும்
நீர் அறிந்திருக்கின்றீர்.

(திருப்பாடல் 139:2.3)

பிணத்தைத்தான் கீறிக் கிழிக்கிறோம்.
மரணத்து அத்தாட்சி தேடுகிறோம்.
ஏன்
மூச்சு வருவது என்பதற்கு
அத்தாட்சி இல்லை.
எமது இருப்புகளுக்கு
அத்தாட்சி இல்லை.
எல்லாம் உன் செயல்தான் இறைவா!

தப்பிய அனைவரும் நீதிமானா?
என் கணவர், என் மனைவி,
என் பிள்ளைகள் நீதிமான்கள் இல்லையா?

இக்கலிலேயருக்கு இப்படி நிகழ்ந்தால்
இவர்கள் மற்றெல்லாக் கலிலேயரை
விட பாவிகள் என்று நினைக்கிறீர்களா?

(லூக் 13:2)

உமது வார்த்தையே எனக்கு ஆறுதல்
உமது வழிகளை காண்பியும் இறைவா!
ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தால்
என் சகோதரன் இறந்திருக்கமாட்டான்.

(யோவான் 11:21)

மார்த்தா கேட்ட அதே கேள்வி
என் கணவர், என் மனைவி, என்
பிள்ளைகள்
நீர் மார்த்தாவின் வினாவுக்கு
விடை தரவில்லையே.
அதேபோலவே எனக்கும் இறைவா!

என்னிடம் நம்பிக்கை கொள்பவர்கள்
இறப்பினும் வாழ்வர்.
கல்லை அகற்றச் சொன்னீர் ஆண்டவரே
மார்த்தாவின் மனிதம் மறுத்ததுதான்.

நீ நம்பினால் ஆண்டவனின்
மாட்சிமையை காண்பாய்
என நான் உன்னிடம் கூறவில்லையா?


(யோவான் 11:40)

என் மனதில் கல்லாக உள்ள
அவநம்பிக்கை
அகல அருளை தா இறைவா!

நண்டுகள் வந்து படங்கள் கீறும்
அலைகள் வந்து அழிக்கும்.
என்று மகா கவி பாடினான்.

சுனாமி அலைகள் எமது நெஞ்சங்களில்
வடுக்களை கீறியதோ
உமது அருளலைகள் எனது மன
வடுக்களை அழிக்கும் - இறைவா! ❐

*நன்றி : தெளிவு,*
*தை - மாசி, 2005*



## SECRETARY MESSAGE

I am indeed very happy to give my greetings to the souvenir published by the Jaffna Christian Union on the work done for the rehabilitation of the Tsunami victims. Jaffna Christian Union is always in the forefront in helping the people in need. We can proudly remember the way the JCU acted during the 1977 civil riots and after the burning down of the prestigious Jaffna Public Library in the 1980s.

JCU was the first to come forward to assist to overcome the devastated victims from the Tsunami National Disaster of 2004, December 26th that destructed the entire coastal areas of the Northern, Eastern, Southern and Southwestern parts of Sri Lanka. The JCU took immediate steps to mobilise its member churches and volunteers to assist in the urgent relief work. Meanwhile sought the help of the Diaspora as well as the NCCSL for long-term rehabilitation. With their assistance the committed members of the JCU, the Jaffna Christian Union was able to perform remarkable activities in rehabilitating the Tsunami victims of the coastal areas from Karainagar to Nagarkovil.

I take this opportunity to congratulate and thank the JCU members who were involved in this task as well as the Diaspora and the NCCSL for their guidance and financial assistances.

**Rev. Annappah Jeyakumaran**
*Secretary/ Jaffna Christian Union*
*College Lane, Vaddukoddai.*



J.C.U.Ex-Co. members with the staff.
Please see names on page 30.



Distribution of furniture at Karaveddy. Rev.G.A.Sathees and our field staff with the recipient.



Distribution of School requirements at Karaveddy. Rev. Fr.B.Thevathas associates.



Distribution of water tanks at Karainager. Our field Officer Mr.A.C.Vijayapathy and Program Manager Mr.A.N.Sinnadurai execute.

# சுனாமியும் மீன் புனரமைப்பும்

ப. இராஜேஸ்வரன்

இன்னமும் தொடரும் இயல்பற்ற வாழ்வு
என்றைக்கு விடியும் இவர்களின் நாட்கள்

***சுனாமிக்குப்பின் இலங்கையை மீள் புனரமைப்புச் செய்வது எப்படி?***

## ஆய்வு அறிமுகம்

ஆசியப் பிரதேசத்தில் 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி நிகழ்ந்த பேரலை அனர்த்தத்தால் மிகவும் பாதிப்படைந்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இத்தாக்கம் இலங்கையின் பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, குடியியல், வாழ்வியல் கட்டுமானத்தில் குறுகிய கால, நீண்டகால ரீதியில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளமையை ஆய்வு மூலமான தரவுகள் ஊடாக உறுதிப்படுத்த முடிகின்றது.

இயற்கை பாதிப்புகளில் இருந்து எமது நாட்டை மீட்பது என்பது நாட்டின் இறைமைக்கும், பாதுகாப்புக்கும், பொறுப்பான அரசினதும் விடுதலைப் புலிகளினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் பொறுப்பாக வலியுறுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது. மேற்கூறப்பட்ட அமைப்புக்கள் ஒன்றிணைந்த வகையில் இழப்பீட்டுக்கான மீள் கட்டுமான செயற்பாடுகளை உடனடித்தேவை, நீண்டகால அடிப்படையிலான தேவை என்ற வகையில் நின்று பரிகார நடவடிக்கையை முன்னெடுப்பதும் அவசியமாகின்றது.

மேற் கூறப்பட்ட மீள்கட்டுமான புனரமைப்பு செயற்பாட்டை முன்னெடுக்க பல்வேறு வகை அணுகுமுறைகளினூடாக பெறப்பட்ட ஆய்வு முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் அவசியமாகிறது. இவை பற்றிய அறிக்கை மேன் நிலை திட்டமாகவே இச்செயற்திட்டம் அமைகிறது.



## ஆய்வு நோக்கம்

சுனாமியால் பாதிப்படைந்த இலங்கையை எவ்வாறு மீளப்புனரமைப்புச் செய்வது என்ற அடிப்படை எண்ணக்கரு தளத்தில் நின்று பாதிப்பின் தன்மையை இனங்காண்பதுடன் அவற்றை எவ்வாறான மாற்று செயல் அணுகுமுறை ஊடாக மீண்டும் பழையநிலைக்கு கொண்டு வரமுடியும் என்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதாகும்.

## ஆய்வு முறையியல்

நேரடி அவதானிப்பு
பேட்டி
செவ்வை பார்த்தல் அணுகுமுறை
பதிவேடுகள் (அரச மற்றும் அரசசார்பற்ற)
புள்ளிவிபர கையேடுகள்
ஊடக பதிவுகள்

சுனாமி பாதிப்பு எல்லை வரையறை இருபகுதிகளாக இனங்காண முடிகிறது.

1. தெற்கு கடலோரப் பிரதேசமும், அதனை அண்டிய மேற்கு கரையோரமும்.
2. கிழக்கு மற்றும் வடக்கு கடலோரப் பிரதேசம்.

## கண்டறியப்பட்ட பாதிப்பின் தன்மைகள்

மக்களின் குடித்தொகை பரம்பலில் மாற்றமும், வீழ்ச்சியும்.

குடும்பச் சமநிலைத் தன்மை



பெரும்பாக அணுகுமுறை மேல் இருந்து கீழ் நோக்கியதாகவும் இரண்டு பொருத்தமான வகையில் ஒருங்கிணைக்கப்பட்டு செயன்முறைப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய செயல் அணுகுமுறை அகல் விரிவுடையதாக அமைய உதவும்.

### விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வு அணுகுமுறை

சுனாமி போன்ற அனர்த்த நிகழ்வுகள் இலங்கையின் வரலாற்றில் அனுபவம் பெறாத முதல் இழப்பு மாதிரியாக அமைந்து விட்டது. இதன் காரணமாக இவ்வழிவில் இருந்து மீள்புனரமைப்பு செய்வதற்கான பொருத்தமாக பின்பற்றக் கூடியதீர்வு அணுகுமுறை இல்லை. இதனால் தான் புதிய மாதிரி ஒன்றை வடிவமைத்தல் அவசியமாகின்றது. இதை ஒத்த வேறு இழப்புக்களின் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு இலங்கையில் பயன்படுத்தலாமே தவிர பிறநாட்டு நடைமுறையை அதே வடிவில் பின்பற்றல் பொருத்தமில்லாதது. எமக்கு ஏற்பட்ட அனுபவத்தினூடாக புதிய விஞ்ஞானரீதியான பகுப்பாய்வு சிந்தனைகளை திரட்டி பயன்படுத்தல் அவசியம்.

பாதிப்படைந்தமை.
பொருளாதார இழப்புக்கள்.
இயற்கை வளரீதியான பாதிப்புகள்.
மனரீதியான குறுகிய கால, நீண்ட காலப் பாதிப்புக்கள்.
நிறுவனக் கட்டமைப்பு ரீதியான சிதைவுகள் (பாடசாலை, கோயில்).
மக்கள் வாழ்விட இழப்புக்கள்.
அவயவ இழப்புக்கள்.
கலை, கலாசார, வரலாற்று பாதிப்புக்கள்.
சமூகக் கட்டுமான சீர்குலைவு.
குடிநீர் திட்ட விநியோகத்தில் சீர்குலைவு.
மின் இணைப்புக்களின் பாதிப்புக்கள்.

### மீள் கட்டுமானத்துக்கான அணுகு முறைகள்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீள் கட்டுமானம் செய்கின்றபோது சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய கற்கை அதாவது விடய ஆய்வு (CASESTUDY) மிகவும் அவசியமாகிறது. விடயம் தொடர்பான ஆய்வில் நின்று கொண்டு மீட்சிக்கான அணுகுமுறையை அணுகுவது பொருத்தமானதாகும். அந்த வகையில் மீள்கட்டுமான அணுகுமுறையை பின்வரும் இரு முறைகளினூடாக அணுகமுடியும்.

1. நுண்பாக முறையியல் (Micro Approach) ஒவ்வொரு பாதிப்பையும் தனித்தனி சிறுகூறாக நோக்குவது.
2. பெரும்பாக முறையியல் (Macro Approach) பிரதேசம் தொகுதி அடிப்படையில் நோக்குவது.

நுண்பாக அணுகுமுறை கீழிருந்து மேல் நோக்கியதாகவும்,

### முற்கூட்டியே பிரயோகித்துப் பார்த்தல்

மீள் புனரமைப்பு செயற்திட்டத்தை நிகழ்ச்சித்திட்டம், செயற்திட்டம், வேலைத்திட்டம் என்ற தொடர்புடைய படிநிலை செயற்பாட்டின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தி முன்னெடுத்தல் வேண்டும். குறித்த செயல் திட்டமாதிரியை பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பகுதியில் முற்கூட்டியே பிரயோகித்து பார்க்க வேண்டும். தோல்விகளினூடாக பல அனுபவங்களைப் பெற்று, மீட்சி அணுகுமுறையை மாற்றி அமைத்தல் வேண்டும். உரிய பின்னூட்டலை பெற்று நிலைமைக்கு ஏற்றவாறு நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையை பின்பற்றல்.

### பல்வேறு தரப்பினரை ஒருங்கிணைத்தல்

சூழலுக்கும், பிரச்சினையின் தன்மைக்கும் ஏற்றதாக நடைமுறை திட்டங்களை மாற்றிக்கொள்ளவேண்டும். இந்தச் செயற்பாட்டில் பங்கு கொள்ளும் பல்வேறு அமைப்பினரும் முழுமையான ஆற்றலை பிரயோகித்து செயற்பட வேண்டும். புதியசிந்தனை அணுகுமுறையாளர்களையும், பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நீண்டகாலமாக பணியாற்றிவரும் செயற்பாட்டாளர் (Actors) பணிகளையும் ஒருங்கிணைத்து மீள்புனரமைப்புத் திட்டங்களை முன்னெடுத்தல் பொருத்தமானதாகும்.

### மக்களின் இருப்பிட திட்ட அமுலாக்கம்

இலங்கையில் முற்றாக பாதிப்படைந்த 35,100 வீடுகளையும், ஓரளவு சேதமடைந்த 47,500 வீடுகளையும் ஓர் திட்டமிட்ட நிலைநின்று மீள் கட்டுமானம் செய்வது அவசியம். இதற்கு மாதிரி குடியேற்றத்திட்டம், சமுதாய மாதிரி குடியிருப்புத்திட்டம், கடனடிப்படைமுறையிலும் நஷ்டஈடுவழங்கல் ஊடாகவும் குடியிருப்பை அமைக்க முடியும். இதனை இலகுபடுத்த பிரதேச மட்ட ரீதியில் வெவ்வேறு அமைப்புக்களிடம் பொறுப்பை கையளிக்க முடியும். இதற்கு அரசியல் இனமத பேதமற்ற பொதுக்கட்டமைப்பு முறைமை ஊடாக நடைமுறைப்படுத்தல் இலகுவாக அமையும்.

### தொழிற்துறையை மீளவசதிப்படுத்தல்

நாடளாவியரீதியில் 275,000 தொழில் வாய்ப்புக்கள் இழக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மீனவத்தொழிலில் ஈடுபடுவதற்கு;

1. கடலில் ஏற்பட்ட இழப்பிலிருந்து விடுபட முடியாத நிலை.
2. தொழில் செய்வதற்கான எந்த உபகரணமும் இன்மை.

என்ற அடிப்படையில் இருந்து மீள்வதற்குத் தகுந்த முறையில் மன உறுதியையும், ஊக்கத்தையும் அளிக்கும் வகையில் உளஆற்றுகை செயற்பாட்டை மேற்கொள்வதுடன், மீனவர் தொழிலில் ஈடுபடுவதற்கான உபகரணங்களை

இலவசமாகவும், மானிய முறையிலும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.

மீனவ குடும்ப நல காப்புறுதித்திட்ட நடைமுறையையும், சுயதொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களையும் பெண்களுக்கான தொழில் முயற்சியாண்மைக்கான தையல் இயந்திரம், தும்பு மூலம் செய்யப்படும் சிறுகைத் தொழில்களுக்கான உபகரணங்களை வழங்குவதன் மூலம் தொழில் மூலமான வருமானத்தைத் தாமாகவே பெறவாய்ப்பு ஏற்படும். அத்துடன் படகு திருத்தம் செய்யும் தொழிலை மேம்படுத்தும் வகையில் படகு கட்டுமான தொழில் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தல் மிகவும் அவசியம்.

## கரையோர பாதுகாப்பு சட்டம் மற்றும் அணுகுமுறையை விரிவாக்கல்

அரசினால் நடை முறைப்படுத்தப்படாத கரையோரப் பாதுகாப்புச் சட்டம் பற்றி தற்பொழுது சிந்திக்கப்படுகிறது. அரசினால் குறிப்பிடப்படும் தூரம் எல்லா பிரதேசங்களுக்கும் ஏற்புடையதல்ல. சில இடங்களில் நிலமட்டம் உயரமாக இருக்கும். அங்கு மற்ற இடங்களுக்கான பொது மைத்தூரம் அமுல்படுத்தத் தேவையில்லை. உதாரணமாக மற்றைய இடத்துக்கு 100 மீற்றர் என்றால் இங்கு 75 மீற்றர் போதுமானது. ஆனால் தாழ் நிலப்பகுதிகளுக்கு இத்தூரம் 300 மீற்றர், 400 மீற்றர் ஆக அதிகரிக்கப்பட வேண்டும். இவ் நடைமுறை பிரதேசமட்ட நில உயரமட்டத்துக்கு ஏற்பவே அமுல்படுத்தப்படவேண்டும்.

## பொருளாதாரத்துறை மீள்கட்டுமானம்.

பொருளாதாரத்துறையை மீள்கட்டுமானம் செய்கின்ற பொழுது இயற்கையோடு போட்டியிட்டு உயர் தொழில் நுட்ப முறைகளை அமைப்பதற்கு மூன்றாம் உலகநாடுகளின் பணப்பெறுமதி மிகக்குறைவாக இருப்பதால், நிதிவழங்கும் தொண்டு நிறுவனங்களினதும், மேலைநாட்டு தொழில்நுட்ப ஆலோசனையையும் அனுசரித்து சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் எதிர்கால மற்றும் நீண்ட கால வளப்பயன்பாட்டில் கவனம் செலுத்தி பிரதேசமட்டவள அடிப்படையிலான பொருளாதார அபிவிருத்தி செயல் அணுகுமுறையையும், சுய பொருளாதார அடித்தளத்தையும், ஏற்படுத்தல் சிறந்தது. இதுவே நீண்டகால நோக்கில் பயனுறுதி வாய்ந்ததாக அமையும்.

## சூழல் தகவல் மைய உருவாக்கம் (Enviornmental Information Centre)

எம்மைச் சூழ்ந்த சுற்றாடல் சார்ந்த மாற்றங்களின் தகவலை உடனுக்குடன் பெறுதல் பரவலாக சாத்தியப்படும் பொழுது நடைபெறப்போகும் இயற்கை அழிவுகளில் இருந்து எம்மை ஓரளவு பாதுகாத்துக் கொள்ள முடியும். சூழலில் ஏற்படும் மாற்றங்களை படவிளக்கங்களோடும் வெகுஜனங்கள் அறியும் வகையில் கொடுக்க வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். மேலும் சூழல் சார்ந்த விழிப்புணர்வையும், அக்கறையையும் ஏற்படுத்தும் வகையில் INGO அமைப்பை நிறுவி அனர்த்தம் தொடர்பான அறிகைத் திறனை விருத்தி செய்யும், எதிர்கால அனர்த்த நிகழ்வுகளில் இருந்து பாதுகாப்பு பெறமுடியும்.

## மருத்துவ வசதியை பரவலாக்கும் திட்ட நடைமுறைகள்

சுனாமியால் பாதிப்படைந்த பகுதியில் 72 மருத்துவமனைகள் முற்றாக சிதைவடைந்தும், 363 மருத்துவ சிகிச்சை நிலையங்கள் அழிவடைந்துள்ளன. இவற்றினை சீர்செய்ய விசேட அனர்த்தகால மருத்துவ சிகிச்சை நிலையங்களை அமைப்பதுடன், நடமாடும் மருத்துவ சேவைகளை (Mobile Services) விரிவடையச் செய்வதன் மூலம் மக்களைத் தேடி சென்று மருத்துவ வசதியை வழங்கக்கூடிய நிலைப்பாட்டை ஏற்படுத்தல் சிறந்ததாகும்.

புதியதாக ஏற்படப்போகும் புதிய நோய்கள் பற்றிய விழிப்புணர்வு செயற்பாடுகளை கிராமிய மன்றங்கள், நலன் நோன்பு நிலையங்கள், பாடசாலைகளில் கலை உணர்வுடன் எடுத்துக்கூறல். கூடியளவுக்கு கவர்ச்சியுடையதாக அமையும். நோய் தடுப்பு மருத்துவ சிகிச்சையை மக்கள் ஒன்று கூடும் இடங்களில் அமுல்படுத்தல் மிகவும் அவசியமாகிறது. இழப்புக்களின் பாதிப்புக்களினால் ஏற்படுத்தும் வகையில் சிறந்த உளவள துணை மருத்துவத்தை விரிவுபடுத்தல் ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்ப இலகுவாக அமையும்.

## அவய இழப்புக்காரருக்கான மாற்றுத் திட்டங்கள்

மக்கள் பால் வேறுபாடு, வயது வேறுபாடு இன்றி தமது உறுப்புக்களை பகுதியாகவோ, முழுமையாகவோ இழந்துள்ளதை பல்வேறு ஆய்வு அறிக்கைகள் காட்டுகின்றன. பாதிப்புக்குள்ளானவர்களை மன அளவில் பாதிப்பு ஏற்படாமல் பராமரிக்க விசேட பராமரிப்பு நிலையங்கள், விசேட கல்விச் செயற்பாடுகளை, மாணவர்களுக்கு ஒழுங்குபடுத்துவதூடாகவும், ஆலோசனை வழிகாட்டல் மற்றும் ஆற்றுப்படுத்தல் செயற்பாட்டை பல்வேறு வள ஆளணி உதவியுடன் செயற்படுத்துவதுடன், அவர்களின் மன அழுத்தத்தை ஆற்றும் உள்ளக சூழல் அமைப்பை உருவாக்கிக் கொடுத்தல். அத்துடன் வயது அடிப்படையைக் கருத்தில்கொண்டு பராமரிப்பு இல்லங்களை ஒழுங்கமைத்தல் அவர்களுடைய உள்ளக இடைவினைத் தொடர்புகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. முதியோருக்கென முதியோர் இல்லங்களை அமைத்துக் கொடுத்தல் அவசியம்.

அவயவங்களை இழந்தவர்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்களை அவர்களின் இயங்காற்றலுக்கு ஏற்ப ஏற்படுத்திக் கொடுததல், மற்றும் பொழுதுபோக்கு விடயங்களிலும், வெகுஜன ஊடகப் பயன்பாட்டையும் விளையாட்டு உபகரணப் பயன்பாட்டையும்



ஏற்படுத்தி அவர்களை ஆற்றுப்படுத்த முடியும்.

## பால் ரீதியான வேறுபாட்டைகளைதலும், அதற்கான மாற்று வழிமுறையும்

சுனாமி பல சமூகங்களில் பெண்களின் இழப்பை அதிகரிக்கச் செய்துள்ளது. 80% ஆன பெண்கள் இறந்துள்ளனர். இதனால் சமூகத்தில் பால்நிலை சமநிலை குழம்பியுள்ளதுடன், பிள்ளை வளர்ப்பு, பிள்ளைப் பராமரிப்பு தேவை அதிகரித்துள்ளது. இவற்றுக்கு மாற்றீடாக பிள்ளைவளர்ப்பு மற்றும் பராமரிப்பு நிலையங்களை பிள்ளையின் இயல்பு நிலைக்கு ஏற்ப உருவாக்கிக் கொடுப்பதுடன், செவிலித்தாய்மார் (Community Mothers) பலரை உருவாக்குவதும் அவசியத் தேவையாக உள்ளது. இதற்குத் தகுந்தமுறைப் பயிற்சி வழங்கப்படுவதுடன், ஊக்குவிப்புத் தொகை, உட்கட்டுமான வசதியை ஏற்படுத்தி கொடுத்து பிள்ளைகளை அரவணைக்கத் தயார் செய்ய வேண்டியுள்ளது. இல்லாவிடின் இன்றைய இளம் சமுதாய பாதிப்பு எதிர்கால எமது சமூகத்தையே பாதிப்பதாக அமைந்து விடும்.

## நிறுவனக் கட்டமைப்பு ரீதியான சிதைவுகளுக்கான புனரமைப்பு

நிறுவனக் கட்டமைப்பு என்ற உள்ளடக்கத்தில் கோயில்கள், அரச நிறுவனங்கள், பொது அமைப்பு கட்டமைப்புகள், கலைகலாசார மையங்கள் என்பன அடங்குகின்றன. இவற்றை தற்காலிகமாகவேனும், மீள்புனரமைத்து மக்கள் பாவனைக்கு சந்தர்ப்பமளிப்பது மனரீதியான விடுதலையைப் பெற உதவும். இழப்புக்களின் பாதிப்புக்களில் இருந்து மீள ஆன்மீகத்தை நாடுவது இயல்பாகும். மன அமைதிபெற குறைகளை கூறுதல், அழுது புலம்புதல், சுயநிம்மதி பெறவும் வழிபாட்டு இடங்கள் வாய்ப்பளிப்பதால் உளவியல் ரீதியான அழுத்தங்கள், பாதிப்புக்களில் இருந்து மீள் உதவுவதாலும் வழிபாட்டிடம், கூட்டுப்பிரார்த்தனை மண்டபங்கள், என்பவற்றை அமைக்க உதவுதல் வேண்டும்.

## இயற்கை இழப்பீட்டுக்கான மீள்திட்டம்

கரையோரப் பகுதியில் முருகைக்கற்பாறை, மற்றும் சிறுகாடுகள், கரையோர உயிரியல் பல்வகை தன்மை அழிவடைந்துள்ளன. இவற்றை மீளாக்கம் செய்ய முருகைக்கற்பாறை உருவாக்கற்திட்டம், கரையோர வலயப் பாதுகாப்புத் திட்டம் அவைதொடர்பான சட்டவரை அமுலாக்கம், உயிரியல் பான்மையை பாதுகாக்கும் விசேட சரணாலயங்கள் என்பவற்றை நிறுவமுயலுதல், அத்துடன் தென்னை, பனை, சவுக்கு மரங்களை வளர்க்க திட்டம் மேற்கொள்ளல்.

## நீர் வசதி வாய்ப்பை வழங்குதல்

சுனாமியால் 10குழாய் நீர் விநியோகத்திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றை மீள் ஆக்கம் செய்ய குழாய் நீர் திட்ட செயற்பாட்டை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மீள்புனரமைப்பு செய்வதுடன், நீர்த்தாங்கிகள் ஊடாகவும், தண்ணீர்தாங்கி அதாவது நடமாடும் சேவை ஊடாகவும், கடல்நீர் தடுப்பு அணைகளை அமைத்தல் ஊடாகவும், உவர்நீர் தரைக்குள் நுழைவதை ஓரளவு தவிர்க்க முடியும்.

## உளவள ஆற்றுப்படுத்தல் அணுகுமுறை பிரயோகங்கள்

சுனாமியால் பாதிப்படைந்து மன அழுத்தங்களுக்கு உட்பட்ட பல்வேறு தரப்பினரையும் ஒழுங்குபடுத்தி சமூக நீரோட்டத்திற்குள் கொண்டு வருவதற்கு நட்புதவியாளர் (Be Frienders) உளவளத்துணையாளர், அரங்க ஆற்றுகை செயலணிக்குழு ஊடாக பல்வேறு ஆற்றுப்படுத்தல் செயற்திட்டங்களை பாதிப்படைந்தோர் மத்தியில் அமுலாக்குவதன் மூலமும், ஆன்மநல முதலுதவி செயற்பாட்டை சமயப் பெரியார்களின் துணையுடன் செயற்படுத்துவதனூடாகவும், Mental Health face Diasaster அமைப்பை இப்பிரதேசங்களுக்கு விரிவடையச் செய்து செயற்படுத்தல்.

மன அழுத்தத்தை குறைத்து மனநல மேம்பாட்டை விருத்தி செய்ய பொருத்தமற்ற, தேவையற்ற கட்டுப்பாட்டை நீக்கி அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுப்பதுடன், குடும்பக் குறைபாடுகளை அகற்றல், தனியாள் வேறுபாட்டை கருத்தில் கொள்வதுடன் அதற்கேற்ப அணுகுமுறையை பயன்படுத்தல்.

## வெகுஜன ஊடக பயன்வழி முறைகள்



வெகுஜன பங்களிப்பு என்பது உடனடித்தேவை என்றும் நீண்ட காலத்தில் நிகழ்ச்சிகளை வழங்குதல் என்ற அடிப்படையில் செயற்படல் அவசியமாகிறது. ஆற்றுப்படுத்தல் மற்றும் இழப்புக்கள் பற்றிய ஆய்வறிக்கையை வெளியிடுவது, உறவுகளை, மனங்களை இணைத்தல் என்றும் விரிவடைந்து செல்கின்றது. மற்றும் எதிர்கால மீள்கட்டுமான அவசியத் தன்மையை உலகளாவிய ரீதியில் வெளிக்கொணரவும், விசேட நிகழ்ச்சிகளைப் பாதிப்படைந்த பகுதி மக்களுக்காகத் தயார்செய்து வழங்குவது அவர்களை திருப்திப் படுத்துவதாக அமையும். இப்பகுதிகளுக்கு ஒளிபரப்பு மற்றும் ஒலி பரப்பு சேவை நேரத்தை விரிவுபடுத்தி செயற்படல். இதழியல் ஊடாக விசேட பதிவுகளை வெளிவரச் செய்து அவற்றை தகவல் பெட்டகமாக மாற்றுதல். இதனால் எதிர்காலத்தில் இவை பற்றிய சிந்தனைகள், தகவல்கள் பெற வாய்ப்பு ஏற்படுவதுடன், விழிப்புணர்வும் உண்டாகும்.



### கலை, கலாசார வரலாற்று விடயங்களுக்கு மதிப்பளித்தல்.

பாதிப்படைந்த வரலாற்று மற்றும் சமூக பண்பாட்டு அம்சங்களை மீள்கட்டுமானம் செய்யவும், பாதுகாக்கவும், மதிப்பளிக்கவும் நடவடிக்கையை முன்னெடுக்கும் பொழுது தமது பிரதேச இன மதப்பற்றைக் கட்டியெழுப்பி நம்பிக்கை கொள்ளச் செய்வதனூடாக தமது இடம் மீள் உருவாக்கம் பெற்று பழைய நிலையை அடையும் என்ற உறுதித்தன்மை ஏற்பட வாய்ப்புண்டாகும். அத்துடன் சமூக விழுமியங்கள் பேணப்படும் என்ற எண்ண வாக்கும் சுயமாக உண்டாகும்.

### பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலா, விளையாட்டுத் துறை அபிவிருத்தி.

பாதிப்படைந்த பிரதேசங்களில் பொழுதுபோக்குச் செய்யும் விசேட இடங்களான சிறுவர் பூங்கா, சரணாலயம், பொது மண்டபம், விசேட கலையரங்கம், பொது விளையாட்டுத்திடல் என்பவற்றை அமைக்க ஆவன செய்வதுடன், உட்கட்டுமான வளவிருத்தியையும் பெற்றுக் கொடுப்பதனூடாக இந்தப் பகுதி மக்களின் வாழ்வியலை மீள ஒழுங்கமைக்க முடிவதுடன், மனமகிழ்வு, ஓய்வுநேர பயன்பாடுகள் வீணான வகையில் செலவழிக்க வாய்ப்பு உண்டாகாது.

### மின்சார இணைப்பு மீள் ஆக்கம்

மின்சாரத்துறையை பொறுத்தமட்டில் 222,660 வீட்டு மின்சார இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டு விட்டது. இவற்றுக்கு மாற்றீடாக உடனடியாக அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவன உதவியுடன் முதற்கட்டமாக இலவசமாக மின்சார இணைப்புக்களை வழங்க உதவுவதுடன், பிரதேச கிராம மட்டங்களில் மின் பிறப்பாக்கிகளை வழங்கி மின் இணைப்பை விரிவாக்குதல் மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர வாய்ப்பாக அமையும்.

### செவிலித்தாய் உருவாக்கல்

பெற்றோரில் ஒருவரை அல்லது இருவரை இழந்த பிள்ளைகள் பலர் உள்ளனர். 1,044 பேர் இருவரையும், 3,300 பேர் பெற்றோரில் ஒருவரையும் இழந்துள்ளனர் என தரவுகள் காட்டுகின்றன.

| இழப்பு | வடமாகாணம் | தென்மாகாணம் | மேல்மாகாணம் |
|---|---|---|---|
| பெற்றோர் இருவரை | 740 | 249 | 42 |
| பெற்றோர் ஒருவரை | 2121 | 1243 | 64 |

இவர்களுடன் நெருங்கிப் பழகவும், உரிமையுடன் அன்பு செலுத்தவும், பாசத்துடன் உதவி செய்யவும் செவிலித்தாய்மாரை அதே பிரதேச சமூக கலை கலாசார பின்னணியில் தகுந்த பயிற்சி மற்றும் உளவள ஆற்றுகை திறனுடன் நியமித்து அவர்களுக்குரிய ஊக்குவிப்பு திட்டங்களையும் அமுல்படுத்தல்.

### கல்விக் கொள்கைத் திட்டமிடலில் மாற்றம் ஏற்படுத்தல்

கல்விச் செயற்பாட்டில் பாடசாலையின் ஆரம்ப மட்டம் தொடக்கம் உயர்நிலை வரை இயற்கை அனர்த்தம் பற்றிய அறிவையும், விழிப்புணர்வுச் செயற்திட்டங்களையும், அமுல்ப்படுத்துவதனூடாகவும், இவ்வறிவு பற்றிய விசேட வாசிப்பு நூல்களையும், ஆசிரிய வழிகாட்டுகைகளையும் தயாரிப்பதனூடாக தற்போது பாதிப்படைந்த சமூகத்தையும், எதிர்காலப் பாதிப்புக்களில் நின்றும் மீள வாய்ப்பு ஏற்படும்.

### முறைசாரா கல்வி மற்றும் பரிகார, இழப்பீட்டு கல்வியை வழங்கல்

சுயதொழில் மற்றும் சுயமேம்பாடு கருதி முறைசாராக் கல்விச் செயற்திட்டங்கள் ஊடாக வயது வேறுபாடு இன்றி தொழில் முயற்சியாண்மை திட்டங்களை பிரதேச வளப்பயன்பாடு அடிப்படையில் வழங்குவதுடன், பாதிப்பு ஏற்பட்டமையால் கல்வியை பெறத்தவறிய பிள்ளைகளுக்கு இழந்த கல்வியை மீட்கும் செயற்திட்டத்தையும் விசேட கல்வி செயற்திட்டங்களையும், பரிகார கல்விச் செயற்பாடுகளையும் முனைப்பாக பாடசாலை மட்டத்தில் முன்னெடுப்பதுடன், இவற்றை பாடசாலை நேரத்துக்கு புறம்பாக வழங்க பல்வேறு வள ஆளணியினரைப் பெறுவதுடன் ஊக்குவிப்பையும் வழங்குதல்.

### ஆசிரிய மற்றும் உளவள ஆற்றுப்படுத்துநர், நட்புதவியாளர் களுக்கு விசேட பயிற்சி வழங்குதல்

கல்விச் செயற்பாடு மற்றும் உளவள ஆற்றுகையில் ஈடுபடப்போகும் பல்வேறு ஆளணியினருக்கு குறுகிய கால, நீண்டகால வழிகாட்டல் பயிற்சிகளை வழங்குவதுடன், விசேட வாசிப்பு வழிகாட்டுகை நூல்களையும், அணுகு முறைகளையும் பயன்படுத்தும் வகையில் இவர்களைப் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களில் செயற்பட அனுமதித்தல். இதனால் தவறான வழிப்படுத்தல், குற்றச் செயல்கள் இடம் பெறுதல் தவிர்க்கப்படும்.

### பாடசாலை கட்டமைப்பை சீர்ப்படுத்தல்

நாடளாவிய ரீதியில் 182 பாடசாலைகள் அழிவடைந்து இருப்பதுடன், 98 பாடசாலைகள் சொந்த இடங்களை விட்டு மாற்றப்பட்டுள்ளன. இவற்றில் இருந்து விடுபட்டு மாணவர்கள் தமது கற்றல் செயற்பாட்டை மேற்கொள்ள பாடசாலைகளை கடற்கரையோர எல்லைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் மீள்கட்டுமானம் செய்ய அரச மற்றும் அசர சார்பற்ற அமைப்புகள் முன்வருவதுடன், பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகளான விஞ்ஞான ஆய்வுகூட வசதி,

வகுப்பறைகள், பூங்கா, செயற்பாட்டறை என்பவற்றை அமைத்துக்கொடுக்க பல்வேறு அரச சார்பற்ற அமைப்புக்கள் முனைப்புடன் செயற்படல்.

வெளிச்சவீட்டு பாடசாலை அறிமுகத்தையும், சமுதாயப்பள்ளி அமைப்பு, விசேட முறைசாரா, இணைபாடவிதானச் செயற்பாடுகளையும், பிள்ளைகளுக்கான உணவு, பாதணி, சீருடையை பெற்றுக் கொடுத்தல் மற்றும் உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல், மகிழ்ச்சிகரமான கல்வியை மாணவர் பெறவசதி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.

வகுப்பறையில்லாத சூழலில் கற்கும் சூழலை மாற்றியமைக்க மாணவர்மைய அணுகுமுறையை பின்பற்றுவதுடன், பாதிப்படைந்த அதிபர் ஆசிரியர்களின் தனிப்பட்ட பாதிப்புக்களுக்கான நிவாரணங்களையும், விசேட கடன் நிவாரணங்களையும், விசேட கடன் திட்டங்களையும், நஷ்டஈடு, உபகரண அன்பளிப்பையும் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துதல்.

விசேட மற்றும் நிரந்தர வகுப்பறை அமைக்கும் பொழுது வகுப்பறைக்கு மென்மையான வர்ணம் பூசுதல், அழகிய பூக்கள் பறவைகள் கொண்ட ஓவியங்களை வரைதல் மாணவர் மனதை மகிழ்விப்பதாக அமையும். அழகான, நகைச்சுவை மற்றும் பிள்ளைகளின் உணர்வு நிலைக்குஉட்பட்ட வாசிப்பு நூல்களை வழங்குதல், பிள்ளைகளுக்கென விசேட வதிவிடங்களை உருவாக்குவதுடன் அங்கு இழந்த சந்தோஷத்தைப் பெற வாய்ப்பளிக்க வேண்டும்.

பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கான உடல் உள செயற்பாட்டை முன்னெடுக்கும் பொழுது விசேட ஊட்ட உணவுகளையும், பொழுதுபோக்கு மற்றும் கலைநிகழ்வுகளில் ஈடுபட்டு மனவெழுச்சி செயற்பாட்டைச் சுதந்திரமாகப் பயன்படுத்த வாய்ப்புக் கொடுத்தல். மேலும் பாதிப்புக்களில் இருந்து பாடசாலையையும், சமூகத்தையும் பொருத்தமான முறையில் முன்னெடுக்க மனிதவளம் தேவையாக உள்ளது. இதற்கு மேலதிக வளமான செவிலித்தாய், பாடசாலை ஆளணி, பல்கலைக்கழக மாணவர்கள், சமூகஅமைப்பின் அங்கத்தவர்கள், பாடசாலை மட்ட உளவள ஆளணியினரை பயன்படுத்த முடியும்.

### முடிவுரை

மேற்கூறப்பட்ட அடிப்படையில் சுனாமியின் பாதிப்பு பல்வேறு கூறுகளுடன் இணைப்புப் பெற்றதாகவும், ஒன்றுடன் ஒன்று தொடர்பு பெற்று ஒன்றின் தாக்கம் அல்லது அபிவிருத்தி இன்னொன்றில் செல்வாக்குச் செலுத்துவதை உணரமுடிகின்றது. இத்தொடர்பு நேரடியாகவும், மறைமுகமாகவும் இடம் பெறுவதையும் அவதானிக்க முடிகிறது. அபிவிருத்தி மற்றும் மீள்புனரமைப்பு என்று வரும் பொழுது மாற்றம், புதிய அணுகுமுறைகளின் பயன்பாடு தவிர்க்கமுடியாதது. எனவே மேற்கூறப்பட்ட வகையில் இலங்கையை மீள்புனரமைப்புச் செய்ய பல்வேறு அணுகுமுறைகளை பிரயோகிக்க முடியும். ❑

நன்றி: நமது ஈழநாடு
*26.12.2005*

## Immortal Memories...



The President
Jaffna Christian Union
Jaffna

Dear Sir,

I am very much thankful to NCC for giving me an opportunity to join the team of "TRU" in their organization and thus giving me the privilege to work again in Jaffna joining hands with the Jaffna Christian Union. I thank the Task Force of the JCU for giving a thought for me and asking me to write a few lines for its magazine.

I used to admire the Christian Organizations for their orderly management since I was an old girl of Vemabadi Girls' High School. As a native of Vaddukoddai, again I witnessed so many Christian activities. By joining NCC, I could study further the structure of the Christian Organizations and their commitment over their members.

When I stand as a Regional Coordinator for North of NCC and look at things, I appreciate what JCU had done in accordance with the Red Cross code of conduct without showing any partiality or discrimination against the people affected by Tsunami. The JCU work started as a relief measure, has been broadened into Rehabilitation work. The authority and the staff work with the same commitment whether they are small projects with Rs.12,000/- of making a fence around a well, to enable the female Tsunami victims to have a bath without much embarrassment or a big project as constructing 56 toilets in the Tsunami deserted with nothing other than sandy area of Manatkaadu.

The organization has undertaken 34 projects to implement within the peninsula and have completed all with few ongoing and one or two withdrawn.

With all the constraints and lacking, they have organized an efficient team of project assistants and befrienders under a Project Manager very passive natured though active in his work. The president Mr. D.R. Arumaynayagam and Rev. Fr. N.J. Gnanaponrajah are the steering persons in forefront to lead this group on their charity work. This is the only organization I can turn to as a regional Coordinator in regard to the NCC, ACT (Action by Churches Together) funding projects in Jaffna.

Hope this organization will strengthen itself to work more effectively and efficiently to help the people in distress.

Thanking you.

Yours sincerely,
**Rani Sinnathamby**
*NCC Coordinator North*
*Colombo 7*

27th January 2006



Displaced Kankesanthurai fishermen at a get together with Rev.G.A.Sathees & Ms.Michelle Yonetani and our Program Manager.




Seminar on Advocacy. Co-ordinator Human Development Mr.A.Navaneethakrishnan presides, Mr.M.A.Sumanthiran – Attorney – at - Law addresses.



Counselling program. The president Mr.D.R.Arumaynayagam inaugurates.



A Section of the participants at the Counselling Program.



# ஆற்றுப்படுத்தலில் நம்பிக்கையை வளர்த்தல்

**வி. பி. தனேந்திரா**

தெற்காசிய நாடுகளில் ஏற்பட்ட சுனாமியின் தாக்கத்தினால், அநேகர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களில் ஒரு சிலர் தமது மனவடுக்களை மறந்து மீண்டும் தமது இயல்பு நிலைக்குத் திரும்பி வருகிறார்கள். இன்னும் ஒரு சிலர் தமது மனவடுநிலையில் இருந்து இயல்பு வாழ்வுக்குள் செல்ல நீண்டகாலம் எடுக்கும். இவ்வுலகத்தில் மனிதர்கள் பல எதிர்பார்ப்புடனும் ஆசைகளுடனும் வாழ்கின்றார்கள். இவை கிடைக்காமல் போகின்றபோது அவற்றை தாங்கிக் கொள்வது மிகவும் கடினம். ஆனால் சுனாமி திடீரென்று ஏற்பட்டது. ஒரு நொடிப்பொழுதில் உயிர்களையும் – சொத்துக்களையும் அழித்துச்சென்றது. இந்த எதிர்பாராச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் உடனே தமது இயல்பு வாழ்வுக்கு திரும்புவார்கள் என்று கூறிவிட முடியாது.


எனினும் இச்சூழ்நிலையில் தமது மனச்சோர்வு நிலையில் இருந்து விடுபடல் வேண்டும். அதனைக் குறித்து வேதனைப்படுவதினால் பயனில்லை. ஆகவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவேண்டும் என்ற உணர்வுள்ள மக்களும் இருக்கிறார்கள். இவர்களது வாழ்வு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒர் எடுத்துக்காட்டு. ஜனவரி மாதம், 2005 இல் இலங்கை வந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனானிடம் சுனாமியில் உங்களைப் பாதித்த விடயம் எது என்று கேட்டபோது "சுமாத்திராவில் ஒருவர் தனது குடும்ப அங்கத்தவர்கள், அனைவரையும் இழந்துவிட்ட போதிலும் ஏனைய மக்களுக்கு உதவவேண்டும் என்பதற்காக சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணியில் ஈடுபட்டு வந்தமையே" என்று கூறியிருந்தார்.

சுனாமியின் தாக்கத்தினால் மனதளவில் பாதிக்கப்பட்ட மக்களே இன்று அதிகம். குடும்ப வருவாயை ஈடுசெய்த கணவனின் இழப்பும் – பெற்ற குழந்தையை கண்முன்னே கடல் அள்ளிக்கொண்டு சென்றதும் – கடினப்பட்டு சேர்த்த சொத்துக்களை ஒரு நொடிக்குள் கடல் சூறையாடியதும் – வாழ்வுக்கு உறுதுணை என்று நம்பியவைகளின் இழப்பும் – சமூக வாழ்வுக்கு முக்கியமானது என்று கருதி தமது நேரம், பணம் முதலியவற்றை அர்ப்பணித்து சேர்த்த, அரிய பொருட்களின் இழப்பும்; இவ்வாறு பாதிப்புக்கள் நீளும். இவை மனதிலே மீள மீள ஏற்படும்போது மனச்சோர்வு ஏற்பட்டு பல பக்கவிளைவுகளை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு தீர்வு காண்பது அவசியம். தீர்வு காணாவிட்டால் பெரும் தாக்கங்களை உள – உடல் ரீதியில் உண்டுபண்ணும். அத்துடன் மருத்துவசிகிச்சை முறைகளையும் மேற்கொள்ள வேண்டிவரும். இங்கு மனோரீதியில் வலுவை ஏற்படுத்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றுப்படுத்துனர்கள் – மற்றும் சமூக மக்களினதும் பொறுப்புணர்வு அவசியம். இதை மறந்து யாரும் செயற்படமுடியாது.

**நாம் ஒற்றையர் அல்ல**

பொதுவாகத் துன்பங்கள் நம் வாழ்க்கையில் ஏற்படுகின்றபோது, ஏமாற்றத்தையும் – தவறான தீர்மானத்தையும் – தனிமையுணர்வையும்

– கோபத்தினையும் – தற்கொலை முயற்சிகளையும் உண்டாக்குகின்றது. இச்சந்தர்ப்பங்களில் மற்றவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிகவும் முக்கியம். ஒருவர் துன்பம் அடைகின்ற போது, "ஒருவரின் ஆதரவற்ற உணர்வே மிகப்பெரிய தீயசக்தி செயல்படுகிறது என்ற எண்ணத்தை அவரில் ஏற்படுத்துகின்றது." என்பார் சரித்திராசிரியர் ஜோஸப் பார்டன்.



பல்வேறு காரணங்களுக்காக மற்றவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை. நாம் முற்றிலும் தனித்து வாழ முடியாது. விலங்குகள் இயல்புணர்ச்சியினால் கூடிவாழ்கின்றதைக் காணலாம். யானைகள் தங்கள் குட்டிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கூட்டம் கூட்டமாகச் செல்கின்றன. காகங்கள் உணவு உண்ணும்போது ஏனைய காகங்களை அழைத்து உண்ணுவதையும் காணலாம். இவ்வாறு விலங்குகள் அநேகம் கூடி வாழ்வதைப் பார்க்கும்போது மனிதர்கள் தனித்து ஒதுங்கி வாழ முடியாது. ஏனெனில் மனிதன் சமூகப்பிராணி. இதனால் மற்றவர்களின் உதவி அவனுக்குத்தேவை.

மனிதர்களிடம் வளர்ந்து வருகின்ற பெரிய பிரச்சனை தனித்து வாழ்வது. தம்மிடம் இருக்கின்ற உணர்வுகளை பகிர்ந்து கொள்ளாது மரத்துப் போனவர்களாக இருப்பது. இதனால் துன்பம் ஏற்படும்போது அதனைத் தாங்கமுடியாது வாழ்வே வெறுத்துப்போனது போன்ற உணர்வு ஏற்பட்டு, அதனை எதிர்கொண்டு வாழச்சக்தி அற்றவராக இருக்கின்றார்கள். தற்கொலை முயற்சிகளுக்கு காரணமும் இதுவே ஆகும்.

"நம்முடைய வாழ்க்கையையும் நம்முடைய நடவடிக்கைகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது, கிட்டத்தட்ட நம்முடைய எல்லாச் செயல்களும், ஆசைகளும் மற்றவர்களுடைய வாழ்க்கையோடு பின்னிப்பிணைந் திருப்பதை நாம் விரைவில் அறிந்து கொள்ளுகிறோம்... மற்றவர்கள் விளைவித்த உணவுப் பொருட்களை உட்கொள்கிறோம். மற்றவர்கள் நெய்த ஆடைகளை அணிகிறோம். மற்றவர்கள் கட்டிய வீடுகளில் வசிக்கிறோம்... ஒரு நபர் அந்த நபராக இருப்பதற்கும், அந்த நபராக முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கும் தலையாய காரணம் அவருடைய ஆள்த்தன்மை அல்ல. ஆனால், அவர் மனித சமுதாயத்தின் பாகமாக இருப்பதே ஆகும். இந்த சமுதாயமே தொட்டில் முதல் சுடுகாடு வரை அவருடைய உலக மற்றும் ஆன்மீக வாழ்க்கை மீது செல்வாக்குச் செலுத்துகிறது." இவ்வாறு பிரபல விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறுகின்றார்.

ஒருவரின் பிறப்பில் இருந்து இறப்பு வரை, சமூகச் செல்வாக்கு அவரிடம் பிரதிபலிக்கின்றது. இதனால் சமூகத்தில் இருந்து ஒதுங்கி வாழமுடியாது. அத்துடன் சமூகமும் ஒரு தனிநபரை ஒதுக்கி வைக்கக்கூடாது. பல காரணங்களுக்காக சமூகம் சிலரை ஒதுக்கி வைக்கின்றது. இது ஆரோக்கிய மற்ற தன்மையே ஆகும்.

ஒற்றையாக தனித்து வாழ்கின்ற போது கருத்துப்பரிமாற யாரும் இருக்கமாட்டார்கள். அவர்களுக்குரிய பாதுகாப்பு கேள்விக்குறியாகவே இருக்கும். அவர்கள் இழைக்கின்ற குற்றங்களை கண்டித்து திருத்த யாருமில்லாதபடியால் குற்றங்கள் பெருக வாய்ப்பு இருக்கின்றது. இன்னும் அவர்கள் செய்கின்ற நல்ல செயல்களைப் பாராட்டி – தட்டிக்கொடுக்க யாரும் இல்லாத பெரும் அவலமும் காணப்படும்.

இத்தகைய நிலை புறச்சூழலில் இருந்து ஏற்பட்டபோதும், தனிப்பட்ட வாழ்விலும் மனதைநெருடும் துன்பியல்பு அனுபவத்தை ஏற்படுத்துகின்றது. அவை அவர்கள் வாழ்வியலில் பல்வேறு மறையான உணர்வுகளையும் – நடத்தைகளையும் தோற்றுவிக்கின்றது.

- ➢ பதட்டம்
- ➢ இலட்சியம் அற்றபோக்கு
- ➢ உணவில் நாட்டம் இன்மை
- ➢ பாலியல் உறவில் ஈடுபாடற்ற தன்மை
- ➢ எதிலும் ஆர்வமற்ற நிலை
- ➢ உடலில் சக்தி குறைந்தது போன்ற உணர்வும் அசதித் தன்மையும் காணப்படுதல்.
- ➢ இழந்த உறவுகளை மீள மீள நினைத்து கவலை கொள்ளுதல்.
- ➢ பாதுகாப்பு அற்ற உணர்வு
- ➢ முன்பு விரும்பியவை தற்போது விரும்பாத ஒன்றாக இருத்தல்.
- ➢ குடிபோதைக்கு அடிமையாதல்
- ➢ மற்றவர்களுடன் உரையாட விருப்பமின்மை
- ➢ தற்கொலை முயற்சி
- ➢ வாழ்வதற்கு என்று எந்தக் காரணமே இல்லை என்னும் நிலை
- ➢ எல்லாமே துண்டிக்கப்பட்ட அனுபவம்
- ➢ வெறுமை தனிமை நெருடும் சூழல்
- ➢ வாழ்வு வெறுத்தது போன்ற உணர்வு

இப்படிப்பட்ட மறையான தன்மைகொண்ட தனியன்களுக்கு உடனடியாக ஆற்றுப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கவேண்டும். இங்கு கார்கப்:. (Carkhvff) என்பவரின் சிகிச்சை அளிக்கும் மாதிரிவகை ஆற்றுப் படுத்தலுக்கு உறுதுணையாகும். "உடனிருந்து கவனித்தல் – உதவி பெறுவதற்கு பதிலழித்தல் – அவர்கள் எப்படி இருக்கிறார்கள்? எப்படி இருக்க விரும்புகிறார்கள்? என்ற அனுபவத்தை தனதாக்குதல் – செயற்பட தூண்டுதல்" என்பனவாகும்.

**ஒத்துப்போதல்**

துன்பங்களில் இருப்பவர்களுடன் ஒத்துப்போகும் தன்மையும், ஓர் ஆற்றுப்படுத்தும் வழி முறையாகும். இதையாரும் செய்ய முடியும். மற்றவர்களின் நிலையை, உணர்வுகளை, உள்நோக்கங்களைப் புரிந்துகொண்டு இரங்குவதே ஒத்துப்போகும் தன்மை என்று அகராதி கூறுகின்றது. மற்றவரின் துன்பநிலைகளை எம்முடன் பொருத்திப் பார்த்துக்கொள்ளுதல், அத்துன்பம் எமக்கு ஏற்பட்டால் எப்படி இருக்கும் என்ற நிலையை அடைதல் ஆகும். எப்போதும்

ஒத்துப்போகுதல் என்பது மற்றவரின் சூழ்நிலையை புரிந்து கொள்ளுதல். அந்தச் சூழ்நிலை காரணமாக அவருக்கு ஏற்படும் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளுதல், மற்றவருக்கு ஏற்படும் அந்த வலியைப் புரிந்து கொண்டிருத்தல் ஆகும்.

"மற்றொருவரின் வேதனையை உங்களால் தணிக்க முடிந்தவரை நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை வீணாகவில்லை" என்பார் ஹெலன் கெல்லர். சுயநலமாக வாழ்கின்ற இந்த உலகத்தில் மற்றவர்களின் துன்பங்களைக் கண்டு தெரியாது இருப்பது சுலபம். மற்றவர்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களைத் துடைக்க வாய்ப்புக் கிடைத்தபோதும் நாம் அதனை உணராது இருந்திருக்கலாம். இதற்குக் காரணம் மற்றவரின் தேவை என்னவென்பதை உணராத்தன்மை ஆகும்.

ஒத்துப்போகும் தன்மை எம்மிடம் இருந்தால் மற்றவரிடம் நிச்சயமாக கருணை – கரிசனை – அன்பு – வழிகாட்டல் என்ற தன்மைகள் உருவாகும். பிறருடைய இடத்தில் எம்மை வைத்துப் பார்க்கத் தெரியவில்லை என்றால், நம்மைப்போல பிறரை நேசிக்க முடியாது. பிறர் வாழ்வு மீது கரிசனை காட்டவும் முடியாது.

ஒத்துப்போகும் தன்மை எம்மிடம் இயல்பாக இருக்கும் ஒன்று. இவற்றை வளர்த்துக் கொள்வது அவசியம். எடுத்துக்காட்டாக ஒருவர் உடல்மெலிந்து, சீழ் வடியும் புண்களுடன் வீதியால் செல்லுகின்றபோது, எமது மனம் நெகிழ்ந்து போகின்றது. இத்தன்மையை வளர்த்துக் கொள்வது சிறப்பானது.

## உற்றுக்கேட்டல்

துன்பங்களும் துயரங்களும் ஒருவரை மனோரீதியாக நிலைதடுமாற வைக்கின்றது. இங்கு அவர்களுடன் உரையாடுகின்றபோது, அவர்கள் கூறுகின்ற மொழிகளை உற்றுக்கேட்டல் வேண்டும். நாம் எந்தளவு மற்றவரிடம் கதைகளை உற்றுக் கேட்கின்றோமோ, அந்தளவு அவரும் ஆர்வமாகத் தனது கருத்தியல்களை, உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்த்து விடுவார். உற்றுக் கேட்பதன் மூலம் அவருக்கு நம்பிக்கை பிறக்கும். தன்மீது கரிசனை காட்ட ஒருவர் இருக்கின்றார் என்ற உணர்வு தோன்றும்.



பாதிக்கப்பட்டவர் தற்கொலை உணர்வுக்கான காரணம் எதுவாக இருந்தாலும் சரி, பொறுமையும், புரிந்து கொள்ளும் பக்குவமும், அனுதாபமும் மிகுந்த ஒருவரிடம் மனதிலுள்ளதைக் கொட்டிவிடுவது மிகவும் நல்லது. இவர்களுக்குச் செவிகொடுத்துக்கேட்கும் மனமுள்ள குடும்ப அங்கத்தவர்களும் நண்பர்களும் உதவலாம். அன்பும் – அனுதாபமும் காட்டுவதன் மூலம் உதவி செய்யமுடியும்.

நன்றாகச் செவிகொடுத்துக் கேட்கும்போது அவரது நடத்தை உணர்ச்சிகள் என்பவற்றையும் கூர்ந்து கவனித்தல் வேண்டும். இன்னுமாக இங்கு கவனிக்கவேண்டிய விடயம் ஒருவர் தனது அந்தரங்க விடயங்களைக்கூட, உங்கள் மீது நம்பிக்கைகொண்டு கூறுகின்றபோது, நீங்கள் இரகசியம் பேணுவது அவசியம் ஆகும். மாறாக அவர் கூறிய கருத்துக்களை – உணர்ச்சி வெளிப்பாடுகளை கேலிக்கூத்தாக மாற்றக்கூடாது. இவ்வாறு செய்தால் பாதிக்கப்பட்டவர் இன்னும் அதிகமாகப் பாதிக்கப்படுவார். இத்தன்மைகள் இன்று அதிகமாகிச் செல்வதினால்தான் யாரும் தங்கள் இரகசியங்களை யாரிடமும் சொல்லாது மனதுக்குள் பொத்தி வைத்திருக்கின்றார்கள். தனிமையுணர்வுக்கும் இதுவே காரணம். பொதுவாகப் பலர் இன்று தமது மனதுக்குள் இருக்கும் துன்பக்கனலை வெளிப்படுத்த முடியாது தவிக்கின்றார்கள் என்பது உண்மை. ஒருவர் தன்னை வெளிப்படுத்துவதற்கு மற்றவர் மீது நம்பிக்கைக்குரிய பாத்திரமாக நாம் மாறவேண்டும்.

## யதார்த்த நிலைகுறித்து விமர்சனம்

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவது எவ்வளவு முக்கியமோ, அந்தளவுக்கு அதிமுக்கியமாகக் காணப்படுவது உள ஆற்றுப்படுத்தல் முறைகள் ஆகும். இன்று அரசாங்கமும் – அரசு சார்பற்ற நிறுவனங்களும் ஏராளமான நிவாரணங்களை கொடுக்கின்றது, அந்தளவுக்கு உளநலச்சேவைகள் நடைபெறுகின்றனவா என்றால் அவை கேள்விக்குரிய ஒன்றாகவே இருக்கின்றது.

"இது அழுவதற்கான நேரம் அல்ல. எழுவதற்கான நேரம் என்பதை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். இலங்கை அரசு வெறுமனே நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற கோசத்தைப் போடுவதைப்போல நாமும் வெறும் கோசங்களை எழுப்பக்கூடாது. நாமே எம்மைக் கட்டியெழுப்புவோம் என்ற வாசகத்தை மனதளவில் உறுதியாக்கிச் செயலிலும் காட்டுவோம். மக்களது மனோநிலை மிகவும் மோசமாக இருக்கின்ற இந்நிலையில் இம்மக்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும்." என்கிறார் சுகவாழ்வு நிறுவனத்தின் பணிப்பாளர் அருள்தந்தை டேமியன் அடிகளார் (யாழ். தினக்குரல் 30 ஜனவரி 2005).

இன்று பணியாற்றுகின்ற ஆற்றுப்படுத்துநர்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பணியாற்றுவதற்கு பயிற்சி பெற்றவர்கள். 'சுனாமி' இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்ற முறையில் செயற்பட இவர்களால் முடியாது. இதற்குரிய உளவியல் பயிற்சிகள் அவசியம் வேண்டும் என்பதை உளவியல் மேதைகள் கூறுகின்றார்கள்.

அநேக நிறுவனங்கள் வாரக் கணக்கான பயிற்சிகளை கொடுத்து உடன் ஆற்றுப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டது, மேற்கொள்ளுகின்றது. இது வரவேற்கத்தக்கது. ஏனெனில் உடனடித் தேவைக்கு இதுவே போதுமானது. இதனைத்தான் செய்ய முடியும். எனினும் ஒரு நீண்ட காலத்திட்டம் கொண்டு செயற்படுதல் மிகவும் ஆரோக்கியமானது. இதற்கும் சில நிறுவனங்கள் முன்வந்து செயற்படுகின்றது. பாதிக்கப்பட்ட பிரதேச மக்களில் இருந்து தெரிந்தெடுத்து அவர்களுக்குப் போதிய

பயிற்சியினைக் கொடுத்து வருகின்றார்கள். இதற்கு அவர்கள் கூறும் காரணம், இந்தப் பாதிக்கப்பட்ட மக்களிடம் வாழப்போகின்றவர்கள் இவர்கள். இவர்களுக்கு ஆற்றுப்படுத்தும் பணி இலகுவானதாக இருக்கும். உரிய முறையில் செயற்படுத்தக்கூடியதாக இருக்கும். மாறாக வேறுபிரதேசங்களில் இருப்பவர்களுக்கு தினமும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று ஆற்றுப் படுத்தும் பணியினை மேற்கொள்வது மிகவும் கடினமானதாகும். இதனால் இம்முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறுகின்றனர். இக்கருத்தியல் ஏற்றுக் கொள்ளக்கூடியது. இதற்கு அரசு முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் கொடுத்து, வேண்டிய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அப்போது தான் முழுமையான இலங்கையை மீளக் கட்டியெழுப்ப முடியும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை முகாம்களில் தங்கவைத்து அவர்களுக்கு ஏராளமான நிவாரணப் பொருட்களை அரசு – அரசுசார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றது. இதனைத் தவறு என்று சொல்வதா? அல்லது தவறில்லையா? என்ற விவாதத்திற்கு அப்பால், அந்த மக்களைத் தங்கிவாழ வைக்கின்ற போக்கொன்று மேல்கிழம்புகின்றது என்பது உண்மையாகின்றது. பாதிக்கப்பட்ட மக்களைச் சென்று பார்வையிடும்போது, அவர்கள் கேட்கும் கேள்வி "நீங்கள் என்ன கொண்டு வந்தனீங்கள்?, என்ன தரப்போறீங்கள்?, பதியப் போறீங்களோ?" என்பதாகும். இதில் இருந்து அந்த மக்கள் ஏதோ ஒன்றை எதிர்பார்த்து இருக்கின்றார்கள். மற்றவர்களில் தங்கியிருப்பதாகத் தெரிகின்றது. இங்கு உதவி செய்வதை தவறென்று சொல்வது நோக்கமல்ல. மாறாக, அந்த மக்களை உழைப்பதற்கு சக்தி கொடுக்கவேண்டும். இழந்துபோன நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். இதுதான் காலத்தின் தேவையாகும்.

மீள் புனரமைப்புப் பணிகள்கூட பாதிக்கப்பட்ட மக்களைக்கொண்டு செய்விப்பதற்கு யாரும் முன்வரவில்லை. புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளு கின்ற நிறுவனங்கள் ஒவ்வொரு கிராமங்களுக்கும் தாம் கூட்டிச் செல்லும் பணியாளர்களைக்கொண்டே செயற் படுகின்றார்கள். இதில் மாற்றம் காணவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களை செயற்பட வைக்கவேண்டும். மீள புத்தெழுச்சியுடன் வாழ நம்பிக்கையூட்ட வேண்டும். அவர்களுக்குள் ஆர்வம் என்ற அக்கினிக்குஞ்சை மூட்டவேண்டும்.

சுனாமித் தாக்கம் உண்டான பிரதேசங்களுக்கு நிவாரணம் கொண்டும், அழிவுகளைப் பார்வையிடவும் செல்லு கின்ற மக்கள், பாதிக்கப்பட்ட மக்களோடு உரையாடுகின்றபோது மீள மீள அவர்களின் பாதிப்பைக் குறித்து கேட்டுவருவதினால் அதிலும் ஒரு வித சலிப்புத்தனமும், சோர்வும் உண்டா கின்றது. இவற்றை பாதிக்கப்பட்ட மக்களிடம் இருந்து நன்றாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. மேலும் பாதிக்கப்பட்ட மக்கள் எழுப்புகின்ற நம்பிக்கையற்ற கேள்விகளுக்கு உரிய முறையில் பதிலளிக்காது நம்பிக்கையை இன்னும் வலுக்குன்ற செய்கின்ற தன்மையும் அதிகமாக நடைபெறுகின்றது. இங்கு பதிலளிக்கத் தெரியாவிட்டால் மௌனம் சாதிப்பதே சிறப்பானதாகும்.

ஆகவே இன்று தேவையான சிகிச்சை முறை "நம்பிக்கை உணர்வை வளர்த்தல்" ஆகும். இந்த நம்பிக்கை உணர்வுதான் வாழ்வதற்கான உந்துதலைக் கொடுக்கும். வாழ்க்கையின் இரகசியத்தைப் புரிந்து கொள்ளவைக்கும்.

நம்பிக்கை உணர்வு ஒருவரிடம் வளருகின்றபோது எதிர்மறையான கண்ணோட்டம் இல்லாது போகின்றது. ஒருவரின் ஆயுட் காலத்தையும் அதிகரிகச் செய்கின்றது. இந்த நம்பிக்கை உணர்வு அற்றவருக்கு பயமும் – பதட்டமும் – அச்சமும் குடிகொண்டு வாழ்வே வெறுத்துவிட்டது; இனி வாழ்ந்து என்ன பயன்? இறப்பதுதான் மேலானது, என்று தற்கொலை முயற்சிக்கு வாழ்வை நகர்த்திச் செல்கின்றது. இன்னுமாக மிகை மன அழுத்தம் ஏற்பட்டு மனநோயாளியாக மாறுகின்ற அபத்தமும் உண்டாகின்றது.

இழப்புக்கள் வாழ்க்கையில் தவிர்க்க முடியாதது. இந்த இழப்புக்களுக்காக நாம் எம்மை இழக்கமுடியாது. இழந்தவர்களுக்கு நன்றிக்கடனாக ஏதாவது செய்யவேண்டும். அவர்களது விருப்பங்களை நிறைவேற்றவேண்டும். இதற்கு பொறுப்புடன் தொடர்ந்து செயற்படவைப்பதும், அடிக்கடி சந்தித்து உரையாடுவதும், உணர்ச்சிகளைப் பகிர வாய்ப்பளிப்பதும், உடனிருப்பதுவும், வேறு உதவிபெற வழிகாட்டமுடிந்தால் வழி காட்டலும், வழிபாடுகளில் அவர்களுடன் இருத்தலும் சிறப்பான முறைகள் ஆகும். இவை பாதிக்கப்பட்ட மக்கள் வெறுமனே ஒற்றையர்கள் அல்ல என்பதை உணர்த்தும். அதன் மூலம் எம்மீது அன்பு காட்ட ஆதரவு கொடுக்க இந்தச் சமூகம் இருக்கின்றது என்ற நிலைப்பாடு தோன்றி வாழ்வதற்கு இலக்கு அமைத்துக் கொள்வார்கள். ❒

*நன்றி : கலைமுகம்*
*ஜனவரி - மார்ச், 2005*

**2004 டிசம்பர் 26**


## சுனாமிப் பேரழிவின்

**ஒரு வருட நினைவு**

**அழிவுகள், சேதங்கள் பற்றிய விபரங்கள்.**

- உயிரிழந்தோர்: 35,322
- காயங்கள் பட்டோர்: 21,441
- தாரமிழந்தோர், பாதிக்கப்பட்ட முதியோர், ஊனமுற்றோர்: 40,000
- உள்ளூர இடம் பெயர்ந்தோர்: 516,150
- வாழ்வாதாரங்களை இழந்தோர்: 150,000 *(75% மீன்பிடி தொழில் செய்வோர்)*
- இழக்கப்பட்ட சொத்துகளின் பெறுமதி: 900மில்லியன் அ. டொலர்
- அழிவுற்ற வீடுகள்: 88,544
- அழிந்த – சேதமடைந்த பாடசாலைகள்: 168
  பல்கலைக்கழகங்கள்: 4
  தொழிற்பயிற்சி நிலையங்கள்: 18
- இடம் பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்ட பாடசாலைகள்: 446
- பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள்: 200,000
- அழிவுற்ற – சேதமடைந்த சுகாதார நிலையங்கள்: 97
- பெரிய ஹோட்டல்கள்: 53 *(மொத்தம் 242 உள்ளன)*
- சிறிய ஹோட்டல்கள்: 248
- நடுத்தர சிறிய வர்த்தக நிலை யங்கள்: 210
- பாதிக்கப்பட்ட பயிர்ச்செய்கை நிலம்: 23,449 ஏக்கர்

ஆதாரம்:
**TAFREN** அமைப்பு, மத்திய வங்கி, நிதி அமைச்சு என்பனவற்றின் புள்ளி விபரங்களில் இருந்து பெறப்பட்டதாகும்.



# சுனாமியும் பண்டைக்காலமும்

நா. நவநாயகமூர்த்தி

## பண்டைக்கால கடற்கோள்கள்

கடந்த வருடம் டிசம்பர் இருபத்தியாறாம் திகதியன்று இந்துமா கடலில் நிகழ்ந்த கடற்கோளினால் இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளின் கரையோரப் பகுதிகள் அனைத்தும் பெரும் பாதிப்புக்குள்ளாயின. ஏராளமான உயிர் இழப்புக்கள் கோடிக்கணக்கான சொத்தழிவுகள் ஏற்பட்டன. இது யாவரும் அறிந்ததே.

சுமத்ரா தீவுக்கருகே, கடலுக்கடியில் தொடர்ச்சியாக ஏற்பட்ட பாரிய நில நடுக்கம் கருங்கற் பாறைகளை வெடிக்கச் செய்ததன் பயனாக இக் கடற்கோள் நிகழ்ந்தது. அவ்வேளைகளில் தோன்றிய சுனாமி என்ற இராட்சத பேரலைகள் கரையோரப் பகுதிகளைத் தாக்கி பேரழிவுகளை ஏற்படுத்தின.

இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்புவரை இது போன்ற பல கடற்கோள்கள் காலத்துக்குக் காலம் இந்து சமுத்திரத்தில் நிகழ்ந்துள்ளன. அவ்வேளைகளில் இலங்கைத்தீவும் பெரும் பாதிப்புக்குள்ளாகி வந்துள்ளது.

இவ்வாறு காலத்துக்குக் காலம் இந்து மாகடலில் நிகழ்ந்து வந்த கடற்கோள்களின் பயனாக புவியியல் (பௌதிக) ரீதியில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. மேலும் அவ்வேளைகளில் பெரும் உயிர்ச் சேதங்களும் மக்கள் இடம்பெயர்வுகளும் நிகழ்ந்து வந்துள்ளன.


மிகப் பண்டைக் காலத்தில் அதாவது பல லட்சம் வருடங்களுக்கு முன்னர் இந்து சமுத்திரம் நிலப்பரப்பாக இருந்தது. இமயமும் கங்கைச் சமவெளியும் தோன்றாத காலத்தில் விந்திய மலைக்கு தெற்கே அமைந்திருந்த மாபெரும் கண்டத்தில் (நிலப்பரப்பு) இந்து மாகடல் நிலப்பகுதியாக அடங்கியிருந்தது.

இம் மாபெரும் கண்டமானது தெற்கே தென்துருவம் வரையும், தென்கிழக்கே அவுஸ்திரேலியா வரையும், மேற்கே தென்னாபிரிக்கா வரையும் பரந்திருந்தது. இக் கண்டத்தின் பகுதிகளாக தென்னிந்தியா, இலங்கை, யாவா, சுமத்ரா முதலியன விளங்கியிருந்தன. இக் கண்டம் லெமூரியா எனப்பட்டது. இவ்வாறு பெருநிலப்பரப்பாக விருந்த பண்டைய லெமூரியாக் கண்டத்தின் பெரும் பகுதி காலத்துக்குக் காலம் ஏற்பட்ட கடற்கோள்களினால் அழிவுற்றதுடன் இப்பெரு நிலப்பரப்பிலிருந்தே இந்துமா கடல் தோன்றியதென ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பல லட்சம் வருடங்களுக்கு முன்னால் இந்து சமுத்திரத்தை உள்ளடக்கியிருந்த பண்டைய லெமூரியா கண்டத்தில் (நிலப்பரப்பு) பாரியதொரு நில நடுக்கம் ஏற்பட்டது. இதன் விளைவாக புவியோடு பிளவுற்று விரிவடைந்து செல்ல (அகன்று) இந்து சமுத்திரம் தோன்றியது. இதனையே முதற் கடற்கோளாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு பண்டைய லெமூரியாக் கண்டத்தில் இந்து சமுத்திரம் தோன்றியதைத் தொடர்ந்து பல நூற்றாண்டுகளுக்குப் பின் இந்து சமுத்திரத்தில் இரண்டாவது கடற்கோள் நிகழ்ந்தது. இதன் விளைவாக லெமூரியா கண்டத்தின் நிலப்பரப்பு மேலும் சுருங்க





கடற்பரப்பு விரிவடைந்தது.

இதன் பின்னர் நிகழ்ந்த மூன்றாவது கடற் கோளினால் லெமூரியா கண்டம் மேலும் அழிவுற்றதுடன் இந்து சமுத்திரம் மேலும் விரிவடைந்தது. இந்த மூன்று கடற் கோள்களும் நிகழ்ந்த காலம் பல லட்சம் வருடங்களாக இருக்கலாம். இது ஆய்வாளர்களின் கருத்து.

இந்த மூன்று கடற்கோள்களுக்குப் பின்னர் குறுகியிருந்த லெமூரியா கண்டத்தையே பழந்தமிழ் இலக்கியங்கள் குமரிக்கண்டம் என்று குறிப்பிடப்படுகின்றன. மூன்று கடற்கோள்களுக்குப் பின்னர் குறுகியிருந்த லெமூரியா என்ற குமரிக்கண்டம் தென்னிந்தியாவின் வடவேங்கடம் தொடக்கம் தென் பாவிநாடு வரையும் பரந்திருந்தது.

இந் நிலப்பரப்பில் கன்னியா குமரிக்குத் தெற்கே குமரி ஆறும், குமரிமலையும் பேராறும், பஃறுளி ஆறும் இருந்தன. குமரிக் கண்டத்துக்கு அருகில் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா கண்டங்கள் காணப்பட்டன. அக்காலத்தில் கங்கையும் (சமவெளி) இமயமும் தோன்றாமல் இந்தியாவின் வட பகுதி (வடகோடி) கடற்பகுதியாகவிருந்தது.

இற்றைக்கு சுமார் எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்து சமுத்திரத்தில் தொடர்ச்சியாக இருகடற்கோள்கள் நிகழ்ந்தன. இவற்றை முறையே நாலாம், ஐந்தாம் கடற்கோள்கள் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இக் கடற்கோள்களின் விளைவாக லெமூரியா என்ற குமரிக் கண்டத்தின் பெரும் பகுதி கடலுள் மூழ்கி மறைந்து போனது. குமரிக்கண்டத்துக்கு அருகிலிருந்த அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய கண்டங்களும் விடுபட்டு, அகன்று சென்றன.

இக் கடற்கோள்களின் பின்னர் தென்னிந்தியாவும் இலங்கையும், பிற இந்து சமுத்திரத் தீவுகளும் (மாலைதீவுகள் உள்ளிட்ட) புராதான குமரிக்கண்டத்தின் கடல் வாய்ப்பட்ட தென் திசைப்பகுதியின் எஞ்சிய நிலப்பரப்புகளாக இருந்தன.

புராதன குமரிக் கண்டத்தில் ஒரே நிலப்பரப்பாக தென்னிந்தியாவுடன் இணைந்திருந்த இலங்கை இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து விடுபட்டுத் தனித்தீவானது.

தென்னிந்தியாவுக்கு மிக அண்மித்திருந்த இலங்கை அக்காலத்தில் பரப்பளவில் மிக விசாலமானதாகவும் இன்றைய மடகஸ்கர் தீவு போன்று நீள் வடிவமாகவும் இருந்தது.

விந்திய மலைக்கு வடக்கே கடற்பகுதியாகவிருந்த (கங்கைச் சமவெளியும், இமய மலையும் உள்ளிட்ட) வட இந்தியா, பாரசீகம், ஆசியாவின் மத்திய பகுதி ஆகியன உயர்ந்த நிலத்தட்டு நிலப்பகுதிகளாயின.

மேற்படி மாற்றங்கள் ஐந்தாம் கடற்கோளின் போதே நிகழ்ந்தன என்று பேராசிரியர் வெசின் (நாம் தமிழர். பக். 39) குறிப்பிடுகின்றார்.

இதன் பின்னர் கி.மு. பன்னிரெண்டாம் நூற்றாண்டளவில் பாரிய கடற்கோள் ஒன்று இந்து சமுத்திரத்தில் நிகழ்ந்துள்ளது. இதனை ராஜவளி என்ற நூலும் உறுதி செய்கின்றது. இக்கடற்கோளினால் இலங்கையின் கரையோரப் பகுதிகள் பல கடலுள் மூழ்கி மறைந்து போயின.

மேலும் மன்னாருக்கும் தூத்துக்குடிக்குமிடைப்பட்ட பல ஊர்கள் அடங்கிய நிலப்பரப்பைக் கடல் ஆட்கொண்டது. குமரி முனைக்குத் தெற்கேயிருந்த பாண்டியரின் இராசதானியான கபாடபுரமும் கடல் வாய்ப்பட்டது.

அவ்வேளை தென்னிந்தியாவையும் இலங்கையையும் பிரித்திருந்த சிறிய நீரிடை வெளியில் மாற்றம் நிகழ்ந்த போதும் அது ஒடுங்கிய நீர்ப்பரப்பாகவே இருந்து வந்தது.

*(தமிழர் பண்பாடு – பக் 25)*

கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில் கல்யாணி (களனி) இராச்சியத்தை தீசன் என்ற நாகர்குல மன்னன் ஆட்சி புரிந்தவேளை கடற்கோள் ஒன்று நிகழ்ந்துள்ளது. இதனால் கல்யாணி இராச்சியத்தின் பெரும் பகுதி (இலங்கையின் மேற்கு பிரதேசம்) கடலுள் மூழ்கியது. அக்காலத்தில் கடல், கல்யாணியிலிருந்து (களனி) இருப்பத்தொரு கல் தொலைவிலிருந்தது. கடல் எழுச்சியினால் (பேரலைகளால்) நிலம் அமிழ்ந்தது. ஏராளமான மீன்பிடிக் கிராமங்களும் பல துறைமுகப் பட்டினங்களும், முத்துக் குளிப்போரின் சேரிகளுமாக பெரும் பகுதிகள் பெருங்கடலுள் அமிழ்ந்தபோதும், மன்னார் அவ்வழிவுக்குத் தப்பிக் கொண்டது.

*(பழந்தமிழர் – பக்.124).*

அவ்வேளை கிழக்கிலங்கையில் புகழ்பெற்று விளங்கியிருந்த கோணேஸ்வரம் என்னும் தலத்தில் அமைந்திருந்த மாபெரும் கற்கோயிலும் கடலுள் மூழ்கியது. மைக் வில்சன், ஆர்தர் கிளார்க் போன்ற ஆய்வாளர்கள் கோணேசர் கோயிலுக்கு அயலிலுள்ள கடலில் நடத்திய ஆராய்ச்சியின் பின்னர் கூறியிருக்கும் கூற்றுக்கள் இதனை உறுதி செய்கின்றன.

*(பண்டைய ஈழத்தமிழர் – பக்.19)*

கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் நிகழ்ந்த கடற்கோளினால் தமிழகத்தின் கரையோரப் பகுதிகளும் வட இலங்கையின் பெரும் பகுதிகளும் பாதிப்புக்குள்ளாயின.

இக் கடற்கோள் பற்றி மணிமேகலையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு மிகப் பண்டைக் காலம் தொட்டுக் காலத்துக்குக் காலம் இந்துமா கடலில் கடற்கோள்கள் நிகழ்ந்து வந்துள்ளன.

மேலும் அவ்வேளைகளில் பெரும் உயிர் உடைமைச் தேசங்களும், மக்கள் இடப் பெயர்வுகளும் இடம் பெற்று வந்துள்ளன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ❐

நன்றி:
வீரகேசரி வாரவெளியீடு
*10.07.2005*

# 26.12.2004
# ஆழிப்பேர் அடுக்கு அலைகளின் அகோரத்தாண்டவம்

பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள்

***மின்னாமல் முழங்காமல்***

தாளையடி, யாழ் குடாநாட்டில் ஒரு மீனவக் கிராமம். போரினால் பாதிக்கப்பட்டு பெரும் அழிவுகளுக்கு முகங்கொடுத்த கரையோர வதிவிடங்களுள் அதுவும் ஒன்று. அண்மைக்காலத்தில், முன்பு வான், கடல், தரைவழியே வீசப்பட்ட குண்டுகளினால் இடிந்திருந்த தமது இல்லங்களைத் திருத்தி மீண்டும் குடியமரத் தொடங்கினர் பலர். வெளியூர்களில் தற்போது வசிப்பவர்கள் விழாக்காலங்களிலும் கொண்டாட்ட நிகழ்ச்சிகளிலும் தமது சொந்த பந்தங்களைச் சந்திப்பதற்கும் இல்லங்களைச் சீர் செய்து அமைப்பதற்கும் ஊருக்குச் செல்வது வழக்கம்.

சென்ற ஆண்டு மார்கழித் திங்கள் இயேசுபிறப்பு விழாவிற்கு அடுத்தநாள் ஞாயிறு, சுகத் என்னும் இளைஞன் விடுமுறை நாட்களை செலவழிக்க தனது வீட்டிற்கு வந்திருந்தான். காலை 8.25 பெரியப்பாவுடன் தன் வீட்டு மண்டபத்தில் உரையாடிக் கொண்டிருந்தவன் பேரிரைச்சலுடன் வருவது எதுவென்பது பார்க்க எழுந்து முற்றத்துக்கு ஓடி வந்தான்.

இமைமூடித் திறக்கும் கணத்திற்குள், வெள்ளத்தினால் தான் அள்ளப்பட்டுச் செல்லுமுன், தனது பெரியப்பா கடல் அலைகளால் தூக்கி எறியப்பட்டு, சுவருடன் மோதி அவலப்படுவதை அவனால் உள்ளூர ஊகிக்க முடிந்தது. நீரின் வேகத்தால் முற்றத்து எல்லைச் சுவர் சரிந்து விழுந்தது. நல்ல காலம் அவ்விடிபாட்டிற்குள் அவன் அகப்படவில்லை. அவனுக்குப் பின்னே இரைந்துவந்த ஓர் அலை அவனை உயரத்தூக்கிச்சென்று ஐம்பது மீற்றர்களுக்கு அப்பால் அவனை வீழ்த்தியது. சடுதியாக தான் தரையில் நிற்கும் உணர்வுடன் செய்வதறியாது நிற்க, தன்னைக் காவிவந்த வெள்ளமோ அசுர வேகத்தில் முன்னே பாய்ந்து கட்டடங்களை இடித்தும் மரங்களை வேருடன் பெயர்த்தும் செல்வதைப் பார்த்தான். தனக்குப்பின்னேயும் வெள்ளம்! முன்னேயும் வெள்ளம்! ஓடிச்சென்று ஆலமரம் ஒன்றில் ஏறிநின்றான்.



அவனுக்கு முன்னே சென்ற வெள்ளம் அதே வேகத்தில் திரும்பிக் கடலை நோக்கிப் பாய்ந்து வந்துகொண்டிருந்தது. பாதுகாப்புக்காக மரந்தடிகளைப் பற்றியபடியும் வேலிகளில் தொங்கிய படியும் செய்வதறியாது நின்ற பெண்கள், பிள்ளைகள் அனைவரையும் அது கடலுக்குள் அள்ளிச்சென்றது. ஆலமரத்தில் நின்றபடியே, காயமடைந்து கதறியழும் பலரும் இழுபட்டுச் செல்வதைப் பார்த்தான். சொந்தம், பந்தம் என்று இருந்த எவரையும் அன்று அவனால் காப்பாற்ற முடியவில்லை. தன் கண்முன்னால் பரிதவித்து நின்ற உறவுகளின் அவல ஓலமும் உதவி கோரும்

வேண்டுதல்களும், பெண்கள், குழந்தைகளின் அவலச் சாவும் அவன் நெஞ்சை உறுத்தி நினைக்கும் பொழுதெல்லாம் அவனை அழச்செய்தன. வெள்ளத்தால் அள்ளுண்டு சென்ற தனது பெரியப்பாவின் புண்பட்ட உடலையாவது தேடிக் கண்டுபிடித்தது அவனுக்கு ஒருவகை நிம்மதியை அளித்தது.



தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்ட சுகத், அலைகள் பொங்கி வந்தது கிபீர் விமானங்கள் குண்டுவீச வருவதையொத்ததாக இருந்தது என்று கூறினான். அவனுக்கு அருகில் நின்ற வேறொரு இளைஞன், கடல் அலைகளில் மக்கள் மடிந்ததை "ரைற்றானிக்" அனுபவத்திற்கு ஒப்பிட்டு தனது சொந்தங்களை இழந்த துன்பியல் படலத்தை வார்த்தைகளாலும், சைகைகளாலும் விளக்கினான்.

இத்தகைய மனப்பதிவுகளையும் எதிரொலிகளையும் 26.12.2004 பல்வேறு நாடுகளிலும் ஏற்படுத்தியது.

"பேர் இரைச்சல் ஒன்று கேட்டது. நான் எழுந்து ஓட முன்பு முப்பது அடி உயரமான ஒரு நீர் மதில் என்னை விழுங்கியது. என்னுடைய வாய்க்குள் உப்புநீர் போகாமல் தடுக்க நான் மூச்சுப்பிடித்துக் கொண்டிருந்தேன். நான் இறக்கப் போகின்றேன் என்பதை உணர்ந்தேன்." இது தாய்லாந்தின் புக்கே என்ற நகரில் பாதிக்கப்பட்ட ஒருவர் கூறிய அனுபவ வெளிப்பாடு.

"நான் எனது குடும்பத்தினரைத் தேடத் தொடங்கினேன். ஆனால் ஆடாத, அசையாத, விகாரமான உருவங்களினது, பெரும்பாலும் பெண்களினதும் குழந்தைகளினதும் – சடலங்கள் எல்லா இடமும் விரவிக்கிடப்பதைப் பார்த்தேன். திகைப்படைந்த ஆண்களும், கதறி அலறும் பெண்களும் கடற்கரையோரத்தை விட்டு அகன்று செல்வதையும் பார்த்தேன்." இது இந்தியாவின் கடலூர் குடிமகன் ஒருவன் கூறியது.

"கொந்தளித்த கடலையும், சுறாவளியையும் பார்த்திருக்கிறோம். ஆனால் கடலிலிருந்து இப்படி பேரலைகள் சீறிப்பாய்ந்து வருவதை யாரும் பார்த்ததும் இல்லை, கேட்டதும் இல்லை." இது பாதிக்கப்பட்ட இன்னுமொரு இந்திய மகனின் மனப்பதிவு.

## காலன் வந்த கோலம்

26.12.2004! இந்தோனேசியாவைச் சேர்ந்த சுமாத்ரா தீவுக்கு அண்மையில் 7.58 மணிக்கு பூமி அதிர்வொன்று ஏற்பட்டது. அதன் விளைவாக எழுந்த கடல் அலைகளில் காலன் பவனி வரத்தொடங்கினான். சொற்ப மணித்துளிகளில் அத்தீவில் ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர்; தொடர்ந்து தாய்லாந்து, மலேசியா, பர்மா, பங்களாதேஷ் அலைகளின் அகோரத்தை அனுபவித்தன. இரண்டுமணி நேரத்திற்குள் இலங்கையும் இந்தியாவும் பேரழிவைச் சந்தித்தன. நாலுமணி நேரத்துள் மாலைதீவுகள்; ஏழு மணி நேரத்துள் சோமாலியா; எட்டு மணி நேரத்துள் செய்ஷெல் தீவுகள், கெனியா, தன்சனியா என்ற நாடுகளும் பாதிக்கப்பட்டன. இவை அனைத்தும் இந்திய பெருங்கடலை ஒட்டிய நாடுகள். இவைகளுள் பெரும் உயிர் இழப்புக்கள் நிகழ்ந்த நாடுகள்: முறையே இந்தோனேசியா, இந்தியா, இலங்கை, ஆழிப் பேர் அடுக்கு அலைகளின் விளைவாக நெஞ்சை உருக்கும் காட்சிகளும், வார்த்தைகளால் வடிக்க முடியா நிகழ்ச்சிகளும் வரலாற்றில் பதிவாகின. ஊருக்குள் ஆழ நுழைந்து அதை உழுதுசென்று அழித்தொழித்த முல்லைத்தீவு போன்ற நகரங்கள், வயல்வெளிகளுள் தூக்கி எறியப்பட்ட சின்னா பின்னமான வள்ளங்கள், அடித்தளத்துடன் பெயர்க்கப்பட்ட கட்டடங்கள், திருச்சிலைகளும், கோபுர முகப்புகளும் தவிர்ந்த மற்றவை அனைத்தும் இடிந்து, உடைந்து, நொறுங்கி நிற்கும் கோவில்கள், ஆலயங்கள், குழந்தைகளின் இறந்த உடல்களை முத்தமிட்டுக் கதறியழும் தாய் தந்தையர், கட்டட இடிபாடுகளுள் மீட்டெடுக்கப்படும் உருக்குலைந்த உடல்கள், நூற்றுக்கணக்கில் நிலத்தில் அடுக்கப்பட்டிருக்கும் பிணக்குவியல்கள், எஞ்சிய உறவுகளைக் கட்டித்தழுவி ஆறுதல் அடையும் அன்னையரும் தந்தையரும் உற்றாரும் உறவினரும், குடும்பத்தில் அனைவரையும் அல்லது பலரை இழந்து பைத்தியம் பிடித்து அலையும் உருவங்கள், தமது உறவுகளின் புகைப்படங்களைக் கையில் ஏந்தி "இவர்களைக் கண்டீர்களா" என்று கேட்டுப் புலம்பி அலையும் தனி மனிதர்கள், பல நாட்கள் அணிந்து கசங்கிய ஆடைகளுடன் நலன்புரி நிலையங்களில் இடக்குமுடக்கெனப் படுத்துறங்கும் அகதிகள் கூட்டம்... கிழக்கில், கல்முனையில் நான்கு மாதக் குழந்தையொன்றை தம்முடையதென்று அழுது புலம்பும் தாயும், தந்தையும், முல்லைத்தீவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எழுபதுக்கும் மேற்பட்டோரின் நினைவைத்தாங்கி நிற்கும் உறவினரின் சோகம்... இப்படி உள்ளத்தை உறையவைக்கும் பல காட்சிகள்! இச் சோகக் கதைகள் ஒருபுறம்! மறுபுறம், ஆச்சரியமான நிகழ்ச்சிகளுக்கும் குறைவில்லை. தாங்கள் முன்பின் அறியாத ஓர் அற்புதத் தாய் தம்மிருவரையும் நீரில் தாங்கி, தரையில் இறக்கினாள் என்று வியப்புடன் கூறும் சிறுவர்கள் இருவர். இறந்தவர்களின் உடல்களை பற்றைகளுக்குள் தேடிச் சென்றபோது அங்கு அழுதபடி கிடந்த பெண் குழந்தையைத் தூக்கியெடுத்து "அலை அரசி" எனப் பெயர் சூட்டி அதனைத் தமது நலன்புரி நிலையத்தில் நாயகியாக்கி வலம்வரும் பெருந்தகையோர்!

## புதுச் சொல்! பழம் பொருள்

இன்று பன்மொழிகளிலும் அடிக்கடி பயன்படுத்தப்படும் "சுனாமி" என்னும் ஜப்பானிய மொழிச்சொல், சென்ற நூற்றாண்டின் அறுபதுகளில் ஆங்கில மொழிவழக்கிற்கு அது அறிமுகப்படுத்தப்பட்டது. ஜப்பானிய மொழியில் "சு" என்பது துறைமுகம் "னாமி" என்பது அலை. ஜப்பான் நாட்டின் கரையோரங்களில் பல துறைமுகங்கள் உள்ளன. அந்தநாட்டில்

பல எரிமலைகளும் உள்ளன. அடிக்கடி பூமி அதிர்வுகளும் நடக்கின்றன. எரிமலைகள் வெடிக்கும்போது அல்லது பூமி அதிர்வுகள் நிகழும் போது அந்நாட்டில் கடற்கரைப் பகுதிகளின் துறைமுகங்களைப் பேர் அலைகள் தாக்குகின்றன. இவ் அனுபவப் பின்னணியிலேதான் "சுனாமி" என்னும் பெயர் உருவாகியது. பெருங்கடல் படுக்கையில் ஏற்படும் அதிர்வினால் கடல் அலைகள் உருவெடுக்கின்றன. அவை நீளமானதாயும் உயரமானதாயும் பாய்ந்து அடுக்கு அடுக்காக வரும் என "சுனாமி" என்னும் சொல்லுக்கு ஆங்கில ஒக்ஸ்வொட் அகராதி விளக்கம் தருகிறது. தமிழில், ஆழிப்பேர் அடுக்கு அலைகள் என வழங்கலாம்.

இயற்கையால் விளையும் பெரும் விபத்துக்கள் அல்லது பேரழிவுகள் தரும் நிகழ்ச்சிகளுள் ஆழிப்பேர் அடுக்கு அலைகள் என்பதுதான் அடிக்கடி நிகழாதது; கரவாகச் செயற்படுவது. பெரிதாகப் புலப்படாத நீர் வீக்கத்துள் ஒரு நீர்வாயுக் குண்டின் அபார சக்தியை உள்ளடக்கி நிற்பது.

ஆழிப்பேர் அடுக்கு அலைகளைத் தோற்றுவிப்பன நிலநடுக்கங்கள் மட்டும் அன்று. நிலச்சரிவுகள், குறுங்கோள்களின் (ஒருகிலோ மீற்றரிலிருந்து ஆயிரம் மீற்றர் நீளமுள்ள, செவ்வாய்க்கும் வியாழனுக்குமிடையே கோள்களுடனொத்துக் கதிரவனைச் சுற்றிச் செல்லும் இருப்புக் கற்பாறையிலான கோள்கள்) வீழ்ச்சி, எரிமலையின் குமுறல் போன்ற நிகழ்ச்சிகளாலும் அவை ஏற்படலாம்.

திறந்த கடற்பரப்பிலே இவ்வலைகள் மூன்று அடி உயர எழும்பி விரைந்து சென்றாலும், அலைகளின் உயர்வான பகுதி நூறு மைல் பரந்து பாயக்கூடியவையாயின் அதனைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும். ஒவ்வொரு அலையும் கரையை வந்தடையும் நேரம் ஐந்து மணித்துளிகளிலிருந்து தொண்ணூறு மணித்துளிகள் வரை நீடிக்கலாம். முதல் அலை கரையை அடைந்து திரும்பிச் செல்லும்போது, எதிர் நிற்கின்ற அனைத்தையும் தன்னுடன் அள்ளிச்செல்லும். மரங்களிலும் மற்றைய உயர் கட்டடங்களிலும் தொங்கி அல்லது தங்கி இருப்பவர்களை கடலுக்குள்ளிருந்து நூறு மீற்றருக்கு மேல் தரைக்குள் புகும் அலைகள் அதே வேகத்தில் கடலை நோக்கித் திரும்பி வரும்போது இழுத்துச்செல்லும். கடல் அலைகளின் மடிப்பு அவைகளின் மேல் நுனிக்கு முன்பதாகக் கரையை அடைந்தால், நீர் வற்றத் தொடங்கும். இக்காட்சி அழகானதாயும் வியப்புடையதாயும் இருக்கும். அதைப் பார்ப்பதற்கும் வற்றிய கடலிலுள்ள மீன்களையும் பவளக்கொடிகளையும், அழகிய கற்களையும் அள்ளுவதற்கும் பலர் ஓடிப்போவர். (26.12.2004 இன் போது தமிழகத்தின் மாமல்லபுர கடற்கரை வற்றி, முன்பு கடலுக்குள் மூழ்கிய கோவில் ஒன்றினையும் சில சிலைகளையும் பார்க்கக் கூடியதாக இருந்தது எனக் கூறப்படுகிறது.) இது அச்சத்துக்குரிய ஒரு அடையாளம். (இதுதான் இம்முறை இலங்கையிலும் தாய்லாந்திலும் நடந்தது.)

ஆழிப்பேர் அடுக்கு அலைகள் என்பது "ரைடல் உவேவ்ஸ்" என ஆங்கிலத்தால் அழைக்கப்படும் கடல் நீரோட்டத்திற்கும் ஒரு வகையில் பொருந்தும். கடற்கரையிலிருந்து நோக்கும்போது இரண்டும் ஒரே விதமாகத் தோற்றமளிக்கலாம். அத்தோடு ஆழிப்பேர் அடுக்கு அலைகளால் ஏற்படும் பாதிப்பு கடல் நீரோட்டத்திலும் தங்கியிருக்கலாம். ஆனால் ஒன்று மற்றையது அல்ல. ஒரு அடிப்படை வேறுபாடு உண்டு. 'ரைடல் உவேவ்ஸ்' என்பது சந்திரனின் ஈர்ப்புச் சக்தியால் விளைவது. தவிர, ஆழிப்பேர் அடுக்கு அலைகள் நீளமானவை. ஒரு அலை மேல் நுனிக்கும் அடுத்த அலை மேல்நுனிக்கும் நூறு மைல் தூரம் முதலாக இருக்கலாம். ஆழ்கடலில் அவை ஒரு சில அங்குல உயரம் மட்டும் இருக்கலாம். ஆனால், கடலின் ஆழம் குறையத்தொடங்க, அலைகளின் நீளமும் குறைந்து, அவை உயரம் பெருகத் தொடங்கும். அவ்வுயர் அலைகள் கரையில் மோதி பெரும் அழிவை ஏற்படுத்தும்.

ஆழமற்ற நீர்ப்பகுதியை அலையொன்று அடையும்போது, அது தன் வேகத்தைக் குறைத்து, குறுகி, தனது அபார சக்தியை அதிமிக வேகத்துடன் செலுத்துகிறது. அது உயரமான அலைகளாக வரலாம். அல்லது மெல்ல மெல்ல உத்வேகம் கொண்டு சமவெளியொத்த அலைகள் தோன்றலாம். சிலவேளை நூறு மீற்றர் உயரமான அலைகள் கரையிலிருந்து ஆயிரம் அடி தூரம் வரை செல்ல முடியும்.

### இயற்கையின் இயல்பு

26.12.2004! சுமாத்ரா தீவில் இருந்து 150கிலோமீற்றர் தூரத்தில் தெற்குப்புறம் உள்ள இந்தியப் பெருங்கடலின் பதினெட்டு மைல்கள் ஆழத்தில் பூமி அதிர்வு நடந்தபொழுது பூமியின் சுழற்சி ஒரு கணம் ஆட்டம் கண்டது. இருநூறு நொடிப்பொழுதுகளில் கோடானு கோடி தொன் நீரை இடம்பெயரச் செய்து ஐந்நூறு மைல் வேகத்தில் கடலின் மேற்பரப்பில் சலசலப்பில்லாது, கண்ணுக்குப் புலப்படாது செல்லும் அலைகளை உருவாக்கியது. இவ்வலைகளின் வேகம் எத்தகையதாக இருந்தது என்றால், கடற்கரைக்கு அண்மையில் மிதந்து கொண்டிருந்த முக்குளித்தல் அடையாளக் கருவியை நொடி ஒன்றிற்குள் நாற்பது அடிகள் மூழ்கச் செய்தது.



இயற்கையின் இவ் 'விளையாடலை' புரிந்து கொள்ள ஒரு சில புவியியல்சார் தரவுகளை அறிந்திருப்பது அவசியம். பூமியின் மொத்தப் பரப்பளவில் 29 வீதம் நிலப்பரப்பாகவும், 71 வீதம் நீர்ப்பரப்பாகவும் அமைந்துள்ளது.

பூமியின் மேற்படை புவியோடு என அழைக்கப்படும். இதன் தடிப்பு பத்து கிலோமீற்றரில் இருந்து ஐம்பது கிலோமீற்றர் வரை உள்ளது. இது, பூமியின் ஒட்டு மொத்த உருவத்துடன் ஒப்பிடும்போது ஒரு

## JCU EXECUTIVE COMMITTEE 2005/2006

### SEATED L TO R:

*Ven. S.P. Nesakumar (Archdeacon of Jaffna), Major N.S. Jacob (Salvation Army), Rev. N. J. Gnanaponrajah (Vice President & R.R. & R.Coordinator) Rev. A. Jeyakumaran (Hony. Secretary), Mr. D.R. Arumaynayagam (President), Mr. R. Hariharan (Hony. Treasurer), Rev. R. Jeyakumari (Vice President), Rev. S.K. Kadirgamar (Coordinator - Christian Education)*

### STANDING L TO R:

*Mr. V.P. Thanendra (Coordinator - Literature), Mr. Alfred N. Sinnadurai (Programme Manager), Mr. A. Navaneethakrishnan (Coordinator – Human Development), Rev. E.N. Lawrance (Asst. Secretary), Rev. A. Stephen (Coordinator – Theology), Rev. T. Thevanesan (Asst. Coordinator – Theology)*

### ABSENT:

*Rev. A.L. Lakshendrakumar (Coordinator -Youth Fellowship), Rev. M. Jude Sutharshan (Asst. Coordinator - Youth Fellowship), Mrs. S.V.L. Mills (Asst. Coordinator - Christian Education), Mr. Noel Vimalendran (Co-opted Member to the Ex. Co. & Asst. Coordinator R. R. & R. )*

## LEADERS OF CHURCHES MEET AT J.C.U. IN 2005

### L TO R:

*Rt. Rev. Duleep De Chickera (Bishop of Colombo), Rev. W. Wijeyadasa (President, Baptist Sangamaya.) Rt. Rev. Kumara Illangasinghe (Bishop of Kurunegala), Mr. D.R. Arumaynayagam (President, J.C.U.), Rt. Rev. Dr. S. Jebanesan (Bishop - Jaffna Diocese of CSI), Rev. Noel. Fernando (President, Methodist Church), Rev. George Stephen (Presbytery of Lanka), Mr. Noel Vimalendran (Treasurer, J.C.U.)*



## MESSAGE...

It is with joy and appreciation I send this message to the publication of the Journal containing the activities of the relief work carried out by the Jaffna Christian Union.

I consider it a privilege to have served the Jaffna Christian Union as one of its Committee Members.

This association has endured and withstood many difficulties due to the unsettled conditions that prevail in this part of the country. Now we have been reminded in a powerful way by the aftermath of tsunami devastation that the call to be partners with God in His ministry does not stop sometime, somewhere. It is a process.

I wish to take this opportunity to thank every one who has helped us in many ways to carryout our work among the needy. I also wish to thank the National Christian Council for their assistance to enable us to implement our programmed relief work.

In this connection, I wish to share with you what I have witnessed and experienced in my work with those affected by tsunami devastation in December 2004. It is of the **"Power of Human will"** possessed by human, which is one of the greatest gifts of God.

When I visited these people lately I was amazed to see the inner strength of these people. With an attitude of **"this is our life and we have to make the best of it"**, they had taken up the challenge. It amazed me to see that after losing everything, they managed to smile. A smile while hiding the tears of pain and sorrow that befell them only a year ago.

Let me conclude with the words of Benjamin Disrael: **"Nothing can withstand the power of human will if it is willing to stake its existence to the extent of its purpose".**

With best wishes

**Ven. S.P. Nesakumar**
*Archdeacon of Jaffna*
*Church of Ceylon.*



Leaders of Churches meet
as a body of NCC.
The president NCC,
Rt.Rev.Kumara Illangasinghe
addresses a meeting of the
Jaffna Christian Union (J.C.U.)
regarding Tsunami disaster.
Names on page 20.



J.C.U.Executive Committee 2005/2006-
Please see their names on page 20.



Tsunami Commemoration service held
at the C.S.I., Kuddathanai, CSI Moderator's
Commissary Rev. P.R. Navendra Anngoolan
leads the service.

அப்பிள் பழத்தின் தோலுக்குச் சமன் என அறிஞர் கூறுவர்.

புவியோடு இரண்டு வகையானது. கண்ட ஓடு, சமுத்திர ஓடு, சராசரி பத்துக் கிலோ மீற்றர் அளவிலான தடிப்பினை உடைய சமுத்திர ஓடு, எரிமலைக் குழம்பும், கப்புறோவும் கொண்ட பாறைகளை உடையது.



புவியோட்டின் கீழே, பூமியின் மேற்பரப்பிலிருந்து கிட்டத்தட்ட 2900 கிலோமீற்றர் வரை அமைந்துள்ள இடையோடும், அதற்குக் கீழே, 3472 கிலோமீற்றர் தடிப்புடைய கோளவகம் என்னும் உள்ளீடும் காணப்படுகின்றன.

புவியோடு, கடல்நீரில் பனிக்கட்டி மிதப்பதைப் போன்று சமநிலை பேணும் வகையில் பாகுத்தன்மை வாய்ந்த உட்படைகளில் மிதக்கின்றது. அதனால், புவியோடு பூமியுள் ஏற்படும் அகவிசைகளால் உந்தப்பட்டு சிலவேளைகளில் மேல் உயர்ந்தும், சிலவேளைகளில் மடிந்தும், தாழ்ந்தும், பிளவுற்றும் பல மாற்றங்களுக்கு உள்ளாகும்.

இன்று பலரும் புவியியலின் "தகட்டோட்டுக் கொள்கை"யை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இதன்படி புவியோடு ஆறு பெருங் கவசத் தகடுகளாலும், பன்னிரு சிறுதகடுகளாலும் உருவாக்கப்பட்டுள்ளது. இவை நகரும் இயல்புடையவை. சிலவேளை நேர் நேரில் ஒன்றை ஒன்று முட்டிமோதியும் (ஒடுங்கும் கவசத்தகடுகள்), சிலவேளை ஒன்று மேலுயர அல்லது கீழமிழ மற்றது அமிழ்த்தியும் (அமிழும் கவசத்தகடுகள்), சிலவேளை எதிரெதிர் திசைகளில் ஒன்றையொன்று விலகியும் (விலகும் கவசத் தகடுகள்) செல்லும்.

பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியப் பெருங்கடலில் ஒன்றை ஒன்று முட்டி மோதிக் கொண்டிருந்த இந்திய கவசத் தகட்டோடும், பர்மா கவசத் தகட்டோடும் அமிழும் கவசத் தகடுகளாக மாறின. உண்மையில் ஆண்டுக்கு ஒருசில சென்ரி மீற்றர் பர்மா கவசத் தகட்டினுள் இந்திய கவசத் தகடு மெதுவாக அமிழ்ந்து கொண்டிருந்த நிலைமாறி, மேலே உயர்ந்துநின்ற கவச ஓடு சடுதியாக கடலின் கீழ் கிட்டத்தட்ட ஆயிரம் மைல் நீளமுள்ள கடற்கீழ் முகட்டு ஓரமாக அறுபது அடிகள் உயர எழுந்தது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதனால் பர்மா கவசத் தகட்டின் சமுத்திர ஓட்டில் 600 மைல் நீளம் துண்டாடப்பட்டுள்ளது என்கின்றனர் ஒரு சிலர். இத்தகைய பாரிய அசைவு கடல்நீரின் சமநிலையைக் குலைத்து அதைக் கீழே இறக்கி பேர் அசைவுகளை உண்டாக்கின்றது. அதனால் வட்டவட்டமாக கடற்கரைகளை நோக்கி விரைந்து செல்லும் அலைகளை உருவாக்குகின்றன.

### மாறிய பூகோள அமைப்பு

பூமி அதிர்ச்சி ஏற்பட்ட மையப்பகுதியில், கடலின் அடித்தளத்தின் கீழே காணப்படும் சமுத்திர ஓடு முப்பதிலிருந்து எண்பது அடிகள் வரை இடம் பெயர்ந்துள்ளது என ஆய்வாளர்கள் கணிப்பிட்டுள்ளனர். சுமாத்ரா தீவு தெற்கே நூறு அடிகள் நகர்ந்துள்ளது எனச் சிலர் கருதுகிறார்கள். மேலும், பூமி அதிர்ச்சியின் மையத்திலிருந்து நானூற்றி அறுபது மைல் தூரத்திலுள்ள தாய்லாந்து நாட்டின் புக்கெட் தீவு 3.9 அங்குலமும், சிங்கப்பூர் 0.8 அங்குலமும் நகர்ந்துள்ளன என அதே ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பர்மா நாடு நாற்பது அடிகள் உயர்ந்திருப்பதாகவும் கருதப்படுகிறது.

நம் தாயகத்திலும் வடமராட்சி, முல்லைத்தீவுக் கரையோர விளிம்புகளின் தோற்றம் மாறியுள்ளது என மக்கள் கூறுகின்றனர். இதில் உண்மை இருப்பதாகத் தெரிகிறது. மேலும் இந்தியப் பெருங்கடலின் வெப்ப நிலை ஒன்று தொடக்கம் 2.5 பாகைவரை குறைந்துள்ளதாகவும், கடலின் மேற்பரப்பில் மணிக்கு இருபது கிலோமீற்றர்களில் இருந்து காற்றின் வேகம் இப்பொழுது நாற்பது கிலோமீற்றர்களாக அதிகரித்துள்ளதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும், கடல்நீர் ஓட்டத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என மீனவர்கள் முறையிடுகின்றனர்.

### பட்டகாலிலே படும்

அடுக்கு அலைகளாக சீறிவருவது கடல்நீர் மட்டுமல்ல, அதன்பின் அலைகள்போல் வரும் நோய் நொடிகளும்தான். காற்றிலும் நீரிலும் உள்ள கிருமிகள் பேரழிவை ஏற்படுத்தும் சக்தி உள்ளன. நோய்களை ஏற்படுத்தும் உயிர் வகைகள் உணவு செரிமான அடிக் குழாய்க்குள்ளும், இரத்தம் ஓடும் வழிகளுள்ளும், மூச்சுச் செல்லும் வழிகளுள்ளும், மாசுகள் உறைந்த நீர் வழியாக நுளம்பாலும், மனித உடற்தொடர்புகளாலும் உடலிற்குள் செல்லுகின்றன. தூய்மையான தண்ணீர், மனித கழிவுகளை சீராக அகற்றும் வழிமுறைகள், நல்ல மருத்துவ மனைகள் முதலியன சரிவர இல்லாத அல்லது இயங்காத நாடுகளில், இயல்பாகவே தொற்றுநோய் பரவும் வாய்ப்பு அதிகம் என்றால், இயற்கை அழிவினால் சேதமடைந்த இடங்களில் வாழும் மக்களுக்கு எத்தகைய அவலம் காத்திருக்கும் எனக் கூறவேண்டிய அவசியமில்லை. வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவலாம். வாந்தியினால் ஒரு நாளைக்கு இரண்டு கலன் நீர் உடலிலிருந்து வெளியேறுகிறது. இந் நோய்க்கிருமியின் பிடியிலிருந்து தப்புவது மிகவும் கடினம். ஒரு சில மணிநேரத்தில் இறக்க நேரிடலாம்.

வெள்ளப் பெருக்கெடுப்பு ஓய்ந்தபின் அங்கும் இங்கும் நீர்க் குட்டைகள் காணப்படும். அவைகள் மலேரியா நுளம்புகள் பெருக்கெடுப்பதற்கு சிறந்த தளமாகும். தொற்றுநோய்களைக் கொண்டு செல்லும் சிற்றுயிரினத்தின் மூலம் வாந்தி, டெங்குக் காய்ச்சல், தசைநார் வலி, குளிர் நடுக்கம் முதலிய நோய்கள் பரவும். குறிப்பாக, இச்சந்தர்ப்பங்களில் இரவும் பகலும் அடைப்பற்று வெளியே காலத்தைக் கழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளவதால், இந்நோய்கள் தொற்றும் ஆபத்து

அதிகமாகிறது.

இல்லிடமின்றி முட்டுமுட்டான கூடாரங்களில் அல்லது பள்ளிக்கூடங்களில் பெரும் எண்ணிக்கையில் பகலிரவைக் கழிக்க வேண்டியிருப்பதால், மூச்சுடன் சம்பந்தப்பட்ட நோய்களான நுரையீரற் காய்ச்சல், தொற்றுக் காய்ச்சல் முதலியவை ஏற்படும் அபாயம் பெரிதாக உள்ளது. மற்றவர்களுடன் முட்டிக்கொள்வதாலும் தும்மல், இருமல் போன்றவைகளாலும் இவ்வாபத்து பல முறை அதிகரிக்கும். மேற்கூறப்பட்ட வருத்தங்களால் அதிகமாகப் பாதிக்கப்படுவது குழந்தைகளும் முதியவர்களுமே!

உடற் பாதிப்புக்களையும் விட உள்ளப் பாதிப்புக்களுக்கு பலரும் ஆளாக்கப்படுகிறார்கள். அச்சமூட்டும் கொடூரக்கனவுகள், நினைவாற்றலிழப்பு, முயற்சிசெய்ய விருப்பமற்ற போக்கு, அடிக்கடி மனக்கண்முன் தோன்றும் பயங்கரப் படிமங்கள், இவைகளால் பெரிய பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள்.

பலருக்கு இயல்பு வாழ்விற்குத் திரும்புவது கடினமாக இருக்கும். பெற்றோர் இல்லாமலும், குடும்பத்தினர் இல்லாமலும், ஏன் குடியிருந்த கிராமமே இல்லாமலும் வாழவேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளானவர்கள், காலஞ் செல்லச் செல்ல மனநோயாளிகளாகவே மாற வாய்ப்புண்டு.

26.12.2004 இனால் அதிகம் பாதிக்கப்பட்டது சிறுவர்கள்தான் என்பது உறுதியாகிவிட்டது. ஆழிப் பேர் அடுக்கு அலைகள் தொட்டழித்த நாடுகளில் இறந்தோர் தொகையில் மூன்றில் ஒரு பகுதி சிறுவர்களே! பல சிறுவர்கள், குழந்தைகள் பெற்றோரையும் உறவினரையும் இழந்து தனிக்கட்டையாக மாறி, நல்லவர்களினதும், தீயவர்களினதும், கவனத்தை ஈர்த்துள்ளனர். அவர்களைக் களவாக எடுத்துச் செல்ல முனைபவர்களும், விலைபேசி வாங்க வருபவர்களும் கொஞ்சமல்ல. மறுபுறம், தத்தெடுத்து வளர்ப்பதற்கு முண்டியடித்துக் கொண்டு பலர் நிற்கின்றனர்.

எட்டுவயதிலிருந்து பதினைந்து வயதிற்குள்ளான பிள்ளைகள் உளப்பாதிப்படைய பெரிதும் வாய்ப்பிருக்கிறது. இவர்களுக்கு ஓரளவில் என்ன நடந்தது என்று தெரியும். உளவள ஆற்றுகை செய்யும் பணிகளில் ஈடுபடுவோர் இவர்களுக்குத் தகுந்தமுறையில் உதவி செய்யாவிடில், பின்னொரு காலத்தில் இவர்களிற் பலரும் குடி, போதை உட்கொள்ளல் போன்ற பழக்கங்களுக்கு ஆளாக நேரிடும். கணவனை இழந்த பெண்களும், தனியே நின்று குடும்பச் சுமை அனைத்தையும் தாங்கும் பொறுப்பில் உள்ளவர்களும் உள நோயின் பல வடிவங் களுக்கு ஆளாகலாம். அனைத்தையும் இழந்த வர்கள் தற்கொலை செய்ய முனைவதும் இயல்பு. ஆக, இச்சூழ்நிலையில் உளவள ஆற்றுகைக்கு செல்வோரின் பணி மிகவும் தேவையாக அமையும்.



இன்னும் ஒரு சோகக்குறிப்பு: மீனவக் குடும்பங்களில் பெண்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர். மீனவப் பின்னணியில் குழந்தைகளின் வளர்ப்பு முழுவதும் வீட்டிலுள்ள தாயில் தங்கியுள்ளது. மனைவி இல்லாத இல்லங்களும் தாயில்லாப் பிள்ளைகளும் நம் நாட்டு மக்கள் நடுவில் அதிகரித்துள்ளது. இந் நிலை பல சிக்கல்களை நாளைக்கு உருவாக்கப் போகிறது.

### அனுதாப அலைகள்

நம் வாழ் நாட்களில் நிகழ்ந்த இயற்கை அவல நிகழ்ச்சி எதனையும் விட 26-12-2004 உலகம் முழுவதன் அனுதாபத்தையும் பெற்றது. அதைத்தொடர்ந்து வரலாறு காணாதவகையில் நாடுகளும், அமைப்புகளும், தனிப்பட்டவர்களும் பொருளாயும் – பொன்னாயும் அள்ளி இறைத்தனர். விமானங்கள், உலங்கு வானூர்திகள், கப்பல்கள் உணவு, மருந்து, உடுபுடவை உள்ளிட்ட பல்வேறு நிவாரணப் பொருட்களுடனும், தாதியர், மருத்துவர், வேறுவேறு துறை வல்லுனர்களுடனும் இலங்கைக்கு விரைந்தனர். பல்வேறு விதமான அரசியற் பின்னணிகள் இவ்வுதவிக்கரங்களுக்கு உந்துசக்திகளாக விளங்கினாலும், ஒரு சில நாடுகளின் செயற்பாடுகள் மனிதாபிமான இலக்கணத்தின் எடுத்துக்காட்டுகளாக இல்லாதுவிடினும் மனிதன் வாழ்கின்றது, அயலவரின் அவலங்களில் உள்ளாரப் பங்கெடுத்து உதவும் பொதுநலப்போக்கு நுகரியலால் வரையறை செய்யப்பட்ட இன்றைய உலகிலும் உயிர்த்துடிப்புடன் வீறுநடை போடுகின்றது என்பதைக் கோடிட்டு நிற்கின்றது.

### நடந்ததும் நடக்கவிருப்பதும்

26-12-2004 போல் ஒரு நிகழ்ச்சி 1883 இல் நடந்தது. இந்தோனேசியாவின் கிறக்கட்டோவா எரிமலையின் குமுறல் காரணமாக இந்தியப் பெருங்கடல் 36,000 உயிர்களைக் காவுகொண்டது.

ஐரோப்பாவின் பெரும் ஆழிப்பேர் அடுக்கு அலைகள் அழிவு 1755 இல் நடந்தது. போர்த்துக்கல் நாட்டுக்கு அண்மையில் அத்லாந்திக் பெருங்கடலில் ஏற்பட்ட நில அதிர்வின் விளைவாகப் பேரலைகள் உருவாகி லிஸ்பன் நகரத்தைச் சேதத்துக்குள்ளாக்கியது. கடலாலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட தீயினாலும் அங்கு இறந்தவர்களின் தொகை 60,000.

120,000 ஆண்டுகளுக்கு முன்பு ஹாவாய்த் தீவுகளில் உள்ள மவுனா லோஆ வின் மண்சரிவால் ஆழிப்பேர் அடுக்கு அலைகள் உருவாகி, அதே தீவின் கோஹலாவில் ஐந்தாறு மீற்றர் உயரத்துக்கு மண்ணையும் கடலின் புதைபடிவப் பொருட் களையும் வீசியிருக்கிறது.

அதே விதம் கி.மு. 7100 மட்டில் நீருக்குள் மண்சரிவு ஏற்பட்டு நோர்வேக் கடற்கரைகளில் மண்புட்டிகளை உருவாக்கியுள்ளது என ஆய்வாளர் கருதுகின்றனர்.

அண்மைக்கால ஆய்வுகளின்படி, கடல் படுக்கையிற் பாரிய அளவிலான சிதைகூளங்கள் காணப்படுகின்றன. இவைகள் மண்சரிவுகளின் விளைவுகளாகத்தான் இருக்கவேண்டும். இரண்டு மில்லியன் (2,000,000) ஆண்டுகளுக்கு முன் ஹாவாய்த் தீவுகளில் ஒன்றான ஒஹுகுவுத் தீவில் நிகழ்ந்த மண் சரிவால் 40,000 கனசதுர கிலோமீற்றர் நிலம் கடலுக்குள் சரிந்தது. அதனால் மிகப்பெரிய ஆழிப்பேர் அடுக்கு அலைகள் உருவாகின.

மிகவும் விரைவில் எதிர்பார்க்கக்கூடிய நிகழ்வு: லபால்மா என்னும் தீவில் ஓர் எரிமலை உண்டு. அவ்வெரிமலை 1949 இல் குழம்பு, சாம்பல், பாறைப்பொருட்கள், வாயுக்கள், போன்றவைகள் வெளியே வெடித்துவரச்செய்து ஒரு பெரிய வெடிப்பை உருவாக்கியுள்ளது. இன்னும் ஒரு தடவை இவ்வெரிமலை சீற்றங்கொண்டு வெடித்தால் 400 கன சதுர கிலோமீற்றர் நிறையுள்ள பாளத்தை மணிக்கு முந்நூறு கிலோ மீற்றர் வேகத்தில் கடலுக்குள் தள்ளும். அந் நிகழ்ச்சி கடல் அலைகளை உருவாக்கி நூறு மீற்றர் உயரமான பேர் அலைகளை ஆபிரிக்கக் கண்டத்து கரைகளிலும் 25 மீற்றர் பேர் அலைகளை அமெரிக்கக் கண்டக் கரைகளிலும் செலுத்தும்.

தவிர, 1.1 கிலோ மீற்றர் நீளமுடைய குறுங்கோள் ஒன்று அத்லாந்திக் பெருங்கடலினுள் விரைவில் விழப்போகின்றது என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அது அமெரிக்க, ஐரோப்பிய, கண்டங்களுக்கு நூறு மீற்றர்கட்கு உயரமான அலைகளை அனுப்பும் என ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

### வருமுன் காத்தல்

1946 ஏப்ரல் ஒன்றில் பசுபிக் மாகடலில் அலஸ்க்காவுக்கு அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கம், ஐந்து மணி நேரத்துக்குப் பின் ஹாவாய்த் தீவின் கரையில் பேரழிவை ஏற்படுத்தியது. இதன் விளைவாக 1948 இல் பசுபிக் மாகடல் ஆழிப்பேர் அடுக்கு அலைகளின் முன் எச்சரிக்கை மையம் அத் தீவில் அமைக்கப்பட்டது. அம் மையத்தில் ஓயாது செயற்பட்டுக் கொண்டிருந்த கருவிகளால் 2004 டிசம்பர் 26 ஆம் நாள் பி.ப மூன்று மணியளவில் இந்தியப் பெருங்கடலில் சுமாத்ராவுக்கு தெற்கேயுள்ள கொக்கோஸ் தீவுகளில் நிறுத்தப்பட்டிருந்த நில அதிர்வு மானியில் ஒரு நில நடுக்கம் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் பதிவுசெய்யப்பட்டன. அதன் அளவை றிக்ரர் அளவையின் படி 8.0 ஆக கணிப்பிடப்பட்டது.

அந்நில அதிர்வினால் பேராபத்து எதுவும், குறிப்பாக பசுபிக் சமுத்திரக் கரையோரங்களுக்கு வராது என்ற தகவல் பி.ப 3.14 மணிக்கு அன்று கடமையிலிருந்த ஸ்ருவாட் வைன்ஸ்ரைன் என்பவரால் ஹாவாய் நிலையத்துடன் வழமையாக தொடர்புகொண்ட இடங்களுக்கு அனுப்பப்பட்டது.

அரை மணி நேர இடை வெளிக்குள், நிலநடுக்கத்தின் அளவு 8.0 லிருந்து 8.5 ஆக உயர்ந்தது. அப்போதுதான் ஆழிப்பேர் அடுக்கு அலைகள் உருவாகும் அபாயம் உண்டு என உணரப்பட்டு, அம் மையத்தின் பொறுப்பாளர் தொலைபேசி மூலம் வரவழைக்கப்பட்டு அவசரச் செய்திகள் அனுப்பப்பட்டன. ஆனால் அச் செய்திகளால் பயன் ஏதும் கிட்டவில்லை. அவ்விடை வேளையில் ஆயிரக்கணக்கில் உயிர்கள் பறிபோய் விட்டனவே!

சென்ற ஆண்டு ஆடி – ஆவணி மாதங்களில் சுமாத்ராத் தீவின் மேற்குப் பகுதிக்கு ஆய்வாளர்கள் ஒருசிலர் சென்று அங்கு 'விரைவில்' பூமி அதிர்வும் கடற்பெருக்கும் நிகழலாம் என அறிவித்தனர். மக்களால் அதை நம்பமுடியவில்லை. 1797, 1833, 1861 ஆண்டுகளில் அப்படியான நிகழ்ச்சிகள் நடந்துள்ளன என்றும் அப்படி நடக்கும்போது கரையைவிட்டு உயரமான இடங்களுக்கு மக்கள் ஓடிச்செல்ல வேண்டும் என்றும் தற்காப்புப் பரப்புரைகள் வழங்கப்பட்டன.

பூமி அதிர்வை எதிர்வு கூற முடியாதது போல, ஆழிப்பேர் அடுக்கு அலைகள் பற்றியும் முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியாது. நூற்றாண்டுக்கு ஒரு முறையாவது ஒரே இடத்தில் நிகழுமா என்ற கேள்விக்கு பதில் அளிப்பது முதலாக கடினம். அது எப்போது, எங்கே, எப்படி வரும் என்று எதிர்வு கூறுவது இன்றைய அறிவியலில் சுலபம் அன்று. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அதற்குக் காரணமான நில அதிர்வையும் விட அதிக அழிப்பு சக்தியைக் கொண்டது. அதன் தாக்கத்தின் எல்லை பற்றிக் கூறுவதும் கடினம். எடுத்துக்காட்டாக, அண்மையில் நிகழ்ந்த கடல் அலைகளின் தாண்டவம், பூமி நடுக்க மையத்திலிருந்து 1600 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இலங்கைத்தீவை இப்படித் தாக்கும் என்பதை எந்த விற்பன்னரும் எதிர்பார்க்கவில்லை.

நில அதிர்வின் விசையிலிருந்து மட்டும் ஆழிப்பேர் அடுக்கு அலைகள் பற்றி அறிந்துவிட முடியாது. கடற்கரையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரமாக அலைகளின் உயரத்தை அளவிடக் கருவிகள் பசுபிக் கடலோரத்தில் பொருத்தப்பட்டுள்ளன. அத்தோடு கரையிலிருந்து வெகுதூரத்தில் அலைகளின் அமுக்கத்தைப் பதிவுசெய்யக்கூடிய நுட்பமான கருவிகள் கடல்படுக்கையில் வைக்கப்படுகின்றன. இவைகள் அனுப்பும் சமிக்கைகள் செய்மதிமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வுசெய்யப்படும். இத்தகைய கருவிகள் இந்தியப் பெருங்கடலில் இயக்கப்பட்டிருப்பின், 26-12-2004 இத்துணைப் பேரழிவை விளைவித்திருக்காது.

### விடுகதைகளல்ல

தமிழ் மக்களுடைய இலக்கிய ஏடுகளில் "கடற் கோள்" பற்றிக் கூறப்படுகிறது. "ப..றுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" (மதுரைக்காண்டம், காடுகாண்காதை) எனச் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகள் வரலாற்றுத் தரவொன்றைப் பதிவு செய்துள்ளார். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் குமரிக் கண்டத்தில் நிகழ்ந்த கடற்கோள் நாற்பத்தொன்பது நாடுகளை அழித்ததாக வேனிற்காதைக்கு செய்த உரையில் குறிப்பிடுகிறார். தமிழ் மக்கள் நடுவில் இத்தகைய "பழங் கதைகள்" – பாரம்பரியங்கள் – நிலவிவந்தது என்பது தெளிவு. முதற் சங்கம் கூறும் தென்மதுரை, இடைச்சங்கத்துடன் தொடர்புடைய கபாடபுரம், மற்றும் காவிரிப் பூம்பட்டினம், கங்கை கொண்ட சோழேஸ்வரம் முதலிய இடங்கள் கடற்கோளினால் அழிக்கப்பட்டவை என்ற செய்திகளும், மற்றும், திருநூல் போன்ற சமய ஏடுகளில் வெள்ள அழிவுகள் பற்றி எழுதப்பட்ட பழங்கதைகளும் நிராகரிக்கப்படக் கூடியவையல்ல என்பதை 26-12-2004 எடுத்துக்காட்டுகிறது. ❐

நன்றி : கலைமுகம்
*ஜனவரி - மார்ச், 2005*



# இணைப்பாளரின்

## உள்ளத்திலிருந்து...

"எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக"

(யோ.17:21)

என்ற மகுட வாக்கியத்தின் அடிப்படையில் அமைந்த 99 வருட பாரம்பரியத்தைக்கொண்ட யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் செயல்பாட்டுக் குழுக்களில் ஒன்றான நிவாரண, புனர்நிர்மான, ஒப்புரவு (RR&R - Relief, Rehabilitaton & Reconciliation) குழுவானது மத் 25:40 இன்படி, "மிகச் சிறியோராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாகச் சொல்லுகிறேன்" என்ற இறைவார்த்தையினையும், "என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே எனச் சொல்பவரெல்லாரும் விண்ணரசுக்குள் செல்வதில்லை, மாறாக விண்ணுலகில் உள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்" என்ற இறை வார்த்தையையும் அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுகின்றது.

எமது யாழ் பிரதேசம் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலான கோரப் போரின் அழிவினின்று மீண்டெழ தத்தளித்த வேளையில் சுனாமிப் பேரழிவு மீண்டும் மக்களை நிலைகுலையச் செய்துவிட்ட வேளையில் யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் தனது பணியைச் சிறிதளவேனும் நிறைவேற்ற இறைவன் தந்த வழிநடத்தலுக்காகவும், யாழ். கிறிஸ்தவ ஒன்றிய நிர்வாகக் குழுஉறுப்பினரின் வழி காட்டலுக்கும், நிவாரண உடனடி செயற்பாட்டுக் குழுவின் (Task Force) அயராத உழைப்பிற்காகவும், உடன் நின்று தோள்கொடுத்து உழைத்த ஊழியர்கள், நண்பர்களுக்காகவும் (Staff & Befrienders), அவ்வவ் பிரதேச சபைப் பணியாளருக்கும் தேசிய கிறிஸ்தவ சங்கத்தினூடாக நிதி உதவி வழங்கிய ACT அமைப்பிற்காகவும், வெளிநாட்டு சபைகளினூடாக நிதி உதவி செய்த அருட்பணி D. S. தர்மபாலன் ஐக்கிய அமெரிக்கா, அருட்பணி ஐசக் செல்வரட்ணம் கனடா, அருட்பணி கலாநிதி டேவிற் பாமர் இங்கிலாந்து ஆகியோருக்காகவும்; செயற்பாடுகளை நடாத்த தம் வீடுகளை தந்துதவிய திரு. M.A. சுமந்திரன் குடத்தனை, வைத்திய கலாநிதி J.C.P.சாமுவேல் வியாபாரிமூலை ஆகியோருக்காகவும்; பொருளாக, பணமாக உதவி ஒத்தாசைகளை வழங்கிய ஏனைய அன்பு உள்ளங்கள் அனைவரிற்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

உடனடி நிவாரணப் பணிக்குழு ஒவ்வொரு வெள்ளியும் பி.ப.5.00 மணிக்கு கூடி

I. உடனடி நிவாரணம்

II. புனர்நிர்மானம்

(அ) தொழில் வாய்ப்பு

(ஆ) கட்டட அமைப்பு என்ற வகையில் திட்டமிட்டு சபைகள்; சமய, சாதி, பிரதேச, பால் வேறுபாடின்றி யாவரும் ஒன்றிணைந்த அப்பிரதேச சபைக்குருவை தலைவராகக் கொண்ட பாதிக்கப்பட்ட பிரதேச செயற்பாட்டுக் குழுக்களுடாக (Action Committee) நிறைவேற்றப்பட்டன. "எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக" என்ற எமது மகுட வாக்கியத்தை நிறைவேற்றப் போடப்பட்ட அத்திவாரமாகவே இதனை நான் கருதுகிறேன்.

இயன்றவரை பணிகளைச் சிறப்பாகச் செய்தபோதிலும் சபைகளுக்கிடையிலான முழுமையான புரிந்துணர்வும், தேசிய கிறிஸ்தவ சங்கத்தின் முழுமையான ஆதரவும் கிடைத்திருப்பின் இன்னும் வேகமாகவும் மேலும் சிறப்பாகவும் எமது பணிகளை ஆற்றியிருக்க முடியும் என்பது எனது திடமான நம்பிக்கை.

இறுதியாக எமது பிரதேசத்திற்கு செயற்பாட்டுத்திறன் வாய்ந்த நிவாரண, புனர்நிர்மான அமைப்பு இருக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். தமிழ் பேசும் மக்களைக்கொண்ட எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் யாழ் கிறிஸ்தவருக்கும் பங்கு உண்டு என்ற ரீதியில் திட்டமிடல், செயற்படுத்தல், நிர்வகித்தல் போன்ற செயற்பாடுகளை திறம்படவும், வேகமாகவும் ஆற்றுவதற்குரிய அணி எப்போதும் தயாராகவே இருக்கவேண்டும். இதனை முழுமையாக உருவாக்க ஒவ்வொரு கிறிஸ்தவரும் தம்மை இப்பணிக்கென அர்ப்பணிக்க முன் வரவேண்டும்.

'உயிர்க்கும் நினைவுகள்' மலரானது யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் நிவாரண புனர்நிர்மானப் பணிகளின் செயற்பாடுகளை பதிவு செய்த நூலாக வெளிவருவதோடு மட்டுமல்லாது, இயற்கை, செயற்கை அனர்த்த விளைவுகளை பல்வேறு கண்ணோட்டத்திலும் சித்தரிக்கின்ற ஆக்கபூர்வ கட்டுரைகளைத் தாங்கி வருவதையிட்டும் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். இம் மலரை வெளியிட அரும்பாடுபட்டு உழைத்த யாழ் கிறிஸ்தவ ஒன்றிய இலக்கியத்துறை இணைப்பாளர் திரு.வி.பி. தனேந்திராவிற்கு நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2006/2007ஆம் ஆண்டு புதிய நிவாரணப் பணிக்குழு தொடர்ந்தும் உற்சாகத்தோடும், உத்தமத்தோடும், புதிய பல செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்ல எனது ஆசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அருள்பணி என். ஜே. ஞானப்பொன்ராஜா**
இணைப்பாளர்,
நிவாரண, புனர்நிர்மாண, ஒப்புரவு செயற்குழு (RR&R),
யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்.

பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி அவர்கள் விளையாடுவதற்குப் பொருத்தமான சூழலை ஏற்படுத்துவதனூடாக சிறுவர்களின் மனநிலையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

அனர்த்தமொன்றில் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை மீட்டெடுப்பதில் விளையாட்டு பெரும் பங்கு வகிக்கிறது. தனிமை, பிறரிடமிருந்து ஒதுங்கியிருத்தல், விரக்தி, பயம் போன்ற மனநிலைகளை விளையாட்டு இல்லாமல் செய்கிறது.

விளையாட்டினால் பிள்ளைகள் உற்சாகத்தையும் புத்துணர்வையும் பெறுகின்றனர். இதனால் புதுவேகத்துடன் அவர்கள் அடுத்த கட்டத்துக்கு நகர்வர்.

*நன்றி: நமது செய்தி*
*இதழ் 20 (16-30, 03, 2006)*

# இயற்கை அனர்த்தங்கள் வருவதை முன்னறிவிக்கும் விலங்குகள்

இரா. சடகோபன்

புராணங்களிலும் பண்டைய வரலாற்றிலும் பல்வேறு இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் சொல்லப்பட்டுள்ளது. ஊழிக்கால அழிவு, பிரளயம், யுக முடிவு, கடற்கோள் என்பன பற்றி பல கதைகள் இவற்றில் உள்ளன. இறுதியாக உலகம் அழிந்தபோது தொடர்ந்து நாற்பது இரவுகளிலும் நாற்பது பகல்களிலும் மழை பெய்தமையால் நோவாவின் கப்பலுக்குள் இருந்த மனிதர்கள், மிருகங்கள், பிராணிகள் மற்றும் ஏனைய உயிரினங்களைத் தவிர முழு உலகும் அழிந்து போனதாக விபரிக்கப்பட்டுள்ளது. இத்தகைய அனர்த்தங்களின் போதெல்லாம் அதனை எப்படியோ முன்னறிந்து கொண்ட மனிதர்களும் விலங்குகளும் எப்படியோ தப்பிப் பிழைத்திருந்தனர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

நீண்ட காலத்துக்கு முன்பு மனிதன் இயற்கையுடன் மிக நெருங்கிய நண்பனாகவே வாழ்ந்து வந்தான். அவன் இயற்கையையே கடவுளென நம்பி வாழ்ந்தான். இயற்கையுடன் நட்புறவுடனும் அதனைப் போற்றியும் துதித்தும் வாழ்ந்ததால் இயற்கையால் தமக்கு அனர்த்தங்கள் ஏற்படாதென நம்பினான். அக்காலத்தவர்கள் தமதும் மிருகங்களதும் புலனுணர்வுகளைக் கொண்டே இயற்கை அனர்த்தங்கள் ஏற்படப் போவதனை முன்னறிந்து கொண்டனர்.


ஆனால், இன்றைய நவீன உலகில் மனிதன் தன் அறிவாற்றலாலும் விஞ்ஞான கருவிகளாலுமே இத்தகைய அனர்த்தங்கள் நிகழப்போவதனை அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. மனித வரலாற்றில் மானுட சமுதாயம் முன்னோக்கிச் செல்லும்போது மனிதனது மூளை விரிவடைந்தும் வளர்ச்சியடைந்தும் செல்கிறது என்றும், அவன் முன்னர் பயன்படுத்திய அவயவங்களும் புலனுணர்வுகளும் அவன் கூர்ப்படையும் போது படிப்படியாக அற்றுப் போகின்றன என்றும் விஞ்ஞான ஆய்வாளர்கள் கூறியிருக்கின்றனர். ஆனால் மிருகங்களும், பறவைகளும், பூச்சி, புழுக்களும் புலன்களால் வாழ்வதனை இன்னமும் கைவிட்டு விடவில்லை. அவை இயற்கை அனர்த்தங்களையும் தம் புலனுணர்வுகள் மூலம் முன் கூட்டியே அறிந்து பாதுகாப்புத்தேடி சென்று விடுகின்றன என்பதற்கு வரலாற்றில் பல ஆதாரங்கள் உள்ளன.



அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட சுனாமி கடலலைத் தாக்குதலின்போது மிருகங்கள் அத்தகைய அனர்த்தத்தை முன்னறிந்து பாதுகாப்பான இடங்களுக்கு சென்றிருந்தமையினை அவதானிக்கக் கூடியதாக இருந்துள்ளது. கண்ணால் கண்ட சாட்சிகளின்படி பின்வரும் சம்பவங்கள் பலரால் அவதானிக்கப்பட்டுள்ளன.

யானைகள் பிளிறிக்கொண்டு மேட்டு நிலத்தை நோக்கி ஓடிச்சென்றன. மீன்கள் இந்து சமுத்திரத்தில் இருந்து வெளியேறி வேறு கடல்களுக்குச் சென்றன. ஆயிரக் கணக்கான கடற் பாம்புகள் பாதுகாப்பான கடலை நோக்கிச் சென்றன. நாய்கள் வீட்டிலிருந்து வெளிச்செல்ல அஞ்சின. பறவைகள் தாழ் நிலங்களை விட்டுச்சென்றன. மிருகக்காட்சி சாலையில் இருந்த மிருகங்கள் தத்தமது கூடுகளில் இருந்து வெளியே வரப்பயந்தன. யால விலங்குகள் சரணாலயத்தில் உல்லாசப்

பிரயாணத்தில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கணக்கான வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் கொல்லப்பட்ட போது அங்கிருந்த மிருகங்கள் அனைத்தும் உயர்மேட்டுப் பிரதேசத்திற்குச் சென்று பாதுகாப்பாக இருந்துள்ளன என்ற அதிசயத்தை என்னவென்று விபரிப்பது?



இத்தகைய அதிசயங்களை மனிதனின் தூரவரலாற்றில் இருந்து அவதானிக்கலாம். கி.மு. 383ஆம் வருடத்தில் கிரேக்கத்தில் பாரிய பூகம்பம் ஒன்று ஏற்பட்டபோது, சில தினங்களுக்கு முன்பதாக எலிகள், பாம்புகள், பூச்சி – புழுக்கள் கலவரமடைந்து ஓடிச் சென்றதாக கிரேக்க வரலாற்றாசிரியர் 'டியடோரஸ் (Diodorus) எழுதி வைத்துள்ளார். இவ்வித விலங்குகளின் நடவடிக்கைகளை கூர்ந்தும், தொடர்ச்சியாகவும் அவதானிப்பதன் மூலம் வரும் அனர்த்தங்களை முன்கூட்டியே தெரிந்துகொள்ள முடியுமென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

1775 ஆம் ஆண்டு போர்த்துக்கல் நாட்டில் பெரும் பூகம்பம் ஒன்று ஏற்பட்டது. அப் பூகம்பம் ஏற்படுவதற்கு 8 தினங்களுக்கு முன்பிருந்து தரையில் இருந்து மண் புழுக்கள் வெளியேறி வேறு இடங்களுக்குச் செல்லவாரம்பித்தன. இதனால் அப்பிரதேசத்தில் பூகம்பம் ஏற்படப்போவதை அறிந்து அவர்கள் லிஸ்பன் நகரின் தேவாலயங்களில் காண்டா மணிகளை ஒலிக்கச்செய்து பூகம்பம் வரப்போவதை அறிவித்து மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கக் கூடியதாக இருந்ததென தத்துவவியலாளர் இம்மானுவல் கான்ட் தெரிவிக்கின்றார்.

1968 ஆம் ஆண்டு நேபாள நாட்டில் பூகம்பம் ஏற்பட்டபோது, முதல் நாள் இரவு ஆடு, மாடுகள், குதிரைகள், கழுதைகள், நாய்கள் பெருஞ் சத்தமிட்டுக் கத்தி அங்குமிங்கும் ஓடவாரம்பித்தன. அவை பூகம்பம் ஏற்படப் போவதை அவ்வாறு அறிவித்தன. 1966 ஜீன் 25ஆம் திகதி கலிபோர்னியாவின் டில்டி நகரத்தை நோக்கி ஆயிரக்கணக்கான விரியன் பாம்புகள் படையெடுத்து வர ஆரம்பித்தன. அடுத்த இரண்டு நாட்களில் அவை பரவலாக வசித்துவந்த பூமிப் பிரதேசத்தில் பாரிய பூகம்பம் ஒன்று ஏற்பட்டது.

1971 பெப்ரவரி 9ஆம் திகதி கலிபோர்னியாவின் சென். டெனென்டோ நகரத்துக் கருகில் காவல் சேவையில் ஈடுபட்டிருந்த பொலிசார் நூற்றுக்கணக்கான எலிகள் சாரிசாரியாக நெடுஞ்சாலை வழியே ஓடிச் செல்வதாகவும்; நாய்கள் பாய்ந்து, பாய்ந்து குரைத்ததாகவும் குறிப்பெழுதி வைத்துள்ளனர். அடுத்தநாள் அதிகாலை 6.01 மணிக்கு பூகம்பம் ஒன்று ஏற்பட்டது.

இவ்வாறு பூகம்பம் மாத்திரமல்ல, சுனாமி போன்ற மேலும் இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே அறிந்து வெளிப்படுத்தும் தன்மை விலங்குகளுக்கு இருந்துள்ளமையை வரலாறு எங்கும் காணலாம். அவற்றுக்கு இவ்விதம் அறியும் விதத்தில் மேலதிக புலனுணர்வு (Extra Sensory Perseption) உள்ளதென்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். மனிதனுக்கும் ஆதிகாலத்தில் இப் புலனுணர்வு இருந்தபோதும் கால ஓட்டத்தில் மனிதன் அதனை பயன்படுத்தத் தவறியதால் பரிணாம வளர்ச்சியால் அப்புலனுணர்வை மனிதன் இழந்து விட்டான் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சாதாரணமாக மனிதக் காதுகளுக்கு 20-20,000 ஹேர்ட்ஸ் (Hz) பரப்பளவிலான அதிர்வு சத்தங்களை உணர முடியும். ஆனால் நாய்கள், மானினம், பறவைகள் நுண்ணதிர்வுகளையும் உணர்ந்து தூரத்தில் வரும் ஆபத்துகளைத் தெரிந்துகொண்டு அதற்கேற்ப செயற்படுகின்றன. நமது முன்னோர்கள் இயற்கையுடனும் சூழலுடனும் இணைந்து மிக நெருக்கமாக வாழ்ந்தனர். அவர்கள் – ஏரிப்படுக்கைகளில் மிகத் தாழ்வான இடங்களில் பறவைகள் கூடு கட்டி முட்டையிட்டால் விரைவில் வரட்சி ஒன்று வரப்போவதையும் அதே பறவைகள் மர உச்சியில் உயரத்தில் கூடுகட்டி முட்டையிட்டால் மழைக்காலம் வரப்போவதையும் அறிந்து கொண்டனர்.

ஆதலினால் நாம் காதுகளை மிகக் கூராக்கிக்கொள்ள வேண்டியதன் மிக அவசியத்தேவை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பான ஆய்வில் சீன மக்கள் மிக முன்னணியில் உள்ளனர். இவ்வித ஆய்வுகளை மேற்கொள்வதற்கென பூகம்ப ஆய்வு மத்திய நிலையமொன்றை இவர்கள் ஏற்படுத்தியுள்ளனர். இந்நிலையம் சுமார் 2200 ஆண்டு கால வரலாற்றுத் தகவல்களை சேகரித்து வைத்துள்ளது. இத்தகவல்களின் ஆய்வின்படி பூகம்பம் அல்லது மேலும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படப் போவதனை இவர்களால் சரியாக முன் கூட்டியே அறிந்துகொள்ள முடிந்தது. இவ்விதம் 1975 பெப்ரவரி 4ஆம் திகதி பூகம்பம் ஒன்று ஏற்படப் போகின்றது என்று இவர்கள் எச்சரித்தனர். இதன்படி அடுத்தநாள் அதிகாலை 7.36 மணிக்கு பூகம்பம் ஒன்று 7.6 ரிச்டர் அளவில் ஏற்பட்டது. எனினும் 5 இலட்சம் மக்கள் வசித்த பிரதேசத்தில் சுமார் 10 ஆயிரம் மக்கள் இறந்தனர். இது 2% சேதமாகும். இதற்குக் காரணம் மக்கள் இவ்வெச்சரிக்கை விஞ்ஞான பூர்வமற்றது என நம்பாமல் விட்டதாகும். எனினும் இது தொடர்பான விஞ்ஞான ஆய்வுகள் பரவலாக்கப்படுவதன் தேவை பூதாகரமாக எழுந்துள்ளது. இவ்வித கண்டு பிடிப்புகளை மக்கள் மத்தியில் சடுதியாக எடுத்துச் சென்று எச்சரிக்கை செய்யும் முறையொன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும். ❑

நன்றி : விஜய்

*2005 பெப்ரவரி 06*

# Seminar on Journalism

Please see names on page 27.



## SEMINAR ON JOURNALISM

1. *Rev. Ruban Mariampillai (Editor "Pathukavalan") inaugurates.*
   ***Seated from L to R:** Mr. A. Navaneethakrishnan, Rev. R. Jeyakumari, Mr. D.R. Arumaynayagam (President J.C.U.), Mr. R. Hariharan (Treasurer), Rev. E. N. Lawrence and Mr. V.P. Thanendra (Coordinator – Literature).*
2. *Mr. S. Joseph Bala (Editor "Pathai") speaks,*
3. *Mr. V.P. Thanendra (Coordinator – Literature) speaks, L to R: Prof. N. Shanmugalingam (Chief Guest), Mr. D.R. Arumaynayagam (President JCU), Rev. A. Jeyakumaran (Secretary JCU).*
4. *Mr. A. Jesurasa (Editor "Therithal") speaks*
5. *Mr. K. Velthanjan (Journalist) speaks*
6. *Final day Session: Prof. N. Shanmugalingam (Chief Guest) a participant receives his award from him.*
7. *Mr. R. Ratheyan (Editor "Namathu Eela Nadu") speaks*
8. *A section of the participants at the Seminar.*



## MESSAGE...

It is a privilege to send a short message on behalf of the National Christian Council of Sri Lanka to the publication of a magazine of the Jaffna Christian Union.

People face many disasters due to various reasons. Some of them like war and poverty are human made without any doubt. Some find it difficult to understand the cause for disasters of massive magnitude, and they find a scapegoat. That scapegoat is natural calamities. It is because they fail to wrestle with the root causes for some of these disasters. In such a context we need to find a relevant theology and spirituality to wrestle with some of these where there are no easy answers.

The tsunami that devastated our land brought many other tsunamis to our country. This is the same case with regard to other countries that were devastated by the tsunami. Huge influx of money arrival of many International Non-Governmental Organizations brought a new culture to us. The civil society that responded in very big way to the tsunami became dependent. The people who were able to transcend ethnicity, religion, political and other differences at the beginning in responding to tsunami failed to sustain that spirit for long. It is sad. Further many started to build their own empires and develop infrastructure. How unfortunate it is!

We are happy to note with gratitude that the Jaffna Christian Union responded to the situation by identifying the needs, coordinating and monitoring the work. Human needs were met with the support of many agencies, including ACT International. We are grateful to all of them for that partnership. We are indeed happy that JCU was able to respond to the needs of the people and retain the ecumenical character in their responses. We praise God for all those who carried on the work ecumenically with transparency.

I wish to remind ourselves that in the pre-World Council of Churches year in the 20th century, there were three important movements that had three specific areas of interests. They are the International Missionary Council, Faith & Order movement and the Life & Work movement.

The Jaffna Christian Union gave lead from the early 20th century to work together in Sri Lanka. There were times where the Jaffna Christian Union organized regular Theological Conferences to respond to challenges in the changing Sri Lanka. We propose that the JCU gave the lead to team theological lesson for tsunami.

There seems to be reluctance on the part of the people to move beyond relief to rehabilitation and development. The people need to stand on their feet. We need to assist the people in such a way that the people may stand on their feet.

Our earnest prayer is that JCU may give a lead to respond to disaster in a meaningful way by learning lessons from the past and reflect on the theologically.

**Rev. Dr. Jayasiri Peiris**
*General Secretary,*
*National Christian Council of Sri Lanka*

# Immortal Memories...



Sue and I arrived in Sri Lanka for our first stint of service in August 2000. We served in Wellawatte for just over four months. On the invitation of the Jaffna Methodist Church, Sri Lanka, we returned in August 2002 for an appointment in Kollupitiya in November 2002. Kollupitiya Methodist Church had arranged a 'Goodwill Mission'. It was on this visit that Rev. Karunasekara, then Superintendent of the 'Jaffna Methodist Circuit' said he could do with Sue and me there. The Methodist Conference Stationing Committee and we agreed to this move. In January 2003 we arrived in Jaffna. Our return to the UK was in July 2005.

Of all my periods of service to date, it is the one in Jaffna, which has given me the most vivid images of life, lived under extreme difficulties.

Sadness and anger were stirred in me as I traveled up the A9 for the first time I saw for myself then the worthlessness of war. As a humanitarian and architect, I was deeply moved at seeing all the damages and people living under make shift roofs of tarpaulins and canvas in and between the ruined buildings lining the route. The road itself in places was no road at all. Either it was of broken tarmac, or it was of red mud. Bridges were makeshift constructions of old railway lines, tightly laid. The devastations of civil war were everywhere about and none more vividly than in the beheaded and blackened trees of the coconut plantations. Never before in my life had I had to pass through military checkpoints. Landmine warning signs were everywhere. The dreadful on-going effects of war were plainly evident, all around us.

Our night-time arrival in Jaffna Town, in January 2003, was completed after an eventful, eighteen-hour journey from Colombo. At the Methodist compound we were greeted by Karunasekara and a host of laughing and excited children, bouncing around in joy. Unloading the lorry with their help, we so made our home in the first floor of the manse. And Jaffna became our home too, for two-and –a-half years.

Up till the tsunami, given the 'ceasefire', the focus we shared with you was much upon the restoration of relations between national churches, between the national faiths and between peoples, the restoration of services for the communities and community groups of the peninsula and the restoration of buildings and new building work. After the tsunami, the focus, of course, changed. Post-war rehabilitation had to take second place. The Jaffna Christian Union Task Force was formed. New facilities were opened. New services offered. Yes, there were the massive frustrations with Colombo and International Organizations over the releasing of much needed aid, but the resilience of the Tamil people, to counter the terrors of death, want and need, once again came to the fore.

In the period following the 'ceasefire', we witnessed huge improvements to life in the peninsula. In the six months we had with you after the tsunami, we saw rescue give way to relief and, in turn, relief give way to the beginnings of rehabilitation. It is a long and slow business, we understand. And it is made more difficult because of failures in maintaining the peace process. We continue to share your deepest concerns at this difficult time in your history.

## From a Foreigner's Perspective

Since leaving Rev. Kadirgamar in charge of the Methodist work in Jaffna Town and our returning to the U.K., we have been learning more about the responses – to the demands of the war and the tsunami – of the UK in general and the Methodist Church here in particular. Over Christmas and the New Year we had many programmes on radio and television, on the first anniversary of the tsunami. This, more than the war and continuing troubles, has had the greater publicity. People in our own circuit and churches have been telling us of their fund raising efforts. The Methodist Church Relief and Development Fund, Christian Aid and the UK Disasters' Emergency Fund were the three main beneficiaries. The latter reports that large funds are still available for long-term rebuilding in Sri Lanka. The unresolved war delays the release of these funds.

As the JCU Task Force continues with its work for another year, Sue and I assure you of our prayers and efforts here to secure more funds for post-war and post-tsunami relief. May God be with you and give you peace and security. May He bless all your endeavours.

**Rev. Dr. David. G. Palmer**

UK Methodist Minister and former Mission Partner in Sri Lanka



# வாழ்வளித்த தாயே நீயே சாவும் அளித்தாய்

புதுவை இரத்தினதுரை

கடலே!
எமக்குப் பிடிக்காப் பெண்ணாய்
இப்போ.
எத்தனைநாள் உன் அழகிற்கிறங்கி
பாதாதிகேசம் பாடினோம்.
எம்தாயின் வேலியாய்க்கிடந்து
அடிதாங்கிய கடலே.
இன்றேனடி இந்தக்கொடூரம்
இழைத்தாய்?
சுனாமி!
நீ எந்தப் பகைவனின் பினாமியாய்
வந்தாய்?
மெல்ல அலைப்பாவாடை
மேலுயர்த்தி
கணுக்கால் தெரிய ஓடிவரும்போதில்
உன் கொலுசுமணிச்சத்தத்தில்
உருகினோம்
இன்று கொலைவதைக்கொண்டு
ஏனடி ருத்ரதாண்டவமாடிப்
போனாய்.
'கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றி
குரைகடலோதம் நித்திலம்
கொழிக்கும்' என்று
ஞானசம்பந்தன் பாடிய நாயகியே.
இன்று பேயாய்த் தரைவிரித்தாடிக்
கிடக்கின்றாய்
எந்தப் பேச்சுமின்றி.
அழுதழுது சோர்ந்து
நிமிரவொண்ணாதிருக்கும் எம்மீது
உன் பலம்காட்டிப்போனாய்.
உப்புக் கரிக்கும் இதயத்தாளே
நம்பியுன் கரைகிடந்தோருக்கு
ஏனடி துரோகமிழைத்தாய்?
நித்தமுன் மடிவளர்ந்த
பிள்ளைகள் மீது
அப்படி என்னவஞ்சம் உனக்கு?
'நீலமாகிவரும் கடல்' என
உன்னை நினைந்துருகினான்
இங்கொருவன்
அதுவுன் வஞ்சநெஞ்சில்
நிறைந்திருந்த
நஞ்சின் நிறமெனக் கண்டோமின்று.
வாழ்வளித்த தாயே
நீயே சாவுமளித்தாய்.
கரையெங்கும் உயிரெடுத்தும்
உடல் புதைத்தும் போனாய்.
கரைமாந்தர்மீது துயர்கவித்தபோது
நெஞ்சிலொரு மூலையிலாவது
நெருடவில்லையா?
கண்ணீரால் உன்
கரையுருகிப்போவது
காண்கிலையா கடற்தாயே.
எம் சின்னமணித்தீவின்
வண்ணமழித்தாய்.
பூவையும், பொட்டையும்
தாலியையும்கூட
வாரிப்பறித்தேகினாய்.
பூக்களைக் கசக்கியும்,
பிஞ்சுகளை உதிர்த்தும்,
பழங்களைப் பறித்தும்
மொட்டை மரமென
மூளியாக்கினாய் எம்மை.
உனக்கு அருகில்வர பயமெமக்கு
இப்போ.
எந்த மடியேறித் தவழ்ந்தோமோ,
எந்த அலையேறி மிதந்தோமோ,
எந்த முகமேறி முத்தமிட்டோமா
அச்சமூட்டுகின்றன அவையாவும்
எம்மை.
எட்டாவொன்றாகி
என்ன செய்தழித்தாய் எம்முறவை?
கடலருகே மலையொன்றாக்கி
பிணம் குவித்தோம்.
பின் வாரிப்புதைத்தோம் உன்
கண்ணெதிரே.
இயற்கை இனம் பார்ப்பதில்லை
மதம் பார்ப்பதில்லை
நிறம் பார்ப்பதில்லை
எனவுணர்த்தவா
இந்த ஊழிக்கூத்தாடிப் போனாய்?
போடீ அரக்கி.
வாரியுன் மடிநிறைத்துவிட்டு
பாறிச்சரிந்துள்ளோம் பார்.
இனி நிமிர்வதெக்கலாம்?
எங்ஙனம்?
எவரால்?
திசை வெளிக்காப் பொழுதின்
பயணியராய்,
திகைப்பூண்டாய்,
கசையடியால் உடல்கிழித்த
பாவியராய்
கரையில் நாம்.
கடலே வடிவுகொண்டிலங்கமுடியும்
உன்னால் மீண்டும்.
இயலாதடி எம்மால்.
வளமற்ற தேசங்களின் கரையில்
வறுமையுற்ற நாடுகளின்
ஓரங்களில்
வல்லரசுகளே அணுக்கழிவுகளை
இனியும்
வாரிக்கொட்டுங்கள்.
பழுதடைந்த கந்தகக் கழிவுகளை
வீசுங்கள்.
புதிய பரிசோதனை முயற்சிகளை
பாவப்பட்ட நாடுகளின் கரையில்
பரீட்சித்துப் பாருங்கள்.
உமக்கென்ன நீவிர்
உயரத்திலுள்ளீர்
நாங்கள்தானே பளுசுமப்பது.
'இயற்கையை நீ அழித்தால்
இயற்கையால் நீ அழிவாய்'
எவன் கருத்திலெடுத்தான்
இவ்வாசகத்தை.
கொட்டுங்கள்
குவியுங்கள்
கழிவுகளை எம்முதுகில்.
இன்னும் மீதமாய்
கொஞ்சப்பேருள்ளோம்
உங்கள் பரிசோதனைகளுக்குப்
பலியாக.
வந்து கொட்டுங்கள் கழிவுகளை.
பின்னர்
நீலிக்கண்ணீருடன்
நிவாரணப் பொருட்களுடன்
வாருங்கள்.
கையேந்தி நிற்போம்
பாய்களுக்கும்
பவுடர்களுக்கும் உங்கள் முன்னே.
உங்களை எவர் கேட்கக்கூடும்.
உயர்ந்தவரல்லவா நீங்கள்.
எங்களை எவர் பார்க்கக்கூடும்.
இழிந்தவரல்லவா நாங்கள்
இனியும் கரை கிடப்போம்.
இனியும் கடல் எடுக்கும்.
கத்திக்குளறிவிட்டு
மீண்டும் கரைகிடப்போம்.
போக்கறுந்து போவாரே!
போட்டுக்குவியுங்கள்
அணுக்கழிவுகளை
எம் கரையில். நாங்கள்
செத்துத் தொலைகின்றோம்.

நன்றி : யாழ். தினக்குரல்
*02 ஜனவரி 2005*

## *JCU MEMBERS OF THE RELIEF TASK FORCE 2005/2006*

**SEATED L. TO R.:**

*Rev. S.K. Kadirgamar, Major N.S. Jacob, Rev. N.J. Gnanaponrajah (R.R. & R. Coordinator), Mr. D.R. Arumaynayagam (President), Rev. A. Jeyakumaran (Hony Secretary), Rev. R. Jeyakumari, Ven. S.P. Nesakumar.*

**STANDING L. TO R:**

*Rev. E.N. Lawrence, Rev. A.L. Lakshendrakumar, Mr. A. N. Sinnadurai (Program Manager) Mr. R. Hariharan (Treasurer)*

## *J. C. U. EXECUTIVE COMMITTEE MEMBERS AND THE STAFF*

**SEATED L. TO R.:**

*Rev. E.N. Lawrence, Rev. R. Jeyakumari, Rev. A. Jeyakumaran (Hony Secretary), Mr. D.R. Arumaynayagam (President), Mr. R. Hariharan (Treasurer), Rev. N.J. Gnanaponrajah (R.R. & R. Coordinator), Mr. A. N. Sinnadurai (Program Manager)*

**STANDING L. TO R.:**

*Miss Juda Marinee Amalathasan, Mr. P.T. Selvarajah, Mr. A.C. Vijeyapathy, Mr. T. Mariyanesan, Mr. V.D. Jeyakumar, Mr. K.J. Jegathas, Miss R. Amitha, Miss Arin Roshini Ariyaratnam,*

**ABSENT:**

*Mr. T. Ajanthan, Mr. V. Daniel Jeyaruban, Miss T. Sharmila*

### அனர்த்தமொன்றில் சிக்குண்ட பிள்ளைகள்

பொதுவாக அனர்த்தமொன்றில் சிக்குண்டு மீண்ட பிள்ளைகள்:

1. பயங்கரமான அதிர்வுக்குள்ளாகி இருப்பர்.
2. தமக்கு வேண்டிய உறவுகளையும், தமது குழந்தைப் பருவத் தேவைகளையும் இழந்திருப்பர்.

அனர்த்தத்தால் பாதிப்புற்ற பிள்ளைகள் தொடர்பான அவதானிப்புகள்:

1. ஓய்வான உறக்கத்திற்குச் செல்லமாட்டார்கள்.
2. குறித்த வேலையில் தொடர்ந்து ஈடுபடமாட்டார்கள்.
3. எதனையும் கற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கமாட்டார்கள்.
4. செய்வதற்கு எந்த வேலையுமில்லாமல் சும்மா இருப்பார்கள்.
5. எந்த நடவடிக்கைக்கும் தொடர்ந்தும் பிரவேசிக்க மாட்டார்கள்.
6. அடிக்கடி சுகவீனமுற்றிருப்பார்கள்.
7. உடல் போசாக்கற்ற நிலையில் இருப்பார்கள்.
8. தாயை அல்லது தந்தையை இழந்திருப்பார்கள்.
9. அக்கறை செலுத்த யாருமற்ற நிலையில் இருத்தல்
10. பாடசாலைக்குப் போக மறுத்தல்
11. பாடசாலையிலிருந்து விலகியிருத்தல்.

அனர்த்தமொன்றுக்குள்ளாகி உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளுக்குத் தேவையான, அவசியமானவைகள்:

1. பாதிப்புற்ற பிள்ளைகளை அரவணைத்து அன்புசெலுத்தக்கூடிய உறவினர் அல்லது பாதுகாவலர் தேவைப்படுகின்றனர்.
2. பிள்ளைகளின் செயற்பாடுகளை கவனித்தலுடன் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தல் வேண்டும்.
3. போசாக்கற்றிருக்கும் குழந்தைகளுக்கு போசாக்குள்ள உணவு வழங்கப்படவேண்டும்.
4. குழந்தைகளின் உணவு, ஆடை, குளிப்பு, கல்வி, பழக்கவழக்கங்கள் என்பனவற்றில் சரியான பராமரிப்பும், வழிநடத்தலும் அவசியமாகிறது.
5. உறவுகளை இழந்த பிள்ளைகளைப் பொறுப்பேற்று பிள்ளைக்கு வேண்டிய சகலவற்றையும் வழங்குவதாக சட்டரீதியாக யாராவது பொறுப்பெடுக்கவேண்டும்.
6. பிள்ளைகளின் சுகாதாரம், நோய் என்பனவற்றை அறிந்து அதற்குரிய நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

நன்றி: நமது செய்தி
*16-31.03.06*



J.C.U. Members of the Relief Task Force 2005/2006
Please see names on page 30.




Opening ceremony of an Office for Tsunami Relief at the J.C.U.



Meeting of the Action Committee and befrienders chaired by the J.C.U. Vice President Rev.R.Jeyakumari, Ms.Michelle Youetani participates




Action Committee & Befrinders at a Meeting at the J.C.U.



# இறைவனின் செயற்பாட்டைக் குறித்து மனிதன் கேள்வி எழுப்புகின்றான்!

அருள்பணி அ. ஸ்ரீபன்

இயற்கைப் பேரழிவுகளின் மத்தியில் மனிதன் இறைவனின் செயற்பாட்டை குறித்து கேள்வி எழுப்புகின்றான். இறைவன் ஏன் இயற்கை அனர்த்தங்களின் ஊடாக மனிதனுக்கு தீங்கிழைக்கின்றார் என வினா எழுப்புகின்றார். (திருப்பாடல் 77:3) இதன் மட்டில் மனிதனை இறைவன் படைத்து, மனித அனுபவங்களில் இணைவதில்லை என்கின்றமுடிவுக்கு வருகின்றனர். ஆனால் இந்த இயற்கை அனர்த்தங்களின் மத்தியில் இறைவனும் இணைந்து மனிதனுடன் துயருறுவதையும் மனித அனுபவங்களில் இணைவதையும் பார்க்கின்றோம். விடுதலைப் பயணம் 3:7 இதில் கடவுள் மனித துன்பங்களை காண்கிறார் என்பது புலனாகின்றது. (யோனா 4:11) கடவுள் தம் மக்கள் மீது காட்டும் கரிசனையை காண்கின்றோம்.

இவற்றின் அடிப்படையில் மனித வாழ்வில் கடவுளின் கரிசனையை எம்மால் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. எனவே இயற்கை அனர்த்தங்களின் மத்தியிலும் அவரின் கரிசனை புலப்படுகின்றது. எனினும் உலகில் நடைபெறும் எல்லா அனுபவங்களிலும் கடவுளின் செயற்பாட்டை கண்டு கொள்ள முடியாது.

குறிப்பாக விபத்து, அகால மரணம் ஒடுக்குமுறைகள் போன்றவற்றின் மத்தியில் இறைவன் தான் நேரடியாக செயற்படாமல் இவற்றுக்கு எதிராக மனிதர்களை செயற்படுமாறு அழைக்கின்றார்.

மனிதன் தனது நாளாந்த வாழ்வில் இறைவனின் ஆற்றலை தனது வாழ்வின் ஒரு சில வெற்றிகரமான அனுபவங்களுக்குள் கட்டுப்படுத்திக் கொள்ள முயல்கின்றான். துயர் நிறைந்த அனுபவங்கள் மனிதனுக்கு உண்டாகின்ற போது, இந்த அனுபவங்களில் இறைவனின் செயற்பாட்டைக் கண்டு கொள்ள மறுக்கின்றான். 2 கொரிந்தியர் 1:9 இல் புனித பவுல் கூறுவது போல இறைவன் மரணத்தில் இருந்து மாத்திரம் பாதுகாப்பவராக அன்றி மரணத்திற்கு அப்பாலும் அவரின் செயற்பாடு உண்டு எனக் கண்டுகொள்ள அழைக்கப் படுகின்றான். துயர் நிறைந்த அனுபவங்களுக்கூடாக மக்கள் செல்லும்போது இறைவன் முற்றாக தம்மை கைவிட்டு விட்டார் என்னும் அனுபவத்தில் சோர்ந்து போகின்றனர். அதற்கு அப்பாலும் மனித செயற்பாடு களுக்காக நாம் கடவுளில் தான் தங்கி இருக்க வேண்டும் என்றும், கடவுள் செயற்பட வல்லமையுள்ளவர் என்றும் மறந்து விடுகின்றான். எனவே ஏனது துயர அனுபவத்திற்கு அப்பாலும் கடவுளின் செயற்பாடு உண்டு என்பதை நாம் கண்டு கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

இயற்கை அனர்த்தங்களினால் மனிதன் பாதிக்கப்படுகின்ற போது மாத்திரமே தனது இயலாமையை மனிதன் உணருகின்றான். தனக்கு அப்பால் இன்னுமொரு சக்தி உள்ளது என்றும் அது தன்னிலும் பார்க்க பலம் வாய்ந்தது என்றும் மனிதன் உணருகின்றான். அறிவு வளர்ச்சி விஞ்ஞான வளர்ச்சி தொழிநுட்ப வளர்ச்சி போன்ற அனைத்து வளர்ச்சிகளின் மத்தியிலும் மனிதன் தனது அறிவுக் கண்டுபிடிப்புக்களின் தாக்கங்களினால் உண்டாக்கின்ற

விளைவுக்கு தீர்வாக அமைவதே அன்றி தாக்கத்தை தடுத்து நிறுத்தக் கூடிய அளவுக்கு தன்னிடம் ஆற்றலும் திறனும் இல்லை என்றும், தன் இயலாமையை உணர்ந்து கொள்கின்றான். திருப்பாடல் 8 அதனை எழுதிய ஆசிரியர் மனிதன் இறைவனுக்கு முன்பாக ஆற்றல் குறைந்தவன் என கூறி நிற்கின்றான்.

மனித துன்ப அனுபவங்கள் இறைவனைப் பற்றி பிழையான செய்திகளை நாம் கற்றுக் கொள்ளவோ பிறருக்கு கூறவோ எம்மை வழிநடத்திச் செல்லக் கூடாது. குறிப்பாக கசப்பு அனுபவங்கள் மத்தியில் எமது துன்பங்களை பிறருடன் நாம் ஒப்பிட்டு இறைவன் பாரபட்சம் உள்ளவர் என முடிவுக்கு வருகின்றோம். ஆனால் திருமறை கூறும் கடவுள் அப்படிப்பட்டவர் அல்ல. (மத்தேயு 5:45 – 46) இல் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் மழையை பெய்யச் செய்து சூரியனை உதிக்கப் பண்ணுகின்றார். (ஆமோஸ் 9:7) அவர் எல்லா மக்களின் மீட்பாளர் எனப் பார்க்கிறோம். இவற்றின் அடிப்படையில் இறைவன் பாரபட்சம் உள்ளவர் என மனிதன் எண்ணுவது தவறு. மேலும் மனிதன் இத்தகைய அனுபவங்களின் மத்தியில் கடவுள் தங்களை பாதுகாத்தபடியினால் தாங்கள் தூய்மையானவர்கள் என்றோ, மரித்தவர்கள் கடவுளின் நியாயத் தீர்ப்புக்குள்ளானவர்கள் என்றோ முடிவுக்கு வருவது தவறு (லூக்கா 13:1-8) நாமும் இறையரசுக்குரிய விழுமியங்களைத் தரித்துக் கொள்ளாத பட்சத்தில் இறையன்பை உணர்ந்து கொள்ளல் கடினம் எனவே துயர அனுபவங்கள் இறைவனைப் பற்றிய பிழையான கருத்துக்கள் உருவாகுவதை நாம் இடமளிக்கக் கூடாது.

துயர அனுபவங்கள் மத்தியில் மனிதன் நம்பிக்கையில் இருந்து நம்பிக்கை அற்ற நிலைக்கும், எதிர் பார்க்கும் நிலையில் இருந்து எதிர்பார்ப்பு அற்ற நிலைக்கும், மகிழ்ச்சியான அனுபவத்தில் இருந்து இருள் வாழ்விற்கும் தள்ளப்படுகின்றான். இவற்றின் மத்தியில் மனிதன் தாம் நம்பி இருந்த அனைத்து நம்பிக்கைகளையும் இழந்து, நம்பிக்கை அற்ற நிலையில் இன்னுமோர் நம்பிக்கையை நோக்கி ஓடுகின்றான். இவ்வளவு காலமும் தாம் வைத்திருந்த நம்பிக்கையில் திருப்தி காணாத மனிதன் இப் பொழுது இன்னுமொரு சக்தியை நோக்கி நகர ஆரம்பிக்கின்றான்.

இயற்கை அனர்த்தங்களின் மத்தியில் மனித தவறுக்கும் தண்டனைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை காணலாம். இறைவன் இயற்கையை படைத்து இயற்கையை ஆண்டு கொள்ளுமாறு அவனிடம் அதிகாரத்தைக் கொடுத்தார். ஆனால் மனிதன் இயற்கையை அழித்து கடவுள் கொடுத்த பொறுப்பில் இருந்து தன்னை விலக்கிக் கொண்டான். இதன் காரணமாக இயற்கையில் இருந்து மனிதன் தீமைகளை அனுபவிக்கின்றான். தனி யொரு மனிதனின் அல்லது ஒரு சமுகத்தின் கூட்டுப்பாவத்தின் விளைவாக உலகிலேயே துன்பங்கள் ஏற்படுகின்றது. இந்தக் கூட்டுப் பாவத்தின் தாக்கமே தனிமனித துயரம் என கூறின் மிகையாகாது. இந்தத் துயர அனுபவங்களின் மத்தியில் இறைவனின் செயற்பாட்டை எமது அனுபவத்தை மாத்திரம் மையமாகக் கொண்டு நாம் கணிக்காமல் பல அனுபவங்களின் தொகுப்பின் அடிப்படையில் இறைவனைப் பற்றிய ஓர் சரியான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட ஓர் அனுபவத்தின் தாக்கத்தை விட இறைவனின் ஒட்டுமொத்த செயற்பாடு எந்தளவு இருந்தது என மனுக்குலம் கண்டுகொள்ள அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு துயர அனுபவத்தின் ஊடாக உண்டாகும் உணர்வு நிலையைக் கண்டுகொள்ளவும், வளர்க்கவும் அழைக்கப்படுகிறோம்.

எனவே எமது வாழ்வில் உண்டாகும் இயற்கை செயற்கை அனர்த்தங்களின் மத்தியில் இயற்கையையும் மனிதனுடைய தெரிவாகப் புரிந்துகொள்ள நாம் அழைக்கப் படுகின்றோம். புனித பவுல் முழு இயற்கையும் இறைவனைப் பெற்றெடுப்பதற்காக கர்ப்ப வேதனை அடைகின்றது என்கிறார். எனவே இயற்கையில் வெளிப்படும் இறைவனை நாம் கண்டு கொள்ள இயற்கையை பராமரிக்க அழைக்கப்படுகின்றோம்.

நன்றி: தெளிவு
*தை – மாசி, 2005*



MESSAGE...

It has been my pleasure to work with the Jaffna Christian Union since coming to Sri Lanka in May 2005, in my role as ACT Coordinator, supporting the NCCSL and its partners.

In responding to such a large natural disaster, on top of the ongoing affects of so many years of war and uncertainty, I have been impressed with the energy and commitment of the staff and volunteers at both the office and field-level. I have observed on my visits with you how JCU has community 'befrienders' and action committees in the different areas. This is a great strength; I hope this continues to be central to your way of working the future. JCU must be commended on the great and often new challenges the Tsunami and rapid scaling-up of the JCU's programmes has brought. And, most importantly, shown how you are open to, also learn the lessons of these new experiences and build on them.


I would like to say a big *'miha nandri'* **a big thank you** to everyone for showing me such warm hospitality and patience as I scaled a steep learning curve myself as novice of Sri Lanka, and wish you many blessings and success in the important role you continue to play in support of vulnerable communities in the North.

**Michelle .Y**
*Coordinator,*
*A.C.T.*



Rev. Dr. D.S. Dharmapalan

# "The 'Tsunami' - The Tidal Wave" in Sri Lanka



**An Insight**

***Even if I hadn't learned any other lesson from the last 'tsunami', I've learned this one for sure: I now understand, I think to some degree, the mystery surrounding the parting of the Red Sea in the Book of Exodus; when the Hebrew people were able to escape the pursuing Egyptians. Although, in his epic movie, "The Ten Commandments" Cecil De Mills tried to depict the epoch 'event', as dramatic as possible, he still left us with the 'mystery'. I seem to be able to see some correlation between the parting of the Red Sea and the 'Tsunami'.***

We learned that, on the morning of December 26[th], 2004, when 'tsunami' hit the coastline of Sri Lanka, that it was travelling at a speed of 500 miles per hour, and when it got close to land, that the waves reached a height of 50 feet, before they slammed the shores of Sri Lanka. Sadly, when the waters receded, it left behind an unprecedented human loss and property damage, and miles of utter desolation.

I am neither a physicist nor a seismologist, but my conclusion here is that there is a correlation between the Biblical event of the parting of the Red Sea and the 'tsunami', based purely on the fact that water recedes to fill that vacuum, it leaves behind a dry ocean bed. In the case of the 'tsunami' in Sri Lanka, an eye-witness told me, that as far as the human eye could see, there was absolute dry land, and that some even ventured to walk on the dry ocean bed.

This simply convinced me that, God must have caused a 'tsunami' in the depth of the Red Sea that resulted in a stretch of dry land across the Red Sea, enabling the people of the Hebrews walk through to escape their Egyptian enemies.

Having said all that let me now, briefly give you my personal reflections of our visit to the 'tsunami' devastated area of Sri Lanka.

**The Work in Progress**

By the time my wife and I arrived in Sri Lanka, on January 12[th], 2005, the cleaning up operations was well underway, especially in the North and East, one could see no debris; neither human nor animal remains, there wasn't any unpleasant smell, and we had no health concerns, either. In less than a month, with no help from the Government of Sri Lanka, volunteers from various private organizations, Non-Governmental Organizations (NGOs) such as the **Jaffna Christian Union**, and Christian Churches, had done a fantastic job of making sure that the displaced folks were cared for. Especially in the North and East, the victims were housed in temporary housing facilities or in

tents, provided with ample food and water, and that their medical needs were satisfactorily met. I must say that the **Jaffna Christian Union** had done, and is doing a yeoman service of caring for the people. But one must understand, this was being done under very trying conditions, because the ethnic violence and the civil war had already destroyed a good part of the infra structure in the North and the East, and "Tsunami" only added to the misery and multiplied the woes of the people, especially to those living on the coastal belt of the north and east of the country.

Our visit to the North and East was most depressing, to say the least. One could only see miles and miles of desolation; and places where houses and townships were before the 'tsunami', now mere open spaces, even trees had been uprooted. The members of the Jaffna Christian Union took us to Point Pedro, Potpathy, Manalkadu, and Kudathanai. We also had the opportunity to travel through Vanni, and to see for ourselves the desolation 'tsunami' had caused in Mullaitivu, which had been the one place worse affected in the whole country. While CNN and the other major world media had concentrated their reporting on Galle, Hambantota and Matara, anyone who had visited the north-east will agree that the devastation in the South was no match to what 'tsunami' had caused to the north-east. We saw it for ourselves when we visited the south towards the end of our visit. In fact, while the north-east was clear of all debris, the south was barely beginning its task of clearing up. While displaced people of the north-east were content with what they had for a temporary living, the folks in the south were still begging for help, with no help in sight. While we only saw smiles on the faces of the people in the north-east, there were tears and sheer desperation on the faces of the people in the south.

I am glad that my wife and I had, at least a small part in what I consider to be some 'relief' given to the people affected by 'tsunami' in the north of Sri Lanka. I am, of course deeply indebted to the initiative the Senior Pastor, the Reverend Steven Stolle, and the congregation at the Osterville, Massachusetts, U.S.A. took in raising a total of $22,000.00, just in two weeks for people in Sri Lanka. Evidently, this initiative by the Osterville Church seems to have had a ripple-effect that folks, not related to the Osterville Church, along with some other churches, and private organizations, got on board, raising another $11,900.00, bringing the total to **$ 33,900.00.** By the good offices of the members of the Task Force of the Jaffna Christian Union, these funds were methodically transferred by 'wire-transfer' to the People's Bank in Jaffna, Sri Lanka where the J.C.U. has its account.

When compared with the tremendous loss of life and property, this amount may seem rather 'small' to do the job. However, when one considers the largeness of the hearts of those who gave; their passionate outreach to the people of Sri Lanka in a time like this certainly makes the gift "big".

## A Simplistic Strategy

Our time in Sri Lanka was going to be brief, and in meeting with the Task Force of the J.C.U., I made sure that we were not going to take time to sit and discuss at length the pros and cons of the help that was already in, or to analyze the detail of the relief operation. If we had resorted to that, we may have spent the next month or two discussing issues and finally getting nowhere. We wanted the Jaffna Christian Union to utilize the funds that were transferred from the U.S., immediately. That being the case, we came up with two simple strategies: *(i)* select two major camp sites in the north, namely Potpathy and Manalkadu and (ii) provide a mode of transportation to each household. And, the mode of transportation we came up with was to purchase bicycles for each household. In three days, we had purchased 418 brand new bicycles, and distributed one to each head of the household.

## Finally

I made sure that my wife and I were not the focus of the gift, and kept our presence as inconspicuous as possible. No one in any of the camps knew we were the "gift-bearers". Except that the people were told that kind-hearted folks in churches and organizations in the United States were gifting the bicycles to express their Christian love and concerning, to lighten the blow the people of Sri Lanka had suffered due to the 'tsunami'.

With the help of a medical couple at the Osterville United Methodist Church, I was also able to collect medicine from the area hospitals, clinics and private practitioners south of Boston, and was sent to a "clearing house" in Staten Island, New York, to be shipped to North-East. At the time that we were leaving Sri Lanka, in mid February 2005, we were told that the crates of medicine had arrived in Colombo, and were waiting to be picked up by the **TRO.**

We owe our gratitude to the JAFFNA CHRISTIAN UNION, for helping all of us here to fulfill our earnest desires to be in mission to the victims of the tsunami in the north, and also for enabling us to complete our "mission" in double-quick time.

A special thanks is due to Mr. Noel Vimalendran, the Principal of Jaffna College, who served on the Task Force as the Treasurer of the Jaffna Christian Union in 2005. He was gracious to act as the 'Liaison Officer' between the J.C.U. and the Osterville United Methodist Church, especially during this whole process of transferring funds from here to the People's Bank in Jaffna. And, subsequently, to have been J.C.U.'s spokesperson. In October 2005, he was able to visit Osterville United Methodist Church, and to provide the Church and its members a brief statement of account, and also to give an update of the work of the Jaffna Christian Union in relation to the ongoing relief work.

**Rev. Dr. D.S. Dharmapalan**
**of Massachusetts, U.S.A.**



## உள்ளத்திலிருந்து...

"இறைவனுக்கு இருதயம், மனிதனுக்கு கரம்"

(மத்தேயு 22:37 - 39.)

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தினால் வெளியிடப்படும் இப்புத்தகத்தை வாசிக்கும் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தினால் மக்கள் சமுதாயத்தில் செய்யப்படும் நற்பணிகளை தாங்கள் தெரிந்து கொண்டு இந் நற்பணிகளைக் குறித்து பரிசுத்த வேதாகமம் நமக்கு விளக்கும் நற்செய்தியை நாம் அறிந்து கொண்டு நம்மால் ஆகக்கூடிய பணியை நமது பெலத்துக்கேற்ப, நிலைமைக்கேற்ப இறைவனுடைய நாமத்தின் மகிமைக்காகவும், மனிதனுக்கு உதவியாகவும் செய்யும்படி உங்களை உற்சாகப்படுத்துவதற்கு, உணர்த்துவதற்கு வேதத்தின் வெளிச்சத்தை சிந்தனை துளிகளாக உங்கள் கண்முன் வைக்கிறேன்.

- 1 யோவான் 3:18இல், என் பிள்ளைகளே வசனத்தினாலும், நாவினாலும்அல்ல; கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம் எனக் கூறுகிறது.
- யாக்கோபு 2:17இல் விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னில்தானே செத்ததாயிருக்கும் எனக் கூறுகிறது.

ஆகவே இயேசுவை ஏற்றுக்கொண்ட தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் நமது அன்பும் விசுவாசமும் கொள்கை அடிப்படையில் மாத்திரம் அல்லாது கிரியையிலும் செயற்பாட்டிலும் உயிருள்ளதாயிருக்க வேண்டுமென பரி. வேதாகமம் வலியுறுத்துகிறது.

- 11 யோவான் 1:6ஆம் வசனத்தின்படி நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு என்று சொல்லப்படுகிறது. அத்துடன் ரோமர் 2:13ஆம் வசனத்தின்படி நியாயப்பிரமாணத்தை கேட்கிறவர்கள் அல்ல அதன்படி செய்கிறவர்களே தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்படுவார்கள்.

அப்படியாயின் நாம் செயல்படுத்த வேண்டிய அன்பு, விசுவாசம், நியாயமான பிரமாணங்கள் எவைகள்?

மத்தேயு 22:37,39

1) உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக.

2) உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே.

எனவே, முதலாவதாக மனிதனுடைய இருதயத்தை கடவுளுக்கும், கரத்தை மனிதனுக்கும் கொடுக்க, மனிதன் செயல்பட வேண்டும். முதலாவது இறைவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் என்றே மத்தேயு 6:33 கூறுகிறது. எனவே, இயேசுவே நமக்கு தெய்வமாக இருக்கவேண்டும். ஒரு வித விக்கிரக வணக்கத்தையும் செய்ய கூடாது. அவர் நாமத்தை வீணிலே வழங்கக்கூடாது. ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டும். இவைகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் பொழுது இறைவனுக்கு அன்பு செலுத்தக் கூடியதாயிருக்கும்.

அதே போன்று பெற்றோரை கனப்படுத்த வேண்டும். கொலை செய்யலாகாது. விபச்சாரம் செய்யலாகாது, களவு செய்யலாகாது பிறனுக்கு விரோதமாய் பொய்ச்சாட்சி சொல்லலாகாது. பிறனுக்குள்ள யாதொன்றையும் அதாவது பிறருடைய வீடு, அவனது மனைவி, அவனுடைய வேலைக்காரன், வேலைக்காரி, அவனுடைய கழுதை, எருது மற்றும் பிறனுக்குரிய எதையும் இச்சிக்க, ஆசைவைத்து அபகரித்துக்கொள்ள கூடாது. இவைகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும் பொழுது மனிதனுக்கு அன்பு செலுத்தி அவனுக்கு கரம்கொடுக்கக் கூடியதாயிருக்கும் இது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த, செயல்படுத்த வேண்டிய பிரதானமானவைகளாகும்.

- லூக்கா. 6:31 சொல்லுகிறது மனுஷர் உங்களுக்கு எப்படி செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்
- 1கொரிந்தியர் 10:31 சொல்லுகிறது; எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.

ஆகவே யாருக்கு எமது கரம் தேவைப்படுகிறதோ அவர்களுக்கு நாம் கரங்கொடுக்கும்போது இறைவனுக்கே செய்கிறோம். யாருக்கு எமது கரம் தேவைப்படுகிறதோ அவர்களுக்கு நாம் கரம் கொடுக்காதிருக்கும்போது அதை நாம் இறைவனுக்கே செய்யாதிருக்கிறோம். மத். 25:40,45

எனவே நன்மை செய்யும்படி நமக்கு திராணியிருக்கும் போது அதை செய்யத்தக்கவர்களுக்கு செய்வோம்.

நீதிமொழிகள் 3:27

எம்மால் செய்யக்கூடுமானவைகள் எவைகள்? இயேசு கூறுகிறார்.

1) பசியாயிருப்பவர்களுக்கு போஜனம் கொடுங்கள்.
2) தாகமாயிருப்பவர்களின் தாகத்தைத் தீருங்கள்.
3) அந்நியனாயிருப்பவர்களை சேர்த்துக்கொள்ளுங்கள்.
4) வஸ்திரமில்லாதிருக்கிறவர்களுக்கு வஸ்திரம் கொடுங்கள்
5) வியாதியாயிருப்பவர்களை விசாரியுங்கள்.
6) காவலிலிருப்பவர்களை போய்ப் பாருங்கள்.

நம்மால் செய்ய முடியாதவைகளை செய்யும்படி இயேசு நமக்கு கூறவில்லை. இயேசு என்ன சொல்லுகிறாறெனில், என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயுமிருக்கிறது. மத்தேயு 11:29,30

ஆகவே கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்களே இப்படியாக சமூகப்பணியில் ஈடுபட, செயற்பட, தேவஅன்பை, மனிதஅன்பை நடைமுறைப்படுத்த இறைவன் உங்களுக்கு வாய்ப்பை கொடுத்திருக்கிறார்.

எனவே இவ்வாய்ப்பை உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதற்கு இரு வழிகளில் நீங்கள் செயல்படலாம்.

1. நீங்கள் தனிப்பட்ட ரீதியில் உங்களுக்கிருக்கும் திராணிக்கூடாக இயேசு கூறின சமூகப்பணியில் ஈடுபடலாம்.
2. இயேசு கூறின சமூகப்பணியில் ஈடுபட்டிருக்கும் தனிநபருக்கோ அல்லது சமூகப்பணி நிறுவனங்களுக்கோ ஸ்தாபனங்களுக்கோ அல்லது கிறிஸ்தவ திருச்சபைகளுக்கோ உங்களுக்கிருக்கும் திராணிக்கூடாக

கொடுத்து உதவலாம்.

தெரிவிப்பது இயேசுகிறிஸ்து தீர்மானிக்க வேண்டியது நீங்களும் நானுமே.

இறுதியாக உங்கள் முன் வேதவசனங்களை வைக்கிறேன்.

1. கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் அமுக்கி, குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கு அளக்கப்படும்.

லூக்கா.6:38

2. அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

11.கொரிந்தியர் 9:7

3. நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதன்படி செய்கிறவர்களாயுமிருங்கள்.

யாக்கோபு 1:22

கடவுளின் ஆசீர்வாதம் உங்களோடு என்றும் இருப்பதாக.

**அருள்பணி மேஜர். நியூட்டன் எஸ். ஜேக்கப்**
*இரட்சணிய சேனை ஆலயம்,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

---

## பாதுகாவலன் தலையங்கம்

# சுனாமிப் பேரழிவில் அன்புப் பணிபுரிய ஒரு விசேட காலம்

தவக்காலத்தின் உச்சக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்கின்ற மறை நிகழ்ச்சிகளைச் சிந்திக்கின்ற இந்தக் காலம் எமது வாழ்வையும், பணியையும் அலசி ஆராய்ந்து சரிப்படுத்துகின்ற காலமாகும்.

எல்லாக் காலத்தையும் விட இக் காலத்தில் சிறப்புப் பணிபுரிய எமக்கு ஒரு அழைப்பு இருக்கிறது. சுனாமி பேரழிவினால் அதிர்ச்சிக்குள்ளாக்கப்பட்டு நிலை கலங்கிப் போயிருக்கும் மக்கள் மத்தியில் அன்புப் பணிபுரிவது இக்காலத்தின் விசேட தேவையும், அவசியமுமாகும். மனித நிவாரண அன்புப் பணிகள் செய்ய உடனடியாக அனேகமானவர்கள் முன்வந்தாலும் நாட்கள் செல்லச்செல்ல தமது ஆர்வத்தையும், பணியையும் குறைத்துக் கொள்வது இயற்கையானதாகவே இருக்கிறது. நிவாரணப் பணிகளைக் காட்டிலும் அவர்களுடைய துன்பங்களில் ஆறுதல்படுத்தி ஆற்றுப்படுத்தும் உளவியல் பணியினை செய்வது மிக முக்கியமானதாகும். இந்தப் பேரழிவின் பின்னர் தமது கருத்துக்களை தெரிவித்த அனைவரும் இன்று ஆற்றுப்படுத்தும் பணிக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதில் விசேட கவனம் கொண்டுள்ளனர்.


இப்பணிக்கு விசேட பணியாளர்களை அனுப்புவதும் உகந்தபயிற்சிகளை வழங்குவதும் அவர்கள் தொடர்ந்தும் இப்பணியினை ஆற்ற வழிசெய்வதும் இன்றைய அவசர தேவையாகும். இப் பணியினை செய்ய சம்பந்தப்பட்டவர்கள் விசேட கவனம் எடுக்கவேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். ஏற்கவே இப் பணியினை ஆற்றிவரும் எஸ்.ஜே.இராஜநாயகம் அடிகளார், றெஜினோல்ட் (அ.ம.தி.) அடிகளார், திருக்குடும்ப அருட்சகோதரி கிறிஸ்ரபல் ஆகியோரைப்பாராட்ட வேண்டும். அவர்கள் இப்பணியினைத் தொடர்ந்து ஆற்ற உதவியும் உற்சாகமும் நிறைவாக வழங்கப்படவேண்டும்.

பேரழிவில் தாக்கப்பட்டவர்களுக்குத் தம்மால் இயன்ற பணிகளைச் செய்வதில் முன்னின்று உழைத்த நிறுவனம் யாழ்மறைமாவட்ட மனித முன்னேற்ற நிலையமாகும் என்பதை அனைவரும் முழுமையாக ஏற்றுக்கொள்வர். தமது பணியை உரிய விதமாகவும், சிறப்பான விதமாகவும் ஆற்றிய இதன் பொறுப்பாளர் சி.ஜே.ஜெயக்குமார் அடிகளாரையும் பணியாளர்களையும் வாழ்த்த விரும்புகின்றோம். அவரின் சிறப்புப் பேட்டி ஒன்று இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. அவர்கள் ஆற்றும் பணிகள் பற்றிய புகைப்படங்களை பாதுகாவலன் தொடர்ந்தும் வெளியிட்டு வருகிறது. அவர்கள் தொடர்ந்தும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமெனப் பாதுகாவலன் வேண்டி நிற்கிறது.

பங்குகளில் இருந்து பேரழிவில் தாக்கப்பட்டவர்களுக்கு துணைபுரிய பங்குத்தந்தைகளின் அனுமதியுடன் வேகமாகச் செயற்பட்ட இளைஞர் மன்றத்தினரையும், மற்றும் பொது நிலையினர் அமைப்புக்களையும் நாம் சிறப்பாகப் பாராட்டவேண்டும். நீண்ட காலப்போர் அனுபவங்கள் மத்தியில் வாழ்ந்தபடியால் துன்பத்தையும், வேதனையையும் அனுபவித்தவர்கள் என்கின்ற ரீதியில் மற்றவர்களின் துன்பங்களை மனிதாபிமான ரீதியில் உணரவும் உடனடி உதவிப் பணி புரியவும் முடியும் என்பதை இவர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

இத் தவக்காலத்தில் நாம் செய்யவேண்டிய அன்புப் பணிகள் மத்தியில் முதலிடம் கொடுக்கவேண்டிய பணி இயற்கைப் பேரழிவால் தாக்கப்பட்ட மக்களுக்கு உளவியல் ரீதியிலான ஆற்றுப்படுத்தும் பணி புரிவதாகும். இப் பணியினைச் செய்யவிசேட பயிற்சியும், வழிகாட்டலும் தேவை. குறிப்பான விதமாக குருக்கள், கன்னியர்கள் என்கின்ற போது மனம்திறந்து தமது துன்பங்களையும், மன வேதனையையும் பகிர்ந்து கொள்ளுவார்கள். இத்தவகையில் இப்பணியை ஆற்றவேண்டிய அவசர அழைப்பு இவர்களுக்கே முதலில் உண்டு. இருப்பினும் துன்பத்திலும், வேதனையிலும் தனிமையிலும் அனைத்தையும் இழந்து இருப்பவர்களோடு நாமும் இருக்கிறோம் என்ற ஒரு மன உணர்வைக் கொடுப்பது சிறப்பான ஒரு பணியாகும். அப்பணியைச் செய்ய நாம் முன்வரவேண்டும். அது மட்டுமல்ல இத்தவக்காலத்தில் நாம் செய்கின்ற அனைத்து முயற்சிகளுக்கும் ஆரம்பமாக இந்த மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவுவதே முக்கியமானதாக வேண்டும்.

அருள்பணி ரூபன் மரியாம்பிள்ளை
*ஆசிரியர் -- பாதுகாவலன்*
*01.03.2005*



# சுனாமியும் வரும் காலங்களும் ...

தார்மிகி

வரலாற்றில் என்றுமே நிகழ்ந்திராத அளவுக்கு இயற்கைத் தாய் சீற்றங்கொண்டு பொங்கி எழுந்து கடற் பேரலைகளாய் ஊர்புகுந்து 30 ஆயிரத்திற்கும் அதிகமான எம் நாட்டின் மக்களை பலியெடுத்த பெருந்துயர் நிகழ்ந்து நாட்கள் பல நகர்ந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, போர் ஓய்வால் நிமிர்ந்தெழ முனைந்த வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் பல்லாயிரம் பேரின் வாழ்வை மீண்டும் அஸ்தமனமாக்கிய இந்தத் துயரம் மறக்கப்படக் கூடியதல்ல. ஆனால், இன்று ஏற்பட்டுவரும் நிலை கவலை தருவதாகவே உள்ளது. டிசம்பர் 26 .2004 இலும் அதையடுத்து வந்த நாட்களிலும் பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுடனும், கிராமங்களுடனும் இணைந்து நின்ற பாதிப்பிற்குட்படாத மக்களும், கிராமங்களும், நகரங்களும் இப்போது தம் முன்னயை நிலைக்கு திரும்பிவிட்டன. ஆனால், ஊரையும், உறவுகளையும் வகைதொகையின்றி பறிக்கொடுத்த மக்களின் துயரம் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இடைத்தங்கல் முகாம்களிலும், ஏனைய இடங்களிலும் இன்னும் வாழ்வை நகர்த்தும் அம் மக்களின் வாழ்வில் ஆதரவாய் பற்றி நிற்கும் அரச மற்றும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களின் துயர் துடைப்புப் பணிகளுக்கப்பாலும், அம்மக்கள் மத்தியில் அச்சமூட்டத்தக்க பல விஷமான நெருக்கீடுகள் தற்போது தோன்றிவருவதாக கிடைக்கும் செய்திகள் கவனத்துடன் நோக்கப்பட வேண்டியவை. முகாம் வாழ்க்கையின் நீடிப்பும், பொருளாதார ஆதாரங்களின் இழப்பால் தோற்றம் பெற்றுவரும் வறுமையின் கோரமும் பல கலாசார பிறழ்வுகளுக்கு அம் மக்களை நகர்த்தி வருவது ஆபத்தான விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தலாம். இது குறித்து மனிதாபிமானமுள்ள ஒவ்வொருவரும் அவசியமாக, அவசரமாக சிந்திக்க வேண்டும்.

இது இவ்வாறிருக்க, ஆழிப்பேர் அடுக்கு அலைகள் மீண்டும் தோன்றலாம் என்ற எச்சரிக்கைகள் தொடர்கின்றது. பூமியின் சம நிலையில் மனித சமூகம் மேற்கொண்ட அத்துமீறல்கள் இன்று அம் மனித சமூகத்தின் இருப்பையே அச்சுறுத்தத் தொடங்கியுள்ளது. டிசம்பர் 26. 2004 பேரழிவுக்குப் பின்னர் உலகின் இயற்கைச் சமநிலை முன்புபோல் இல்லை என்பதை விஞ்ஞானிகளும், ஆய்வாளர்களும் அடிக்கடி வெளியிடும் ஆய்வு அறிக்கைகள் புலப்படுத்துகின்றன. இதற்கேற்றாற்போலவே சுனாமி தோற்றம்பெற்ற சுமாத்திரா தீவில் கடலடியில் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலநடுக்கங்களும், என்றுமில்லாதவாறு நிகழும் கடற் கொந்தளிப்புக்களும் அமைகின்றன.

சுனாமி அலைகள் மீண்டும் வரலாம். வராமல் போகலாம். இனி என்றுமே அத்தகைய அழிவுகள் வரக்கூடாது என்பதே அனைவரது பிராத்தனையுமாகும். எனினும் அது தொடர்பான எச்சரிக்கை உணர்வுகள் இன்று நமக்கு அவசியமானவையாக உள்ளன. ஏனெனில், உலகின் பல நாடுகளுக்கும் என்றோ

பரீட்சயமாகிவிட்ட இப் பேரலைகள் கடந்த டிசம்பர் 26 இல் நம்மை நோக்கி பாய்ந்து வரும்வரை அது தொடர்பான எத்தகைய அறிவும் அற்றவர்களாகவே நாம் இருந்தோம். அதனால் மீளமுடியாத அழிவுகளுக்கு முகம் கொடுத்தோம். இனிவரும் காலங்களிலாவது இது குறித்த போதிய விழிப்புணர்வை நாம் பெற்றிருத்தல் இன்றியமை யாததாகும்.

உலகின் எந்த மூலையில் நிறுவப்படும் சுனாமி எச்சரிக்கை மையமும் எம்மை இத்தகைய அழிவுகளிலிருந்து காப்பாற்றும் என்று நாம் முழுமையாக நம்பிவிட முடியாது. என்ன காரணங்களை முன்வைத்தாலும் அமெரிக்கா நினைத்திருந்தால்; டிசம்பர் 26 பேரழிவிலிருந்து மனித உயிர்களை பெருமளவில் காப்பாற்றியிருக்க முடியும். இதுபற்றி 'கவிதாசரண்' - ஜனவரி - மார்ச் 2005 இதழில் ப. சிவகுமார் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கள் கவனிக்கத்தக்கன. "1949 இல் உருவாக்கப்பட்ட பசுபிக் பெருங்கடல் சுனாமி எச்சரிக்கை மையம் (PTWC) கடந்த 55 ஆண்டுகளாக அந்த மையத்துடன் தொடர்புடைய 26 நாடுகளுக்கு மட்டுமே 'சுனாமி' எச்சரிக்கை கொடுத்து வந்துள்ளது. உலக மயமாதல் ஒரு வரப்பிரசாதம்! தகவல் தொழில்நுட்ப எழுச்சி உலக எல்லைகளை சுருக்கி விட்டது! எனக் கனாக்கண்டுகொண்டு இருப்பவர்களுக்கு டிசம்பர் 26 சுனாமி குறித்த தகவல் பரிமாற்றம் சுனாமி தாக்குதலுக்குள்ளான இந்தியா உள்ளிட்ட 7 நாடுகளுக்கும் செல்லாதது குறித்த விசயம் எதை உணர்த்துகிறது? உலகமயம், தகவல் தொழில்நுட்ப புரட்சி எல்லாம் முதலாளித்துவத்தை நிலை நிறுத்தவும், ஏகாதிபத்தியத்தை விரிவாக்கவுமே என்பதைப் பறைசாற்று கிறது" எனத் தொடர்ந்து "பசுபிக் பெருங்கடல் சுனாமி எச்சரிக்கை மையமும், அமெரிக்காவும் வரப்போகும் சுனாமி பேரழிவு குறித்த தகவல்களை ஏன் உலக நாடுகள் அனைத்துக்கும் தெரிவிக்கவில்லை. எந்த வரையறை தடையாக இருந்தது? தொலைக்காட்சி, தொலைபேசி போன்ற ஊடகங்கள் ஏன் பயன்படுத்தப்படவில்லை? அமெரிக்காவுக்குத் தகவல் பஞ்சமா? உலக மயம், தகவல் தொழில்நுட்பம், உலகம் சுருங்கி விட்டது, மக்களை நோக்கி தகவல் குவியும் என்பதெல்லாம் பொய்யா" எனக் கேள்வி எழுப்புக்கிறது அக் கட்டுரை.

மற்றும், அயல் நாடான இந்தியா தனது நாட்டில்கூட சுனாமிக்கு பல்லாயிரம் மனித உயிர்களை பலிகொடுத்த பின்னும் தனது பூகோள, வர்த்தக நலன்களை கருத்திற்கொண்டு சேது சமுத்திரத் திட்டத்தை முன் நகர்த்துகிறது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால் அது கூட எதிர்காலத்தில் பல இயற்கை அழிவுகளுக்கு வித்திடலாம் என எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டும் சேது சமுத்திரத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதிலேயே இந்திய அரசு முனைப்பாக நிற்கிறது.

இவ்வாறான நிலைமைகள் தொடர்கையில், எமது மக்களுக்கு 'சுனாமி' மற்றும் 'நிலநடுக்கங்கள்' ஏற்படும்போது எவ்வாறு செயற்படவேண்டும் என்பதுபற்றி போதிய விழிப்புணர்வுகளையும், அறிவுறுத்தல்களையும் வழங்குதல் காலத்தின் இன்றியமையாத தேவையாக உள்ளது. இது விடயத்தில் அனைவரும் அக்கறையுடன் செயற்படவேண்டும். ☐

நன்றி : கலைமுகம்
*ஏப்பிரல் - ஓகஸ்ட் 2005*

## மாறாத நினைவுகள்...



யாழ் மாவட்டத்தில் ஏழாலை, யாழ்ப்பாணம், மீசாலை என்ற இடங்களில் இரட்சணியசேனை ஆலயங்களும், இரட்சணிய சேனை சிறுவர் இல்லமானது கைதடியிலும் அமைந்திருக்கிறது.

1989, 90களில் ஏற்பட்ட யுத்தத்தில் எமது இரட்சணிய சேனை இல்லத்தில் இருந்த 35 பிள்ளைகளையும் அவர்கள் உடைமைகளினையும் பாதுகாக்க வேண்டிய நிலையில், பிள்ளைகளுடன் இடம் பெயர்ந்து சென்று சில காலம் வடமராட்சியில் தங்கி இருந்தோம். அக்காலத்தில் யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்திடம் இருந்து பல விதமான உதவியும், நட்பும் எமக்கு கிடைத்தது.

யாழ்ப்பாணம் கோட்டை அடிபாடு காரணமாக எமது யாழ்படைஸ்தலம் உடைந்த நிலையில் ஆலயம் மூடப்பட்டது. இவ்வாறு பல இன்னல்கள் இடையூறுகளுக்கு மத்தியில் உடல் உளரீதியாக பாதிக்கப்பட்டிருந்த வேளையில் யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்திடம் இருந்து எமக்கு கிடைத்த உதவிகளை எம்மால் மறந்து விட முடியாது.

2000ஆம் ஆண்டு யுத்தத்தின்போது நாம் இடம் பெயர்ந்து இல்லிடம் இன்றி தத்தளிக்கும்போது யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஆதரவு; தங்குமிட வசதிகள் மட்டுமன்றி சகல வசதி வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்பட்டதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இவ்வகையான பல இன்னல்கள் இடையூறுகள் மத்தியில் மனிதர்களின் தயவு கிடைத்தது மட்டுமன்றி எவ்வித உயிர் ஆபத்தும் எங்களுக்கு ஏற்படாத வகையில் கடவுள் எம்மை பராமரித்தார். இறை பராமரிப்பு எம்மிடம் கூட இருந்தது. இந்த யுத்த சூழ்நிலையில் பல கிறிஸ்தவர்களைச் சந்திக்கக் கூடியதாகவும், ஏனைய கிறிஸ்தவ அமைப்புடன் ஒரு ஐக்கியத்தை பேணி வளர்க்கக் கூடிய ஒரு வாய்ப்பும் ஏற்பட்டது.

## போர்க்காலச் சூழலில் நான் எதிர்கொண்ட சவால்கள்...

மீண்டும் 2002 ஆண்டளவில் நாங்கள் எங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பி வந்தோம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது இல்லத்தினையும், ஆலயங்களையும் கட்டி எழுப்பினோம். இன்றைய நிலையில் எமது வேலைத்திட்டங்கள் பரவலாக்கப்பட்டநிலையில் பல இடங்களிலும் எமது சேவைகளை மேற்கொண்டு வருகிறோம்.

மேஜர் மு. கோகிலா
*கைதடி இரட்சணியசேனை சிறுவர் இல்லப் பொறுப்பாளர், யாழ். மாவட்ட அதிகாரி.*



# இறைபுகழ் தேடும் ஒரு மாற்றுப் பார்வை

வண. கலாநிதி தியான்சந்த் கார்

கடவுளுடைய மீட்பின் செயல் விளங்கும், வாய்ப்புகளிருக்கும் இவ்வேளையில் நாங்கள் கடவுளுடனும் அவர் உலகத்துக்கனுப்பிய இயேசுவுட னும் உணர்வுள்ள அனைத்து மக்களுட னும் இணைந்து செயல்பட வேண்டும். அப்போது கடவுள் மாட்சியடைவார்.

*(யோ. 9: 1-5 தழுவிய சிந்தனை)*

## அறிமுகவுரை

ஆழிப்பேரலையின் அட்டகாசம் நடந்து மூன்று மாதங்கள் நிறைவுறப் போகின்றன. அது அரைமணி நேரம் மட்டுமே கோரத்தாண்டவம் ஆடியது. அதன் விளைவுகளின் அலைகள் தொடருகின்றன. ஆழிப்பேரலையால் தோன்றிய விளைவுகளில் எதுவுமே விரும்பத்தக்கவை அல்ல. எனினும் ஆழிப்பேரலையால், அனேக உயிர்கள் வலுக்கட்டாயமாக பிடுங்கப்பட்டதாலோ என்னவோ, அவற்றில் சின்னஞ்சிறு சிறார்கள், வயது முதிர்ந்த பெரியவர்கள், இறை வழிபாட்டுக்காக ஆலயம் சென்றவர்கள், வேலையே வழிபாடு என வீட்டிலேயே தங்கிவிட்டவர்கள், உலகத்துக்கு உணவளிக்க உழைப்பவர் கள், உல்லாசத்துக்காக கடற்கரைக்குச் சென்றவர்கள், நாட்டின் பாதுகாப்புப் படையினர், விடுதலைப் போராளிகள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள், இஸ்லாமியர் கள், பௌத்தர்கள், நாத்திகர்கள், பொது நலப் பணியாளர்கள், இறைபணியாளர்கள், அட்டூழியங்களில் திளைத்தவர்கள் என்ற எந்த வேறுபாடும் அந்தப் பேரலைக்குத் தெரியாமல் போய்விட்டதாலோ...... கடவுளைக் குறித்த சில கேள்விகள் எழுந்தவண்ணமுள்ளன.

ஆழிப்பேரலையை மட்டும் குறித்ததாக அந்தக் கேள்விகளைப் பாராமல், பொதுவாகக் கடவுளைப் பற்றிய கேள்விகளாக அவற்றை ஏற்று அவற்றின் பின்புலத்தில் நிற்கும் சில அசைக்க முடியாத நம்பிக்கைகளையும் சற்று அலசிப் பார்க்கலாம் எனத் தோன்றியது. எனவே இந்தக் கருத்தாக்கக் கட்டுரை, இது ஒரு ஆய்வுக்கட்டுரையல்ல. ஆனால் ஒரு கருத்தாக்கக் கட்டுரை மட்டுமே. ஆழ்ந்ததொரு இறைப்பற்றினால் தோன்றியது என்று பெருமையுடனல்ல துணிச்சலுடன் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். ஏனெனில் இந்தக் கட்டுரையில் இடம்பெறும் கருத்துக்கள் அதாவது ஆழிப்பேரலை கடவுளாலானதல்ல என்பது போன்றவை. இறைவனுக்கு இழுக்கு தேடுபவை எனப் பாரம்பரியப் பிடிப்பாளர் பலரால் நிராகரிக்கப்படும். எனவே ஒரு வேளை பல எதிர்க்குரல்கள் உரத்து ஒலிக்கலாம். இருப்பினும் என்றாவது ஒருநாள் இக்கருத்துக்களுக்கு அன்னாரிடையேயும் ஒரு வாசல் திறக்கலாம். ஆனால் அதைவிட ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு, அன்புக்குரியவர்களை இழந்து, உளவளம் இழந்து சோகமும், ஏமாற்றமும், ஏக்கமும் நிறைந்து நாட்களைக் கடத்திவரும் மக்களுக்கு இந்தக் கட்டுரையின் கருத்துக்கள் சென்றடைந்தால் ஆறுதலும் புத்தெழுச்சியும் பிறக்கலாம் என்ற நம்பிக்கையோடேயே இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அன்னாரில் பெரும்பான்மையோர் இதை வாசிக்க மாட்டார்கள். அதற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்காது. ஆனாலும் அவர்களிடையே பணிபுரிந்துவரும் கிறிஸ்தவப் பணியாளர்கள் வாயிலாக



இக்கருத்துக்கள் சென்றடையலாம் என்ற நம்பிக்கையோடேயே இதை எழுதுகிறேன். அவர்கள் கிறிஸ்தவ சமயத்தைச் சேராதவர்களெனினும் இக்கட்டுரையில் முன் வைக்கப்படும் இறைத் திருக்காட்சி சமய வரம்புகளைக் கடந்து பயன் விளைவிக்க வேண்டும் என்றும், விரும்புகிறேன். அந்த நோக்கத்துடனே கடவுளின் பேரன்பையும், துன்புறும் மக்களிடையே அவர் கொள்ளும் ஆழ் கரிசனையையும், விளக்கும் புரிதல் எந்தச் சமயத்தில் ஆங்காங்கே தோன்றியிருந்தாலும் அவை எடுத்தாளப்பட்டுள்ளன.



ஏற்கனவே, குறிப்பால் உணர்த்தியது போல் இக்கட்டுரையின் கருத்தாக்கச் செம்பொருள்: "கடவுளுக்கும், இயற்கையின் அத்து மீறல்களுக்கும், நேரிடைத் தொடர்பில்லை. எனவே கடவுள் கட்டவிழ்த்து விட்ட தண்டனையாகவோ, அல்லது ஒரு எச்சரிப்பின் அடையாளமாகவோ, எஞ்சியுள்ள மக்களை அச்சுறுத்தி தன் வசம் திரும்பிக் கொள்ளும் கருவிகளாகவோ, இந்த நிகழ்வைப் பார்க்கக்கூடாது. இதில் யாருக்காவது பொறுப்புண்டு என்றால் மனுக்குலத்தையே அது சாரும். அடிப்படைக் காரணம் எதுவாயிருப்பினும் பாதிக்கப்பட்ட மக்களினருகே நின்று அவர்களது துயரச்சுமையைச் சேர்ந்து சுமப்பவராகவே கடவுளிருக்கிறார். உயிரிழந்தோர் அவருடைய அமைதிப் பேரொளியின் மங்காத வெளிச்சத்திலிருக்கின்றனர். எல்லாவற்றையும் கடவுள் நிறைவுக்குக் கொண்டுவரும் நாளில் நாம் எல்லாவற்றையும் முழுவதும் புரிந்து கொள்வோம். இப்போது நாங்கள் அவருடன் சேர்ந்து துயருறுவோரின் இடுக்கண்களைக் களைவதிலும், ஒடுக்கும் சக்திகளை எதிர்த்துப் போராட்டங்களிலும் ஈடுபடுவதையே அவர் விரும்புகிறார். எங்களுடைய நட்பையும், ஒத்துழைப்பையும் தேடுகிறார்..."

இந்தச் செம்பொருளுக்கு ஏற்புண்டாகவேண்டுமானால் நாம் பல நம்பிக்கையின் படிகளில் ஏறவேண்டும். அப்படி ஏறுவதற்குத் தடையாக உள்ள அறியாமை, அகம்பாவம் கலாசாரக் கட்டுப்பாடுகள், பாரம்பரியப் பிடிப்புகள் இறைவனுக்குப் புகழ்ச்சி என்றெண்ணிக்கொண்டே அவருக்கு இழுக்குண்டாக்கும் மூடநம்பிக்கைகள் ஆகிய கால்கட்டுகளை அறுத்தெறியவேண்டும்.

அந்த கால்கட்டுகளைத் தறித்தெறியும் பணியில் முதலில் இறங்குவோம். அதன்பின்னர் கிறிஸ்துவின் ஊடாகக் கடவுள் தன்னை வெளிப்படுத்திய செய்தியையும், அச்செய்திக் கொத்த ஏனைய சமயச் செய்திகளையும் காண்போம்.

இதை வாசிக்க வாய்ப்புக் கிடைக்கும் அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள். இது பயன்தந்தால் ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். கேள்விகள் எழும்புமாயின் அவற்றை எழுப்பத் தயங்காதீர்கள். ஒரு பயனுள்ள கலந்துரையாடல் தொடரட்டும்.

## கடவுள் எப்படிப்பட்டவர்? அவர் எவ்வாறு செயலாற்றுகிறார்?

18ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் வோல்டேர் (Voltaire) என்கிற ஒரு நாத்திகர் வாழ்ந்தார். அதே நூற்றாண்டில் 1755ஆம் ஆண்டு லிஸ்பன் நகரில் (போர்த்துக்கல் நாட்டுத் தலைநகர்) ஒரு மாபெரும் நில நடுக்கம் ஏற்பட்டு ஐம்பதாயிரம் பேருக்கு மேலாக உயிரிழந்தனர்.

நில நடுக்கங்கள் கடவுளால் ஏற்படுகின்றன. அவற்றால் ஏற்படும் சேதங்கள் கடவுள் அக்கிரமச் செயல்களுக்குத் தரும் தண்டனை. ஏனெனில் கடவுளே இயற்கையின் அதிபர். அவரது உத்தரவின்றி நில நடுக்கங்கள் ஏற்படுவதில்லை என்பது திருச்சபையின் போதனையாக இருந்து வந்தது. அப்போது வோல்டேர் எழுப்பிய கேள்வி என்னவென்றால், "லிஸ்பன் நகர் எந்த விதத்தில் லண்டன், பாரீஸ் நகரங்களைப் பார்க்கிலும் அதிக அக்கிரமம் செய்தது. உறுதியாக இந்நகரங்களில் நடைபெறும் அக்கிரமங்களைப் பார்க்கிலும், இவைகளிலும் மிகச் சிறிய நகரமாகிய லிஸ்பனில் நிச்சயமாக அதிக அக்கிரமங்கள் நடைபெறவில்லையே. அப்படியிருக்க அந்த நகரத்தை அழித்த கடவுள் எப்படி நியாயமுள்ளவராக இருக்கமுடியும்." இந்தக் கேள்விக்கு திருச்சபையால் அன்று முதல் இன்று வரை பதில் சொல்ல முடியவில்லை.

ஆழிப் பேரலையும் இதேவிதக் கேள்வியை இன்றும் எழுப்புகிறது என பிரிட்டன் நாட்டு எழுத்தாளர் மார்ட்டின் கெல்லி (Marton Kelly) என்பவர் அந்த நாட்டில் வெளியாகும் பத்திரிகை ஒன்றில் அண்மையில் எழுதியுள்ளார். மேலும் திருச்சபையை இதற்குப் பதில் சொல்லுமாறு ஒரு சவாலையும் வெளியிட்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட கேள்விகளை எழுப்ப நாத்திகரும் பேரறிஞரும் தேவையில்லை. இக்கட்டுகளால் பாதிப்படையும் போது பக்தியுள்ளோரும், சமயப் பற்றாளர்களும்கூட தங்களையறியாமலே உணர்ச்சி மேலீட்டால் எழுப்புகிறார்கள்.

தமிழ் நாட்டில், சென்ற இரண்டு ஆண்டுகளில் இரண்டு தீ விபத்துக்கள் ஏற்பட்டன. ஒரு பிராமண ஆசிரியை தனது 32 ஆவது வயதுவரை தம்பி தங்கையரின் ஈடேற்றத்துக்காக வாழ்ந்து வந்தார். தனித்தே வாழ்ந்து விடுவது என்ற தீர்மானத்தோடிருந்தவரை ஒருவர் விரும்பி மணம் செய்து கொள்ள முன்வந்தார். திருமண வைபவம் சிறப்பாக நடந்து வரவேற்பு விழா நடக்கையில் அவ்விழா நடந்து கொண்டிருந்த மணவிழாப் பந்தலில் திடீரெனத் தீப்பற்றிக் கொள்ள அந்த மணப்பெண்ணின் வயோதிபப் பெற்றோர், அப்போதுதான் அவருக்குத் தாலிகட்டிய அவரது கணவன் உட்பட 60பேர் உயிரிழந்தனர். அப்போது அந்தப் பெண் கேட்டார் கடவுளுக்கு ஏன் கண்ணில்லாமல் போய் விட்டது? நான் என்ன பாவம் செய்தேன்? என்னுடைய தனிமையில் என்னை ஏற்றுக் கொள்ளவும், எனது பெற்றோரை என்னுடன் சேர்த்து பராமரிக்கவும் முன்வந்து என்னைக் கைப்பிடித்தவரைக் கடவுள் ஏன் இப்படிக் கொடூரமாகக் கொன்றுபோட்டார்? என்ற கேள்விகளைத் துயரம் தாங்கமாட்டாமல் கூறினார்.

இந்த அசம்பாவிதக் கொடுமை நடந்து சில மாதங்களுக்குள்ளே கும்பகோணம் என்ற நகரில் ஒரு பாலர்

பள்ளியில் தீ விபத்து ஏற்பட்டது. 10 வயதுக்குள்ளான 93 பிள்ளைகள் தீக்கிரையாகி வெந்து போனார்கள். அப்போது தமிழ் நாடெங்கும் அனுதாபச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. அவற்றில் பல "கடவுள் இப்படி ஏன் செய்தார்? அவர் ஈவிரக்கமற்ற குரூரரா?" என்பது போன்ற கேள்விகளை எழுப்பின.

எனவே நாத்திக அறிஞர்கள், பத்திரிகையாளர்கள், பாதிப்படைவோர், அவர்கள்பால் புரிந்துணர்வு கொள்ளும் பாமரர்.... என பல நிலைகளிலிருந்தும் "கடவுளுடைய இரக்கமற்ற செயலை" கண்டித்துக் கண்டனம் தெரிவிப்பதும் கேள்வி எழுப்பி கடவுள் இருக்கிறாரா என்ற சந்தேகத்தைக் கிளப்புவதும் புதிதல்ல. இப்போது அதே கேள்வி மீண்டும் கேட்கப்படுகிறது.

பாரம்பரியப் பிடிப்புள்ள கிறிஸ்தவர்களோ இதற்குப் பலவாறாகப் பதில் தர முயலுகின்றனர். கடவுள் நினைத்ததைச் செய்யக் கடவுளுக்கு முழு உரிமையுண்டு. ஏனெனில் அவர் படைப்பாளர். நாம் அவர் படைப்பு. அவரை எதிர்த்துக் கேட்க உரிமையில்லை; என்று சொல்லி வாயடைக்க முயல்வோர் உண்டு. மற்றும் சிலர், உயிரிழந்தவர்களில் பாவமற்றவர் யார் இருக்கமுடியும்? எல்லாரும் பாவம் செய்து கடவுள் மாட்சியை மாசுபடுத்தியவர்கள்தானே? பெரியவர்களின் குற்றம் பிள்ளைகளிடமும், பிள்ளைகளின் பிள்ளைகளிடமும் கேட்கப்படும் என்றுதான் கடவுள் திட்டமாக அறிவித்துள்ளாரே? எனவே இது கடவுளின் தண்டிக்கும் செயலே என்பர்.

இறுதி நாட்கள் நெருங்கும்போது நிலநடுக்கங்களும், பஞ்சங்களும் தோன்றும் என்று இயேசுவே சொல்லவில்லையா? அதுதான் நடக்கிறது. இயேசு சீக்கிரத்தில் வரப் போகிறார் என்பதையே இது காட்டுகிறது என்கின்றனர் வேறு சிலர்.

"இப்போது உயிரிழப்பு ஏற்பட்டால் என்ன? உயிர்த்தெழுதலில் எல்லாம் சரி செய்யப்படும். எனவே இந்தத் தற்காலிகமான விபரீதத்தின் மூலம் கடவுள் விசுவாசிகளல்லாதோரை எச்சரித்து தன்வயப்படுத்திக் கொள்ளவே இவ்வாறு செய்துள்ளார். எனவே யாவரும் உடனடியாகக் கிறிஸ்தவத்துக்கு வந்து விடுங்கள்" எனக் கூறி காற்றுள்ளபோது தூற்றிக்கொள்ள முயலும் சமய விளம்பரதாரிகள் வகையைச் சேர்ந்தோர் மற்றொருபுறம்.

நாத்திகரின், பாதிப்படைந்தோரின்... கேள்விகளும் சரி, மேலே தரப்பட்ட விளக்கங்களின் ஆக்கியோன்களும் சரி யாவருமே கடவுள் எப்படிப்பட்டவர் என்ற புரிதல் இல்லாமலேயே சிந்திக்கவும், பேசவும் செய்கிறார்கள் என்றால் மிகையில்லை ஏன் என்று பார்ப்போமா? அப்படிப் பார்க்க வேண்டுமெனில் முதலில் கடவுள் பற்றி நின்று நிலவும் சில புரிதல்கள் தவறு என்பதைக் காணவேண்டும். அவற்றுக்குச் சமயக் கோட்பாடுகளோ (கிறிஸ்தவ, ஏனைய...) அன்றி திருமறை வாக்கியங்களோ கூட பக்கபலமாக இருப்பினும் நாம் அவற்றை மறுக்கத் துணிதல் வேண்டும் ஏனெனில் அன்புமயமானக் கடவுளைச் சரியாகப் புரிந்து கொண்டால்தான் நாம் அவரது செயற்



திட்டங்களுக்கு ஒத்துழைப்புத் தந்து, அவரது செயல்களில் நாமும் பங்கு கொள்ளமுடியும். கடவுள் எங்களுடன் சேர்ந்துதான் செயற்பட விரும்புகிறார். சேர்ந்து செற்பட நாம் ஆயத்தமாகும் வரைக்கும் நமது செயலிழந்த நிலையால் துன்புறுவோரின் துன்பங்களை அவர்களுடன் சேர்ந்து துன்புறுவதோடு மேலும் தொடர இயலாமல் தடுத்து தடுத்து வைக்கப்படுகிறார். இதனைப் பார்க்கக் கண்கள் தேவை. இப்போது நமது கண்களை மூடு திரையிட்டு மறைக்கும் திரைகள் நீக்கப்படவேண்டும்.

கடவுள் ஒரு பொம்மலாட்டக்காரரோ, கணனியை முடுக்கி இயந்திர மனிதர்களை முடுக்குபவரோ அல்ல. அவனின்றி அணுவும் அசையாது என்பது அனைவரும் யோசனையின்றிப் பயன்படுத்தும் முதுமொழி.

இதன் செயல்வடிவ யதார்த்தங்களை நமது மனக்கண் முன் கொண்டு வந்து பார்ப்போம்.

1945ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 6ஆம் நாள் ஹிரோஷிமா நகர் மேல் அமெரிக்க மக்கள் அதிபர் ஹரிட்ருமன் என்பவரின் உத்தரவினால் ஒரு அணுகுண்டு வீசப்பட்டது. அணுக்கள் அசையமட்டும் செய்யவில்லை. அணுக்கள் சிதைந்து அவற்றைக் கட்டிக்காத்த சக்தி ஒரு மாபெரும் நாச சக்தியாக வெடித்து 5 கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்தில் இருந்த கட்டடங்கள் நிலைகுலைந்தன. இரண்டு இலட்சம் மக்கள் உயிரிழந்தனர். இன்னும் பலர் நிரந்தர ஊனமுற்றனர். உளநிலை பாதிப்படைந்தனர்.

அணுகுண்டின் அணுக்கள் சிதைவுற்றதற்கு காரணம் கடவுளல்ல. மனிதனின் போர் வெறி. அன்று உயிரிழந்தவர்கள் யாவரும் இறைக் கோபத்துக்குள்ளாகி தண்டனை பெறவில்லை. அமெரிக்க ஆதிக்க வெறிக்குத்தான் பலியிடப்பட்டனர்.

இப்படி நடக்கும் அசம்பாவிதங்களினாலும், நாளாந்த வாழ்விலானாலும், எல்லாவற்றையும் இயக்குவிப்பவர் கடவுள் அல்ல. தானியங்கித் தன்மை கொண்ட இயற்கை ஒரு புறமும், சிந்தித்து, தீர்மானித்து செயலாற்றும் மனிதரும் உலக இயக்கத்துக்குக் கூட்டுப் பொறுப்பாளிகள் என்றுதான் சொல்ல வேண்டும். இதனை இன்னும் சற்றுத் தெளிவாக பின்னர் பார்ப்போம்.

கடவுள் நிலநடுக்கங்களுக்கும், ஆழிப்பேரலைகளுக்கும், வேறு பல இயற்கையின் அனர்த்தங்களுக்கும் காரணர் அல்லவென்றால் அவர் ஏன் குறுக்கிட்டுப் பாதுகாப்பு வழங்குவதில்லை என்ற கேள்வியும் அனேகரால் எழுப்பப்படுகிறது.

இந்தக் கேள்விக்கு அடிப்படைக் காரணம் இன்று பல அதீத பலமும், சாதாரண மனிதரிடையே ஏன் மனிதருக்குள் வீரதீரர் என்று பெயரெடுப்பவர்கள், சாகச வீரர் வீராங்கனைகள் என்று விளங்குபவர்கள்". இவர்களெல்லாரைப் பார்க்கிலும் அதீத திறமைசாலிகளை வெகுஜன ஊடகங்கள் உருவாக்கி பிரபலப்படுத்தியுள்ளன. செய்தித்தாள்களில் Phantom, Targan போன்ற பழைய அதீத வீரர்கள் மற்றும் Spider Man, Super



Man, Bat Man போன்ற நவீன அதீத வீரர்கள், தொடர் சித்திரக் கதைகள் மூலமாகவும், சினிமா, தொலைக்காட்சி நிகழ்ச்சி களிலும் அடிக்கடி காட்டப் படுகின்றன. இவர்கள் இன்னல் களையும் வீரர்களாகச் சித்தரிக்கப் படுகிறார்கள். எங்கெல்லாம் தீமையின் சக்திகள் கோரத் தாண்டவம் ஆடுகின்றனவோ அங்கு இவர்கள் நன்மை செய்வர். தங்களுடைய ஆற்றலால் விடுதலையையும், நிவாரணத்தையும் வழங்குவர். இவ்விதக் கதைகள் கடவுள் எல்லாம் வல்லவராயிற்றே, அன்புமயமானவரும்தானே பின்னர் என்ன இயற்கையின் அத்துமீறல்கள் நடக்கப்போவதை முன் கூட்டியே அறிந்து பாதிப்படையும் பகுதிக்கு விரைந்து குற்றமற்ற அப்பாவி மக்களையாவது காப்பாற்றலாமே, அதை அவர் ஏன் செய்வதில்லை என்ற கேள்வியை எழுப்புகின்றனர்.

கடவுள் பற்றிய இப்படிப்பட்ட எதிர்பார்ப்புகளும், அவை நிறைவேறுவதில்லை எனக் காணும்போது மக்களிடையே கடவுள் பற்றிய காட்சியைத் திரித்து விடுகிறது. ஆழிப்பேரலையால், அநேக நிலநடுக்கங்களால் எல்லா சமயத்துவப் பக்தரும் சரி, பாவமறியாப் பச்சிளம் குழந்தைகளும் கொல்லப்படுகின்றார்கள் அல்லது ஈடுசெய்ய முடியாத இழப்புகளையும், உடல் உள்ள நோய்களையும், ஊனங்களையும் சந்திக்கின்றனர் என்பதால், இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள், நோவா காலத்து கோபாக்கினை செயல் போன்ற செயலே என்ற அவசர முடிவுக்கு வந்து விடுகின்றனர்.

ஆனால் இதுவும் தவறான சிந்தனையே, எனப் புரிந்து கொள்ளவேண்டுமென்றால், கடவுளுக்கும் படைப்புக்குமுள்ள உறவு எத்தகையது, கடவுளுக்கும் மனுக்குலத்துக்குமிடையே அவரால் ஏற்படுத்தப்பட்டுள்ள உறவு, பொறுப்புகளின் வடிவங்கள் எவை, என்ற தெளிவு தேவை. அதோடு கடவுளுடைய முடிவான மீட்பின், புதுப்பித்து நிறைவு செய்தலின் திட்டம் என்ன, அதனை அவர் எவ்வாறு நிறைவேற்றுகின்றார் என்ற புரிதலும் இன்றியமையாதது.

இந்தத் தெளிவு பிறக்கக் கடவுள் இயேசுவில் – அவரது போதனையின் ஊடாகவும் – வாழ்வு, மரணம், உயிர்த்தெழுதல் ஊடாகவும் என்ன வெளிப்பாடு தந்துள்ளார். அதன் முன் பதிப்புகள் போன்ற ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் இந்து சமயப் புரிதல்கள் நமக்குப்புகட்டுவதென்ன என்றும் நாம் பார்க்கவேண்டும்.

முதலில் கடவுள் – இயற்கை – மனுக்குலம் ஆகிய மூன்று உண்மையின் கூறுகளிடையே நிலவும். நிலவவேண்டிய உறவு எத்தன்மையது எனக் காணமுயல்வோம். அதனை அடுத்து இயேசுவின் வாயிலாக வெளிப்பட்டுள்ள மீட்பின் திட்டத்தைப் புரிந்து கொள்ள முயல்வோம். இறுதியில் இந்தத் தெளிவான பார்வை நம்மை இட்டுச் செல்லும் பாதை எது, நாம் அதில்தான் பயணிக்கிறோமா அல்லது வேறு திசையில் சென்று கொண்டிருக்கிறோமா எனக் காண முயற்சித்து இந்தக் கட்டுரையை முடிவுக்குக் கொண்டு வருவோம்.

**கடவுளும் - இயற்கையும் - மனிதரும்,**

கிறிஸ்தவ விவிலியத்தில், தொடக்க நூலில் ஒரு படைப்பு வரலாறு காணப்படுகிறது. அதில், கடவுள் அகிலத்தை படைத்தார். அப்படிப் படைப்பதற்கு முன் இருளும் குழப்பமும் சூழ்ந்த ஒரு நிலை காணப்பட்டது என்றும், படிப்படியாகக் கடவுள் பூமியையும் விண்மண்டலங் களையும் தோற்றுவித்து, படைப்பின் சிகரமாக மனுக்குலத்தைப் படைத்தார். மனுக்குலத்தவரிடம் படைப்பைப் பராமரித்து, அதன் வளங்களால் வாழ்வை வளமுடன் வாழும்படி பகிர்ந்து இயற்கையை மனிதரின் பொறுப்புக்கு ஒப்படைத்தார் என்று அந்த வரலாறு கூறுகிறது.

ஆனால் மனிதர் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமையை ஒரு அத்துமீறலுடன் பயன்படுத்தியதால் மனுக்குலத்திற்குள் பகையும், படைப்பிற்குள் குதர்க்கமும் நுழைந்து விட்டது என்கிற ஒரு புரிதலின் பார்வையில் இந்தப் படைப்பு வரலாறு எழுதப்பட்டுள்ளது. இது இன்றைய நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றது என்றால் மிகையல்ல. இந்தப் புரிதலைக் கொண்டு இன்று கடவுள் – மனிதர் – படைப்பு உறவுகளைப் புரிந்து கொள்வது பல பிரச்சனைகளை நாம் தீர்த்துக் கொள்ள உதவும். நம்முடைய மனதில் ஆழிப்பேரலை பற்றி "கடவுள் ஏன் இப்படிச் செய்தார்?" என்ற விளக்கமுடியாத கேள்விக்கு ஒரு பதில் கிடைக்கவும் இந்தப் புரிதல் துணை நிற்கும்.

கடவுள் படைத்த பூமி எத்தகையது?

படைப்பு அனைத்துமே நல்லது எனக் கடவுள் கண்டார் என்கிறது விவிலியம்.

விஞ்ஞானக் கண்கொண்டும் சில யதார்த்தங்களைக் கொண்டும் இந்த "நல்லது" என்ற கணிப்பை சற்றுப் பகுத்து ஆராய்தல் அவசியம்.

பூமியில் பெரும்பகுதி கடலாலானது. கால் பகுதி மட்டுமே நிலப்பரப்பு. இந்த நிலத்தில் பாலை நிலங்கள், மலைத்தொடர்கள், மிகுதியான மழைவளம் உள்ள பகுதிகள், வறட்சிப்பகுதிகள்... என அமைந்துள்ளது.

பூமியின் அடியில் தீப்பிழம்பு. பூமி சமுத்திரத்துக் கடியிலும் தட்டு, தட்டாகவே அமைந்துள்ளது. இத்தட்டு களிடையே விரிசல்கள் உண்டு. இந்த விரிசல்கள் எப்படி ஏற்பட்டன எனக் காண்பது கடினம். ஆதியில் மொத்தமும் தீப்பிழம்பாயிருந்த பூமி படிப்படியாகக் குளிர்ந்து சில பனிக்கட்டிக் காலங்களையும் கடந்து, சில மில்லியன் ஆண்டுகளில் ஒரு சமநிலை அடைந்தது என்கிறது விஞ்ஞானம். இந்தச் சமநிலைதான் உயிரினங்களின் தோற்றத்திற்கு இசைவாக உள்ளது. விரிசலடைந்துள்ள தட்டுகள் பூமியில் அசைந்த வண்ணமும் ஒன்றோடொன்று மோதக் கூடியதாகவும் உள்ளது. அதே வேளையில், பூமியின் கீழுள்ள தீப்பிழம்பினால் எற்படும் வெப்பம் அதிகரித்து விடாமல் நிலப்பரப்பின் கீழ் தண்ணீரும் பாலை நிலப்பகுதிகளின் கீழ் பெற்றோலும் இருக்கிறது.

ஒரு சில ஏற்பாடுகள் சிறப்பானவையாகவும், மற்றும் சில எதிரும் புதிருமானதாகவும் அமைந்துள்ளது. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்ப்போமானால் இந்தப் பூமியைக் கடவுள் எப்படி ஒரு நல்ல படைப்பு என்று கணித்தார் என்று கேட்கவே தோன்றும்.

ஆனால், இந்தப் பூமியில் மட்டும் உயிரினங்கள் தோன்றவும், அவற்றின் வாழ்வுக்காதாரமான காற்றும், நீரும், உணவும் இருக்கிறது. புவி ஈர்ப்பு சக்தியும் போதுமான அளவில் உள்ளது. புவி ஈர்ப்பு சக்தியின் இழுவை குறையுமானால் நாம் மிதந்துகொண்டே இருப்போம். எனவே பூமியின் 'குளறுபடியான' அமைப்புதான் உயிரைத் தோற்றுவித்துக் காப்பாற்றுகிறது. எனவேதான் கடவுள் இதை நல்லது என்று கணித்தார் என்றே நாம் முடிவெடுக்க வேண்டும்.

இந்த 'குளறுபடியான' பூமியின் அனைத்து வளங்களையும் மனிதர் நீதியுடன் பகிர்ந்துண்டு வாழும் பண்பாடுடன் வாழவேண்டும். அதன் வளங்களைச் சூறையாடி அழிக்காமல், பொறுப்புணர்ச்சியுடன் அதைப் பராமரிக்கவேண்டும் என்று கடவுள் எதிர்பார்த்தார். எதிர்பார்க்கிறார். அதோடு கூடுதல் வளங்களும் விளைச்சலுமுள்ள பகுதியில் வாழ்வோர், வறட்சிப் பகுதிகளுடன் தங்கள் உபரி விளைச்சலைக் கொள்ளை இலாப நோக்கமில்லாமல் பகிர்ந்து கொள்வர் ஆபத்தான பணி செய்து மக்களுக்குக் கடல் உணவைக் கொண்டுவரும் மீனவர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், விஷ வாயு நிறைந்த பாதாளச் சாக்கடைக்குள் இறங்கி சுத்தம் செய்பவர்கள் போன்ற உழைப்பாளிகளுக்கு நியாயமான வருமானமும், தேவையான பாதுகாப்பு வசதிகள், வீடுகள்... தர சமுதாயம் தானாகவே முன்வரும். கடின உழைப்பினால் ஏனையோரைப் பிழைப்பூட்டுபவர்களுக்கு விவசாயமில்லாத காலங்களில் மாற்று வேலை, நியாயமான கூலி, இழக்கும் கூலிக்கு ஈட்டுத்தொகை போன்ற காரியங்களில் சமுதாயமும், அரசும் அக்கறை காட்டும் என்றெல்லாம் கடவுள் எதிர்பார்க்கிறார்.

ஆனால், இன்று வசதிபடைத்த வர்க்கங்களும், வல்லரசுகளும் பூமியின் இயற்கை வளங்களை அவை வேற்று நாட்டிலிருந்தாலும் சூறையாடி கொள்ளை இலாபமீட்டுவதிலும், அதனால் வலுவிழந்த ஏழைமக்கள் எவ்வளவு பாதிக்கப்பட்டாலும், பூமி ஆபத்தான அழிவை நோக்கிச் சென்றாலும், பொன் முட்டையிடும் வாத்தைக் கொன்ற பேராசைக்காரனைப் போலவே நடந்து கொள்கின்றனர்.



வேற்றுநாட்டு இயற்கை வளங்களைக் கொள்ளையடிப்பதற்காக ஆயுதக் குவிப்பும் அணு ஆயுதச் சோதனைகளும் பெருகி வருகின்றன. பூமியின் அடிமட்ட நீர்வளமும், பெற்றோல் வளமும் சூறையாடப்படுவதனாலும், பெற்றோலின் எரிபுகையினாலும் பூமியின் சூடு அதிகரித்து வருகிறது. கடலின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. துருவங்களிலுள்ள உறைபனி உருகி அதனாலும் கடல் மட்டம் உயருகிறது. இப்படி நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் சுனாமி அலைகள் முன்பு மூன்று அடி உயரத்துக்கு எழும்பியவை இப்போது முப்பது அடி உயரம் எழுகின்றது. இதனால் அழிவு அதிகரிக்கிறது.

கடல் கொந்தளிப்புக்கான எத்தனங்கள் நாளுக்கு நாள் கூடி வருகின்றன. பசுபிக் சமுத்திரத்தில் சுனாமிகள் அதிகரித்து வருகின்றன. எனவே அமெரிக்கா தன்னைப் பாதுகாத்துக்கொள்ள உலகம் முழுவதையும் தனது பார்வையில் வைத்திருக்கிறது. இந்தோனேசியாவில் ஏற்பட்ட கடலடி நில நடுக்கத்தைப் பதினைந்து நிமிடங்களுக்குள் கண்டுபிடித்துவிட்டது. ஆனால் தாய்வான் நாட்டுக்கு மட்டும் எச்சரிப்புக் கொடுத்ததாம். ஏனெனில் அவர்கள் சுனாமி ஆய்வுச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளராம். ஆனால் அவர்களும்கூட எச்சரிப்பை அசட்டை செய்துவிட்டனர். ஏனெனில் இதற்கு முன்பு மூன்று முறை அமெரிக்க ஆய்வு நிலையம் போலி எச்சரிப்புகளை அனுப்பியதாம்.

சுனாமி அனர்த்தம் வரலாமென்று ஊகிக்க முடிந்தாலும், எல்லாப் பாதிக்கப்படக்கூடிய ஆசியக் கரையோரப் பகுதிகளுக்கும், எச்சரிப்புத்தர எந்த் முயற்சியும் எடுக்கப்பட வில்லை. இப்போது படையை அனுப்பி நிவாரணப் பணியில் இறங்கியுள்ளது. ஆனால் நாங்களோ இது கடவுளால் வந்ததா என்ற கேள்விக்கு விடை தேடிக் கொண்டிருக்கிறோம்.

சுனாமி கடவுளால் வரவில்லை. அது மனுக்குலத்தின் ஒரு பகுதியினருடைய தன்னலம், அக்கறையின்மை போன்ற மனித நேயத்துக்கும், கடவுளின் விருப்பத்திற்கும் மாறான தொடர் செயலால் ஏற்பட்டது. எனவேதான் சுனாமிகளின் எண்ணிக்கை, நிலநடுக்கங்களின் எண்ணிக்கை, மழையின்மை அல்லது பெருவெள்ளம் போன்ற அனர்த்தங்கள் எல்லாமே நாளுக்கு நாள் கூடி வருகின்றன.


## கடவுளின் அக்கறை

இப்படிப்பட்ட சூழலில் கடவுள் விலகி நின்று வேடிக்கை பார்க்கவில்லை. வலுவிழந்த எளிய மக்கள் அல்லலப்படுவதும், அழிக்கப்படுவதும் இயற்கையின் அனர்த்தங்களால் மட்டுமல்ல கட்டுப்பாடற்ற சொத்துக்குவிப்பு நடக்கிறது. இதற்கு பூகோளமயமாக்கப்பட்ட பன்னாட்டு வியாபாரம் துணைபோகிறது. விளைவு - உலகத்தின் மொத்த மக்கள் தொகையில் 40 சதவீத (40%) மக்கள் வறுமையில் உழல்கின்றனர். சுனாமி அனர்த்தத்திற்கொத்த பட்டினிச்சாவுகளும், மருந்து கிடைக்காமல், மருத்துவம் பார்க்க முடியாமல் ஏற்படுகிற சாவுகளும் ஒவ்வொரு நாளும் ஏழை நாடுகளில் நடக்கின்றன. இவை நாளாந்த யதார்த்தம் பரவலாக நடந்து கொண்டேயிருப்பதால் நம்முடைய கவனத்தை ஈர்ப்பதில்லை.

அது மட்டுமல்லாமல் ஈராக் போர் போன்ற போர்கள், ஆங்காங்கே நடைபெறும் ஆதிக்கப் பேரினங்கள், சிறுபான்மையினர் மேல் கட்டவிழ்த்துவிடும் இனப்

படுகொலைகள், பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொல்லப்படும் பெண்கள், பெண் கருச்சிதைவுகள்... என்று அழிவு நடந்து கொண்டேயிருக்கிறது.

இவற்றின் ஊடாக கடவுள் என்ன செய்கிறார்? அழுகிற மக்களுடன் நின்று அவரும் அழுகிறார். அவர்கள் அனுபவிக்கும் கொடுமைகள் அவர்மேலும் சுமத்தப்படுகிறது. இதைத் தான் இயேசு வெளிப் படுத்தினார்.



இறைமைந்தன் இயேசுவின் சிலுவை ஒரு தொடரும் சிலுவை, அதில் கடவுளும் அநியாயமாகத் துன்புறும் அனைவரும் சேர்ந்து பங்கேற்கின்றனர். கடவுளை நாங்கள் இப்படிப் பார்க்கக் கற்றுக்கொள்ளவேண்டும். கொடூரத்தை நியாயமென்று சாதித்தும் அப்படிக் கொடூரமாக வாழ்ந்து வசதியைப் பெருக்கிக் கொள்வது கடவுள் தங்களுக்களித்துள்ள அருள் வரம் என்றும், துணிந்து கூறும் வர்க்கத்தினரையும், வல்லரசுகளையும், அனைத்து ஆதிக்கச் சக்திகளையும், இவற்றை ஆதரித்துத் தாங்கும் சமய, கலாசார விழுமியங்களையும் மாற்றியே ஆகவேண்டும். இதுவே இறைவனது திட்டம். எனவே பாதிக்கப்படுபவர்களாகிய நாங்கள் கடவுளுடன் சேர்ந்து எதிர்த்துச் செயல்படவேண்டும்.

இதற்காகத்தான் கடவுள் பொறுமையுடன் காத்துக் கொண்டிருக்கிறார். இம்மாதிரி தருணங்களில் நம்முடைய சிந்தனையைத் திசை திருப்ப விரும்புகிறார். சுனாமி அனர்த்தத்தினாலும், நாளாந்தம் நடைபெறும் கொடூரங்களாலும் பாதிக்கப்படுவோர் அனைவரும் இயேசுவின் சிலுவையின் உடன்பங்காளிகள், அவர்கள் எச்சமயத்தவராயினும், இயேசுவின் தொடர் சிலுவையில் அவரின் உடன்பங்காளிகளே.

கடவுளைத் துன்பங்களின் காரணராகப் பார்த்து எல்லாம் அவன் செயல் என்று அமரிக்கையாவதோ, விதிப்பயன், அக்கிரமம் தழைத்து விட்டதால் கடவுள் தரும் சிட்சை, எச்சரிக்கை என்றெல்லாம் விளங்கிக்கொள்வது சரியல்ல என்று பார்த்தோம். ஏனெனில் பாதிக்கப்பட்டோரின் உள்ளத்தில் உடனடியாகத் தோன்றும் கோப உணர்வு, "கடவுளுக்கு ஏன் நியாய அநியாயம் தெரியவில்லை? கடவுளுக்குக் கண்ணில்லையா? இப்படிக் கண்மூடித்தனமாகச் செயல்படும் கடவுளை நாங்கள் ஏன் மதிக்க வேண்டும்?" போன்ற கேள்விகளையே எழுப்புகின்றன.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு கணிசமான பகுதி, முன்பு பாதுகாப்பான கடலைவிட்டு சற்றுத் தூரமான பகுதிகளில் வாழ்ந்தவர்கள். அவர்கள் வசித்த பகுதி நாட்டுப் பாதுகாப்புக்கு அத்தியாவசியப் பகுதி என்று அறிவிக்கப்பட்டதனால், இடம்பெயரவேண்டியக் கட்டாயத்துக்கு உட்படுத்தப்பட்டனர். அரசு மாற்று இடம் தர கடன்பட்டது என்றாலும், இவர்கள் வாழ்ந்த இடங்கள் தனியார் உடமை உரிமம் பெறாத சொத்துக்கள் என்பதால் அவர்களைக் காலிசெய்து விரட்டியதோடு நின்று விட்டது. அரசு காலூன்ற வேறு இடமின்றி, அப்படி இடம்பெயர்ந்தவர்கள் மீனவர்களும் முனிசிபல் துப்பரவுத் தொழிலாளரும் என்பதால் கடலுக்கு அருகிலுள்ள காலி இடங்களிலே தங்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பட்ட காலிலே படும் என்பதற்கேற்ப இந்த மக்கள் இப்போது அதிக உயிரிழப்புக்களையும், வீடுகள், படகுகள், நாசமாக்கப் பட்டதையும் அனுபவித்துள்ளனர். இப்படிப் பட்டகாலியே படும் என்பதற்கேற்ப அவர்களுக் கேற்பட்ட இன்னல் கடவுள் அவர்களைத் தண்டித்து ஓயவில்லை. இன்னமும் விடாது தொடர்கிறார் என்ற எண்ணத்தை உருவாக்குகிறது. ஆனால் உண்மை என்ன? பட்டாளத்தின் ஆக்கிரமிப்பு நாட்டுப் பாதுகாப்புக்குத் தேவை என்று ஒத்துக் கொண்டாலும், மாற்று இடம் தந்து அவர்களது தொழிலுக்கும் வாழ்வுக்கும் பாதுகாப்பு அரசு கொடுத்திருக்க வேண்டும்.

அதுபோலவேதான் நகரசபை – பட்டினசபை துப்பரவுத் தொழிலாளர் என இழிவுபடுத்தப்பட்டு, ஊருக்குள் வாழ்வதற்கு அனுமதி மறுக்கப்படுவோரின் நிலையும், அவர்களுக்கு சாதி உணர்வுள்ள அனைவருமே பொறுப்பு கடவுள் அல்ல.

அப்படியானால், சமுதாயத்தின் அரசின் அகம்பாவம், மெத்தனம், அசட்டை ஆகிய பாவங்களை மூடி மறைக்கவல்லவா கடவுள் மீது பழி சுமத்தப்படுகிறது?

இதனைப் புரிந்து கொண்டால், கடவுள் பேரில் பழியை சுமத்தி ஒளிந்து கொள்ளும் பல அக்கிரமங்களை நாம் அடையாளம் காணலாம். அத்தோடு கடவுளுக்கு எத்தனை இழுக்குத் தேடித்தருகிறோம் என்பதும் புலனாகும்.

எனவே வாசக அன்பர்களே அன்பு மயமான, நீதியில் அழிக்க முடியாத அக்கறை கொண்டுள்ள கடவுளைப் புரிந்து கொள்வோம். இயேசு இதனைத் திட்டமாகப் போதித்தார். கடவுள் தண்டிப்பவர் அல்ல. அவருக்கு விரோதிகள், தீயசக்திகளே தவிர அவற்றால் பாதிக்கப்படும் மக்களோ ஏன் அவைகளால் முடுக்கிவிடப்படும் மக்களோ அல்ல எனத் திட்டமாகப் போதித்தார்.

ஒரு கட்டடம் இடிந்து விழுவதனால் ஏற்படும் திடீர் உயிரிழப்பானாலும், அரசியலாரின் அராஜகச் செயல்களால் கொல்லப்படும் போராளிகளினாலும் கடவுளால் சாவைச் சந்திக்கவில்லை என்று அறுதியிட்டுக் கூறினார்.

அதோடு, தீய சக்திகளை எதிர்த்துத் தன்னுடைய போராட்டத்தில் நாங்கள் உடன் பொறுப்பும் பங்கும் ஏற்க நம்மை அழைத்த வண்ணமிருக்கிறார். நாங்களோ அவரைச் சில பக்தி முயற்சிகளால் ஏமாற்றிவிட்டு ஆபத்து மிகுந்த அவர் வழியிலிருந்து விலகி நின்று எப்படியாவது மோட்சகதி அடையலாம் என்பதிலேயே குறியாயிருக்கிறோம். அல்லது இவ்வுலக வாழ்க்கையை வசதியுடன் வாழ அவரது அருளையும் ஆசியையும் பெறும் குறுக்கு வழிகளைத் தேடியலைகிறோம். இதனை விட்டுத் திரும்புவோம்.

இறுதியாக, நண்பர்களே! இந்தக் கட்டுரையில் இறைவனைப் பற்றி நாம் சித்தரிக்க முயன்ற சித்திரக் காட்சி முற்றிலும் புதிதல்ல. ஏற்கனவே இந்து சமயத்தின் சில புனைவுகளில் இவை முன்பதிப்புப்போல காணப்படுகிறது.

இயேசுவில் நிகழ்ந்ததெல்லாம் இதுதான் உண்மை. சித்திரம் என தத்ருபமாக்கப்பட்டது என்பதுதான் உண்மை. அதைச் சுருக்கமாகச் சுட்டிக்காட்டி இந்தக் கட்டுரையை ஒரு முடிவுக்கு கொணர்வோம்.

கடவுளை படைப்பில் மலிந்துள்ள அக்கிரமத்தின் விளைவாம் ஆலகால விஷத்தைத் தானே உண்டு தனது தொண்டையில் அடக்கிக்கொண்ட நீலகண்டனாக சைவம் பார்க்கிறது. இந்தியாவில் வங்காளப் பகுதியில் காளி வழிபாடுள்ளது. காளி சக்தியின் வடிவம் என்பது மக்கள் நம்பிக்கை. எனவே சிவனது பாரியார் என்பதும் அங்கு எற்கப்பட்டுள்ள ஒரு புரிதல். காளி கோரத்தாண்டவமாடுகிறாராம். அதனால் உலகமே அழியக் கூடிய சூழல் உருவாயிற்றாம். அதைக் கண்ட சிவபெருமான் காளியின் காலுக்கடியில் படுக்க, தன்னுடைய கோரத்தாண்டவம் கணவனையே கொன்றுவிடுமோ என்ற உணர்வு வந்தவுடன் தூக்கிய காலைத் தூக்கியபடியே நிறுத்திக் கொண்டாராம் காளியம்மையார். எனவே உலகம் பிழைத்ததாம். இப்படி ஒரு புனைவு, இவை எல்லாமே உலகில் நடக்கும் பல கட்டுக்கடங்காத கோரத்தாண்டவங்களால் ஏற்படும் பயங்கர விளைவுகளைப் பேரழிவுகளைப் பார்க்கிற கடவுள் தன்னையே இவ்விபத்துக்களுக்கு உட்படுத்தித்தான் தீர்வைக் காணவிரும்புகிறார் என்ற புரிதலில் எழுந்த காட்சிகளே. இதைத்தான் கிறீஸ்தவ நற்செய்தியில் இயேசுவின் ஊடாகக் கடவுள் தத்ருபமாக்கினார் என்றும், புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

எனவே இயேசுவில் நிகழ்ந்தது என்னவென்றால், கடவுள் துயருறும் மக்களின் துயரத்தை உடனிருந்து சுமக்கும் கடவுள். அவர்கள் மீட்புப் பெற தன்னையே அழித்துக் கொள்வதற்கும், ஆயத்தமாயிருக்கும் கடவுள் என்ற பேருண்மை தத்ருபமாக்கப்பட்டது. புனைவுகளால் உணர்த்தப்பட்டதும், இஸ்ரவேல் மக்களின் இன்னல் மிகு வரலாற்றில் அவ்வப்போது வெளிப்பட்டதுமான இறைத் திருக்காட்சி உண்மையென உறுதி செய்யப்பட்டது.

காளியின் கால் கணவனையும், உலகத்தையும் கொன்றழிக்காமல் நின்றதுபோல, வல்லரசுகளின், மேல்மட்ட வர்க்கங்களின், ஆதிக்கப் பேரினங்களின் கோரத் தாண்டவம் நிற்குமா? கடவுளின் பிரதிநிதிகளாகத்தான் அப்பாவி மக்கள் இச் சக்தியின் கோரத்தாண்டவத்தால் கொன்றழிக்கப்படுகின்றனர் என்ற உணர்வை அவைகளுக்குத் தந்து அவர்களது தாண்டவமாடும் காலைப் பிடித்து நிறுத்த வேண்டியது எங்களெல்லோருடைய கடமை அல்லவா? ❑

நன்றி :

**இறையியல் களஞ்சியம்**

*மார்ச், 2005*

# மாறாத நினைவுகள்...



26.12.2004 ஞாயிற்றுக்கிழமை காலை சுமாத்திரா தீவுகள் முதல் இந்தியா, இலங்கை வரையிலான கரையோரப் பிரதேசங்கள் சுனாமி என்னும் கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டது. அதனால் இது அனைத்து உலகத்திற்கும் பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் உண்டுபண்ணியது. சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடபகுதியிலுள்ள சில இடங்களை என்னால் சென்று பார்க்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் அதனால் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியிருந்த மக்களைப் பார்வையிட வாய்ப்புக்கிடைத்தது. அவர்களை ஆற்றித்தேற்றி அவர்களது தேவைகளை அறிந்து உதவ பலர் அங்கே கூடினர். அவர்களில் ஒருவனாக நான் அவர்களது சோகக் கதைகளையும் அவர்களது ஆதங்கங்களையும் அறிந்து கொண்டேன். அவர்களை எப்படி ஆற்றுவது அவர்கள் தேவைகளை எப்படி என்னால் சந்திக்க முடியும் அது எனக்கு ஒரு ஏக்கமாக இருந்தது. பல தொண்டர் நிறுவனங்களும், பொதுநல விரும்பிகளும் பலவிதத்தில் உதவமுன்வந்தனர். அப்படியே யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியமும் தங்களால் ஆன உதவிகளை செய்வதற்கு தேசிய கிறிஸ்தவ மன்றத்தினிடம் விண்ணப்பித்திருந்தது. அவர்களுக்கு அம்மன்றத்திடமிருந்து சாதகமான பதில் கிடைத்தது.

இதற்கிணங்க யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஒன்றியம் இப்பணிக்காக ஒரு குழுவைக் கூட்டி வடபகுதியில் பகுதி பகுதியாகப் பிரித்து பணிகளை ஆரம்பித்தது. அந்தந்தப்பகுதியில் தேவைக்கேற்ப உதவிகள் செய்யப்பட்டது. முதலில் உடனடித்தேவைகள் கவனிக்கப்பட்டது. குழந்தைகளின் பால்மா, குழந்தைகளுக்கான நுளம்பு வலைகள், மற்றும் உலர் உணவுகள் கொடுக்கப்பட்டது. பின்னர் அவர்கள் தங்கள் சொந்த இருப்பிடங்களுக்குச் செல்வதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. மலசலகூட வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. சுயதொழில் ஆரம்பிப்பதற்கு ஊக்குவிக்கும்

## சுனாமி கடல் அனர்த்தமும் எமது பணியும்...

பொருட்கள், சைக்கிள் வண்டிகள், கட்டுமரம், வலைகள், தையல் இயந்திரங்கள் போன்றவைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டது. சமூகமாக கூட்டுத் தொழில்பயிற்சி நிலையங்கள் சங்கமாக செயல்படுவதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டது. அதற்கான உபகரணங்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டது. அத்துடன் நிரந்தரவீடு அமைத்துக் கொடுக்கும் திட்டங்களும் நடைமுறைப்படுத்த ஆவண செய்யப்பட்டுவருகிறது.

மேற்குறிப்பிட்ட பணிகளை நடப்பிப்பதில் நானும் யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**வண வீ. ந. தர்மகுலசிங்கம்**

# மாறாத நினைவுகள்...

எந்தளவிற்குச் சோதனையும் வேதனையும் தரப்படுகின்றதோ அந்த அளவிற்கு அதற்குப் பிரதிபலனும் கிடைக்கப்பெறுகின்றது. இது கதீஸ்ல் வருகின்ற ஒரு வசனம்.

யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக முஸ்லிம் மக்கள் பாரிய நெருக்கடியின் மத்தியில் 1990ஆம் ஆண்டளவில் இடம் பெயர்ந்தனர். இவர்கள் அகதிமுகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சம் புகுந்தனர். அன்றாட வாழ்க்கைச் செலவிற்குப் பெரிதும் துன்பப்பட்டனர். முஸ்லிம் மக்கள் அடைந்த சோதனைகளும் வேதனைகளும் எண்ணிலடங்காதவை. போசாக்கின்மை, தொற்றுநோய் போன்றனவும் வலிய மக்களை வலிந்துதாக்கின.

துன்ப துயரங்களுக்கு மத்தியில் பன்னிரண்டு வருடங்களாக வாழ்ந்த மக்களுக்கு போர் நிறுத்த உடன்படிக்கை ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. இடைக்கால நிர்வாகத்தின் முன்னரே ஆண்கள் வியாபார நோக்கத்துடன் குடாநாட்டுக்குத் திரும்பினர். கூடவே தமது தாய்நாட்டிற்கும் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம், அகதிகள் பிரச்சனையை சர்வதேசமயப்படுத்தல், இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தல், நிவாரண விநியோகம், சுகாதாரம், கல்வி அபிவிருத்தி போன்றவற்றை மக்களுக்கு எவ்வித தயக்கமுமின்றி, உதவி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுத்தும் மக்கள் பணிமனையானது தனது விருட்சத்தின் கிளைகளில் ஒன்றை யாழ்மண்ணிலும் பதித்தது. மக்கள் சொந்த மண்ணில் கொண்டபற்று அகதிகளாய் வாழ்கின்றமையினால் ஏற்பட்ட மனஉழைச்சல், நெருக்கடிகள் மீண்டும் மக்களை தம் மண்ணிற்கு இழுத்து வந்தன. யாழ் வந்த முஸ்லிம் மக்களுக்கு அதாவது சொந்த மண்ணில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு நிறுவனங்கள் மக்கள் பணிமனையுடன் இணைந்து உதவிபுரிந்தன.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு UNHCR உலர்உணவு தவிர்ந்த ஒரு பொதியை, ஒரு குடும்பத்திற்கு ஒன்றுவீதம் வழங்கினர். ஒஸ்மானியாக்கல்லூரியையும் பகுதியாகப் புனரமைத்தல், இக்ர:. பாலர்பாடசாலை புனரமைப்புப் பாதைகளைச் சீர் செய்தல் (பாலம் சீர்செய்தல்) போன்ற உதவிகளை NECORD நிறுவனத்தினர் மேற்கொண்டனர். UNHCR நிறுவனம் மக்களுக்கு தற்காலிகக் குடிசை அமைப்பதற்கான தரப்பாளை வழங்கினர். FORUT நிறுவனம் தற்காலிக இருப்பிடம் அமைத்துக்கொடுத்தது. ZOA ஒஸ்மானியா கல்லூரியிலுள்ள கிணறு, மலசலகூடங்கள் போன்றவற்றை துப்பரவுசெய்தனர். J.C.U. நிறுவனத்தினர் பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துக்களையும், சுயதொழில் வாய்ப்புக்களை மேற்கொள்வதற்கு பெண்களுக்கு 02 தையல் இயந்திரங்களையும் வழங்கினர். UNICEF சீருடைகள், பாடசாலை மாணவர்கள் சுத்தமான நீர்பருகுவதற்கு ஏற்றவகையில் தண்ணீர் பரல் (Plastic Tank) போன்றவற்றையும், A.S.M முஸ்லிம் வட்டாரத்தில் உள்ள கிணறுகளைச் சுத்தம் செய்வதற்கு நீர்பம்பி ஒன்றை வழங்கியுள்ளது. ICRC தைத்த உடைகளையும், HUDEC சுழற்சிமுறையில் கடன் திட்டங்களையும் ஏற்படுத்திக்கொடுத்து எமக்கும் எமது மக்களுக்கும் உதவிபுரிந்து வருகின்றன. நிறுவனங்களின் உதவி எமது மக்களுக்கு கைகொடுத்து உதவியுள்ளன.

எமது மக்கள் பணிமனையினது 2006 – 2007 இலக்கானது முஸ்லிம் வட்டாரத்தின் பொம்மைவெளிப்பகுதியை ஒரு மாதிரிக்கிராமமாக ஆக்குவதே. எமது இலக்கை நிறைவேற்ற நாம் உதவி நிறுவனங்களின் பேர் உதவியினைப் பெரிதும் நாடி நிற்கின்றோம். ஒரு மாதிரிக்கிராமம் என்றால் மக்கள் தமது அன்றாட, அத்தியவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான அனைத்தும் அக்கிராமத்தினுள் அமையப் பெற்றிருக்க வேண்டும். எமது இலக்கை நிறைவேற்ற சில நிறுவனங்கள் உதவிபுரிய முன்வந்துள்ளனர். பொம்மைவெளிப் பிரதேசம், மற்றும் ஏனைய பகுதிகளிலும் சுமார் 140 வரையானகுடும்பங்கள் குடியேறியிருந்தனர். தற்போதைய பதற்ற சூழ்நிலை காரணமாகக் குடாநாட்டை விட்டு வெளியேறிய வண்ணம் உள்ளனர். தற்போது 45 குடும்பங்களே வசித்து வருகின்றனர். 2006 – 2007 காலப்பகுதிக்குள் 1000 குடும்பங்கள் வரையில் குடியேறினால்தான் ஏனைய முஸ்லிம் பிரதேசங்களில் மக்களினது குடியேற்ற வீதம் அதிகரிக்கும்.

# அஸ்ஸலாமு அலைக்கும்...

சமாதான சூழ்நிலை மீண்டும் மலர்ந்தால் எமது இலக்கு மிகக்கூடிய விரைவில் எட்டமுடியும். அதற்கு உதவி நிறுவனங்களும் பாரியளவு உதவி புரிய வேண்டும். மக்கள் பணிமனையினூடாக திரு.பி.எ.எஸ். சுபியான் மௌலவியினது அயராத உழைப்பின் பேரில் மக்கள் மீளக் குடியமர்ந்தனர். தற்போதைய சூழ்நிலையின் காரணமாக எமது இக்ர:. பாலர்பாடசாலைக்கு மாணவர்கள் சமூகமளிக்கின்ற வீதம் மிகவும் குறைவாகவுள்ளது. இன்ஷா அல்லாஹ் பொம்மை வெளிக் கிராமம் ஒரு மாதிரிக் கிராமமாக மாற எமக்கு நிறைய உதவிகள் நிறுவனங்களிடம் கோருகின்றோம்.

நிறுவனங்களிடம் நாம் பாரிய உதவியை எதிர் பார்த்து நிற்கின்றோம். ஒரு மாதிரிக்கிராமம் என்கின்றபோது குடிநீர் வசதி, மின்சார வசதி, போக்குவரத்துவசதி, வைத்தியவசதி, கல்வி அபிவிருத்தி / ஊக்குவிப்பு சம்பந்தமான சில விடயங்களில் எமக்கு அத்தியவசியமானவை J/82 – J/86 வரையான கிராம அலுவலகர் பிரிவுக்குள் மக்கள் பணிமனை தனது செயற்பாடுகளை நிறுவனங்களின் உதவியுடன் செய்து வருகின்றது. இது மேலும் விஸ்திரம் அடைந்து எமது இலக்கு எட்டுவதற்கு நிறுவனங்கள் உதவவேண்டும். கூடவே இறைவனது கருணையும் அவசியம். துன்பதுயரங்களில் இருந்து முஸ்லிம் மக்கள் விடுபட வழிபிறக்க வேண்டும்.

தரவு: பி.எ.எஸ். சுபியான் மௌலவி
தகவல்: நிர்வாகி
*யாழ். மக்கள் பணிமனை,*
*பாத்திமா நதா மொகமட் றொசான்,*
*அப்துல்கறீம் ஹஸ்ஸான்.*

# துயரை வளர்த்தோம்!

சோ. பத்மநாதன்

பொங்கி எழுந்தது கடல்
ஓ ஓ என்ற பேரிரைச்சல்
ஆயிரம் பல்லாயிரம் அலைக்கைகளை
வானுற உயர்த்தி
ஓங்கி அடித்தது!
மரங்கள் பாறின
கட்டிடங்கள் சாய்ந்தன
வாகனங்கள்
வாயுதேவன் பிய்த்தெறிந்த
மலைச்சிகரங்களாக
சிதறின!
வள்ளங்கள் மரவட்டுக்களில் தொங்கின!
நிலம் பிளந்தது!

மனிதன் என் செய்வான்!
'அலைகடல் துரும்பு'
அர்த்தம் புரிந்துகொண்டான்
மோதிய வேகத்தில்
மனிதரை
ஆழத்துக்கு இழுத்துச் சென்றது அலை
சோளகக் காற்றுக்கு உதிரும்
மாம்பிஞ்சுகளாக
பிள்ளைகள் அள்ளுண்டு போவதைக்கண்டும்
ஏதும் செய்ய முடியாது
அரற்றும் தாயார்!
பெற்றோர் கடலில் மூழ்குவது கண்டு
பேதலிக்கும் பிள்ளைகள்

ஊழியா, பிரளயமா, யுகமுடிவா?
தமிழர் நினைவுத் திரையில் மங்கிப்போன
கடல்கோளா?
உறைந்து போனோம் நாம்
அதிர்ந்து போனது உலகம்!

'வாயடைத்துப் போனோம்
வாராதாம் ஒரு சொல்லும்!'

மரத்தால் விழுந்தவனை
ஏன்மிதித்தது மாடு?
வெந்த புண்ணில்



ஏன் பாய்ந்தது வேல்?
'விதியே விதியே தமிழ்ச் சாதியை
என்செயக் கருதி இருக்கின்றாயடா'!
மகாகவி கேட்டதை மறுமுறை கேட்பேன்.

தூரதேசத்துத் தொலைபேசி அழைப்புக்கள்
'ஆரார் இறந்தார்? ஆரார் தொலைந்தார்?
பிரச்சினை ஒன்றும் உங்களுக்கில்லையே?
அப்பாடா'! என்று ஆறுதல் வார்த்தை
இதைவிட என்ன பிரச்சினை வேண்டும்?

சாம்பல் மேட்டில் நின்று நாங்கள்
இனமும் மொழியும் மதமும் பார்க்கிறோம்
செத்த பிணத்தைச் சிங்களம் தமிழ் என
முத்திரை பொறித்துப் பட்டியல் இடுகிறோம்
'நிவாரணம் கொடுப்பது நீயா நானா?
நிவாரணம் கொடுக்க நீயார்?' என்று
துடைப்பம் ஏந்தித் துரத்திச் செல்கிறோம்.
'ஒருபதினாயிரம் சனிவாய்ப்பட்டும்'
உருப்பட மாட்டோம் என
அடம்பிடிக்கிறோம்.

மரகதத் தீவு மயானமாய்ப் போனது
திருமுகம் சிதைந்து நம் தாய்கிடக்கின்றாள்
அவளை அணைக்கோம், ஆறுதல்
சொல்லோம்
துயரை வளர்த்தோம், துயரை வளர்த்தோம்!

நன்றி: தாயகம்
*ஜனவரி - மார்ச், 2005*

---

# பாதை தலையங்கம்

ஆபத்தில் அறியலாம் அயலவனையும், நண்பனையும் என இந்தக் காலங்கள் எமக்குப் பல படிப்பினைகளைத் தந்துள்ளது. 'சுனாமி' என்னும் இராட்சத கடற்கோள் பேரலையின் அகோரத் தாண்டவத்தை அன்புக் கரங்களால் அடக்கிய நல்லுறவு பணிகளில் பல சீமோன்கள் தோன்றினார்கள்.

இன, மத, நாடு கடந்து பெருமனங்கொண்ட மனிதம் காத்த புனிதப் பணிகளில் பல சீமோன்கள் துன்பச் சிலுவையை துணையாய் கரம் கொடுத்து தூக்கிச் சுமந்து காத்தது இந்த மண்ணில் நடந்தது.

அவலச் சிலுவையை தன் தோளிற் சுமந்த சீமோன்களை நேரிற் கண்டோம் என துன்புறும் வேளையிலும் இறைவனுக்கு நன்றி சொன்ன மனங்கள் மத்தியில் மனிதம் வாழ்கிறது.

சிலுவையின் பாதைப் பயணங்கள் இன்றும் தொடர்கிறது. கரடுமுரடான பாதையில் சாட்சியம் பகரும் சீமோன்களும் எம்முள் தோன்றிச் செல்வதே இன்றைய சிலுவையின் பாதையின் சிந்தனைகளாகின.

மத்தேயு 24ஆம் அதிகாரத்தை மீண்டும் மீண்டும் மீட்டுப் பாருங்கள் நற்செய்தி வார்த்தைகள் பல அர்த்தங்கள் கூறும். இவை சாத்திரங்கள் அல்ல சரித்திரங்கள் பலவற்றை முன்கூட்டியே சொல்லிவைத்த இறை வார்த்தை வடிவங்கள். சிலுவையின் பாதையை சிந்திக்கும் இந்தக் காலத்தில் இறை வார்த்தைகள் ஒவ்வொன்றும் எம் வாழ்வில் வெளிப்பட துன்பக்கலத்தை சுமக்கும் மனிதர்முன் நீங்கள் யூதாசா? சீமோனா?

## சிலுவைகள் சுமக்கும் சீமோன்கள்

ஆழிப்பேரலையை விட அல்லலுறுவோர் பேரால் சுரண்டுவோரும், சுயநலத்திற்காக தவறுகளைக் கண்டு ஒதுங்கி வாழுவோரும் இன்றைய யூதாசுகளே.

துன்புறுவோருக்காய் துயரத்தில் பங்காளராய் துடித்துப் பணி செய்வோரும் உடனிருந்து ஆறுதல் சொல்வோரும் மறு வாழ்வு நம்பிக்கையூட்டுவோரும் இன்றைய சீமோன்களே!


சிலுவையின் பயணத்தில் மனிதம் புனிதமடைய இறைவனின் சிலுவையின் பாதையில் துன்பச் சிலுவைகள் சுமக்கும் சீமோன்களே இன்றைய தேவை.

சகலதும் களையப்பட்டு, காயப்பட்டு இறைவனின் திருமேனியின் சிலுவை மரணம் தான் மனித வாழ்வின் உயிர்ப்புக்கு விலையானது.

எம் வாழ்விலும் சுரண்டலும், சுயநலமும் இறந்தாலே இறைவனோடு புதுவாழ்வால் உயிர்க்கமுடியும் உயிர்ப்புடன் வாழ வாழ்த்துக்கள்.

பாதை, ஆசிரியர் குழு
*மாசி - பங்குனி, 2005*

## மாறாத நினைவுகள்...



தொண்டுப் பணிகளில் சமய நிறுவனங்கள் (சிறிய அளவில்) தமது ஆன்மீக விழுமியங்களின் கருத்துக்கமைய செயற்பட்டு வந்தபோதும் பெரும் போரும் சுனாமியும் காரணமாக உடனடியான பாரிய பணிகளில் ஈடுபடவேண்டிய அவசிய நிலை ஏற்பட்டது. இப்பணிகளுக்கு முகம் கொடுக்க முன்வந்த சர்வதேச தேசியத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து தனித்துவமாகச் செயற்பட்ட யாழ் கிறிஸ்தவ ஒன்றியம், ஓர் ஆண்டை மன நிறைவுடன் பூர்த்தி செய்கின்றது. எமது நாட்டில் எந்த அனர்த்தங்களிலும் உடன் பணியாற்ற அரச சார்பற்ற நிறுவனங்களே முன்வருவதும் மக்கள் அவர்களிடமிருந்து அப்பணியை எதிர்பார்ப்பதும் காலம் அறிந்த செயல்களே. அவற்றுக்கான திட்டமிடல், மூலவளம், மனிதவளம், போக்குவரத்து, நிர்வாகக் கட்டமைப்பு போன்ற வளங்கள் அவர்களிடம் இருந்தபோதும் நம் நாட்டில் ஏற்பட்ட போரும் சுனாமி அனர்த்தங்களும் தொடரானதாக இருந்ததினால் தொண்டு நிறுவனங்களுக்கும், சமய, சமூக தொண்டு நிறுவனங்களுக்கும் இப்பணியில் இருந்த அனுபவத்தினால் யாவருக்கும் முகம் கொடுக்க உதவியது.

இவை மிகப் பாரிய அளவில் எமது சக்திக்கு அப்பாற்பட்ட அளவு உயிர், உடைமை அழிவுகளுக்கு முகம் கொடுக்க சுனாமிப்பேரழிவு பெரும் சவாலாய் இருந்தமையை யாம் அறிவோம்.

இச்சவால்களுக்கு சமய போதனைகள் மட்டுமல்லாமல் இறை வார்த்தைகளை வாழ்வால் வெளிப்படும் சந்தர்ப்பமாக ஏற்றுக்கொண்ட பெருமனம் கொண்டோரின் பொருளாதார உதவிகளையும் தேசிய கிறிஸ்தவ ஒன்றியத்தின் உதவிகளையும் நம்பிக்கையுடன் பகிர்ந்துகொள்ள யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்துக்கு இவ்வுதவிகள் மூலம் இச்செயற்பாட்டை விஸ்தரிக்கவும் அவர்களின் எதிர்பார்ப்பை பல்வேறு பணித்தளங்களிலும்நின்று செயற்பட வழி அமைத்தது.

இதற்கு முகம் கொடுப்பது சாதாரண விடயம் அல்ல என்பதை அறிந்தபோதும் இதுவே இறைவார்த்தைக்கு ஏற்றபணி என செயற்பட யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் நிர்வாகம் முன்நின்று உழைத்தமையால் மிகச் சிறிய வளங்களுடன் எம்மால் முடிந்தளவு செயற்பட முடிந்தமை எமக்கு இறைவன் அருளிய சக்தியும் சந்தர்ப்பமுமாக இதனைக் கருதலாம்.

பசியாய் இருந்தேன், தாகமாய் இருந்தேன், ஆடையின்றி இருந்தேன், நோயுற்று இருந்தேன், இல்லிடமற்று இருந்தேன், உழைப்பற்று இருக்கிறேன் என்ற குரலொலி மக்களிடமிருந்து எழும்போது அதை இறைவனின் வார்த்தை அழைப்பாக ஏற்று செயற்படுவதில் எமது நிறுவன பணியாளர்கள் தம்மை முழுமையாக மக்களோடு மக்களாக இணைந்து, அம்மக்களுடன் செயற்பட்டதை களத்தில் காணமுடிந்தது. ஊதியம் என்பதைவிட ஊழியம் என்ற உணர்வில் மதம் கடந்து அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட பணிகளே எமக்குச் சான்றாக அமைகின்றது.

## எதிர்கொண்ட சவால்களும் கிட்டிய இலக்குகளும்

இப்பணிகளால் மக்களிடம் யாழ் கிறிஸ்தவ ஒன்றிய நல்லுறவும் நற்பணிகளும் சிறக்க மக்கள் பங்களிப்பு மகத்தானதாய் அமைந்தது. இதனால் நிறுவனங்களின் நிவாரணங்களை பெறும் மக்களாக அல்லாமல் சமூக, நிர்வாக தலைமையை ஏற்கும் மக்களை உருவாக்க பல்வேறு பயிற்சிப்பட்டறைகள், கல்விப்பணிகள் போன்றவையும் ஊக்குவிக்கப்பட்டன. இதனால் உரிய நம்பிக்கையுடன் வாழ்வுக்கு மக்களை வழி நடாத்தவும், ஒன்றிணைந்து செயற்படவும் எமது பணிகள் பேருதவியாய் அமைந்தன.

இப்பணிகளைத் தனியாக, அமைப்பாக, குழுவாக செயற்பட தூண்டிய சிந்தனைகளை நிர்வாகிகளும் பணியாளர்களும், தலைவர்களும் விஷேடமாக நம்முடன் பணியாற்றிய பங்குத் தந்தையர்களும், பயனாளியான மக்களும் கரம் கோர்த்து நிறைவேற்றிய எமது நிர்வாகப் பணிகளை மீட்டுப் பார்த்து பதிவுகளாக மலரும் இம்மலர் மூலம் யாவர்க்கும் நன்றி பகிர்வதுடன் இவற்றைப் பதிவாக்கும் சகல உள்ளங்களுக்கும் எமது நன்றியைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

**எ. என். சின்னத்துரை**
*திட்டமிடல் முகாமையாளர்*



## பொருளாளரின் உள்ளத்திலிருந்து...

"இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவது எத்துணை மகிழ்ச்சியும் இன்பமுமாயிருக்கின்றது"

என்ற வார்த்தையின் படியே யாழ் கிறிஸ்தவ ஒன்றியம் பல ஆண்டுகளாய் இதனை அனுபவித்தபடி வளர்கிறது. நூறாவது வருடத்தை கிட்டிய நிலையில் யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் கர்த்தரின் பிள்ளைகளது ஒன்றுகூடலில் பெரும் நாட்டமும் சமூகக் கரிசனையில் தன்னை ஈடுபடுத்தி ஒரு சமநிலைப் போக்குடன் செயற்பட இடம் கொடுத்துள்ளது. எப்படித்தான் சூழ்நிலைகளும், மக்கள்கூட மாறினாலும் ஒன்றியமானது அதனது இலக்கான 'ஐக்கியம்' என்பதிலிருந்து விலாகாது செயற்பட்டமையானது கர்த்தரின் பெலமேயன்றி வேறல்ல. மேலும் பலரை தலைமைத்துவ வழிகாட்டுதலுக்கு இடம் அமைத்ததும் இவ்வொன்றியம்தான்.

தொடர்ந்தும் யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் தனது இலக்கை அடையவும், தொடர்ந்தும் பாடுபடவும் கர்த்தரிடம் தாங்குவோம்.

**ஆர். கரிகரன்**
*பொருளாளர்,*
*யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்.*

# சாபமா? பாடமா?...

'சுனாமி' – இந்த வார்த்தையை இன்னும் சில ஆண்டுகள் வரை நாம் மறக்க மாட்டோம்.

ஓசைப்படாமல் கடற்கரைக்கு வந்து, கரையில் ஏறியவுடன் ஏதோ பல்லாயிரம் 'டைனோசர்கள்' ஒன்றாய் வந்தது போல, தன் கொடூர அலை கரங்களை நீட்டி, கண்ணில் பட்ட பல ஆயிரம் பேரையும் வாரிச் சுருட்டிக் கொண்டு சில நிமிடங்களில் ஓசைப்படாமல், ஒன்றுமே நடக்காதது போல கடலுக்குள் சென்று மறைந்தும் விட்டது.

படித்தவர்களுக்கே இன்னும் புரியவில்லை, என்னதான் நடந்தது என்று விளங்கவில்லை. படிக்காத மீனவர்களுக்கோ, இது சாபமா? பாடமா? தீவினை விளைவா? என்று அறியா, புரியா குழப்பங்கள்.

கடலை கடவுளாக வழிபட்ட அவர்களுக்கு அதற்கு மேல் சிந்திக்கத் தெரியவில்லை. 'சுனாமி' – என்பது என்ன? எப்படி வந்தது? அதுவும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் வந்தது எப்படி? இனியும் வருமா? இது கிரகங்களின் கோளாறா? பூமி இடம் பெயர்வதன் சிறு அதிர்வா? இதன் உண்மையான கோரமுகம் என்ன? பூகம்பத்தின் தங்கையா? எரிமலையின் தம்பியா? கடல் தாயின் கொடூரமகனா? இதென்ன 'தாதா' அலையா? ஆர்ப்பரித்து குழந்தைகள் விளையாட இத்தனை ஆண்டுகள் அனுமதித்து விட்டு, இன்று அவ்வளவு பிஞ்சுகளையும் விழுங்கிவிட்ட அனகொண்டாவா?


✸ எல்லாமே அதீத பயம் கலந்த புதிராகத் தான் இருக்கிறது, பொதுவாக பார்ப்பவர்களுக்கு.

✸ இது கடலாழத்தில் ஏற்படும் பூகம்பம், பேரலை, இராட்சத அலை என்று மட்டும் தெரிகிறது புவியியல் பேராசிரியர்களுக்கு.

✸ இயற்கை சீற்றம் என்றால் புயல், வரட்சி மட்டும் என்று கருதின அரசுகள்.

✸ கடலில் காற்று வாங்கவும் பயம் வந்து விட்டது அரசியல்வாதிகளுக்கு.

இதோ சுனாமி பற்றி இதுவரை தெரியாத விபரங்களை இங்கே தொகுத்துக் தருகிறோம். உங்கள் மனதில் எழும் கேள்விகளுக்குப் பதில்களாய். இவையாவும் சர்வதேச அளவில் உள்ள நியூயோர்க் ரைம்ஸ், ரைம்ஸ், ஹெரால்ட் ட்ரிபியூன்ஸ்,. வாஷிங்கன் டைம்ஸ் போன்ற பத்திரிகைகளில் இருந்தும், ஐ.நா.வின் சுகாதார அமைப்புகள், சுனாமி ஆராய்ச்சி அமைப்புகள், அமெரிக்க சுனாமி அனர்த்த நிலையம், உலக சுகாதார அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகளின் அறிக்கைகளில் இருந்தும் தொகுக்கப்பட்டவை. இதோ படியுங்கள்;



சூறாவளி, புயல் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம் அதென்ன சுனாமி?

இது ஜப்பானிய மொழி வார்த்தை சு + னாமி தான் 'சுனாமி'. சு என்றால் துறைமுகம், னாமி என்றால் பேரலை என்று பெயர். சுனாமி என்பது துறைமுக அலை. சில நிமிடங்கள் முதல் சில நாட்கள் வரை கூட, அதுவும் பல்லாயிரக்கணக்கான ராட்சத அலைகளை உருவாக்கக் கூடியதுதான் சுனாமி.



***புயல், சூறாவளியின்போது கடல் கொந்தளிப்பதற்கும், சுனாமிக்கும் தொடர்பில்லையா?***

தொடர்பில்லை. இது நன்றாக வெயில் காய்ந்து கொண்டிருக்கும் போது கூட ஏற்படும். பூகம்பம் எப்போது ஏற்படுகிறதோ, அப்போது ஏற்படவாய்ப்புண்டு.

***துறைமுக அலை என்றால் துறைமுகத்தில் மட்டுமேதான் அடிக்குமா?***

உண்மையில் துறைமுகம் என்றால், கப்பல்கள் நிற்பதற்கேற்ப ஓரளவு ஆழம் உள்ள கடல்பகுதி. அது கரையை ஒட்டி இருக்கும். பொதுவாக, அதைத்தான் துறைமுகம் என்பர். கடலாழத்தில் இந்த சுனாமி அலை ஏற்படுகிறது என்றாலும், துறைமுகத்திற்கு வந்தவுடன் தான் வீறு கொண்டு எழும். அதனால்தான் துறைமுக அலை என்று பெயர். இது கரையை ஒட்டிய எந்தக் கடல் பகுதியையும் தாக்கும்.

***சுனாமி எப்படி உருவாகிறது?***

பூகம்பத்தால் ஏற்படுகிறது. அதாவது, பூகம்பம் என்பது நிலப்பகுதியில், கடல் பகுதியில், மலைப்பகுதியில் ஏற்படும். நிலப்பகுதியில் வந்தால் நிலத்தில் உள்ளவை அதிர்ந்து சேதமாகிறது. கடலில் வந்தால் கடலின் ஆழ்பகுதி பாதிக்கப்படுகிறது. மலையில் வந்தால், மலையில் எரிமலையாக உருவெடுக்கிறது.

***அப்படியானால் கடல் ஆழப்பகுதியில் உண்டானதா பூகம்பம்? அதனால்தான் சுனாமி பயங்கரம் ஏற்பட்டதா?***

கடலின் ஆழத்தில் பூகம்பம் ஏற்பட்டிருக்குமானால், இன்னும் கூடசேதம் அதிகமாக இருந்திருக்கும். பூகம்பம் என்பது பொதுவானது. நில, நீர்ப்பகுதிகளை தாங்கும் 'தகடுகளில்' ஏற்படும் லேசான அதிர்வுகள், இடம் பெயர்வதால் ஏற்படுவது. நிலத்தில் ஏற்பட்டாலும், மலையில் ஏற்பட்டாலும், கடலில் ஏற்பட்டாலும் பூகம்பத்தின் விளைவுகள் மற்றவற்றில் ஏற்படவாய்ப்புண்டு. நிலத்தில் ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவு, கடலாழத்தில் சுனாமியை ஏற்படுத்த வாய்ப்புண்டு. தற்போது நடந்ததும் அப்படித்தான்.

***எப்படியெல்லாம் வரும் சுனாமி?***

- கடலாழத்தில் ஏற்படும் எந்தப் பாதிப்பின் போதும் வரும்.
- கடலாழ பூகம்பத்தால் வரும்.
- கடலை ஒட்டிய நிலப்பகுதியில் ஏற்படும் பூகம்பத்தால் வரும்.
- மலையில் எரிமலை உண்டாகி, அதனால் வரும்.
- வானில் கிரகங்களின் செயல்பாடுகள் மாறும் போதும் ஏற்படவாய்ப்புண்டு. (இது இன்னும் உறுதிப்படுத்தப் படவில்லை.)
- கடலில் பௌதிக மாற்றங்கள் ஏற்பட்டாலும் வரும்.

***அதென்ன தகடுகள்? அதனால் எப்படி பூகம்பம் ஏற்படுகிறது?***

பல லட்சம் ஆண்டுகளுக்கு முன் ஒரே தகடு தான் இருந்தது. அதன் மீதுதான் பூமி இருந்தது. ஆனால், கண்டங்களாகப் பிரிய, பிரிய, அதன் தட்ப, வெப்ப, இயற்கைச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பல்வேறு தகடுகள் உருவாகின. இந்தத் தகடுகள் மீதுதான் ஒவ்வொரு கண்டமும் இருக்கின்றன. நிலம், கடல் எல்லாவற்றையும் தாங்கி நிற்பது இந்த தகடுகள்தான். இதைத்தான் 'ரெக்ரானிக் பிளேற்கள்' என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

***இந்த தகடுகள் உராய்ந்ததால் தான் இப்போது பூகம்பம் ஏற்பட்டதா? அதனால் சுனாமி ஏற்பட்டதா?***

ஆம். இரண்டுமே உண்மைதான். யுரேஷியன் தகடுகள், அவுஸ்திரேலியன் தகடுகள் இரண்டும் இந்தோனேசியாவின் வடக்கே சுமாத்ராதீவில் மோதின. அதனால், பூகம்பம் ஏற்பட்டது. அதன் அலைகள் தான் இந்துமாக் கடலில் சுனாமியை ஏற்படுத்தியது.

***அதெப்படி பூகம்ப அதிர்வு கடலைதாக்கி, சுனாமியை ஏற்படுத்தும்? இதுவரை பூகம்பம் வந்தபோது அப்படி இல்லையே?***

புவியியல் படி பார்த்தால், இதுவும் சாத்தியம்தான். எல்லாப் பூகம்பங்களும் இப்படி ஏற்படுத்தாது. கடலையொட்டி உள்ள நாடுகளில் பூகம்பம் ஏற்படும் போது, அதன் விளைவு சில சமயம், அதன் ரிச்டர் அளவை பொறுத்து சுனாமியை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. அப்படித்தான் சுமாத்ராதீவில் ஏற்பட்ட பயங்கர பூகம்பம், நிலத்திலும் கடலிலும் பயங்கரத்தை ஏற்படுத்தியுள்ளது.

***பூகம்ப அதிர்வு எப்படியெல்லாம் பாதிப்பைத்தரும்?***

பூகம்ப அதிர்வுகள் இரண்டு வகைப்பட்டது. அதாவது பூமிக்கடியில் தகடுகள் உராய்ந்து உருவாகும் பூகம்பம் ஏற்பட்டவுடன், அதன் அதிர்வுகள் இரண்டாகப் பிரிகின்றன. நிலத்தின் அதன் அதிர்வுகள் பரவி, கட்டடங்கள் உட்பட எல்லாவற்றையும் சேதப்படுத்துகிறது. கடலில் அதன் அதிர்வுகள் ஏற்படும்போது, அது எல்லாநேரமும் ஆபத்தை ஏற்படுத்துவதில்லை. சில சமயம்தான் ஏற்படுத்தும்.

***சுனாமி என்பது அடிக்கடி வருமா?***

சுனாமி என்பது ஏதோ பேரழிவுக்கான பெயர் அல்ல. அது கடலில் ஏற்படும் அசாதாரண அலை, பேரலை, ராட்சத அலை. அது அடிக்கடி கடலாழத்தில் கரைக்கு வெகு தொலைவில் நடுக்கடலில் ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கும். கரையில் பேரழிவை ஏற்படுத்தும் சுனாமி எப்போதோ சில சமயம் தான் வரும். அப்படி வரும்போது கடல் எல்லைகளை, கடல் கரைகளை மாற்றியமைத்து சென்றுவிடும். சில சமயம், பூமி ஓட்டத்தைகூட வெகுலேசாகப் பாதிக்கும்.

***சுனாமிகளில் எத்தனை வகை உண்டு?***

சுனாமிகளில் இரு வகைதான். ஒன்று, கடலின் மிக ஆழத்தில் இருந்து உருவாவது. இன்னொன்று, உள்ளூர் கடலில் ஏற்படுவது. இரண்டுமே, பூகம்பத்தின் தொடர்ச்சியாகவோ, திடீர் என்று தானாகவோவர வாய்ப்புண்டு.

***சுனாமியை ஏன் முன்னறிய முடியாது. வழியில்லையா?***

வழியுண்டு. அமெரிக்காபோன்ற நாடுகள் இன்னமும் வானிலைபோல சுனாமி எச்சரிக்கை அறிக்கை விடுகின்றன. தினமும் அங்குள்ளவர்கள் காலை, மாலை என்று எந்நேரமும் சுனாமி எச்சரிக்கை கேட்டுவிட்டுத் தான் தூங்குவர்.

***அப்படி இருக்கும்போது 'கறுப்பு ஞாயிறு' சுனாமி பற்றி ஏன் தெரியவில்லை?***

பொதுவாக பசுபிக் கடலில்தான் சுனாமி ஏற்படும். இந்துமா கடலில் ஏற்படுவது இதுவே முதன் முறை.

***இந்துமா கடலில் எப்படி வந்தது சுனாமி?***

பசுபிக் கடலை ஒட்டிய நாடுகளை 'ரிங் ஒவ் பயர்' என்று சொல்வர். அதாவது, அமெரிக்காவின் வடபகுதிகள், ஜப்பான், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, நிக்ரகுவா, ரஷ்சியா, சிலி, பிலிப்பைன்ஸ், மெக்ஸிகோ, பெரு, துருக்கி, பப்புவாகினியா, நியூசிலாந்து, சமோவா ஆகியவற்றில் அடிக்கடி கடந்த பல ஆண்டுகளாக எரிமலை, சுனாமி, பூகம்பங்கள் என்று ஏற்படுவதுண்டு. அதனால் 'ரிங் ஒப் பயர்' நாடுகள் என்று பசுபிக் கடலை ஒட்டிய நாடுகளுக்குப் பெயர். இந்துமா கடலில் இதையொட்டி இந்தோனேசியா உள்ளது. அங்கு எற்பட்டதால், அது இந்துமா கடலில் சுனாமியை ஏற்படுத்தியிருக்கிறது.

***சரி, சுனாமி, எப்படி இத்தனை ஆயிரம் கிலோமீற்றர் பயணம் செய்து வந்து தாக்கியது?***

சுமாத்ராவில் கறுப்பு ஞாயிறன்று ஏற்பட்ட பூகம்பத்தின் அளவு 8.9ரிச்டர். இது மிகப் பயங்கரமானது. இது ஒரு பக்கம் சுமாத்ரா நிலப் பகுதிகளைத் தாக்கி கட்டடங்களை, மனிதர்களை அழித்தது. இன்னொரு பக்கம், இந்துமா கடலில் அதிர்வுகளை ஏற்படுத்தி ஆழ்கடலில் சுனாமியை ஏற்படுத்தியது. அப்படி உருவான சுனாமி அலைகள் தான் 02, அதன் பின்னர் தொடர்ந்து 1999ஆம் ஆண்டு வரைகூட சுனாமி தாக்குதல் நடந்துள்ளது. ஆனால், 1964ஆம் ஆண்டுதான் கடைசியாக அலாஸ்கா வளைகுடாவில் மிகப் பயங்கர சுனாமி ஏற்பட்டது. அதன் விளைவாக, அலாஸ்கா, வன்கூவர் தீவு (பிரிட்டிஷ் கொலம்பியா), அமெரிக்காவில் கலிபோர்னியா, ஹவாய் பகுதிகளைத் தாக்கியது. ஆனால், உயிர்ச்சேதம் 120 பேர்தான்.

***பாறை சரிவு, அணுகுண்டு சோதனை, கடலில் சரிவு போன்றவற்றால் சுனாமி வருமா?***

ஆழ்கடலில் எந்தப் பாதிப்பு வந்தாலும், சுனாமி வரும். அதன் வீரியம் தான் வேறுபடும். ஆழ்கடல் தண்ணீரை கலக்கி, இடைஞ்சல் ஏற்படும்போது, அது அழுத்தம் தாங்காமல் பொங்குகிறது. அதன் விளைவுதான் சுனாமி. அது பௌதீக மாற்றங்களாலும், புவியியல் மாற்றங்களாலும், வரலாம்.

***எரிகல் மூலமும் சுனாமி ஏற்படுமா?***

வானில் இருந்து விழும் எரிகற்கள் எல்லாம் புவி ஈர்ப்பு பகுதிக்கு வரும்போது, எரிந்து தூள்களாக ஆகிவிடுகின்றன. அதனால், கடலில் விழுவது அரிது. சில சமயம், அப்படி விழும்போது பெரிய அளவில் கடல் ஆழ்ப்பகுதி பாதிக்கப்பட்டால், சுனாமி அலை பொங்கும் ஆபத்து உண்டு.

***சுனாமி வேகம் எல்லாமே மணிக்கு 800 கிலோமீற்றர் தானா?***

அப்படியில்லை. உள்ளூர் சுனாமி என்றால், அதன் வேகம் குறைவாகத்தான் இருக்கும். ஆழ்கடல் சுனாமி என்றால், அது பல்லாயிரம் கிலோமீற்றர் தாண்டியும் தாக்கும். அப்படி வரும்போது அதன் வேகம் மணிக்கு 800 கிலோமீற்றராக இருக்கும்.

***எப்படி இவ்வளவு ஆயிரம் கிலோமீற்றரை சில மணி நேரத்தில் தாண்டி விடுகிறது சுனாமி அலை?***


சுனாமி பேரலை, ஆழ்கடலில் ஏற்படும் போது, அதன் வேகம் அதிகமாக, அதன் உயரம் குறைவாக இருக்கும். அதாவது, வேகம் ஜெற்விமானம் போல மணிக்கு 800 கிலோ மீற்றர் வேகமும், உயரம் ஓரடி முதல் எட்டடிவரை தான் இருக்கும். ஆனால், பல மணி நேரம், பல நாட்கள் பயணம் செய்துவந்து கரையைத் தொடும்போது அதன் வேகம் குறைந்தாலும், உயரம் அதிகமாக இருக்கும். இப்படி உயரத்திற்கு எழும்பி பாய்வதால் கரையைத் தாக்கும்போது சக்தி அதிகமாகி விடுகிறது. கரையை நெருங்கும்போது சுனாமி அலைவேகம் 45 கிலோமீற்றர் வேகம்தான் இருக்கும். உயரம் நூறடியைக் கூடத்தாண்டும். அலை ஒன்றும் நீங்கள் பார்ப்பது போல இருக்காது. ஒவ்வொன்றும் பல கிலோமீற்றர் நீளம் இருக்கும். சில மணி நேரங்களில் கரையைத் தாக்கும்.

***ஆழ்கடலில் எழும் போதே தெரியாதா? செயற்கைக்கோள் மூலமும் தெரியதா?***

இது சாத்தியமில்லை. ஆழ்கடலில் சுனாமி அலை என்பதே தெரியாத அளவுக்கு மிக வேகத்தில் மற்ற அலைகளைப் போல உள்ளுக்குள்ளேயே பயணம் செய்யும். கரையை ஒட்டி வரும்போது, அது உயரத்தைப் பார்த்துதான் கண்டுபிடிக்க முடியும். சாதாரண அலையைப் போல் பல மடங்கு உயரமும், சத்தமும் கொண்டிருக்கும். எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து விடும். செயற்கைக் கோளில் சில சமிக்ஞைகள் வேண்டுமானால் தெரியலாம். அது பற்றி ஆராய்ச்சி நடக்கிறது.

***இலங்கை மற்றும் தமிழக கடலோரப் பகுதிகளைத் தாக்கிய சுனாமி, ஜெட்வேகத்தில் வந்தது உண்மையா?***

உண்மைதான். பசுபிக் கடல் ஆழம் 14 ஆயிரம் அடி. 1960ஆம்



ஆண்டு ஏற்பட்ட சுனாமி அலை, 16,800 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஜப்பானை 24 மணிநேரத்தில் கடந்து தாக்கியது. அப்படியானால், 2ஆயிரம் கிலோமீற்றர் தூரத்தில் இருந்த இலங்கைக் கரையோரத்தை எத்தனை மணிநேர இடைவெளியில் தாக்கியிருக்கும் என்று பாருங்கள். சில மணிநேரமே போதும் சுனாமிக்கு பல ஆயிரம் கி.மீ.தூரம் கடக்க.

*வானில் இருந்து கூட சுனாமி அலையைப் பார்க்க முடியாதா?*


பார்க்கவே முடியாது. ஆழ்கடலில் கிளம்பும்போது அதன் உயரம் ஒரு அடி கூட இருக்காது. 1896ஆம் ஆண்டு ஜப்பானை ஒட்டிய கடலில் 'சன்ரிகு' கடலில் பல மீனவர்கள் படகில் சென்றுள்ளனர். ஆனால், அந்த நேரத்தில் அவர்கள் பார்த்தது அதிகபட்சம் 45 சென்ரிமீற்றர் உயர அலைகள்தான். அதே சமயத்தில், ஹோன்சூ கடற்கரையைத் தாக்கியபோது, அதன் உயரம் 50அடி உயரத்துக்கு கிளம்பி, அந்த துறைமுகம், 275 கிலோமீற்றர் நீளத்தில் உள்ள கரையோர கிராமங்களை சுனாமி அழித்துவிட்டு சென்றுவிட்டது என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

*சுனாமி அலையில் அடித்து வந்தது எல்லாம் சாக்கடை நீர்போல கறுப்பாக உள்ளதே?*

ஆழ்கடலில் கிளம்பி, அதன் வேகத்தில் வரும் வழியில் உள்ள எல்லாவற்றையும் அள்ளி, குழப்பி எடுத்து வரும்: கரையில் அவ்வளவையும் கொட்டி கரையில் உள்ள படகுகள், மனிதர்கள், கட்டடங்கள், கார்கள் உட்படவாகனங்கள், பொருட்கள் என்று எல்லாவற்றையும் அள்ளிச் சென்றுவிடும். மனித உடல்களை ஆங்காங்கு தண்ணீர் வேகத்துக்கு ஏற்ப புதைத்துவிட்டும் செல்லும்.

*அடிக்கடி சுனாமி வரும் என்று பயமுறுத்துகின்றனரே?*

நாம் எவற்றிலும் சரியான கவனம் செலுத்துவதில்லை. காரணம், நம் அலைச்சல், டென்ஷன் தான். பொதுவாகவே வானிலை அறிக்கையை பார்த்துக்கூட சிலர் தைரியமாக வெளியேபோய் சிக்கிக்கொள்வர். பூகம்பம் போலத்தான் சுனாமி. பூகம்பம் ரிச்டர் அளவு பொறுத்துத்தான் சேதத்தை ஏற்படுத்தும். அதுபோலத்தான் சுனாமியும் அடிக்கடி தோன்றாது. சிறுசிறு அளவில் தோன்றலாம். அதற்குக் கூட வாய்ப்பில்லை. ஆனாலும் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதுதான் முக்கியம்.



*அப்படியானால் எப்படித்தான் பாதுகாத்துக் கொள்வது?*

அமெரிக்காவிலும் சரி மற்ற சுனாமி ஆபத்து நாடுகளிலும் சரி, சுனாமி எச்சரிக்கை மையம் உள்ளது. தினமும் சுனாமி பற்றி எச்சரிக்கைத் தகவல் அளிக்கும். மேலும் சுனாமி தாக்குதல் ஏற்படலாம் என்ற பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

*எமது கடற்கரை பலநூறு கிலோமீற்றர் தூரம் உள்ளது. அவ்வளவு தூரமும் கரையோரக் கிராமங்களைப் பாதுகாக்க முடியுமா?*

அப்படியொரு கட்டாயம் வந்துவிட்டது. அரசுதான் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். மீனவர்களுக்கு பாதுகாப்பான கட்டடங்கள் கட்டிக் கொடுக்கவேண்டும்.

*கட்டடம் கட்டிக் கொடுத்தால் பாதுகாப்பு ஆகிவிடுமா? இந்தோனேசியா, இலங்கையில் கட்டடங்களே நாசமாகி விட்டனவே?*

வலுவான கட்டடங்கள் தான் முதல்தேவை. மிகவும் வலுவான மாடிக்கட்டடங்கள் கட்டி மீனவர்களை குடியிருக்க வைக்கலாம். இப்போது பாதுகாப்பின்றி வாழ்ந்தவர்கள் தான் பாதிக்கப்பட்டுள்ளனர்.

*கரையோரங்களில் எப்படிப் பாதுகாப்பு வழங்கமுடியும்?*

மீனவர்களுக்கான வீடுகள் பற்றி இதுவரை பெரிதாகச் சிந்திக்கவில்லை. புயல், வெள்ளம், கடல் கொந்தளிப்பு போல் அல்ல சுனாமி. அதனால், நாம் கடலோரப் பகுதிகளில் கடலோரக் கிராமங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பது முக்கியம்.

*சுனாமி என்பது சாபமா? படமா? தீவினைப் பலனா?*

மூன்றுமே இல்லை. எதிர்பாராத இயற்கைச் சீற்றங்களில் இது எமக்கு முதல்பாடம். இனியாவது விழித்துக்கொள்வது நல்லது. இயற்கையின் இயல்புகளில், செயற்கையான விடயங்களால் ஏற்படும் விளைவுகளால் மாற்றங்கள் நிலவ வாய்ப்புண்டு. ஆனால், சுனாமி என்பது பல நூற்றாண்டுகளாகவே உள்ளது. அமெரிக்காபோன்ற நாடுகளில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து நாம் செயல்படலாம். இயற்கை நிலைகளில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள நாம் தான் வழிகளைத் தேடவேண்டும்.

*இனி சுனாமி எப்போது வரும்?*

மனிதர்களால் ஏற்படும் சில இயற்கை மாற்றங்களால், பூமிக்கடியிலும், காடு, மலைப்பகுதிகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படும்போது தான் நில அதிர்வுகள் ஏற்படுகின்றன. பெரிய அளவில் ஏற்படும் நில அதிர்வுதான் பூகம்பம். பூகம்பத்தின் விளைவாக கடலில் ஏற்படுவது தான் சுனாமி. இதற்கு முன்பு பெரிய அளவில் சுனாமி தாக்கியது 1968இல்தான். அடுத்து இப்போதுதான். அதனால், உடனே ஏற்பட வாய்ப்பில்லை என்பது நிபுணர்களின் கருத்து.

*சுனாமியின் பாதை இதுதான்!*

'சுனாமி' இது பசுபிக் கடலில்தான் காணப்பட்டது. இதுவரை இந்துமாகடலுக்கு இது புதுவரவு. பேரழிவுக்கு காரணமான இந்த ஆழிப்பேரலை கடந்த 26ஆம் திகதி கறுப்பு ஞாயிறன்று எங்கு தொடங்கி, எப்படியெல்லாம் பரவியது? தகடுகள் உரசியது எப்படி? கடல் பொங்கியது எப்படி?

பசுபிக் கடல் பகுதி நாடுகள் 'ரிங் ஒப் பயர்' நாடுகள்

என்று அழைக்கப்படும். அதாவது, அடிக்கடி பூகம்பம், எரிமலை, சுனாமி ஏற்படும் நாடுகள். அதை ஒட்டித்தான் இந்தோனேசியா உள்ளது. அதன் அருகே சுமாத்ராவில்தான் பூகம்பம் உருக்கொண்டது முதலில். இந்தோனேசியா நாடு என்பது யுரேஷிய தகடு, அவுஸ்திரேலிய தகடு சேரும் இடத்தில் அதாவது எல்லையிலுள்ளது. இந்த இரண்டு தகடுகளும் மோதியதால்தான் பூகம்பம் ஏற்பட்டது. பக்கத்தில் இருப்பவை பிலிப்பைன்ஸ், பசுபிக் தகடுகள், பூகம்பம் ஏற்பட்டவுடன், அதன் அதிர்வுகள், இந்து மாகடலில் பரவியது. ஆழ்கடலில் சுனாமிப் பேரலை உருவாகி, கடற்கரைகளை நோக்கி பயணிக்கிறது. கரையை அடைந்ததும், இராட்சத அலைகளாக உருமாறி, கண்ணில் கண்டதையெல்லாம் தாக்கி, மனிதர்களையும், பொருட்களையும் கட்டடங்களையும் நாசப்படுத்தியது.

சுனாமி தாக்குதலுக்குள்ளான நாடுகள் சுனாமி – இராட்சத கடல் அலையின் அகோரத் தாக்குதலுக்கு ஆளானவை இலங்கை உட்பட ஏழு நாடுகள். இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவில் கடந்த 26ஆம் திகதி கறுப்பு ஞாயிறன்று காலை மையம் கொண்ட 8.9 ரிச்டர் அளவிலான பூகம்பத்தின் விளைவாக அதன் அதிர்வுகள், சுற்றியுள்ள கடல் பகுதிகளைத் தாக்கின. இதன் விளைவாகத்தான் சுனாமி என்ற அரிதான கடல் பேரலை உருவாகி, கடலோரத்தில் கொந்தளிப்புகளை உருவாக்கியது.

அதிர்வுகள் வட்டமிட்டு காட்டப்பட்டுள்ளன. ஒரு பக்கம் இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து நாடுகளை தாக்கிய சுனாமி, இன்னொரு பக்கம் இந்துமாகடலில் இந்தியா, இலங்கை, மாலைத்தீவு ஆகியவற்றை மட்டுமன்றி, கிழக்கு ஆபிரிக்காவில் சோமாலியாவையும் தாக்கியது. காணாமல் போனவர்களை எல்லாம் கணக்கில் கொண்டால், இறந்தவர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தைத்தொடும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

***திருந்துவோமா இனியாவது?***

இதோ சுனாமி என்பது நாம் இனி கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்தை உருவாக்கி விட்டது. போக்குவரத்து அதிகமானால்தான் நாம் வீதிகள், மேம் பாலங்கள், கூடுதல் ரயில் பாதைகள் பற்றி யோசிக்கிறோம். குடி நீர் பற்றாக்குறை 50 ஆண்டுகளாக இன்னும் தீரவில்லை. கல்வித்தாகம் இப்போதுதான் எட்டிப் பார்க்கிறது பலரிடம். எல்லாவற்றுக்கும் முட்டுக்கட்டை யார்? அரசியல்வாதிகளா? அதிகாரிகளா? எல்லாவற்றையுமே நாம் அரசியலாகப் பார்த்ததால்தான் இயற்கையைக் கண்டுகொள்ளவே இல்லை.

இதோ இயற்கையும் நமக்கு சவால் விட்டுள்ளது. நாம் இன்னும் அதனுடன் மோதப்போகிறோமா? காடு, வளங்களை அழிக்கப்போகிறோமா? நிலத்தடியில் தண்ணீரை உறுஞ்சப்போகிறோமா? அளவுக்கு மீறிப் பூமியைச் சுரண்டப் போகிறோமா? காடுகளை அழிக்கப்போகிறோமா? மலையை அரிக்கப்போகிறோமா?

மொத்தத்தில் இயற்கையுடன் விளையாடினால் இதுதான் விளைவு என்று காட்டிவிட்டது சுனாமி. இனியும் நாம் உணராவிட்டால், யாரும் பார்க்கவில்லை என்று எல்லாவற்றையும் சுரண்டி, ஆக்கிரமித்து, நியாயதர்மங்களை அழித்துவிட முற்பட்டால், இயற்கை நம்மை சும்மாவிடாது. அடுத்த கொடூரகைகளை நீட்டு முன் நாம் மாறினால் நல்லது. இல்லாவிட்டால், சுனாமி என்ன.. எதுவானாலும் வரும். □

**நன்றி: யாழ். தினக்குரல்**
*புதன் வசந்தம், 05.01.2005*



# MESSAGE

I thank God for this opportunity you had given to me to express my greetings on behalf of my Diocese. I also appreciate the work that had been carried out by J.C.U. throughout the decades. I would like to focus the activities of J.C.U. under the following captions.

## Relief and Rehabilitation:

The Relief and Rehabilitation project was started as a part of training for the Leadership Programme. Especially during the I.P.K.F. operations in 1987, the J.C.U. offered emergency relief. In the meantime, J.C.U. was very much involved in a small way in repairing and reconstructing houses and toilets among Muslim settlement.

After the Tsunami disaster, the J.C.U. got involved in a big way in the Regions of Jaffna, Mullaitivu, Vadamaradchchi and Thenmaradchchi amongst the tsunami victims.

## Leadership Training Programme:

This programme was started by the J.C.U. for the youth who had sat the G.C.E. Advanced Level examination. The selections of 10 to 15 youth are made from all parts of Sri Lanka by obtaining recommendations from their respective churches.

These are the main aspects of this training programme:

- To impart knowledge about the various churches
- To provide a basic knowledge about the Bible and Theology
- To expose these youth to various social situations
- To gather basic knowledge in various cultural development

## The Unity and Integrity of the Churches in Sri Lanka

The main thrust of forming the J.C.U. is to bring about unity among all churches and denominations that are in Sri Lanka. In order to promote harmony, J.C.U. had organized Unity Services, Seminars and rallies for children. Along with these programmes the J.C.U. organizes "The Uduvil Theological Conference" annually. The Clergies and Laities are invited from Roman Catholic Churches and from non-R.C. Churches to participate in this conference. The main purpose of holding these conferences is to form a common Theology for the Sri Lankans.

I take this opportunity to wish the J.C.U. all success and God's blessings on behalf of J.D.C.S.I. as it moves into the future.

**Rev. S.C. Arnold**
*Moderator's Commissary*
*J.D.C.S.I. Vaddukoddai*

## தொடுவானம் தலையங்கம்

# குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்

மனித சமுதாயத்தில் ஏற்படும் அனர்த்தங்கள், அவர்களது சமூகத்திலும், அல்லது தனிப்பட்ட வாழ்விலும் மறக்க முடியாத வரலாற்றை, அல்லது சோகங்களை விட்டுச் செல்வது இயல்பு. இவைகளில் சில உண்மையானவை. சில பயங்கரமானவை, சில இதயத்தை உறையச் செய்பவை. இத் தாக்கங்கள் பலருடைய வாழ்க்கையில் தடுமாற்றத்தையும், குழப்பமான சூழ்நிலையையும் தோற்றுவிக்கின்றன. 'சுனாமி' கடற்கோள் அனர்த்தம் பலரின் வாழ்வில் இந்நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது கணகூடு. இவ் அனர்த்தம் நடைபெற்ற ஆசிய நாடுகளிலிருந்து பெறப்படுகின்ற செய்திகள் மறக்க முடியாத ஆனால் சோகம் நிறைந்த வரலாற்றை விட்டுச் சென்றிருக்கின்றது.

கடந்த நாட்களில் என்னோடு உரையாடிய யேர்மனியர் ஒருவர் 'சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செய்யப்படுகின்ற உதவிகள். இழக்கப்பட்ட ஒரு தலை முறையை மீண்டும் கொண்டு வருமா? என வினா எழுப்பினார். பதில் சொல்ல முடியாத வினா! கணக்கெடுப்பின் படி சுனாமி அனர்த்தம் நடந்த 11 ஆசிய நாடுகளில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேலான அழிவுகளுக்கு குழந்தைகள் உட்பட்டிருக்கின்றார்கள் என்றும், தமிழ் நாட்டில் 40 விழுக்காடான குழந்தைகளும், இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் 50விழுக்காடானவர் இளம் வயதினர் என்றும் சொல்லப்படுகின்றது. இலங்கையின் தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரையில் இவ் விழுக்காடு பெரிய இடைவெளியை ஏற்படுத்தியிருக்கின்றது. ஏற்கனவே போரினால் அழிக்கப்பட்ட தமிழினத்துக்கு ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பாகும்...... அதேவேளை பாதிக்கப்பட்டவர் பெரும் பாலானோர் ஏழைகள். ஏழைகள் மட்டுமல்ல அநாதை இல்லங்களிலிருந்த குழந்தைகள் அநாதைகளாக கடலலையோடு சங்கமமாகியது எல்லோர் இதயத்தையும் உறையச் செய்யும் இவ்விளைவினால் மீண்டும் பல குழந்தைகள் தந்தையையோ தாயையோ அல்லது இரண்டு பேரையும் இழந்தோர் மீண்டும் ஆதரவற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள்.

அதேவேளை குழந்தைகளை இழந்த பெற்றோருடைய மனநிலையும் காப்பாற்றபட்ட குழந்தைகளுக்கு உரிமைகோரும் பல பெற்றோரின் மனநிலையும் இத்தாக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சோபாடே என்ற பெண் தாய்லாந்துக்குத் தன் பிள்ளைகளோடு நத்தார் விடுமுறைக்குச் சென்றபோது இக் கடலலை அனர்த்தத்தில் சிக்குண்டு தப்பித்தபின் தன் அனுபவங்களை இப்படிப் பகிர்ந்துகொள்கின்றாள் 'தன்னைச் சுற்றிக் கடல் வெள்ளம் பெருக தன் இரண்டு குழந்தைகளையும் கையில் ஏந்திக்கொண்டு அக் குழந்தைகளைக் காப்பாற்றப் போராடி இயலாத நிலையில் ஒரு குழந்தையையாவது காப்பாற்றி மற்றக் குழந்தையைக் கைவிட அந்த நேரத்தில் எடுத்த முடிவினால் தன் உள்ளம் எவ்வளவு பாதிக்கப்பட்டதென்பதை வெளிப்படுத்துகின்றாள். ஆனால் இறைவனின் கருணைதான். கைவிட்ட தன் குழந்தை கடல் நீர் வற்றிய பிறகு மரத்தைப் பிடித்துக்கொண்டு உயிர்தப்பியது கண்டு அதிர்ச்சியடைந்ததாகக் கூறினாள். அதேபோல் 18 நாட்களாக காட்டிற்குள் பழங்களை உண்டு நிக்கோபார் தீவில் உயிர்வாழ்ந்து மீட்கப்பட்ட 13 வயதுச் சிறுமி, தன் குடும்பத்திலிருந்து பிடுங்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டு வாழுகின்ற நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளாள். இவளின் எதிர்காலம்....

இவ் அனர்த்தத்திற்குப் பின் பாடசாலைக்குச் செல்ல விரும்பாத குழந்தைகள் 'நான் எப்படிப் பாடசாலை போவேன் என் புத்தகங்கள்.. கொப்பிகள்.. உடைகள்.... புத்தகப்பை ஒன்றுமேயில்லையே இப்படியெல்லாம் நினைத்த பொழுது, அரசாங்கம் அல்லது உதவி நிறுவனங்கள் இவற்றைத் தந்து உதவும் என்று கூறியதைக்கேட்டு இக்குழந்தையிடமிருந்து வந்த கேள்விகள் 'அவர்கள் என் தங்கை தம்பிகளைத் தேடித்தருவார்களா? நான் பாடசாலையில் சேர்ந்து விளையாடிய நண்பர்கள் எங்கே? என்பதுதான். இப்படியான எதிர்க் கேள்விகள் கேட்கப்படுகின்ற பொழுது விடைகளைத் தேடவேண்டும்.

சுனாமி கடற்கோளின் பாதிப்புகளை விட இக் குழந்தைகளை தவறான வழிக்குக்கொண்டு செல்லவும் கடத்தவும் வியாபாரம் செய்யவும் முயலுகின்ற சுயநலமுள்ள இரக்கமற்ற மனிதர்களையும் சமூகம் சந்திக்கத்தான் செய்கின்றது. இவர்கள் மத்தியில் இருந்து இக் குழந்தைகள் காப்பாற்றப்பட வேண்டும். இக் குழந்தைகளில் அக்கறையோடு செயற்படுவதற்கு முன்வரவேண்டும். இன்னும் இக்குழந்தைகள் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து விடுபடும் சாத்தியம் உடனடியாக ஏற்படாது. இப்பாதிப்புகள் இக்குழந்தைகளின் எதிர்காலத்தை எப்படி உருவாக்கும் என்று இப்போது சொல்வதற்கில்லை எனினும் ஓரளவுக்காவது இக்குழந்தைகள் 'ஆற்றுப்படுத்துதலுக்கு' உட்படுத்தப்பட்டு வளர்க்கப்படுகின்ற பொழுது மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பும் சாத்தியம் உண்டு. எனினும் இவை சவால்கள் நிறைந்தவை பெற்றோருடைய அன்புக்கு உள்ளான குழந்தைகள். சகோதர சகோதரிகளின் அன்புக்குள்ளான குழந்தைகள் உறவினருடைய அன்புக்குள்ளான குழந்தைகள், நண்பர்களின் அன்புக்குள்ளான குழந்தைகள். உண்மை அன்பை எதிர்காலத்தில் பெறுவது சவால்கள் நிறைந்தது. எனினும் நிர்க்கதிக்கு உள்ளான குழந்தைகள் மீது அன்பும் பரிவும் கரிசனையும் கொள்வது மனித சமூகத்தின் கடமை. அநாதை இல்லங்களில் இருந்தும் அன்பையோ கரிசனையையோ இக்குழந்தைகள் பெறாவிட்டால் இக்குழந்தைகளின் வாழ்க்கையில் தாக்கங்கள் இரட்டிப்பாகும். யார் யார் முன்வந்து இக்குழந்தைகளுக்கு அன்பையும் கரிசனையையும் பராமரிப்பையும் தூய உள்ளத்தோடு கொடுக்க முன்வருகின்றார்களோ அவர்கள் இக்குழந்தைகளின் வாழ்வில் உயிர்ப்பாக மாறுகின்றார்கள். அம்மா... அப்பா... என்ற கூக்குரல்கள் கடலலைக்குள் அமிழ்ந்து போனாலும் உண்மையான அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்துகின்றவர்கள் மீது அம்மா... அப்பா... என்ற குரல் கேட்கப்படுகின்ற பொழுது இக்குழந்தைகள் உயிர்க்கப்படுகின்றார்கள். குழந்தைகளை என்னிடம் வர விடுங்கள் என்று அரவணைத்த இயேசுவின் உயிர்ப்பு விழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஆசிரியர்,
தொடுவானம்
*பங்குனி – சித்திரை, 2006*

# அந்தமானைப் பாருங்கள்... அழிவு...

'மரகதத் தீவுகள்' என புகழப்பட்ட அந்தமான் நிகோபார்தீவுகள் இப்போது மரணத் தீவுகளாகிவிட்டன. சுனாமி தாக்குதல் ஒருபுறம் நடக்க, மற்றொருபுறம் தொடர் பூமி அதிர்வுகளும் சேர்ந்து தாக்க, இங்கு குற்றுயிரோடு அலைகளிலிருந்து தப்பித்தவர்கள்கூட உயிரை மிச்சம் வைத்திருக்க முடியாத கொடுமை!


பசுமைக் காடுகளும், தெளிவான நீலக்கடலுமாக இருந்த இந்தத் தீவுகளை வர்ணிக்காத கவிஞர்கள் கிடையாது. 'அந்தமானைப் பாருங்கள் அழகு' என்று நேசித்தவர்கள், இப்போது அந்த அழகு மறைத்து வைத்திருந்த ஆபத்தைத் தெரிந்து பதறுகிறார்கள். சுனாமியை இந்தியாவில் முதலில் எதிர்கொண்ட பகுதி அந்தமான் தீவுக்கூட்டங்கள்தான். இந்தியாவின் நிலப்பரப்பிலிருந்து 1,200 கிலோ மீற்றர் தள்ளியிருக்கும் இந்தத் தீவுகள், சுனாமி உருவாகிய சுமாத்ராவுக்கு மிக அருகிலிருப்பதால், அழிவு பயங்கரமாக இருக்கிறது.

இந்தத் தீவுக் கூட்டத்தில் மொத்தம் 572 சின்னச் சின்னத் தீவுகள் இருக்கின்றன. இதில் மக்கள் வசிப்பது 38 தீவுகளில் மட்டும்தான். பல தீவுகளுக்கு யாரும் போக அனுமதிக்கப் படுவதில்லை. இராணுவமும், பழங்குடி மக்களும் வசிக்கும் தீவுகள் அவை. இந்தப் பேரழிவில் பல தீவுகள் மூழ்கிவிட்டன. பூகம்பத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் சின்னத் தீவுகள் பல உருக்குலைந்து விட்டன. உள்ளே புகுந்த தண்ணீர் வெளியேறாமல் ஜல சமாதி ஆனவர்கள் அநேகம் பேர். அங்கிங்கென இருக்கும் இந்தத் தீவுகள் பலவற்றுக்கு அந்தமான் தலைநகரிலிருந்து படகுகளில்தான் போகமுடியும். பல மணி நேரம் பிடிக்கும் பயணம். ஆனால், இந்தப் பேரழிவில் பட்டுத் துறைகள் கிட்டத்தட்ட எல்லாமே சீரழிந்துவிட்டதால் படகுகள் கூட மீட்புப் பணிக்குப் போகமுடியாத சோகம். அந்தமான் ஒரு பருந்துப்பார்வை.

இதில் பேரழிவைச் சந்தித்தது, கார்நிகோபார் என்ற தீவுதான். இந்திய விமானப்படையின் தளம் இங்கே இருக்கிறது. இதைப் பெரியஅளவில் விரிவுபடுத்தத் திட்டம் போட்டிருந்த நேரத்தில்தான் இந்தச் சோகம். நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் செத்துப்போய் விட்டனர். குடியிருப்புக் களில் இருந்த பல குழந்தைகளைக் காணோம். சிறியரக விமானங்கள் பல சேதமடைந்து விட்டன. ஒரு பாறையில் பாதியைத் தண்ணீர் காலிசெய்து விட்டிருந்தது. விமானத்தளம் தவிர இங்கு முப்பதாயிரம் மக்கள் குடியிருந்தார்கள். இவர்களில் கிட்டத்தட்ட ஆறாயிரம் பேர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இதன் பக்கத்தில் இருக்கும் சௌராதீவில் 1,500 பேர் வசித்தனர். இவர்களின் கதி என்ன என்று பார்க்க இராணுவம் போனது. அந்தமான் காவல்துறைத் தலைவர் ஷாம் ஷெரியோல், "ஹெலிகொப்டரில் இருந்து பார்த்தால் அந்தத் தீவு இருந்ததற்கான அடையாளமே தெரியவில்லை. எங்கு பார்த்தாலும் தண்ணீர்தான். வேரோடு பிடுங்கி வீசப்பட்ட மரங்களைத் தண்ணீருக் குள் பார்த்துத்தான் அது தீவு இருந்த இடம் என்று கண்டுபிடித்தோம்.

அதில் கிட்டத்தட்ட ஐந்நூறு பேருக்கு, உயிர் பிழைக்கும் அதிர்ஷ்டம் இருந்திருக்கிறது. காயம்பட்டு, குடிக்கத் தண்ணீர்கூட இல்லாமல் உயிரை ஒரு நூலிழையில் பிடித்து வைத்திருந்த அவர்களைக் காப்பாற்றினோம். பிணங்கள் கும்பல் கும்பலாக மிதப்பதைப் பார்க்க



முடிந்தது. என்ன செய்வது? உயிருடன் இருப்பவர்களை மீட்பதே பெரும் வேலையாக இருக்கிறது பிணங்களை என்ன செய்வது என்று இனிமேல்தான் யோசிக்க வேண்டும்". என்கிறார் வெளிப்படையாக.

சுமார் மூன்றரை இலட்சம் பேர் வசிக்கும் அந்தமான் தீவுகளில் உயிரிழப்பு இதுவரை பத்தாயிரத்தைத் தாண்டியிருக்கிறது. ஆனால், அது முப்பதாயித்தைத் தாண்டக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. இதற்குக் காரணம் கொடுமையானது.



பெரும்பாலும் தமிழர்களும், வங்காளிகளும் வசிக்கும் அந்தமான் தீவுக் கூட்டங்களில், அடிப்படை வசதிகள் போதுமான அளவு இல்லாவிட்டாலும் அங்கு வாழ்வதே பெரிய பெருமையாக நினைத்தவர்கள் நிறையப்பேர். ஆனால், அவர்களுக்கு அந்தத் தீவே இப்போது ஒரு சுருக்குக் கயிறாகத் தெரிகிறது.

பல குட்டித் தீவுகளில் அலைக்குப் பயந்து மக்கள் ஒதுங்க உயரமான இடம் கிடையாது. அவை எல்லாம் சம தளமான தீவுகள், உயரமான ஒரு கட்டடம் கட்டவேண்டுமென்றால் வெளியிலிருந்துதான் சீமெந்து, செங்கற்கள் எல்லாமே படகுகளில் எடுத்து வரவேண்டும்!

பக்காவான வீடு என்பது கோடிஸ்வரர்களுக்கு மட்டுமே சாத்தியமான விஷயம். சாதாரண மக்கள் மட்டுமே நிறைந்த தீவுகளில் அதை எப்படி யோசிக்க முடியும்? கூரைகளிலும், மரங்களிலும் ஏறித் தப்பிக்க முயன்ற மக்கள் அதோடு சேர்ந்து தண்ணீரில் சமாதியாகி விட்டனர்.

உணவுப் பொருட்களையும், மருந்துகளையும் எடுத்துக்கொண்டு இந்தத் தீவுகளுக்கு நிவாரணப் பணிகளுக்குச் சென்ற தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், தீவுக்குள் காலடி வைத்ததுமே திரும்பி ஓடிவருகின்றனர். அழுகிய பிணங்களும், துர்நாற்றமான சூழலும், எங்கும் நிறைந்திருக்கும் தண்ணீரில் மிதக்கும் அழுகிய உடல் பாகங்களும் அவர்களுக்கே மரணபயத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

இந்தத் தீவுக்கூட்டத்தில் மிகப்பெரிய தீவான கிராண்ட் நிகோபருக்கும் பெரும் சேதம். பக்கத்துத் தீவுகளில் உயிர் பிழைத்தவர்கள் இங்கே அழைத்து வந்து விமானங்களில் ஏற்றிப் பாதுகாப்பாக சென்னைக்கும், கொல்கத்தாவுக்கும் கொண்டு வருகிறார்கள்.

பலபேருக்கு காணாமல்போன தங்கள் சொந்தங்களை – குழந்தைகளை, அப்பாவை, அம்மாவைத் தேடுவதை விடத் தாங்கள் உயிர் பிழைத்தால் போதும் என்ற எண்ணம் வந்து விட்டதுதான் கொடுமை. விமானங்களில் ஏதோ நகர பஸ்களில் உட்காருவதைப்போல் நெருக்கியடித்துக்கொண்டு உயிர் பிழைத்த மக்கள் திரும்பிவருவது நெஞ்சை உலுக்கும் காட்சி.

'நினைத்தாலே நடுங்குகிறது...' சுற்றுலாவாக அந்தமானுக்கு சென்ற இத்தாலிய காதல் ஜோடி ஒன்று தப்பிப் பிழைத்து இப்போது சென்னையில் நீச்சல் வீரர் குற்றாலீஸ்வரனின் வீட்டில் அடைக்கலமாகியிருக்கிறது. குற்றாலீஸ்வரனின் இத்தாலி நண்பர் ஒருவருக்கு வேண்டியவர்களாம் இந்தக் காதலர்கள். அவர்களைச் சந்தித்தபோது திகில் விலகாத முகத்துடன் காதலன் ஆரம்பித்தான்.

"என்பேரு பாலோ மொரோனி. இது என்னுடைய காதலி லவுனா மன்சினி. நாங்கள் பிழைத்ததே ஆண்டவனுடைய கிருபைதான். அந்தமான் போகவேண்டும் என்பது நீண்டகால ஆசை. இருபத்தைந்தாம் திகதி அந்தமானுக்கு வந்து சேர்ந்தோம். மறுநாள் அதிகாலையில் புகழ்பெற்ற ஹவ்லொக் தீவுக்கு சொகுசுப்படகில் பயணமானோம். போர்ட்பிளேயரிலிருந்து கிட்டத்தட்ட மூன்றரை மணி நேரப் பயணம். பாதிவழி தாண்டியிருப்போம். திடீரென பேரலை பொங்கி எழ ஆரம்பித்தது. திகில் கலந்து பயம் கௌவ ஆரம்பித்தது. படகை ஓட்டியவர், "பயணத்தைத் தொடர்ந்தால் யாருடைய உயிருக்கும் உத்தரவாதம் இல்லை" என்று சொல்லி போர்ட்பிளேயருக்கே திரும்பி விட்டார்.

படகை சிரமப்பட்டு நிறுத்தியவர், "உடனே இறங்கி ஓடுங்க" என்று பெருங்குரல் கொடுக்க, படகிலிருந்த நூறுபேரும் அடித்துப் பிடித்துக் கரைக்கு ஓடினோம். அடுத்த சில மணித் துளிகளில் இரண்டு பனைமர உயர அளவில் கடல் எழும்பி பாய்ந்ததைத் தூரத்தில் நின்று பார்த்தபோது, அந்தப் படகை ஓட்டியவர் எங்களுக்குத் தெய்வமாகத் தெரிந்தார்.

சுனாமி அந்தமானை விழுங்கிய காட்சிகள் இன்னமும் கண்முன் வந்து வந்து போகின்றன" என்று நடுங்கியபடியே சொன்னார். ❑

நன்றி: யாழ். தினக்குரல்
*புதன் வசந்தம், 05.01.2005*

---

ஒருபுறம் சமூகத்தில் நிலவும் அவலம்
மதத்தால் வெளிப்படுத்தப்படுகிறது – மறுபுறம்
இந்த உண்மையான அவலத்திற்கு
எதிர்ப்புக் குரல் கொடுப்பதே
சமயம் என்பதாகும். அந்தவகையில், மதம் என்பது
ஒடுக்கப்பட்ட ஜீவனின் பெருமூச்சு! ஆனால்,
அவ்வாறாக, ஒடுக்கப்பட்ட நெஞ்சங்களின்
பிரகாசமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கத்
தவறும் மதங்கள்
மக்களின் அபின் மருந்தாக மாறுகின்றன.

*– காரல் மார்க்ஸ்*

# மாறாத நினைவுகள்...



மார்கழி 26ஆம் திகதி 2004 வாழ்க்கையை வளமாக்கிய கடலில் எழுந்த ஓயாத பேரலைகள் எத்தனை உயிர்களை, உள்ளங்களை, கட்டிவைத்த ஆசைகளை அள்ளிச் சென்றுவிட்டது. ஓயாத பேரலைகளின் பேரிரைச்சல் ஆண்டு ஒன்று சென்றுவிட்டபோதும் நம் உள்ளங்களை விட்டுச் செல்லவில்லை. வாழ்க்கையின் எதிர் நோக்குகளை சுக்குநூறாக்கிவிட்டது. குடும்பங்களை தூள்தூளாக்கிவிட்டது. துக்கமும் துயரமும் ஆறுதல்படுத்த முடியாதவைகள் ஆகிவிட்டது.

எனினும் முயற்சிகள் வீண்போகாது என்று பல நாடுகள், நிறுவனங்கள் உடைந்த உள்ளங்களை உருவாக்க, சிதைந்த குடும்பங்களுக்கு ஆதரவு கொடுக்க, அழிந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முன்வந்தன. இதில் யாழ் கிறிஸ்தவ ஒன்றியமும் ஒன்றாகத் திகழ்கின்றது. இவர்கள் பணியில் மாதகல் கிராமமும் ஒன்றாக அமைகின்றது.

மாதகல் கிராமத்தில் நேரடியான உயிரிழப்புக்கள் இல்லாவிட்டாலும் இடப்பெயர்வினால் வெளிக்கிராமங்களில் வசித்து வந்த மாதகல் கிராம மக்கள் சிறுவர் அடங்கலாக 52 பேரின் உயிர்கள் பறிக்கப்பட்டன. மாதகல் கடல் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாதலால் உயிர்கள், கட்டடங்கள் அழிக்கப்படுவதற்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை. மாறாக தொழிலாளிகளின் மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்பட்டு தூக்கி எறியப்பட்டு பொருளாதார ரீதியில் வறுமைக் கோட்டிற்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இதனால் மக்கள் உளரீதியிலும், கல்வியிலும், போஷாக்கு பற்றாக்குறையாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதற்காக யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்திற்கு பல திட்டங்களை முன்வைத்து சமர்ப்பித்துள்ளோம். அவை:-

1. பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணம்.
2. சிறு பிள்ளைகளுக்கான இலவச ஆங்கில பாட வகுப்புக்கள்.
3. இரவு படிப்புக்கான கட்டட வசதி.
4. துணை இழந்த பெண்களுக்கான சுய தொழில் முயற்சித்திட்டம்.
5. கடற்தொழிற் சங்கங்களிற்கான சுய தொழில் முயற்சி.

## அணைத்த கரங்கள்

6. பாடசாலை மாணவர்களிற்கான நூல் நிலைய வசதி.
7. விவசாயிகளிற்கான உபகரணங்கள்.
8. கைவிடப்பட்டவர்களிற்கான சுய தொழில் முயற்சி.

இவைகளில்

1. பாடசாலை மாணவர்களிற்கான அப்பியாசப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.
2. சிறு பிள்ளைகளிற்கான ஆங்கில மொழி படிப்பிற்கு உதவி வழங்கப்படுகின்றது.

போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவர்கள் பணியானது மக்கள் மனதில் புத்துணர்வை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இவர்கள் பணி சிறக்க எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண வாழ்த்துகின்றேன்.

**அருள்பணி ஏ.சி. கிறிஸ்ரோப்பர்**
*பங்குத்தந்தை, மாதகல்.*



# உன்னத்திலிருந்து...

இன்று உலகம் முழுவதிலும் இயற்கை அனர்த்தங்களினால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. சொத்துக்கள் சிதைக்கப்படுகின்றன. இதைப்போல் எம் யாழ். குடாநாட்டு மக்கள் 2004ஆம் ஆண்டு வருகையின் காலத்தில் மகிழ்ச்சியாக பல கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு கிறிஸ்து பிறப்பு விழாவில் திளைத்திருக்க மறுநாள் காலையில் சுனாமி என்ற கடற்கோள் இயற்கை அனர்த்தத்தினால் மக்கள் உயிர்கள், உடைமைகள், சொத்துக்கள் காவு கொள்ளப்பட்டு மக்கள் நிர்க்கதியாக்கப்பட்ட நிலையில் இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள்.

எம் மக்கள் யுத்தத்தின் வடுக்களிலிருந்து ஓரளவு மீண்டுவரும்போது, இன்று மீளமுடியாத சுனாமி வடுக்களோடு வாழ்ந்து வருகின்றார்கள். சுனாமி வடுக்கள் ஓய்ந்தபாடில்லை. அது மாத்திரம் அல்ல எம் தேசத்தில் தற்போது இருக்கும் பிரச்சனை மக்களின் ஏக்கத்தை அதிகரிக்கின்றது.

ஆகவே சுனாமியின் வடுக்கள் மக்களின் மனக் காயங்களை பெருகச்செய்துகொண்டே இருக்கின்றன. இதனாலே மக்களுக்குள், குறிப்பாக சுனாமி அனர்த்தத்தினால் தீவிர, நெருக்கீட்டு எதிர்த்தாக்கம், இழவிரக்கம், மனச்சோர்வு, பதகளிப்பு, மெய்ப்பாட்டு நோய்கள், நெருக்கீட்டுக்குப் பிற்பட்ட மனவடு நோய், மது மற்றும் போதைப்பொருள் பாவனை, தற்கொலை போன்ற மனக்காயங்கள், உளப்பேரதிர்விற்கு மக்கள் உட்பட்டிருக்கின்றனர்.

இத்தகைய மக்கள் மத்தியில் கடந்த ஓர் ஆண்டாக யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் தனது சாதாரண சமய - சமூக - பொருளாதார பணிகளுடன் இம் மக்களின் மனக்காயங்களையும் புரிந்துகொண்டு அவற்றிலிருந்து அவர்களை இயல்பு வாழ்வுக்குள் கொண்டுவர, மனக்காயங்களுக்குப் பரிகாரம் செய்ய உந்தலாக முதற்படியாக பொருளாதார, புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டது.

திருச்சபை பாகுபாடுகளை நாம் மறந்து ஒரே பிதாவின் புத்திரராக, யாழ். கிறிஸ்தவ மன்றத்தின் பேரிலே செய்த இம்மக்களுக்கான பணிகளை நினைவு கூர்ந்து வாழ்த்துகிறேன்.

இக்கால கட்டத்தில் உண்மையான வழி நடத்துதலை ஈந்த தலைவரையும், செயற்குழு அங்கத்தவர்களையும், செயற்படையையும், பணியாளர்களையும் போற்றி, கடவுளுக்கு நன்றி செலுத்தி முடிவுபெறாத இப்பணிகள் எதிர்காலத்திலும் பூரணமாக மக்களின் மனக்காயங்களை முற்றும் அகற்ற வேண்டுமென்று உணர்ந்து பிரார்த்திக்கிறேன்.

**அருள்பணி எஸ். கே. கதிர்காமர்**
*சேகர முகாமைக் குரு*
*மெதடிஸ்த திருச்சபை யாழ். சேகரம்.*

## தேவதாயின் குரல்

# தலையங்கம்

# அலை அனர்த்தங்களுக்கு அப்பால்

டிசம்பர் 26 இல் சுனாமி அலை அடித்து ஒன்றரை மாதமாகிவிட்டது. மனித அறிவு, எதிர்பார்ப்பு இவற்றை மீறி மனிதன் நினைத்தது போல் அவன் கட்டுப்பாட்டுக்குள் உலகம் இல்லை. சில நிமிடங்களுக்குள் 40ஆயிரம் மரணங்கள், பல்லாயிரக் கணக்கான அநாதைகள். இயற்கையையும் விஞ்ஞானத்தையும் தன்னையும், நம்பி கடந்த 150 வருடங்களாக வாழப்பழகிவிட்ட நவீன மனிதனுக்கு, திடீரென வாழ்வு அர்த்தமற்றதாகிவிட்டது போன்று தோன்றலாம்.

150 வருடங்களின் முன் நியேற்சே "நாங்கள் இறைவனை கொன்றுவிட்டோம். எங்கள் வாழ்வின் பகலவன் அஸ்தமித்துவிட்டான். இனி இருள், எங்கும் இருள். உயர் மாமனிதன், சூப்பர் மான் தோன்றுமட்டும்" என்றான். அவன் யார்? எங்கே இருக்கிறான்? இன்றைய இயந்திர மனிதன், குளோனிங் உருவாக்கப்போகும் புதிய ரக மனிதர்களா இவர்கள்? சுனாமி இவை எல்லாவற்றிற்கும் விடை சொல்லி விட்டது. மனிதன் தன்னை, தான் வாழும் உலகை, தன் பாவத்தினால், பேராசையினால் அழிக்கிறான். இவன் மனம் மாறாவிட்டால், அழிவைத் தவிர்க்கமுடியாது. இறைவன் மனிததசை எடுத்து புதிய மனிதனை உருவாக்க தொடங்கி விட்டார். இயேசு "மனம் மாறுங்கள், இறை அரசு வந்துவிட்டது", என்றார். யேசுவை எம்முள்வரவேற்க ஏன் தாமதம்? அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையை அளித்தார். இதை மறந்து விட்டு, நாமே சூப்பர்மான் ஆகுவோமென கனவு காண்போருக்கு காத்திருப்பது ஏமாற்றமே. மனிதன் இறைவனை அவன் வாழ்வில் இருந்து வெளியேற்றியதன் விளைவு, இன்றைய மனிதனுக்கு, வெறுமையும், பாவம் தரும் ஆழமான அதிர்ச்சிகளையுமே விட்டுச்சென்றுள்ளது. "மண்ணுலகம் உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது". சுனாமிநீர்த் திரள்மீது படைப்பின் ஆவி மீண்டும் அசைவாடுவாரா?

பயத்தை வெளியேற்ற ஆண்டவனை அணுகாது, பாவத்திற்கு அடிமைப்பட்டதன் விளைவாக இனம்தெரியா ஆழ்பயம் ஒன்று மனிதனை ஆட்டிப் படைக்கிறது. அழிவிலிருந்து விடுபட மனம் மாறி ஆண்டவரை நெருங்குவதை விடுத்து பாவப்பராக்குகளையே மனிதன் இன்னும் தேடுகிறான். இதனால் பயத்தை அழிக்கும் யேசுவைத் தேடாது பயம் – பாவம் என்ற விடுபடமுடியா பொய்ச் சூழ்ச்சியில் அகப்பட்டுத் தவிக்கிறான்.


யேசு எச்சரிப்பது போன்று நம் வாழ்வு மாற்றி அமைக்கப்படாவிட்டால் அழிவது நிட்சயம், (லூக்கா. 13:2-5). எனவே யேசு அழைக்கும் மனம் திரும்புங்கள் என்னும் குரலுக்கு அழிய விரும்பாதோர் செவிகொடுப்பது அவசியம். எங்களை சதா தன் பக்கம் திரும்பிக்கொண்டே இருக்கும் உலகம், மாமிசம், பசாசு யேசுவிடம் திரும்பவிடாது.

ஆதலால்தான் தேவதாய் செபம் தபம் பரித்தியாகம் செய் என்றாள். அலகை பராக்குகளை அனுப்பி உலக இன்பங்கள்ளயே கனவு காண ஊக்கிவிக்கிறது. மனிதன் தன் ஆணவத்தை அடக்கி, தன்னைத் தாழ்த்தி யேசுவிடம் திரும்புவானா?

நம் இதயச் செவியை அவர் பக்கம் திருப்ப மறுக்கும் மானிடத்தின் கடின இருதயம் இவ்விறுதிக்கால திடீர் அழிவுகளை எதிர்நோக்கும் பொழுது என்ன செய்யும்? குழந்தைகளை இழந்தோர், வளந்தோரைப் பறிகொடுத்தோர் முதலில்: அதிர்ச்சியில் ஓலமிட்டு அழுவதையும், பின் வார்தைகள் இல்லாது இருப்பதையும் அவதானிக்கலாம். அடுத்து, மரணத்தைக் குறிப்பாக உடலைக் காணதவர்கள் இழப்பை ஏற்க மறுத்திருக்கலாம். அதிர்ச்சியில் இருந்து எழும்பியபின் இறைவனிலும் குருக்களிலும் வேறொருவரிலும் கோபப்பட்டிருக்கலாம்.

காலம் போகப்போக குற்றபழி உணர்வுடன் வாழத்தொடங்கலாம் மன முறிவு ஏற்படலாம். வாழ்வு அர்த்தம் இழந்து, வெறிச்சோடிவிடலாம் இவை எல்லாவற்றுக்கும் விடை? எம்மை மீட்கும் விசுவாசமே "நான் எழுந்து என் தந்தையின் அரண்மனை வீட்டிற்குக்குச் செல்வேன்" என்ற மன உறுதி. இயேசு இறைமகன் என்று நம்புவோரைத் தவிர உலகை வெல்வோர் யார்? (1 யோவான் 5:5)

**அருள்பணி ஜெ. இ. ஜெயசீலன்**
**ஆசிரியர் – தேவதாயின் குரல்**
*பெப்ரவரி, 2005*




I wish to congratulate the Jaffna Christian Union on its record of service to the community most especially to the war victims and the tsunami affected. The executive committee has meaningfully achieved one of the main aim and objective of the JCU in that to participate actively in community development projects, that will further the general welfare in the fullness of life.


The Jaffna Christian Union has a continuing and responsible role to play. May you be filled with more and more service oriented men and women as the task before us a Christian organization demands renewed commitment to be a forceful and effective instrument of God.

To the entire membership of the JCU, namely full members of all churches affiliated to the National Christian Council of Sri Lanka in the Northern Province I remind:

**"We will praise Him for all that is past,**
**and trust Him for all that is to come"**

**Rev. Solomon Milton**
*Diocesan Secretary,*
*The Church of South India*





# 'ரிச்டர் புள்ளி' என்றால் என்ன?

என். மொஹமட் அஸ்லம்,
வெளிமடை.

உலகளாவிய ரீதியில் ஏற்படும் பூகம்பங்களை அல்லது புவி அதிர்வுகளை அளவிடும் சர்வதேச நியமகாட்டி ஒன்றாக 'ரிச்டர்' இனை அறிமுகப்படுத்தலாம். இக் காட்டிநியமம் 1935 இல் சார்ஸ் எப் ரிச்டர் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட தொன்றாகும்.

புவியதிர்வுகளை அளவிடும் உபகரணங்கள் உலகில் பல பாகங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றால் புவியோட்டின் மேற் பரப்பிலிருந்து 100 Km வரை உள் ஆழத்திலும் ஏற்படும் அதிர்வுகளை அறிந்துகொள்ள முடிகின்றமை விசேட சிறப்பியல்பாகும். இவ்வுபகரணங்களால் பெறப்படும் தரவுகள் ரிச்டர் புள்ளியினா லேயே குறியிடப்படுகின்றது.

'ரிச்டர் புள்ளி' காட்டினால் மிகச் சிறிய அதிர்வுகளில் இருந்து மிகப் பெரிய அதிர்வுகளோடு நிகழும் புவியதிர்ச்சிகளை அளவிட முடிகிறது. 2 Cm அளவான ஒரு சிறு நீளத்தை இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் வரையிலான சிறிய பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளமை ரிச்டர் அளவையியலில் உள்ள மற்றுமொரு விசேட சிறப்பியல்பாகும்.

ரிச்டர் புள்ளியாக குறிப்பிடப்படும் தலைமைப் பெறுமானங்கள் (1,2,3.. எனின்) 10 இன் அடுக்கிலான பெறுமானங் களையே குறித்து நிற்கின்றது. அதாவது ரிச்டர் காட்டியில் 0 புள்ளி என்று பத்தின் பூச்சியமாம் அடுக்கிற்கு ($10^0$) சமமான தாகும். அதாவது 1 ஆகும். ($10^0$=1) இங்கு ஒன்று என்பது மைக்ரோ (Micro – $10^6$) அதிர்வொன்றுக்கு சமமானதாகும். ஒன்றினைவிட சிறிய பெறுமானங்கள் ரிச்டர் காட்டியினால் (-) மறை என்றே புள்ளியிடப்படுகின்றன. ரிச்டர் புள்ளி 1 எனின் 10 இன் அடுக்கில் ஒன்றிற்கு சமனாகும். எனவே அவ்வதிர்வு 10 மைக்ரோ அதிர்வை குறித்து நிற்கும். இதனை பின்வரும் அட்டவணையால் இலகுவாக விளக்கலாம்.


எனவே அண்மையில் இலங்கையின்,

| புவியதிர்வின் ரிச்டர் காட்டி வாசிப்பு | | புவியதிர்வு மைக்ரோ மீட்டரில் |
|---|---|---|
| 0 | ($10^0$) | 1 |
| 1 | ($10^1$) | 10 |
| 2 | ($10^2$) | 100 |
| 3 | ($10^3$) | 1,000 |
| 4 | ($10^4$) | 10,000 |
| 5 | ($10^5$) | 100,000 |
| 6 | ($10^6$) | 1000,000 |
| 7 | ($10^7$) | 10,000,000 |
| 8 | ($10^8$) | 100,000,000 |
| 9 | ($10^9$) | 1,000,000,000 |
| 10 | ($10^{10}$) | 10,000,000,000 |

உச்ச ரிச்டர் அளவு வாசிப்பு 9.0 என்பதிலிருந்து விளங்குவது உச்ச அளவாக 1,000,000,000 ($10^9$) மைக்ரோ அதிர்வொன்று ஏற்பட்டுள்ளது என்பதாகும். எவ்வாறாயினும் 10,000,000,000 ($10^{10}$) மைக்ரோ மீட்டரிலும் அதிகமான புவியதிர்வொன்று ஒரு போதும் ஏற்படாது என்பது விஞ்ஞானிகளின் நம்பிக்கை யாகும்.

## புவியதிர்வு மானிகளின் வரலாறு

புவியதிர்வுகளை அளவிடும் கருவிகளின் பூர்வீகம் பற்றியும் எமது கவனத்தை திருப்புதல் பொருத்தமானது. புவி அதிர்வை அளவிடும் கருவி



“புவியதிர்வுமானி” எனப்படுகின்றது. அக்கருவிக்கு பொருத்தமான அளவீடு அல்லது குறியீடு முறையொன்றே ரிச்டரினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

முதலாவது புவியதிர்வுமானி கி.மு. 132 இல் நிர்மாணிக்கப் பட்டிருப்பதாக வரலாற்றுப் பதிவுகளில் பதிவாகியுள்ளது. அது கி.மு. 132 ஆண்டளவில் வாழ்ந்த சீன தத்துவஞானி ஒருவரான சேன்ங்ஹெனி (Chang Heny) என்பவரால் நிர்மாணிக்கப்பட்ட தொன்றாகும்.

இவ்வுபகரணம் வட்ட மைய மொன்றிலிருந்து ஒன்றுக்கொன்று எதிராக எட்டுத் திசைகளை நோக்கி அமைந்த மகரங்களின் தலைகளை கொண்டதாக அமைந்திருந்தது. இவ்வெட்டு மகரங்களின் தலைகீழாக வாய் திறந்த நிலையில் எட்டுத் தவளைகள் ஒவ்வொரு மகரத்தினதும் முகம் பார்த்து அமைந்திருந்தது. மகரங்களின் வாய்களில் சிறிய பாரம் குறைந்த கோளங்கள் இடப்பட்டிருந்தன. குறித்த ஒரு இடத்தில் புவியதிர்வு ஏற்பட்டவுடன் அத்திசையை நோக்கியிருக்கும் மகரத்தின் வாயிலிருந்து கோளங்கள் விடுவிக்கப்பட்டு, தவளைகளின் வாயை அடையும். இதிலிருந்து புவியதிர்வு ஏற்பட்ட திசையும் கோளங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் புவியதிர்வின் அதிர்வு வீச்சத்தையும் அக்கால மக்களால் அனுமானிக்க முடிந்தது 40 மைல் தொலைவிலுள்ள புவியதிர்வுகளையும் அளக்க இவ்வுபகரணம் திறன் வாய்ந்ததாக அமைந்தது.

18 ஆம் நூற்றாண்டில் பெரும்பாலான புவியதிர்வு மானிகள் நிர்மாணிக்கப்பட்டன. 1747ஆம் ஆண்டில் நிக்கலஸ் சிரி லியோ (Nicholos Siri Leo) என்பவரால் தொங்கல் நிலைப்பொருள் (ஜெலி போன்ற) ஒன்றின் உதவியுடன் புவியதிர்வு மானி ஒன்று உருவாக்கப்பட்டது. நேபாளில் ஏற்பட்ட புவியதிர்வுகளை அளக்க இப் புவியதிர்வு மானி பயன்பட்டது. கி.பி. 1800 ஆம் ஆண்டளவில் ஜேம்ஸ் போபர்ஸ் (Jems Forbus) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட புவியதிர்வு மானி இவ் ஆய்வுகளில் மேலும் திருப்பத்தை ஏற்படுத்தியது.

1850 தொடக்கம் 1870 வரையான ஆண்டு புவியதிர்வு மானிகளின் பொற்காலம் எனலாம். அதிகளவான ஆய்வுகள் நிகழ்ந்த காலமாக இது குறிப்பிடப்படுகின்றது.

1856இல் மின்புலங்களின் உதவியுடன் புதியதொரு புவியதிர்வு மானியை லிவிபெல்மரியஸ் கண்டு பிடித்தார். இது முன்னால் நிர்மாணிக்கப் பட்ட புவியதிர்வுமானிகளின் பல குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வண்ணம் அமைந்திருந்தது.

1880 இல் இவினிங் மற்றும் அவருடைய மாணவர்கள் ஒன்றிணைந்து அமைத்த புதிய புவியதிர்வுமானியினால் ஜப்பானில் ஏற்பட்ட பல பூகம்பங்கள் பற்றிய தகவல்களை பெறக் கூடியதாக அமைந்தது.

இதுவரை காணப்பட்ட உபகரணங் கள் அனைத்தையும் கவனத்தில் கொண்டு C.F. ரிச்டர் இதனால் ரிச்டர் புள்ளி நியமம் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் இவருடைய முன்னோடிகளுடைய உபகரணங்களைக் கொண்டே அதிர்வுகள் அளவுகோளிடப்பட்டன.

எவ்வாறாயினும் இவ்வுபகரணத் தினால் சிறிய புவியதிர்வுகளிலிருந்து மிகப் பெரிய புவியதிர்வுகள் வரை அளவிடக்கூடியதால் இன்று வரை பாவனையிலுள்ள ஒரு உபகரணமாக திகழ்கின்றது. ❐

**மூலம்** – சர்வதேச சுனாமி நிறுவனம்
**உசாத்துணை** – லங்காதீப பத்திரிகை
நன்றி: **விஜய்,** 2005 மார்ச் 07

## கௌரவம் பெற்ற பிரிட்டிஷ் சிறுமி

பிரிட்டிஷ் சிறுமி டில்லி ஸ்மித் என்பவர் “இந்த வருடத்தின் சிறுமி” என்று கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தாய்லாந்தில் ஆழிப்பேரலை வீசவிருந்த சமயத்தில் 100 உல்லாசப் பயணிகளை இந்தச் சிறுமி தனது புவியியல் அறிவால் காப்பாற்றியமைக்காக இந்தக் கௌரவத்தைச் சிறுவர்கள் பத்திரிகையொன்று வழங்கியுள்ளது.

டில்லி ஸ்மித் 'சுனாமி' எவ்வாறு உருவாகும், அதன் அறிகுறிகள் என்ன என்பது பற்றி தனது புவியியல் ஆசிரியரிடம் கற்றிருந்தார். கடந்த வருடம் விடுமுறையைக் கழிப்பதற்காகத் தனது பெற்றோரோடும் தங்கையோடும் தாய்லாந்துக்குச் சென்றிருந்தார். கடற்கரையில் நின்றபோது கடல் உள்வாங்கிச் செல்வதை அவள் கண்டாள். அதைத் தனது தாயிடம் தெரிவித்து “நாம் எந்த நிமிடத்திலும் சுனாமியால் தாக்கப்படபோகிறோம்” என்று எச்சரித்தாள். பத்து வயது சிறுமிதானே அவருக்கு என்ன தெரியும் என்று அவர்கள் இருந்துவிடவில்லை. உடனடியாகவே ஏனைய உல்லாசப் பயணிகளுக்கும் அறிவித்து எச்சரிக்கை செய்தார்கள். சில நிமிடங்களில் அங்கிருந்த ஹோட்டல் சிப்பந்திகள் மற்றும் உல்லாசப் பயணிகள் அனைவரும் வேறு பத்திரமான இடங்களுக்கு மாறிவிட்டார்கள். அதனால் அடுத்து சில நிமிடங்களில் அப்பகுதியை மிகக் கோரமாகத் தாக்கிய பேரலைகளிலிருந்து நூறு பேர் உயிர்தப்பினார்கள்.

டில்லிக்கு இப்பொழுது 11 வயது. அந்த நிகழ்வின் ஞாபகார்த்த வைபவத்தில் கலந்துகொள்ள தாய்லாந்து வந்துள்ள டில்லி “சுனாமியோ வேறு எந்த இயற்கை அனர்த்தமோ அதைப்பற்றி அறிந்து வைத்திருப்பது தக்க சமயத்தில் உதவியாய் இருக்கும். அன்று சுனாமி ஒன்று வரப்போகுகிறது என்று என்னால் கூறமுடிந்தது மகிழ்ச்சி தருகிறது. அதைவிட சிறுமி என்று கருதாமல் அவர்கள் எனக்கு செவிமடுத்து நடந்து கொண்டது இன்னும் மகிழ்ச்சியாக இருக்கின்றது” என்று கூறினார்.

“...அன்றைய தினம் கடலின் செயற்பாடு நான் புவியியல் பாடத்தில் கற்றதுபோலவே அச்சொட்டாகக் காணப்பட்டது” என்றார் டில்லி.

நன்றி: உதயன்
*01.01.2005*

## வெட்டாப்பு

## தலையங்கம்

சுனாமி அனர்த்தங்கள் ஏற்படுத்திய தாக்கம் ஒரு சிறிது காலத்துக்குப் பின்னர் மறைந்துவிடும். ஆனால் கிறிஸ்துவின் இறப்பு உயிர்ப்பு ஏற்படுத்திய தாக்கம் மங்காமல், மறையாமல் தொடர்கதையாகிச் செல்வதை யாரும் மறுக்கமுடியாது. அன்று தொடக்கம் இன்றுவரை கிறிஸ்து உயிர்த்தார் என்ற மறையுண்மையை மூடி மறைக்க, குழிதோண்டிப் புதைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் விழலுக்கிறைத்த நீராகிப் போனதுதான் உண்மை. அதன் காரணம் உயிர்த்த கிறிஸ்துவினால் ஆட்கொள்ளப்பட்ட உள்ளங்கள் உயிர்த்தியாகம் செய்து உயிர்ப்புக்குச் சான்று பகர்ந்தன என்பது வரலாறு. கிறிஸ்து உயிர்த்தார் என்ற வரலாற்று உண்மை உயிர்த்த கிறிஸ்துவின் ஆவியினால் உந்தப்பட்ட உள்ளங்களினால் இன்றும் தொடர் கதையாக்கப்படுகின்றது. உலகில் கிறிஸ்து + அவன் இருக்கும் வரை உயிர்ப்பின் தீபம் அணையாது.

புதிய ஏற்பாட்டு காலத்தில் கிறிஸ்தவனுக்கு கொடுக்கப்பட்ட கிரேக்க வார்த்தை 'ஹைகொஸ்' (HAIGOS)- அதாவது வேறுபட்டவன், மாறுபட்டவன், வித்தியாசமானவன். ஆலயம் ஏனைய கட்டடங்களிலிருந்து வித்தியாசமானது. ஓய்வுநாள் ஏனைய நாள்களிலிருந்து வித்தியாசமானது. கடவுள் எல்லாப் படைப்புக்களிலிருந்தும் வித்தியாசமானவர். அதேபோன்றுதான் கிறிஸ்தவனும் ஏனையவர்களிலிருந்து வித்தியாசமானவன், வேறுபட்டவன், மாறுபட்டவன் என்பதால் அவனது வாழ்வே ஒரு போராட்டமாக இருக்கும். உலகில் அவன் வாழ்ந்தாலும். உலகம் அவனுக்குள் நுழையாமல் கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும். இருள் சூழ்ந்த உலகில் குன்றின் மேல் ஏற்றி வைக்கப்பட்ட தீபமாக ஒளிரவேண்டும். பொய்மை நிறைந்த உலகில் உண்மைக்கு சான்று பகர வேண்டும் சாவுக்கலாசாரம் புற்றுநோய் போன்று வேகமாகப்பரவி வருகின்ற உலகில் உயிர்த்த வாழ்வை வாழ்வதென்பது போராட்டமே. பாவம் நிறைந்த உலகில் பாவமின்றி வாழ்வது போராட்டம்.

**“எதைச் செய்ய விரும்புகிறேனோ அதை நான் செய்வதில்லை. எதை வெறுக்கிறேனோ, அதையே செய்கிறேன்”**

(உரோ 7:15) என பவுல் இத்தகைய போராட்டமான வாழ்வை விளங்குகிறார்.

எடுத்துக்காட்டாக காலையில் எழுந்தவுடன் கடவுளைத் தியானிப்பது நல்ல செயல், அதனை நான் விருப்பத்துடன் செய்யவேண்டும். பிறரைப்பற்றி ஆவலாதி, அவதூறு பேசுவது தீய செயல், அதனை நான் தவிர்க்க வேண்டும். ஆனால் நான் விரும்பும் நன்மையை செய்ய விடாமலும், விரும்பாத தீமையை செய்யத் தூண்டியும் என்னுள் போராட்டத்தை விளைவிக்கும் காரணிகளை கண்டறிந்து களைந்துவிட வேண்டும். இதனால்தான் கிறிஸ்தவ வாழ்வே ஒரு போராட்டம் என்கிறோம். இத்தகை வாழ்வை வாழ முற்படும்போது அவன் சமுதாயத்தில் வித்தியாசமானவனாக, வேறுபட்டவனாக விளங்குவான். அதுதான் கிறிஸ்தவனின் உயிர்த்த வாழ்வாகும். அது வாழப்படும் போது சமுதாயம் படிப்படியாக மாறும். கிறிஸ்துவின் உயிர்ப்பு ஏற்படுத்திய தாக்கம் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

சுனாமி அனர்த்தங்களினால் இறந்த மனிதர்களின் தொகையை தினம் தினம் இன, மத, மொழி, நிற, சாதி பேதங்களினால் கொல்லப்படும் மனித உயிர்களின் தொகையோடு ஒப்பிடும் போது சுனாமியின் அழிவு பெரிதில்லை சில நாடுகளில் இத்தகை பேதங்களினால், கலவரங்களினால் இலச்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். கொலை செய்யப்படுகின்றார்கள். எமது நாட்டிலும் சுனாமியினால் உயிரிழந்தவர்களின் தொகையைவிட யுத்தத்தினால் இறந்தவர்களின் தொகை பன்மடங்காகும். இயற்கை அனர்த்தங்களை கட்டுப்படுத்துவது கடினம் ஆனால் மனிதப்படுகொலைகளை கட்டுப்படுத்த முடியும். மனித உயிர்களைக் காக்க வேண்டியது அரசின் கடமை. ஆனால் வேலியே பயிரை மேய்ந்தால் என்ன செய்வது? உயிர்த்த வாழ்வை ஒவ்வொருவரும் வாழ முயன்றால், உயிர்க்கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

அருள்பணி பீ. ஜோசப்
ஆசிரியர் - வெட்டாப்பு
*சித்திரை - 2005*

## வேர்களிலிருந்து அரும்புவோம்

இழப்பதற்கு இனி எதுவுமேயில்லை
மீண்டுமொரு முறை
பிரகடனப்படுத்தப்பட்டது

கனவுகள் கூட
எம்மிடமிருந்து பறிக்கப்பட்டது

காணாமல் போனவர்களை தேடுதலே
எம் வாழ்வின் ஒரே தெளிவானது

ஆனாலும்
பெறுவதற்கு
புதுவாழ்வு
இன்னமும் மீதமாயிருக்கிறது
விருட்சமென வளர்ந்த
வாழ்வு
பிடுங்கியெறியப்பட்டது

ஆனாலும் நாம்
பட்டுப் போய்விடமாட்டோம்
வேர்களிலிருந்து
அரும்புவோம்

– அமுதமொழியன்

# பாலுக்கு ஓர் குழந்தை
# பாலூட்ட ஓர் அன்னை...



நீ ஆடும் இடம் தெரியாமல் ஆடி விட்டாயா? அல்லது
ஆட வேண்டும் என்று எண்ணி ஆடி விட்டாயா?
சுனாமி என்னும் பெயர் கொண்டு
எம் மக்களின் உயிரை சூறையாடி விட்டாய்.
உன்மீது வலை விரித்து மீன் பிடித்து
வறுமை போக்கிய எங்களையா?

நீ சுனாமி என்னும் வலை விரித்து உயிர் குடித்தாய்.
இப்படி ஒரு முகம் இருப்பதை நாங்கள் அறியவில்லையே.
காற்று வாங்க வந்தார்கள். காற்றை நீ நிறுத்தி விட்டாய்.
உன் மீது சவாரி செய்ததற்கா – எங்கள் மீது சாவரி செய்தாய்.

நீ மக்களை வளர்த்த கடல் தாயா – அல்லது
மக்கள் பிணம் தின்னும் அரக்கனா,
நான் ஒரு தனி என்று எண்ணி,
எல்லோரையும் தனிமையாக்கி விட்டாயா?
உன் முன்னில் குழந்தைகள்
துள்ளி குதித்து விளையாடுவது
பொறுக்க முடியாமலா பச்சைப் பயிர்களை
உனக்கு உணவாக்கினாய்.

கலர் சேலை கட்டும் பெண்களை பிடிக்காமலா,
அவர்களுக்கு வெள்ளைச் சேலை கொடுத்தாய்.
குடும்பம் ஒரு கோயில் என்பார்கள்.
அது உனக்கு இல்லை என்றா குடும்பங்களைப் பிரித்தாய்.
எங்களைத் தனிமரமாக்கினாய்.
உனக்கு சகோதரர்கள் இல்லை என்று எண்ணியா
எங்கள் சகோதரர்களை பிரித்தாய்,
மண் வீடு கட்ட அழித்துப் பழகிய நீ
எம் வீடு அழிக்கவா காத்து இருந்தாய்.

மக்களை புதைக்க ஆள் இல்லை என்று எண்ணியா
நீயே மண் தோண்டிப் புதைத்து விட்டாய்.
பாலூட்ட ஒரு அன்னை குழந்தை இன்றி தவிக்கிறாள்.
பாலுக்கு ஒரு குழந்தை அன்னையைத் தேடி அலைகின்றது.
தன் பக்கம் பிணமாக கிடக்கும் தாயை
இனம் காணாமல் காத்து இருக்கின்றது.
இறைவா! இது என்ன வேதனை.
இரக்கப் போனாலும் சிறக்கப்போ என்பார்கள்.
இறந்தால் கூட சிறப்பாக அனுப்ப ஆள் இல்லையே.

ஆறு அடி மண் சொந்தம் என்பார்கள்
இங்கு அறுபது பேருக்கு ஆறு அடி மண் என்று மாற்றக் கூடுமா?
உடம்பின் காயம் ஆறும், உளக் காயம் ஆறுமா?
சுனாமி அரக்கன் மீண்டும் பிணம் தின்ன வருவானா?
ஏ.... கடலே நீ மனிதனுக்காகப் படைக்கப்பட்டாய்.
மனிதன் உனக்காகப் படைக்கப்பட்டவன்.
நாம் மீண்டும் உன் மீது சவாரி செய்வோம்
நாம் மீண்டும் உன் மீது வலை விரிப்போம்.
வாரி எடுப்போம். நீ மீண்டும் பிணம் தின்ன வந்து விடாதே.

உயிர் நீத்த மக்களுக்காக வேண்டி ஒருதுளி கண்ணீர் விட்டு
இறைவனை பிரார்த்தியுங்கள்.

எஸ்.சபா (சவுதி)
நன்றி: தெளிவு
*வைகாசி – ஆடி, 2005*

## ஆத்மா தலையங்கம்

ஆழிப்பேரலைகளின் ஊழித் தாண்டவம் நானகே நிமிடங்கள் நீடித்து ஓய்ந்துவிட்டது. ஆனால் அவற்றின் விளைவாக ஏற்பட்ட சமூகப் பொருளாதார அரசியல் அலைகளும், உடல், உள, ஆன்மீக அலைகளும் ஓயாத அலைகளாக எம்மக்களை அலைக்கழித்து விடுகின்றன எமது வாழ்விலே. புதிய அத்தியாயம் ஒன்று திறக்கப்பட்டு புதிய சவால்கள் மேலெழுந்துள்ளன. முட்டாள் தனமான சமய விளக்கங்களுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் அப்பால் இயற்கையின் பலம் பற்றிய ஒரு புதிய பிரஞ்ஞையையும் அதனோடு இணைந்தும், பிணைந்தும், முரண்டும் வாழ்வதற்கு மனிதனுக்கு தேவைப்படுகின்ற அறிவியல் ஆற்றல் பற்றிய ஒரு விழிப்புணர்வையும் இவ்வலைகள் பரிசாகத் தந்து சென்றிருக்கின்றன. நிவாரணம், புனரமைப்பு, புனர்வாழ்வு, ஆற்றுப்படுத்துகை ஆகியவற்றையும் கடந்து ஒரு இயற்கை நிகழ்வை முன்னிருந்து மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியாமல் போன அறிவியல் வறுமை, அதற்கு காரணமாயிருக்கும். அரசியல் வங்குறோத்துத்தனம் எமது பலவீனங்களைப் பயன்படுத்தி வளங்களைச் சுரண்டி இரக்கத்தின் அரசியல் நடத்தும் சர்வதேச ஆதிக்க சக்திகள் இவற்றை சரியாக அடையாளம் காணுவதும் இவற்றோடு தொடர்ச்சியாக போராடுவதும் எம்முன் வைக்கப்படும் மிகப்பெரிய சவாலாகும். உயர் விழுமியங்களால் உருவாக்கப்படும் புதியதொரு அரசியல் ஒழுங்கினாலன்றி எமது நாட்டிற்கு வேறு வழியாக மீட்சி இல்லை என்பது திரும்பத் திரும்ப நிருபிக்கப்படுகிறது. விழிப்புணர்வோடு செயற்படுவோம்.

## வாழ்வோம் எனச் சொல்லி...

ஆழிப்பேரலை ஆத்மாவுக்கு நெருக்கமான பலரையும் அள்ளிச்சென்றிருக்கிறது. நிர்க்கதியாக்கியிருக்கிறது. கனத்த இதயங்களோடுதான் எழுந்து வருகின்றோம். அழிவிலும் மலர்ந்த "மனிதப் பூக்கள்" ஆறுதல் தருகின்றன. வாழ்வோம் எனச் சொல்லி நிமிர்கின்றோம்.

'ஆத்மா' ஆசிரியர் குழு
*ஏப்ரல் – 2005*

# கடற்கோளை முன்கூட்டியே அறியும் உள்ளுணர்வு

**ராஜதிலகம்**

உண்மையிலே மிருகங்களுக்கு ஆபத்தை முன்கூட்டி அறியும் உணர்வு உண்டா?

கடந்த வருடம் மார்கழி 26 ஆம் திகதி மொத்தம் 11 நாடுகளிலும் 150.000 மேலான உயிர்களை ஆழிப்பேரலை காவு கொண்டது.


விஞ்ஞானிகள் பூகம்பம் ஏற்படுவதை துல்லியமாகக் கணக்கிட முடியாவிட்டாலும் இன்னொரு பூகம்பம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு என எதிர்பார்த்தனர். அமெரிக்காவில் இருந்து வெளிவரும் Nature (இயற்கை) என்னும் சஞ்சிகையில் சுமாத்திரா தீவின் கடல் படுக்கையின் நீண்ட பாதுகாப்புப் பள்ளம் இன்னும் சரிவர பொருந்தாத நிலையில் இன்னொரு பூகம்பம் ஏற்படலாம் எனவும் அதன் பின்விளைவாக ஆழிப்பேரலை ஏற்படலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டிருந்தது.

தாய்லாந்தில் உல்லாசப்பணிகளின் பயணங்களுக்கு நிறுத்தப்பட்டிருந்த யானைகள் சுனாமி ஆழிப்பேரலை தாக்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாகப் பிளிறத் தொடங்கின. யானைகள் அமைதி குலைந்து காணப்பட்டன. சில யானைகள் சங்கிலிக் கட்டை அறுத்துக்கொண்டு மேட்டுநிலத்தை நோக்கிச் சென்றன. அந்த யானைகள் சுமாத்திரா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை உணர்ந்து கொண்டனவா?

இந்தியாவில் நாரைகள், நீர்வாழ் பறவையினம் தென்பகுதியில் உள்ள சரணாலயத்தை விட்டு வேறு காட்டுப்பகுதிக்குச் சென்று விட்டன. இக்காலகட்டத்தில் குஞ்சு பொரிக்கும் நீர் நாரைகளும் அவ்விடத்தை விட்டகன்றதாக இந்திய செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் மிக மோசமாகத் தாக்கப்பட்ட யால தேசிய சரணாலயத்தில் காட்டு மிருகங்களைக் காணலாம். காட்டு அதிகாரிகள் அதிர்ச்சியுற்றனர். யானைகள், சிறுத்தைகள், கரடிகள், காட்டுப்பன்றிகள், மான்கள், காட்டெருமைகள், குரங்குகள் இன்னும் சிறு மிருகங்கள் ஊர்வன முதலியன சுனாமி ஆழிப்பேரலை தாக்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக மேட்டுப்பகுதியை நோக்கிச் சென்று தப்பித்துக்கொண்டன.

அதே நேரம் சுமாத்திரா தீவில் பல பெரிய கடல் ஆமைகள் இறந்தும் காணப்பட்டன.



இவையெல்லாம் மிருகங்களுக்கு பூகம்பம், எரிமலைகள், பெரும் புயல், நிலநடுக்கம் சம்பந்தமான ஆபத்தை முன்கூட்டி அறியும் உணர்வு உண்டென்பதையும், மிருகங்களின் ஆறாவது அறியும் உணர்வு உண்டென்பதையும் பறைசாற்றுகின்றன.

விஞ்ஞானிகளிடம் பூகம்பம் சம்பந்தமான ஆபத்தை உணரக்கூடிய முன்கூட்டி அறியும் கருவிகளும் அளவு கருவிகளும் இருந்தபோதும், அவர்கள் பூகம்பம் எப்பொழுது ஏற்படும் என்பதை முன் கூட்டிச் சொல்ல முடியாமலிருக்கிறது. அதே நேரம் இம்மிருகங்களினால் பூகம்பம் ஏற்படுவதை முன்கூட்டி உணர்ந்து கொள்ள முடிகின்றது. இம்மிருகங்களின்

மாறுபட்ட செயற்பாடுகளைப் பார்த்து நாம் ஏதோ அசம்பாவிதம் ஏற்படப்போவதை அறிய முயற்சி செய்ய வேண்டும்.

மட்டக்களப்பில் சுனாமி ஆழிப்பேரலை தாக்குவதற்கு சில நாட்களுக்கு முன் பல்லாயிரக் கணக்கான பாம்புகள் தம் மறை விடங்களில் இருந்து வெளிப்பட்டு மேட்டு நிலங்களுக்கு இடம் பெயர்ந்ததை பலர் அவதானித்துள்ளனர். அவ்வூர் மக்களுக்கு பாம்புகளின் மாறுபட்ட செயற்பாட்டினைப் புரிந்து கொள்ள முடியவில்லை.



இம்மிருகங்களுக்கு ஆபத்தை முன் கூட்டியே அறியும் உணர்வு எங்கிருந்து வந்தது? அவற்றிற்கு ஒலி, ஒளி, வெப்பம், காந்தசக்தி, அதிர்வுகள், மணம், இரசாயன மாற்றங்கள் மற்றும் எதிர் ஒலிகளை அறியும் ஆற்றலினால் அவை நேரகாலத்தில் ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்கின்றன. இந்த மாதிரியான ஆபத்தை முன் கூட்டி அறியும் ஆற்றல் அல்லது உணர்வு மனித இனத்திற்கு இல்லாமல் போனது ஏன்? கடவுள் எமக்கு ஆறு அறிவைத் தந்திருக்கின்றார். நம் மனித இனத்திற்கு மட்டும் தான் ஆறு அறிவு – மிருகங்களுக்கு ஐந்தறிவு எனப் பெருமை அடைகிறோம். ஆனால், ஆபத்தை முன்கூட்டி அறியும் ஆற்றலை ஏன் கடவுள் எமக்குத் தரவில்லை? ஆறாவது அறிவான பகுத்தறிவைப் பாவித்து அறியச் சொல்கிறாரா? அல்லது இம்மிருகங்களின் மாறுபட்ட செயற்பாட்டினை அவதானித்து அதற்கு ஏற்ப நடந்துகொள்ளச் சொல்கிறாரா?

இம்மிருகங்களுக்கு முன்கூட்டியே அறியும் உணர்வானது, இல்லையானால் பல மிருகங்கள் இவ்வுலகத்திலிருந்து எப்போதோ அழிந்துவிட்டிருக்கும். ஒரு நகரத்தில் பூகம்பம் ஏற்பட முன்னர் அங்குள்ள கட்டடங்களில் உள்ள எலிகள் கூட்டங்கூட்டமாக வெளியேறி விடுகின்றன. சிட்டுக் குருவிகள் கூட்டமாகவே அவ்விடத்தை விட்டு மறைந்து விடுகின்றன. ஆபத்தை முன்கூட்டி அறியும் உணர்வுகளில் யானையே முதன்மை வகிக்கின்றது. அதனால் வரப்போகும் ஆபத்தின் அளவையும் எத்திசையிலிருந்து ஆபத்து ஏற்படும் என்பதையும் உணர்ந்து அதற்கு தான் எப்படி முகம் கொடுத்து தப்பிக்கவேண்டும் என அறியும் வல்லமை உண்டு.

சில மிருகங்கள் சுனாமி ஆழிப்பேரலை கடலினடியில் பூகம்பத்தினால் உண்டான நேரத்திலேயே அதன் விளைவையும் தாக்கத்தையும் உணர்ந்து செயல்படத் தொடங்கிவிடுகின்றன. இதுபோன்று வீட்டு மிருகங்களான நாய்களும் பூனைகளும் கூட ஆபத்தின் அளவையும் எத்திசையிலிருந்து ஆபத்து ஏற்படும் என்பதையும் அறிந்து கொள்கின்றன. நாய், பூனைகளுக்கு மணத்தை உணரும் சக்தி மனிதனிலும் பார்க்க 10,000 மடங்கு அதிகம். நாய் ஆபத்தை உணர்ந்தும் ஊளையிடுவதும், அதன் விளைவேயாகும். கடல் வாழ் மீன் இனங்களும் சுனாமி ஆழிப்பேரலையின் தாக்கத்தையும் அதன் பின் விளைவையும் முன்கூட்டியே அறிந்து வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து விடுகின்றன. சுறா மீன்கள் சுனாமி ஆழிப்பேரலையின்போது ஆழ்கடலுக்குப் போய்விடுகின்றன. திருகோணமலை, மூதூர் பகுதியில் ஒரு முறை அளவுக்கு அதிகமான மீன்கள் பிடிக்கப்பட்ட காரணம் மீன்களின் இடப்பெயர்ச்சியே ஆகும்.

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் ஆதிவாசிகள் இம்மிருகங்களினதும், பறவையினதும், ஊர்வனவதும் இடப்பெயர்ச்சியை அவதானித்து தாமும் ஆபத்தின் தாக்கத்தில் இருந்து இடம் பெயர்ந்தமையால் அவர்களில் மரணம் அடைந்தோர்களினது தொகை பெரிதாக இருக்கவில்லை.

1975 இல் சீனாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் மக்கள் மிருகங்களினதும், பறவைகளினதும், ஊர்வனவினதும் இடப்பெயர்ச்சியைப் பார்த்துத் தாமும் ஆபத்தின் தாக்கத்தில் இருந்து இடம் பெயர்ந்ததால் பலரது உயிர்கள் காப்பாற்றப்பட்டன. சீனர்கள் பல்லாயிரக்கணக்கான பாம்புகளின் இடப்பெயர்வையும் புறாக்களின் வழக்கத்திற்கு மாறுபட்ட செயற்பாடுகளையும் கவனத்தில் எடுத்தமையால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

அநேகமாக எல்லா மிருகங்கள், பறைவைகள், நீர்வாழ்வன, ஊர்வனவிற்கு பூகம்பத்தின் சிறு தாக்கம் கூட உடனடியாகத் தெரிந்து விடுகின்றது. அதனால்தான் சுமாத்திராவில் இரண்டாம் முறை பூகம்பத்தின் தாக்கத்தின் அளவையும் அதனால் சுனாமி ஆழிப்பேரலை ஏற்படாதென்பதையும் அறிந்து அவை எந்தவிதமான இடம் பெயர்வையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் அதேநேரம் பூகம்பத்தின் தாக்கத்தின் அளவை அறிவித்த உடனேயே பல நாட்டு மக்களும் சுனாமி ஆழிப்பேரலையின் தாக்கத்திற்குப் பயந்து இடம் பெயர்வை மேற்கொண்டனர். இலங்கை அரசாங்கமும் கடற்கரையை அண்டி வாழும் மக்களை உடனடியாகவே மேட்டு இடத்தை நோக்கி இடம் பெயருமாறு கேட்டுக்கொண்டது.

இதிலிருந்து மிருகங்கள், பறவைகள், நீர்வாழ்வன, ஊர்வனவற்றின் வழக்கத்திற்கு மாறுபட்ட செயற்பாடுகளில் கவனமெடுத்தால் பல அனர்த்தங்களில் இருந்து விடுபட வழிகிடைக்கலாம் என அறிய முடிகிறது. ❏

நன்றி: தினக்குரல்
அறிவு ஆரம், *17.06.2005*

# சுனாமி அனர்த்தமும் அதன் பின்விளைவுகளும்

**க. வேல்தஞ்சன்**

26.12.2004 அன்று இந்தோனேசியாவின் சுமாத்திரா பிராந்தியத்தில் ஆச்சே மாகாணத்துக்கு அண்மித்த கடலடிக்குள் ஏற்பட்ட பூகம்பச் செயற்பாட்டினால் உருவான சுனாமி இராட்சத அலைகள் ஆசியாவில் இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான மனித உயிர்களைக் குடித்துவிட்டது.

இரண்டாவது உலகப்போரின் இறுதிக் கட்டத்தில் ஜப்பானைச் சரணடைய வைப்பதற்காக அமெரிக்காவில் ஹிரோசிமா நகரின்மீது போடப்பட்ட அணுக்குண்டுபோல இருபத்தைந்து மடங்கான சக்தியை இப்பூகம்பச் செயற்பாடு ஆரம்பித்த இடத்தில் வெளியிட்டதாக கணிக்கப்பட்டது.

சுனாமி தாக்கிய நாடுகளின் கரையோரக் கிராமங்களிலும் நகரங்களிலும் பஸ் வண்டிகளும் ட்ரக் வண்டிகளும் தீப்பெட்டிகள் அள்ளுண்டு போவதுபோல இராட்சத அலைகளால் தூக்கி ஏறியப்பட்டு அள்ளுண்டுபோயின. இந்தச் சுனாமியின் இராட்சதச் சக்தியைக் கற்பனை செய்வது கடினமானது.

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் ஆகியனவற்றின் கரையோரக் கிராமங்களும் நகரங்களும் பெரும் உயிரழிவுகளையும் பொருளாதார அழிவுகளையும் சந்தித்துள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கிலும் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பிரதேசங்களிலும் உயிரழிவுகளும் பொருளாதார அழிவுகளும் ஏற்பட்டுள்ளன. அதேபோல திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களும் அழிவுகளைச் சந்தித்துள்ளன.

இலங்கையின் காலிமாவட்டத்தின் கரையோரமாக அமைந்திருக்கின்ற தெல்வத்தை உப புகையிரத நிலையத்தில் தரித்து நின்ற தொடர் பெட்டிகள் அலைகளால் பெருவிசையுடன் உதைத்து உடைக்கப்பட்டு தனித்தனியாக்கப்பட்டு ஒவ்வொரு பெட்டிகளும் அலைகளால் அள்ளிச் செல்லப்பட்டன.

சாதாரண உலோகக் கம்பிகளைப் பெயர்த்து நெளித்து முறுக்குவதுபோல சுனாமியால் தெல்வத்தை புகையிரதநிலையப் பகுதியில் தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டு நெளித்து முறுக்கப்பட்டுள்ளன. புகையிரதத்தில் பயணித்தவர்களும் இராட்சத அலைகளுக்குப் பயந்து புகையிரதத்துள் ஏறியவர்களுமாக 1000 பேருக்கும் மேற்பட்டோர் புகையிரதப் பெட்டிகளுடன் கடலுக்குள் அள்ளிச் செல்லப்பட்டுள்ளார்கள்.

தெல்வத்தை அழிவில் யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த யாழ். மாநகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜீவநாதன் தனது மனைவி, மூத்தமகன், வயதான தந்தை, சகோதரி ஆகியோரை இழந்துள்ளார். கதிர்காமம் செல்வதற்காக இவர்கள் அப்புகையிரதத்தில் பயணித்தனர். ஜீவநாதனும் அவரது மூன்று பெண் பிள்ளைகளும் இளைய மகனும் மட்டுமே உயிர்தப்பியவர்கள். இவற்றில் பயணம் செய்த வெளிநாட்டவர் உட்பட மூன்று மொழிகளிலும் பிரிவின் ஓலத்தைக் கேட்க முடிந்ததுடன் அந்த அவலத்திலும் ஏனைய இடங்களில் நடந்ததுபோலவே பரஸ்பரம் தத்தம் உயிர்களையும் பொருட்படுத்தாது இனமதபேதங்களின்றி உதவிய சம்பவங்களும் நடந்துள்ளன.




## சுனாமி தாக்கிய ஆசியப்பகுதிகள்

இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணம், இலங்கையின் தென்பகுதி, கிழக்குப்பகுதி, வடக்குப்பகுதி கரையோரப் பிரதேசங்கள், இந்தியாவின் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் கரையோரங்களும், அந்தமான், நிக்கோபார் தீவுகளும், தாய்லாந்து, மாலைதீவுகள், மலேசியா, மியன்மார், பங்களாதேஷ் ஆகிய ஆசியப்பிராந்திய நாடுகளும், சோமாலியா, கென்யா ஆகிய ஆபிரிக்க நாடுகளும் சுனாமியால் பெரும் பாதிப்புக்குட்பட்டன.

இந்தோனேசியாவில் 200,000 பேரும், இலங்கையில் 40,000 பேரும், இந்தியாவில் 20,000 பேரும், தாய்லாந்தில் 5,000 பேரும், மாலைதீவில் நூற்றுக்கணக்கானவர்களும் சுனாமியால் மடிந்துள்ளனர். மியன்மாரில் 60 பேரும், பங்களாதேசில் இரண்டுபேரும் மடிந்துள்ளனர். சோமாலியாவில் 150 பேர்வரை உயிரிழந்துள்ளனர்.

## மழலைகள் அழிந்தன

உயிரிழப்புக்களிலும் பாதிக்கப்பட்டோரிலும் அரைவாசித் தொகையினர் மழலைகளும் சிறுவர்களும் பெண்களும் ஆவார். சுனாமியால் ஆசியாவில் 80,000 மழலைகள் அல்லது சிறுவர்கள்



கடலால் அள்ளிச் சூறையாடப்பட்டனர். நீரில் மூழ்கி இறந்துபோயினர். ஆசிய சமூகங்களின் ஒரு ஆரோக்கியமான சந்ததி அழிந்து போயிற்று. எஞ்சியிருக்கும் தப்பிப்பிழைத்தவர் களுள் காணப்படும் மழலைகளும் சிறுவர்களும் இடம்பெயர்ந்து உள்ளனர். அவர்கள் தமது பெற்றோரையும் சகோதரர்களையும் இழந்துள்ளனர்.

சுனாமியால் அழிந்துபோனவர்களில், பாதிக்கப்பட்டவர் களில் மழலைகளும் சிறுவர்களும் பெண்களும் அரைவாசிப் பங்கினராக இருக்கிறார்கள் எனும் அதிர்ச்சிதரும் தகவல் அந்தந்த நாடுகளின் அரசாங்கங்கள், சமூக அமைப்புக்கள் என்பனவற்றின் மீது பாரிய அனர்த்த முகாமைத்துவப் பொறுப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

சுனாமியிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உடற்காயங்களுக்கும் உளத்தாக்கங்களுக்கும் உட்பட்டுப்போயுள்ளனர். ஆசியநாடுகளின் பல இலட்சம் குடும்பங்கள் தங்கள் வாழ்விடங்களை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளன.

## மதிப்பிடமுடிந்ததும் மதிப்பிடமுடியாததும்

ஆசியாவில் பொருளாதார ரீதியான இழப்புக்கள் பல்லாயிரக்கணக்கான மில்லியன் டொலர்களில் மதிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் ஆசியப் பிராந்தியத்தில் இடம்பெற்ற மானிட வாழ்வின் அழகிய மகிமைக்கும், விழுமியங்களுக்கும், நிம்மதிக்கும், சமூக ஒழுங்குகளுக்கும் ஏற்பட்ட இழப்புக்கள் டொலர்களில் மதிப்பிடவே முடியாதவை.

இந்நாடுகளில் பொருளாதார உட்கட்டுமானங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை அடுத்த சில ஆண்டுகளுள் புனர்நிர்மாணம் செய்யமுடியும். சமூகங்களுக்கு ஏற்பட்ட உளவியல் இழப்புக்களை புனர்நிர்மாணம் செய்வது பெரிய சவலாகும்.

## இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணமும் சுனாமியும்

இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவின் மொத்தப் பரப்பு 482,393 சதுர கிலோமீற்றரும், மொத்தச் சனத்தொகை 43,947,100 (1999 சனத்தொகை கணிப்பீடு)யும் ஆகும். சுமாத்திராவில் ஆச்சே மாகாணம் 55,390 சதுரகிலோமீற்றரும், சனத்தொகை 4,144,500 (1999 சனத்தொகை கணிப்பீடு) ஆகும். ஆச்சே மாகாணத்தின் பிரதான நகரம் பண்ட ஆச்சே என்பதாகும். சுமாத்திராவில் ஆச்சேனிஸ் இனமக்கள் பெரும்பான்மையாக வாழும் மாகாணமே ஆச்சே மாகாணமாகும்.

ஆச்சே மாகாணத்தில் 1970களின் நடுப்பகுதியிலிருந்து ஆச்சே விடுதலை இயக்கம் போராட்டம் நடத்திவருகிறது. இந்தோனேசிய இராணுவமும் ஆச்சே விடுதலை இயக்கமும் கடந்த 25 வருடங்களாக போர் புரிந்து வருவதனால் ஆச்சே மாகாணம் ஏற்கனவே அழிந்திருந்தது. 1999 நவம்பரில் 10லட்சம் மக்கள் ஆச்சே மாகாண வீதிகளில் இறங்கி சுதந்திரப் பிரகடனத்துக்கான அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று இந்தோனேசிய அரசாங்கத்தைக் கோரி பெரும் ஆர்பாட்டம் செய்தனர். இந்தோனேசியாவின் பூர்வீகமான மாகாணங்களுள் ஒன்றான ஆச்சே மாகாணம் தனிநாடாகப் பிரிந்து சென்றுவிடுமோ என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டது. ஆச்சே மக்களின் போராட்டத்தில் 1990களில் 5,000 மக்கள் கொல்லப்பட்டனர். மேலும் பல இந்தோனேசிய மாகாணங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகளையும் இந்தோனேசியப் படை பலத்த உயிர்ச்சேதங்களை விளைவித்து அடக்கியது.

2002 டிசம்பரில் இந்தோனேசிய அரசாங்கமும் ஆச்சே விடுதலைப்போராட்ட இயக்கமும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. எனினும் உடன்படிக்கை முறிவடைந்து மீண்டும் போர் தொடங்கியது. இந்தோனேசியப் படைகள் ஆச்சே மாகாணத்தின் தலைநகர் உட்பட பல முக்கிய கேந்திரங்களைக் கைப்பற்றின. இவ்வாறான பின்புலம்கொண்ட ஆச்சே மாகாணத்தில் சுனாமியால் 200,000 பேர் மடிந்துள்ளனர். அபிவிருத்தி உட்கட்டுமானங்கள் அழிந்துள்ளன. பெரும் பொருளாதார மானிட நஷ்டங்கள் உருவாகியுள்ளன. சுனாமி அனர்த்தம் அழிவுகளை ஏற்படுத்திய ஒரு சில நாட்களுக்குள்ளேயே அமெரிக்கப் படைகளை ஆச்சே மாகாணத்துக்கு இந்தோனேசியா அரசாங்கம் வரவழைத்து விட்டது. அமெரிக்கப் படைகள் அனர்த்த மீட்பு நடவடிக்கைகளுக்கு என்று சொல்லியே அங்கு வரவழைக்கப் பட்டன. ஆச்சே விடுதலை இயக்கம் ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடித்து சுனாமி நிவாரண நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்கிவருகிறது.

2005 ஜனவரி முதல் வாரத்தில் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின்பவல் ஆச்சே மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார். இதுவரையில் ஆச்சே மாகாணத்துக்குச் சென்ற மிகப்பெரிய சர்வதேச பிரபலம் மிக்க இராஜதந்திரி கொலின் பவல்தான். பல வருடங்கள் நடந்த ஆச்சே விடுதலைப் போராட்ட

காலத்திலோ அதனையடுத்தோ வேறு எந்த முக்கிய பிரமுகர்களும் அங்கு சென்றிருக்கவில்லை.

அங்கு சென்ற கொலின் பவல், ஆச்சே மாகாணத்துக்கான அமெரிக்க படைகளின் நிவாரண நடவடிக்கைகள் மேலும் அதிகரிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

அதனையடுத்து கொலின் பவல் இந்தோனேசிய ஜனாதிபதி சுசிலோ பம்பாங் யுட்ஹெரயோனோவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

அதன் பின்னர் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளும், ஏனைய பல உதவி வழங்கும் நாடுகளும், அமைப்புக்களும் கலந்துகொண்ட ஜகார்த்தாவில் நடைபெற்ற சுனாமி அனர்த்த உச்சி மாநாட்டில் கொலின் பவல் கலந்து கொண்டார்.

சுனாமி, இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணத்துக்கு அமெரிக்கப் படைகளைக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது என்பது கவனிக்கத்தக்க விடயமாகும். சுனாமி இராட்சத அலையின் அனர்த்த மீட்பு என்ற காரணத்துடன், மனிதாபிமான மீட்புப்பணி எனும் நோக்கத்தை வெளியிட்டபடி அங்கு அமெரிக்கா காலூன்றி விட்டது. அண்மையில் ஆச்சே விடுதலை இயக்கத்துக்கும் இந்தோனேசிய அரசாங்கத்துக்குமிடையில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ளன.

### இலங்கையும் சுனாமியும்

இலங்கையில் சுனாமி அனர்த்தத்தால் இலங்கைப் பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் உடனடியாக 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது. (1300 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) இக்கணிப்பீட்டுக்குள் மனிதவள அழிவுகள் உட்படுத்தப்படவில்லை. வடக்கு கிழக்கு மாகாணத்தின் இழப்புக்களின் உண்மையான மதிப்பீடுகள் உள்ளடக்கப்படவில்லை.

ஏற்கனவே கால் நூற்றாண்டாக இனப் போரினால் அழிந்துபோய், பிரதான தேசியப் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களால் பெரிதும் புறக்கணிக்கப்பட்டிருந்த அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் கரையோரக் கிராமங்கள், நகரங்கள், தத்தமது உட்கட்டுமானங்களையும் மக்களையும் சுனாமிக்குப் பறிகொடுத்துள்ளன. இலங்கையில் மடிந்த 40,000 பேரில் 90 வீதமானவர்கள் வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் ஆகும். ஏற்கனவே போரினால் பாதிக்கப்பட்டிருந்த மழலைகள், சிறுவர்கள், பெண்கள், முதியோர் மேலும் மோசமாக சுனாமியால் அழிக்கப்பட்டும் பாதிக்கப்பட்டுமுள்ளனர்.

கடந்த மூன்று வருடங்களாக விடுதலைப் புலிகளின் படையணிகளும், இலங்கை அரசாங்கப்படைகளும் போர் நிறுத்தம் ஒன்றை கடைப்பிடித்து வருகின்றபோதும், சுனாமி அனர்த்தத்துக்கு பல மாதங்கள் முன்பதாகவே முடங்கிவிட்டன. அக்கட்டத்தில் போர் மீண்டும் வெடிக்குமோ எனும் வகையில் இருதரப்பினரும் காரசாரமான வார்த்தைப் பிரயோகங்களைப் பரிமாறியிருந்தனர். விடுதலைப் புலிகளின் தலைமைகூட 2004 நவம்பர் மாவீரர் தின உரையில் அரசியல் சூனியம் தொடரமுடியாது எனச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அரசியல் பேச்சுவார்த்தையும், போருமென மாறிமாறிக் கழிந்த 25 வருடகால போராட்டக் காலத்தில் 2004 டிசம்பர் 26 சுனாமி அனர்த்தம் சர்வதேசப் படைகள் இலங்கைத் தீவில் காலூன்ற வழிகோலியுள்ளன. வழமையான வரலாற்று ஓட்டத்தை சடுதியாகத் திருப்பிவிட்டுள்ளது.

இலங்கை அனர்த்தம் நிகழ்ந்த அடுத்த சில நாட்களுக்குள் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா முதலிய நாடுகளின் கடற்படையும், இராணுவமும், கப்பல்களும் கனரகத் தளபாடங்களும் கனரக உலங்குவானூர்திகளும் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் வந்துசேர்ந்துவிட்டன. இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் அமெரிக்கப் படைகள் திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களுக்கும் சென்று சேரும் என்று கொழும்பில் செய்தியாளர்களுக்குத் தெரிவித்துள்ளார். வடக்கு-கிழக்கில் சுனாமி அனர்த்தத்தில் அழிந்துபோன இலங்கைக் கடற்படைத் தளங்களை மீள அமைத்துக் கொடுக்கும் பணிகளை இந்திய கடற்படை ஆரம்பித்துள்ளது.

ஜகார்த்தாவில் சுனாமி அனர்த்த உச்சி மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல், உலக வங்கி தலைவர் ஜேம்ஸ் டி. வுல்வ்வென்சன் ஆகியோர் இலங்கை அனர்த்தங்களைப் பார்வையிடவந்தனர். ஏற்கனவே அமெரிக்க ஜனாதிபதி பாதிக்கப்பட்ட நாடுகளுக்காக அறிவித்துள்ள 350 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் திட்டத்துக்கு அப்பால் அமெரிக்கா இலங்கைக்கு மேலதிக உதவிகளை வழங்கும் என்று அவர் அறிவித்துள்ளார். உலக வங்கி இடைக்கால உதவு தொகையாக 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கவுள்ளது.

சுனாமி அனர்த்தத்தையடுத்து பிராந்திய வல்லரசான



இந்தியாவும், உலக வல்லரசான அமெரிக்காவும் இராணுவ, பொருளாதார உதவிகளை இலங்கை அரசுக்கு வழங்குவதில் நானோ நீயோ என்று முண்டியடித்து முன்வருகின்ற போக்கை சாதாரண மக்களே அவதானித்து தமக்குள் பேசிக்கொள்கின்றனர்.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சுனாமி புனர்நிர்மாணம், புனர்வாழ்வு விவகாரங்களை நிர்வகிக்க விடுதலைப் புலிகளும், இலங்கை அரசாங்கமும் அங்கம் வகிக்கும் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்க இருதரப்பாரும் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தனர். சர்வதேச அரசுகளும் சர்வதேச நிதிநிறுவனங்களும் அவ்வாறான பொதுக்கட்டமைப்பை உருவாக்கும்படி அழுத்தம் கொடுத்தன.

இவ்வாறாக சுனாமி அனர்த்தத்தின் மானிடச் சீரழிவுகளும் இழப்புக்களும் ஒருபக்கம் துவண்டு நொந்து கிடக்க அனர்த்த மீட்பு, அனர்த்த முகாமைத்துவம் என்பனவற்றின் பேரில் போரியல் இராஜதந்திரங்களும், அரசியல் உபாயங்களும் சுனாமியின் மறுபக்கமாக அவசர அவசரமாக நகர்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு இந்தோனேசிய, இலங்கைக் களங்கள் உதாரணங்களாகும். ❑

நன்றி: தாயகம்
*ஜனவரி - மார்ச், 2005*

## மன்னா தலையங்கம்

இயற்கை நம்மை மிகக் கொடுமையாக வஞ்சித்து விட்டது. கடலுக்குள் போனால்தான் ஆபத்து என்று நினைக்கும் மக்களை கடல் வீடுதேடி வந்து அவலக்குரல் எழுப்ப இழுத்துச் செல்லும் கோரக் காட்சி நெஞ்சை நெகிழ வைத்துவிட்டது. எல்லாமே ஓரிரு நிமிடங்கள்தான் ஆசிய நாடுகள் பலவற்றின் - குறிப்பாக இலங்கையின் - கரையோரப் பிரதேசங்கள் சிதைக்கப்பட்டு சுடுகாடாகி விட்டது. உயிர்களையும் உடமைகளையும் பறிகொடுத்த மக்கள் விரக்தியின் விளிம்பில் நின்று மௌனமாக மனதுக்குள் அழுகின்றனர்.

*பாராட்டப்படவேண்டிய பக்குவமான மனநிலை*

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசரமான மனிதாபிமான உதவிகளைச் செய்ய தனிநபர்களும் அமைப்புக்களும் விரைந்து முன்வந்து செயற்பட்டமை உண்மையில் பாராட்டப்பட வேண்டியதே! இப்படியான ஒரு தேசிய அனர்த்தத்தின் போது இன மத பிரதேச வேறுபாடுகளைக் கடந்து மக்கள் அனைவரும் சகோதர மனப்பான்மையோடு தம்மால் இயன்ற உதவிகளை துரிதமாக வழங்கியமை குறித்து பலரும் மகிழ்ச்சி தெரிவித்திருந்தார்கள். இன முரண்பாடுகளால் பிளவுண்டு கிடக்கும் இலங்கை மக்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றக் கிடைத்த அரிய சந்தர்ப்பமாக இது அமைந்திருந்தது. இந்த சகோதர மனப்பான்மை எல்லா வேளைகளிலும் எல்லா சந்தர்ப்பத்திலும் தொடரப்பட வேண்டியதொன்றாகும்.

*துரிதமாக்கப்பட வேண்டிய தொடர் உதவிகள்*

பாரிய மனித அவலங்கள் நடைபெறும்பொழுது அவற்றை தொலைக் காட்சிகளில் பார்த்த உடனே அல்லது அவை பற்றி செய்திகளில் கேள்விப்பட்ட உடனே அனுதாபப்படுவதும் உடனே ஏதாவது செய்ய வேண்டும் என்று உதவி செய்ய முற்படுவதும் வழமை. ஆனால் சில நாட்களிலேயே அந்த அனுதாப அலை அடங்கி ஒடுங்கி வற்றிப்போய் பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றி சிந்திக்கவே நேரமில்லாமல் நமது நாளாந்த கடமைகளில் நாம் மூழ்கி விடுவோம் ஆனால் இந்த அனர்த்தம் விளைவிக்கும் நீண்டகாலப்பாதிப்புக்கள் பற்றி பாதிக்கப்படாத அனைவருமே சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது மிகவும் முக்கியம்.

# உள்ளத்தை உறையவைத்த வெள்ளத்தின் கோரம்

சிதைக்கப்பட்ட மனித உயிர்களை மீளப் பெறமுடியாது. ஆனால் சின்னாபின்னமாக்கப்பட்ட உடைமைகளை நீண்ட காலத்திட்டத்தில் அரசும், அரசு சார்பற்ற நிறுவனங்களும் மீளவும் கட்டியெழுப்ப முயற்சிக்கும். இம்முயற்சிக்கு கை கொடுக்கும் அதேவேளை பாதிக்கப்படாத மக்கள் பாதிப்பிற்குள்ளான மக்கள் மட்டில் செய்யவேண்டிய இன்னுமொரு உதவி உள்ளது. அதாவது உள்ளத்தில் ஆறாத வடுக்களை ஏற்படுத்திச் சென்ற இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களோடு 'உடன் இருந்து' அவர்களின் சோகக் கதைகளுக்கு 'செவிமடுத்தல்' ஆகும்.

*எதிர்கால முன்னெச்சரிக்கை..!*

மிகப் பெரிய மனித அவலம் ஒன்று நடைபெற்று முடிந்த பின்னர் அதை எவ்வாறு தடுத்திருக்க முடியும் என்று புத்திசாலித்தனமாகப் பேசுவது மிகவும் சுலபம். மேற்குலக நிலவியல் வல்லுனர்கள் இப்பேரனர்த்தம் தொடர்பாக தெரிவித்து வரும் கருத்துக்கள் பற்றி இன்றைய எமது சூழ்நிலையில் இவ்வாறுதான் நம்மைச் சொல்லவைக்கின்றன. ஆயினும் அவர்களின் கருத்துக்கள் கவனத்துக்குரியவை.

ஆசியாவில் ஆயிரக்கணக்கான உயிர்களைக் கணப்பொழுதில் பலிகொண்ட கடற்கோளைப் போன்ற இயற்கை அனர்த்தங்களில் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை இயன்றவரை குறைக்கக்கூடிய முன்னெச்சரிக்கை அறிவிப்பு அமைப்பு முறைகள் (Early Warning Systems) நிர்மாணிப்பதற்கு உலக அரசாங்கங்கள் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்கள். ஆசியாவின் கரையோரத்தில் கடந்த டிசம்பர் 26ஆம் திகதி மலைக்கவைக்கும் ஆபத்தைத் தரக்கூடிய பூமியதிர்ச்சி ஒன்றைக் கண்டுபிடித்த அமெரிக்க அதிகாரிகள் இராட்சத அலைகள் நகர்ந்துகொண்டிருந்தது குறித்து எச்சரிக்கை செய்ய அவதிப்பட்டுக்கொண்டிருந்தபொழுதிலும், இப்பிராந்திய நாடுகளில் உத்தியோகபூர்வ முன்னெச்சரிக்கை அறிவிப்பு அமைப்பு முறை (Official Alert System) எதுவுமே இல்லாத காரணத்தினால் அவர்களின் முயற்சி பலனளிக்காமல் விபரீதம் ஏற்பட்டுவிட்டதாக அமெரிக்காவின் கவாய் தீவில் உள்ள பசுபிக் சுனாமி எச்சரிக்கை நிலையத்தின் (Tsunami Warning Centre) இயக்குனர் தெரிவித்திருந்தார்.



எனவே இதுவிடயத்தில் இனிமேலும் ஆசிய நாடுகள் மெத்தனமாக இருக்க முடியாது. விரைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எனவே பாதிப்புற்ற மக்களின் துன்பத்தை நம்முடையதாக எண்ணி சிந்திப்போம் செயற்படுவோம்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை

அன்புடன்,

**அருட்பணியாளர் நேசன்**

பதிப்பாசிரியர் - மன்னா

*ஜனவரி - 2005*

Meeting of the J.C.U. – Ex-Co meeting. The president Mr.D.R.Arumaynayagam presides with the secretary Rev.A.Jeyakumaran on his right.






Distribution of Katumaram at Polikandy by our field staff.

Meeting of the Task force including the befrienders, Fr.A.C. Christopher (R.C), Rev.V.N.Tharmakulasingam and Rev.G.A. Sathees are among the participants.





Tsunami disaster – worst affected family- Nine died – Mrs.Jegatheeswary of Thumpalai Point Pedro receives the cash gift donated by the Mothers Union of St.Margaret's Tamil Anglican Church, Canada.



# மீண்டும் கடல் அமைதிகொண்டு தானும் வழமைக்குத் திரும்பி எம்மையும் அழைக்கின்றது

அருள் கலாநிதி அ. பி. ஜெயசேகரம்

கடல்கோள் எமது வாழ்வுக் காலத்தின் கொடூர அனுபவம். அப்பாவி மனிதர்கள் ஒரு கணத்தில் காவு கொள்ளப்பட்டது. வாழ்வாதாரங்கள் அடித்துச் செல்லப்பட்டது. குழந்தைகளை இழந்த பெற்றோர்களது சோகக் கதைகள்! அவலக் குரல்கள்! பிணக்குவியல்கள்! வார்தையில் வடிக்க முடியாத, எமது வரலாற்றுக் காலங்களில் கேள்விப்படாத, வாழ்வில் முன்னரே அனுபவிக்காத, அறிவினால் அளவிடமுடியாத, உணர்வினால் தாங்கமுடியாத ஒரு பேர் அதிர்வு! இது பல வினாக்களை விட்டுச் சென்றுள்ளது. குறிப்பாக சமயவாதிகளின் மரபு நம்பிக்கையை கேள்விக் குறியாக்கியுள்ளது.

இறையியல் உட்பட அனைத்து அறிவியல் துறைகளில் தயாரிக்கப்பட்ட விடைகள் எக்காலத்திற்கும் பொருந்தும் என்று நாம் சொல்வதற்கில்லை. மாறாக வரலாற்று நிகழ்வுகள்வழி அவை தொடர்ந்து ஆய்வுசெய்யப்பட வேண்டிய தேவை உண்டு என்பதையும் இறை நம்பிக்கையை அறிவியல் ஒளியில் விரித்துரைக்க வேண்டிய கட்டுப்பாடு உண்டு என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளவேண்டி உள்ளது.

இந்த கடற்கோள் நிகழ்வு ஒரு சிலரின் இறை நம்பிக்கையை தகர்த்துள்ளது என்பது உண்மை. எனவே இவர்களுக்கு மீண்டும் போலி நம்பிக்கைகளைக் கொடுத்து கடவுள் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் முறையாகாது. இவ்வழிவிற்குக் காரணம் மனிதர்களுடைய பாவங்கள் தான் என்று மேலோட்டமான விடைகளைக் கொடுத்து மேலும் பாதிக்கப்பட்டவர்களை மனநோயாளிகளாய் ஆக்காமல், பனையால் விழுந்தவனை மாடேறி மிதிக்காமல் – பார்ப்பது முக்கியமானது.

இவ்வனர்த்தம் நடந்த முகாம்களில் உள்ளவர்களை சந்தித்த பொழுது அவர்கள் அனைவரும் மௌனமாக இருந்தார்கள். தரிசிக்கச் சென்றவர்களுடன் கதைக்க அவர்கள் விரும்பவில்லை. குருக்களுடனும் அவர்கள் பேச விரும்பவில்லை. இராணுவ தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களின் முகாம்களை தரிசித்தபொழுது அவர்கள் பேச ஆர்வம் உள்ளவர்களாக இருந்தார்கள். இவ்வதிர்வு அவர்கள் கடவுள் நம்பிக்கையை சிதைத்து விட்டது என்பதையும் காணமுடிகிறது. இவ்வழிவில் இறைவன் எங்கே இருந்தார்? ஏன் அவர் அமைதியானார்! ஏன் அவர் இதில் தலையிட்டு அழிவைத் தடுத்திருக்க முடியாதா? இது பலருடைய கேள்விகள்! இறைவனின் படைப்பாற்றலும் அவர் செய்முறையும் வேறுபட்டது. மனிதர்கள் எதிர்வு அல்லது சோதிடம் கூறுவதுபோல் ஒவ்வொரு கணமும் நடப்பவற்றை கூறுபவர் அல்ல இறைவன். எப்பொழுதும் மாறும் தன்மை கொண்டுள்ள பிரபஞ்சத்தையும் சுதந்திரமாக சிந்தித்து செயல்படுகின்ற மனிதனையும் இறைவன் உருவாக்கினார். எனவே மனிதர்களும் இயற்கையும் இறைவனுடைய திட்டத்திற்கமைய தமது நோக்கை அடையத்தவிக்கின்றன. எனவே இறைவன் ஒவ்வொரு கணமும் தலையிடுவதில்லை. அதாவது அழிவுகள் துன்பங்கள் வரவிட்டால் ஒவ்வொரு கணமும் இறைவன் தலையிட வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது.

எவ்விதமாக மனிதனுக்குக்

கொடுத்த கொடையாகிய சுதந்திரத்தை இறைவன் மதித்து அதில் தலையிடுவ தில்லையோ அதே விதத்தில் இயற்கையின் உருமாற்றத்திலும், அதன் செய்முறையிலும் இறைவன் தலையிடுவதில்லை.

இயற்கைக்குத் தனித்துவமான வளர்ச்சி, படைப்பாற்றல், இயங்கியல், உண்டு. மேலும் அதிநுட்ப ஒழுங்குமுறையோடு அதியுயர் அறிவுசார்ந்ததாகவும் உயிருள்ளதாகவும் அது இயங்குகிறது. இதை மனிதர்கள் ஆழமாக அறிந்துகொள்வது கடினம். இந்த உலகமும் இயற்கையும் மனிதர்களுக்கு சொந்தமான தளம் மட்டுமல்ல மறு உயிரினங்களுக்கும் இதுதான் வீடு. இறைவன் மனித சுதந்திரத்திற்கு எதிராகவும் இயற்கையின் நுணுக்கமான ஒழுங்கு முறைக்கு எதிராகவும் மறைமுகமாக செயற்படுபவரல்ல. தமது அதிகாரத்தில் எல்லாம் தெரிய வேண்டும் என்று உயர் அதிகாரிகள் விரும்புவர். இறைவன் அப்படியல்ல. இறைவன் தனது நோக்கை எவ்விதத்தில் நிறைவேற்றுகிறார் என்பது எமக்குத் தெரியாது எனக் கூறினாலும் தெரிந்துகொள்வது கடினம். ஏதோ குற்றத்தில் பிடிபட்டிருக்கும் ஒரு மனிதனின் விடிவிற்கு தலையிடுபவர் அல்ல இறைவன். மனித வாழ்விலும் படைப்பிலும் துன்பங்கள் துயரங்கள் வகிக்கும் பங்கு எமக்கு ஆழமாகத் தெரியாது. துன்பங்களை எப்படியும் தவிர்த்து வாழ விரும்புகிறோம்.ஆனால் இறைவன் வேறுபட்ட விதத்தில் சிந்திக்கிறவர். இருப்பினும் அவரை விளங்கிக்கொள்ள எமக்கு சில துப்புக்களைத் தருகிறார்.

**கிறீஸ்தவ இறையியல் நோக்கில்:**

தனது மகன் இயேசுவில் இறைவன் எம்மோடு ஒன்றித்து துன்பப்பட்டுள்ளார். இயேசுவும் தந்தையால் கைவிடப்பட்டார். தாம் இறைமகன் என்றுணர்ந்து தந்தையில் அபார நம்பிக்கை வைத்தார். "கடவுள் அவரைக் காப்பாற்றட்டும், அவன் தன்னை இறைமகன் என்று கூறினான்" என்றார்கள் யூதர்கள் (மத். 27:43). இறைவன் அவரைக் காப்பாற்றவில்லை. அதற்கு விளக்கம் இறைவனால் கொடுக்கப்படவில்லை. விளக்கினாலும் புரிந்துகொள்ளும் சக்தி எமக்குமில்லை. மாண்பு கலந்த அமைதியில் இறைவன் செயற்படுகிறவர். தனது இறைத்தன்மையையும் இறையாண்மையையும் நியாயப்படுத்துபவரல்ல இறைவன்.

இறைவன் எம்மிடம் எதிர்பார்ப்பது நம்பிக்கையும் பூரண அர்ப்பணிப்பும். இறைவனின் மௌனத்தை கிறிஸ்து சிலுவையில் உணர்ந்தார். இறைவா, இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர் (மத். 27:46) இது அவநம்பிக்கையின் குமுறல் அல்ல. தண்டனையின் வெளிப்பாடுமல்ல. எனது ஆவியை ஒப்படைக்கின்றேன் என்ற அடுத்த கூற்று அவரிடம் இருந்த ஆதங்கத்தையும் ஒரு புரிந்துணர்வையும் பூரண அர்ப்பணிப்பையும் சந்தேகமின்றி எடுத்துரைக்கிறது. ஆழ்நிலை தியானங்களில் வாழ்ந்த புனிதர்கள் பலர் ஆன்மாவின் மிக இருண்ட பகுதியை அனுபவித்தவர்கள். மேலும் யோபுவுடைய அனுபவமும் எமக்கு இறைவனுடைய மறைபொருளை புரிந்துகொள்வது கடினம் என்று காட்டுகிறது. யோபு ஒரு வரலாற்று மனிதரல்ல. துன்பியலின் உச்சக் குறியீடாக வேதாகமத்தில் காண்பிக்கப்படுகிறார்.

நல்லவர்கள் ஏன் தண்டிக்கப்பட வேண்டும்? என்பது யோபுவுடைய கேள்வி. சுனாமியால் இறந்தவர்களுள் 40 விழுக்காடு குழந்தைகள், சிறுவர்கள், ஏன் அப்பாவிக் குழந்தைகள்! இறைவனுடைய ஆழமான மறைபொருட்தன்மைக்கு மேலோட்டமான விடைகளைக் கொடுத்து குறிப்பாக பாவம்தான் காரணம் என்று முடிவுகட்டல் இறைவனின் அளவு கடந்த பராமரிப்பன்பை கொச்சைப்படுத்துவதாகும்.

கிறீஸ்துவின் அனுபவம் இதை விளக்க உதவும். பலி செலுத்திக் கொண்டிருந்த பரிசேயரை பிலாத்து கொன்று போட்டான் என்ற செய்தியை இயேசுவிடம் அறிவித்தனர். அவர் அவர்களிடம் மறுமொழியாக "இக்கலிலேயருக்கு இவ்வாறு நிகழ்ந்தால் இவர்கள் மற்றெல்லாக் கலிலேயர்களை விட பாவிகள் என நினைக்கிறீர்களா? அப்படியல்ல என உங்களுக்குச் சொல்கிறேன். சீலோவின் கோபுரம் விழுந்து பதினெட்டுப் பேரைக் கொன்றதே அவர்கள் யெருசலேமில் இருந்த எல்லாக் குடிகளை விட குற்றவாளிகள் என நினைக்கிறீர்களா? அப்படியல்ல என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் யேசு. (லூக் 13:1-5) "மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அப்படியே அழிவீர்கள்" என்கிறார் ஆண்டவர்.

இதில் கலிலேயர் கொலை செய்யப்பட்டது. சமூகப் பிளவையும் சீலோவாம் அழிவு இயற்கை அழிவையும் சுட்டுகிறது. தனிமனிதனாக மட்டுமல்ல. சமூகமாகவும் மனமாற்றமடைய வேண்டும். ஒரு முழுமையான மனமாற்றத்திற்கு புரட்சிகர மாற்றம், நிலைப்பாடு எடுத்தல் அவசியம் என்பதை வாழ்வோர் எம்மவருக்கு சுனாமி சொல்லிவிட்டுச் சென்றுள்ளது. ஒரு நினைவூட்டலைக் கொடுத்திருக்கிறது.

எம்மவர் வருவதும் போவதும் இக்கோளத்தில் மட்டும்தான், வேறு தெரிவு எமக்கு இல்லை. இதைப் பாதுகாப்பது எமது கடமை. வாழ்வதற்குத்தான் இவ்வுலகம்! ஆனால் மட்டு மீறிய தேவைக்கும் ஆசைக்குமல்ல. எனக்குத்தான் இவ்வுலகம் என்று இயங்கினால் இயற்கையோடு மனிதனும் அழிவான். மீன் வளங்களை வெடிமருந்தினால் அழித்தல் இயற்கையை மாசுபடுத்தல் பாவம். தர்மத்திற்கு எதிரானவை என்று மறைகள் உணர்த்த வேண்டும். எமது வாழ்வு குறுகியது, பலவீனமானது, பல அழிவுகளுக்கு உட்பட்டது. இயற்கைக்கும் கடவுளுக்கும் முன்னால் நொடிப்பொழுதில் அழியக் கூடியவர்கள் நாம். எமது வேற்றுமை தற்பெருமைகளை உடைக்க இது உதவ வேண்டும். மீண்டும் எமது கடல் அழகும் அமைதியும் கொண்டுள்ளது. தானும் வளமைக்குத் திரும்பி அது எம்மையும் அழைக்கிறது.

வரலாற்றில் கடற்கோள் நடந்துள்ளது. தமிழர்களுக்கு இது நான்காவது கடற்கோள். பல குடியிருப்புக்கள் சில நாகரிங்கள் முற்றாக அழிந்துள்ளன. இருப்பினும் எமது மூதாதையர் அழிவுகளையும் கடற்கோளையும் தாங்கி வாழ்வைத் தொடர்ந்தவர்கள். பிறப்பு, இளமை, வயோதிபம், இறப்பு இக் கூற்றுக்கள் கடலின் அசைவுகளுடன் அதன் வற்றுப் பெருக்கோடு இணைந்தது. அதுதான் பிரபஞ்சத்தின் நியதி. எம்மிடமிருந்து எடுக்க முடியாததொன்று துணிவு!. மனிதமாண்பு, இலட்சிய இறுக்கம் இதுதான் எமது வாழ்வை சுவையாக்கும் என்கிறார் ஜவர்தாலல் நேரு. நாசி வதைமுகாமில் இருந்து தப்பிப்பிழைத்த விக்டர் பிராங்கிலின் என்ற மனவள வைத்தியர் சொல்லுவார், வாழ்வதும் துன்பப்படுவதும் அனர்த்த அனுபவங்களில் இருந்து மீள்வதும் துன்பியலின் பொருண்மையை உணர்வதற்கே. வாழ்வியலிற்கு நோக்கு இருப்பின், துன்பியலிற்கும் நோக்கு உண்டு.

நன்றி: பாதுகாவலன்
*27.03.2005*

# சுனாமியும் அதன் தாக்கங்களும்

அருள் கலாநிதி ஸ்ரனி அன்ரனி (அ.ம.தி.)

சுனாமியின் அனர்த்தம் விட்டுச் சென்ற அதிர்வலைகள் மனித குலத்தின் இதயத்தை அதிரவைத்துள்ளது. அத்துடன் உலகத்தின் மனசாட்சியையும் உலுப்பியுள்ளது என்றே கூறலாம். தென்கிழக்கு ஆசியா இதுவரை சந்தித்திராத ஒரு பெரும் சோகம் நிகழ்ந்துவிட்டது. எங்கிருந்தோ வந்த சுனாமி கடற்சீற்றம் நமது சகோதர, சகோதரிகளின் வாழ்க்கையை சிதறடித்து விட்டது. ஆழிப்பெண்ணாள் ஆரவாரத்துடன் பொங்கிப் பீறிட்டு, பாய்ந்து ஊர்மனைகளைச் சூறையாடி உள்ளவர்களை காவுகொண்டு அனர்த்தம் புரிந்து மௌனமாய் அடங்கி நிற்கும் நிலையை காணுகின்றோம். இயற்கையின் சீற்றம் காவு கொண்டுவிட்ட உயிர்களை மீளவும் காணமுடியாது என்பது இயற்கையின் நியதியே. ஆனால், அதன் அதிர்வலைகள் விட்டுச் சென்ற ஈடுசெய்யமுடியாத சோகம், வேதனை, விரக்திகள், மடிவுகள் மனித இதயங்களில் அழியாத வடுக்களாக, மறையாத சுவடுகளாக ஆழப்பதிந்துள்ளதை மறக்க முடியாது. இதனை மனித குலம் கண்டிராத ஒரு மாபெரும் மனித அவலம் (Biggest Human Tragedy) என்றே கூறலாம். கடவுளையும் கடலையும் நம்பி வாழ்ந்த மக்களின் நம்பிக்கைகள் சிதறடிக்கப்பட்ட அவலநிலையைக் காணமுடிகின்றது.




இத்தகைய மனித அவலத்தை அரசியலாக்கி ஆதாயம் தேடுபவர்கள் சிலர். நிவாரணங்களை விழுங்கி ஏப்பம்விடக் காத்திருப்போர் பலர். இத்தகைய பின்னணியில் சுனாமியின் தாக்கங்களை இறையியல் பார்வையில் நோக்கி விடை காணா வினாக்களுக்கு விடைதேடும் ஒரு முயற்சியாக நோக்க முனைவது இயல்பானதே!

**கடவுள் கையாலாகாதவரா?**

இறைவனின் கரத்திலிருந்தே அனைத்துப் படைப்புக்களும் உருவானவை என்பதில் இரு கருத்து இருக்க முடியாது. ஒரு மாபெரும் வல்லமையுள்ள கடவுளாகவே இறைவன் சித்தரிக்கப்படுவது மாத்திரமல்ல அவரது செயல்களில் வல்லமை வெளிப்படும் நிலையையும் விவிலியத்தில் காணுகின்றோம். நோவாவின் காலத்து நிகழ்வு வரலாற்றிற்கு முற்பட்ட நிகழ்வாக கருதப்பட்டாலும் அதன் பின்னால் பொதிந்து கிடக்கும் மறையுண்மைகள் இன்றைய 'சுனாமி' யின் பின்னணியிலும் பொருத்தமானவையே. மனித குலத்தையும், அதன் படைப்புக்களையும் உருவாக்கிய இறைவன் அதனைக் கட்டுப்படுத்தும் வல்லமையற்ற கையாலாகாதவரா என்ற வினா இத்தகைய அனர்த்தத்தின் பின்னணியில் எழுகின்றது.

முதற்பெற்றோர் பாவம் செய்தபோது மண்ணும் சூழலும் பாதிக்கப்பட்டது விவிலிய உண்மையாகும். அதேபோன்று மனித குலத்தின் பாவங்களும் இயற்கையின் சீரான நிலையைக் குலைக்கின்றது என்பது உண்மையே. இதன் விளைவாகவே இயற்கை கட்டுக்கடங்காமல் அதன் எதிர்விளைவாக சீற்றமடைகின்றது. இதன் விளைவாகவே பல உயிர்கள், உறவுகள், உடமைகள் இழப்பிற்கும், ஈடுசெய்ய முடியா மனித குலத்தின் சோகத்திற்கும் காரணமாக அமைந்துவிடுகின்றது. இயற்கையின் சீற்றத்தை, கொடூரத்தை கட்டுப்படுத்த வல்லமையில்லாத ஒரு

கடவுளை என்றும் நம்பவேண்டுமா என்ற வினா எழுகின்றது. இறைவன் மனிதனை புடமிட, புனிதப்படுத்த, இயல்பான இயற்கையின் சீற்றத்தை அனுமதிக்கின்றார் என்பதே உண்மையாகும். அதேவேளையில் கடலை கட்டுப்படுத்தக்கூடிய வல்லவர் இறைவன் என்பதை யோபு நூல் கூறுகின்றது. "கருப்பையினின்று கடல் உடைப் பெடுத்து ஓடியபோது அதனை கதவிட்டு அடைத்தவர் யார்?" (யோபு 38:8) அத்துடன் திருப்பாடலிலும் கடவுள் இரைச்சலையும் அவற்றின் அலைகளின் ஓசையையும் அடக்குவதாகக் குறிப்பிடுகின்றார். (தி. பா. 65:7) எனவே இயற்கையின் சீற்றத்தை கட்டுப்படுத்தும் வல்லமை கொண்ட இறைவன் என்பது விவிலியத்தில் எண்பிக்கப்பட்டுள்ளது. எனவே சுனாமியின் காவு கொண்ட பயணம் இறைவன் அனுமதியுடன் அரங்கேறிய நிகழ்வாகக் கருத இடமுண்டு. அத்துடன் 'உன்கடவுளாகிய ஆண்டவர் நானே கடலைக் கலக்கி அலைகளை கொந்தளிக்கச் செய்பவர் நானே எனவும் உன்னை உருவாக்கிய கடவுளை மறந்துவிட்டதால் இப்படி நடந்துகொண்டார் எனவும் எசேக்கியேல் இறைவாக்கு கூறுகின்றது. (எசே 51:15) எனவே இயற்கையின் சீற்ற நிலைக்கு மனிதனின் இறைத்திட்டத்திற்கு விரோதமான செயல்களும் அமைந்துவிடுகின்றன. படைப்பை நெறிப்படுத்தி இயற்கையின் இயல்புகளுக்கேற்பவும், இறைவனின் தெய்வீகச் சட்டத்திற்கு அமைவாகவும் வளப்படுத்திய மனிதனின் இலக்கு திசைமாறிச் செல்வதாலும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட இடமுண்டு.



### கடல் தீமைகளின் உறைவிடமா?

விவிலிய நோக்கில் குறிப்பாக புதிய ஏற்பாட்டுப் பின்னணியில் கடலின் அடியில் தீயவன் வாழ்வதாகவும் கடல் தீமைகளின் உறைவிடமாகவும் கருதப்படுகின்றது. இதனை புதிய ஏற்பாட்டில் பல சந்தர்ப்பங்களில் காணுகின்றோம். குறிப்பாக இயேசுகடலை கடிந்துகொண்டதும், கடல்மேல் நடந்ததும் தீமையின் மீதும், தீயவன்மீதும் இயேசுவிற்கு இருந்த அதிகாரத்தை எண்பிக்கவே ஆகும். (மத் 8:26, மாற் 6:48) அதே வேளையில் செங்கடலைக் கடந்து அடிமை வாழ்விலிருந்து விடுதலை வாழ்விற்கு அழைத்துச் செல்லப்பட கடல் ஒரு ஊடகமாக அமைகின்றது.

இயேசுவின் வருகையினால் தீமைகளின் மீது அதிகாரம் செலுத்தி இறையாட்சியை நிலைநாட்டி நிறைவாழ்விற்கு அழைத்துச் செல்வதைக் குறித்து நிற்கின்றது. எனவே அழிவிலிருந்து வாழ்விற்கு அழைத்துச் செல்லும் வாயிலாகவே மரணங்களையும் இழப்புக்களையும் நோக்க 'சுனாமி' அழைப்பு விடுக்கின்றது.

அத்துடன் 'சுனாமி' காவுகொண்ட கடலும் கடற்கரைகளும் தீமைகளின் உறைவிடங்களாக அமைந்து விட்டதோ என்று சந்தேகிக்கவும் இடமுண்டு. குறிப்பாக ஒழுக்கவியலாளர் பார்வையில் அனர்த்தம் நடந்த கடற்கரை யோரங்கள் உல்லாசபுரிகளாகவும் ஒழுக்கக்கேடான செயல்கள் நிகழும் உல்லாச விடுதிகள் அமைந்த இடங்களாகவுமே கருதப்படுகின்றது.


பாதிக்கப்பட்ட பெரும்பாலான பகுதிகள் உல்லாசத்தையும் கேளிக்கைகளையும், ஒழுக்கக் கேடான நடத்தைகளைத் தூண்டும் மையங்களாக அமைந்து விட்டன என்றே ஒழுக்கவியலாளர் கருதுகின்றனர். இத்தகைய தீமைகளில் இருந்து மனிதர்களை விடுவித்து புனிதப்படுத்த இறைவன் இத்தகைய இயற்கைச் சீற்றத்திற்கு அனுமதியளித்தார் என்று எண்ணவும் இடமுண்டு. அத்துடன் கடற்கரையோரக் கிராமங்கள் பெரும்பாலும் குடிவெறி, தீமைகள், முறைகேடான குடும்ப வாழ்க்கை முறைகள், இன்னும் உழைப்பை பெருக்க பில்லி சூனியம் போன்ற தீமையான காரியங்களில் ஈடுபட்டதன் காரணமாக இறைவனின் அனுமதியுடன் கடல் அன்னையினால் தண்டிக்கப்பட்டு புதுவாழ்விற்கு அழைக்கப்பட்டார்களா என்று எண்ணவும் தோன்றுகின்றது. இன்னும் தீயவனின் துணையோடு செய்யப்படும் தீட்டான காரியங்கள் கடல் நீரில் கலக்கப்படும் நிலையில் இயற்கையைப் புனிதப்படுத்த வேண்டிய தேவை படைத்தவனுக்கு உண்டு என்ற நிலையையும் தோற்றுவித்து விடுகின்றது. இதன் அடிப்படையில் சுனாமியின் தாக்கங்கள் வெளியரங்கத்தில் ஈடுசெய்ய முடியாத இழப்புக்களையும் சொல்லொன்னாத் துயரங்களையும் சுமந்து நின்றாலும், மனிதனின் உள்ளரங்கத்தில் இறைவனைப் பற்றிய விழிப்புணர்வையும், மனிதன் வரையறைக்குட்பட்டவன் என்பதையும் அவன் சிருஷ்டிக்கப்பட்டவன் என்ற இயல்பை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்தும் நிகழ்வாகவும் அமைந்துவிடுகின்றது. நவீன இயலும், தொழில்நுட்ப முன்னேற்றங்களும் இயற்கையின் சீற்றத்தையோ, கடற் கொந்தளிப்பையோ முன்கூட்டியே அறிந்து எதிர்வு கூறலாமேயொழிய அவற்றைக் கட்டுப்படுத்தும் சக்தியும் ஆற்றலும் தொழில்நுட்ப விஞ்ஞானத்திற்கும் மனிதனுக்கும் இல்லையென்பது பகிரங்க இரகசியமாகும்.

### இழப்புக்களும் நம்பிக்கையும்

கடலன்னையின் சீற்றத்தினால் காவுகொண்ட உயிர்களை உறவுகளை ஈடுசெய்ய முடியாது என்பது உண்மையே. இத்தகைய சூழலில் இறைவனின் அன்பை இரக்கத்தை பாதிப்புற்ற மக்களுக்கு போதிப்பது மடமையே. மாறாக இறையியலாளர் பார்வையில் சுனாமி விட்டுச்சென்ற மறைப் பாடங்களை உள்ளத்தில் இருத்திச் செயல்படுவதே சாலச்சிறந்தது.

நோவாவின் காலத்து அழிவு விவிலிய நோக்கில் வரலாற்றுக்கு முற்பட்ட நிகழ்வாக குறிப்பிடப்பட்டாலும் ஒரு புது யுகத்திற்கு விடுத்திடும் நிகழ்வாக அதைக் கருத இடமுண்டு. அத்துடன் 'வாழ்வோரின் கடவுள்' எனக் குறிப்பிடப்படும் இறைவனில் நம்பிக்கை கொண்டோர் சாவையும் இழப்புக்களையும் வாழ்வின் முடிவு என்று கருதிவிட முடியாது. அத்துடன் சாவு மிகைப்படுத்தக்கூடிய நிகழ்வாக நற்செய்தி அறிவிப்புப்பணியில் இடம்பெற முடியாது. பாஸ்கா மறைபொருளின் பின்னணியில் சாவு வாழ்வுக்கான நுழைவாயிலாக 'கடத்தலாகவே' நோக்கப்பட வேண்டும். மனிதகுல வரலாறும் இன்பங்களையும் துன்பங்களையும் இழப்பையும் நம்பிக்கையையும் சுமந்து

செல்லும் நீரோட்டமாகவே இறைவன் என்ற இறுதி இலக்கை நோக்கி நகர்கின்றது.



மனித இயல்பில் 'சுனாமி' இறைவனின் இருப்பின் மட்டிலும் இரக்கத்தின் மட்டிலும் விடைகாணா வினாக்களை எழுப்பும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. ஆனால் இழப்புக்களை மடிவுகளை எப்போதுமே எதிர்மறையான நோக்கில் அணுகவேண்டும் என்று அல்ல. ஏனெனில் சாவையோ, துன்பத்தையோ கடவுள் உண்டாக்கவில்லை என்பது விவிலிய உண்மை யாகும். (ஞானாகமம் 1:13) எனவே கடவுள் உண்டாக்காத ஒன்றிற்காக கடவுளைக் கடிந்துகொள்வதில் அர்த்தமில்லை.

மாறாக சாவை வென்ற கிறீஸ்துவின் உயிர்ப்பில் பங்குகொள்ள அழைப்புப் பெற்றவர்கள் 'சுனாமி' விட்டுச்சென்ற இழப்புக்களை மிகைப்படுத்தி குளிர்காயமுடியாது.

ஒவ்வொரு ஒடிவும் விடிவை நோக்கிய பயணமாகிய இறைவனை மையமாகக்கொண்ட பயணத்திற்கு எம்மை இட்டுச் செல்லுகின்றது. 'சுனாமி' ஏற்படுத்திய அழிவுகள் மத்தியில் நின்று வேடிக்கை பார்க்கும் மனநிலையோ அல்லது அழிவுகளில் மூழ்கி நம்பிக்கையை இழக்கும் மனநிலையோ வரலாற்றை ஒரு இலக்கை நோக்கி நகர்த்தும் இறைவனின் பயணத்திற்கு தடைகளாகவே அமைந்துவிட முடியும். எந்தக் கொம்பனும் இறைவன் தமது திட்டத்திற்கு அமைவாக வழிநடத்தும் வரலாற்றை தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதே 'சுனாமி' சொல்லும் மறை பாடமாகும். பாதிப்புற்றவர்களுக்கு ஆற்றுப் படுத்தும் பணி எவ்வளவு இன்றியமையாததோ அதேபோன்று இறைவனைப் பற்றிய விழிப்புணர்வை மீண்டும் மனித இதயங்களில் ஊன்றச்செய்யும் பணிக்கு 'சுனாமி' வழிகோலியதும் தவிர்க்க முடியாததே.

**புது யுகத்திற்கு சுனாமி வித்திடுமா?**

ஒவ்வொரு மடிவிலும் ஒரு புதிய விடியல் தோன்றுகின்றது. மண்ணில் மடியும் ஒவ்வொரு மணியிலும் ஒரு கோதுமைப் பயிர் முளைவிடுகின்றது. கடலுக்கு இரையாகிப்போன உயிர்கள் ஒரு புதிய பரிமாணத்தையும் மனிதத்தில் தோற்றுவித்துள்ளது எனலாம். இறைத்தன்மையுள்ள கடவுள் மனிதனோடு ஐக்கியமாகவே மனித அவதாரம் எடுத்தார். இவ் மனித அவதாரம் மனித குலத்தின் மத்தியில் அனைவரும் சகோதரர்கள் என்ற மையத்தில், புள்ளியில் இணைந்துகொள்ள அழைப்பு விடுகின்றது. 'சுனாமி' அனர்த்தமும் பிளவுபட்ட வேறுபட்ட இதயங்களை மனிதத்தின் புள்ளியில் இணையவைத்ததன் மூலம் மீண்டும் ஒருமுறை சகோதரத்துவமும் இயேசுக் கிறீஸ்துவின் மனித அவதாரத்தின் மூலம் அனைத்துலக மனிதகுல ஒன்றிப்பை உணர்த்தி நிற்கின்றது. அனைவரும் இயேசுக்கிறீஸ்துவில் சகோதரர்கள் என்பதன் மூலம் அனைவரையும் அணைத்துச் செல்லும் மனித நேயமும், சகோதரத்துவ உணர்வும் மீண்டும் ஒரு முறை உறுதிசெய்யப்பட 'சுனாமி' வழிவகுத்துள்ளது எனலாம்.

எல்லைகளை, கோடுகளைத் தாண்டிய மனிதத்தின் அடித்தளத்தில் ஊற்றெடுக்கும் உறவுகளுக்கு வழிசமைக்கும் புதுயுகத்தை தோற்றுவிக்கும் நிகழ்வாக இவ்வனர்த்தம் அமையுமா என்பதைக் காலந்தான் சொல்லவேண்டும். மாறாக மனிதனின் இதயத்தை, ஆன்மாவை ஆழமாகப் பாதிக்காத ஒரு மனிதாபிமான (Sympathy) நிகழ்வா, வெறும் உதவிகள் என்ற வரையறுக்கப்பட்ட நிலையிலும், உதவும் நிலையிலும் மனித இதயத்தை ஆழமாக ஊடுருவாத இன்னுமொரு விபத்து என்று மறந்து போகும் நிலைக்கு மனித குலத்தை இட்டுச்செல்லுமா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். மனிதர்கள் இலகுவில் எல்லாவற்றையும் மறந்து போகக்கூடியவர்கள்.

நன்றி: மன்னா
*பெப்ரவரி, 2005*

கொடுமையையும், வறுமையையும்
கூடையிலே வெட்டிவை.
கொஞ்சம் நஞ்சம் பயமிருந்தால்
மூலையிலே கட்டிவை.
நெடுங்கவலை தீர்ந்ததென்று
நெஞ்சிலே எழுதி ஒட்டிவை.
நெருஞ்சிக் காட்டை அழித்து - அதில்
நெல்லு விதையைக் கொட்டிவை

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார்

கடவுள் மனிதனிடம்
சொன்னது இது:
நான் உன்னைக் குணப்படுத்துவேன்;
அதனால்தான்,
உன்னைத் துன்பப் படுத்துகிறேன்.
நான் உன்னை நேசிக்கிறேன்;
அதனால்தான்,
உன்னைத் தண்டிக்கிறேன்.

- இரவீந்திரநாத் தாகூர்

## மாறாத நினைவுகள்...



யாழ். கிறீஸ்தவ ஒன்றிய சுனாமி வேலைத்திட்ட ஒருவருட நிறைவின் நினைவு மலருக்கு, இச் செய்தியை தருவதில், பெருமகிழ்ச்சியடைகிறேன். அத்தோடு, இந் நிறுவனத்தின் செயற்பாட்டின் வளர்ச்சி கண்டு அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்".** (மத் 5:9)

உச்ச 'தானத்தின்' நிறைவே சமாதானம், பகிர்தல் வாழ்வில்தான் அமைதி வாழ்வு பிறந்திடும். ஓர் சமநிலை வாழ்வில்தான் இயற்கையின் அமைதியை, இறைவனின் இரக்கத்தை உணர்ந்திட முடியும். ஆனால் இறைவனின் பொறுமையை, இயற்கையின் சமநிலையை குழப்பிவிட்டால் அதன் சீற்றத்தை யாரும் அடக்கிவிட முடியாது. இதனை, 2004ஆம் ஆண்டு மார்கழி 26ஆம் நாள் "சுனாமி" (Tsunami) என்னும் கடலலை பறைசாற்றியது. எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் மறக்கமுடியாத கோர அழிவுகளை, 3,4 நிமிடங்களில் ஏற்படுத்திச் சென்றுவிட்டது.

இத் துயரினை துடைக்க, மக்களின் அவலங்களை போக்க, யாழ். கிறீஸ்தவ ஒன்றியம் சுனாமியினால் பாதிக்கப்பட்ட, மக்களுக்குப் பணிபுரிய மாரீசன்கூடல் கிராமத்திற்கு காலடியெடுத்து வைத்தனர். இவர்களின் ஆரம்பப் பணி, சுனாமியினால் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களை சுயநிலைக்கு ஊக்குவிப்பது. அவர்கள் சுயமாக, கௌரவமாக வாழ கருத்துரைகள் வழங்கி, அவர்களுக்கு வேண்டிய தொழில் உபகரணங்கள் வழங்க திட்டமிடப்பட்டிருந்தது. சிறப்பாக, அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கின்ற கல்வியை மாணவர்களுக்கு ஊட்டுவது அவர்களின் அடுத்த திட்டமாக அமைந்தது. அதன் அடிப்படையில், சீந்திபந்தல் என்ற கிராமத்தில் மாலை நேர வகுப்புக்களை, நடத்தி வருகின்றனர். மேலும் பாடசாலை செல்வதற்கு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி அவர்களைக் கல்வியில் ஊக்குவித்து வருகின்றனர். இயற்கையின் சமநிலையைப் பேணுவதற்கும், அழிந்துபோன மரங்களை ஈடுசெய்வதற்கும் மரக்கன்றுகளை வழங்கி அதன் பயன்களை பெற மக்களை ஊக்குவித்து வருகின்றனர். இவ்வாறான அவர்களின் மனித நேயப் பணிகள் பல. இத்தகைய பணிகளை இவர்கள் தொடர்ந்து ஆற்ற வேண்டும். இவர்கள் பணி சிறக்க, நல் வாழ்த்துக்களும், பாராட்டுக்களும

**அருள்பணி யே. பிரான்சிஸ்**
*பங்குத்தந்தை,*
*புனித கயித்தார் ஆலயம், மாரீசன் கூடல்.*



## உள்ளத்திலிருந்து...

யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் யாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கிடையில் அன்பையும் புரிந்துணர்வையும், கிறிஸ்தவ ஐக்கியத்தையும் வளர்ப்பதில் தன்னாலான பங்களிப்பைச் செய்துவந்துள்ளது. அத்துடன் நேரிய உள்ளத்துடன் கூட்டு வழிபாடுகளையும், கருத்தரங்குகளையும் நடாத்தி ஆவிக்குரிய வழிநடத்தலை செய்துவரும் கிறிஸ்தவ ஒன்றியம் 2004.12.26ஆம் திகதி இலங்கை வரலாற்றில் மறக்கமுடியாத சுனாமி பேரலையின் கோரத்தாண்டவத்தால் பல ஆயிரம் மக்களைப் பலியெடுத்தும் சொத்துக்கள் உடமைகள் உறவுகளை இழந்து பிரிந்து வாழும் மக்களுக்கு தம்மால் இயன்ற பணியைச் செய்ய யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் முற்பட்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களையும் இடப் பெயர்வினால் பாதிக்கப்பட்ட பொருட்தேவைகளையும் கல்வி சேவைகளையும் செய்து வருவது எப்பொழுதும் போற்றப்படவேண்டியதொன்றாகும்.

தனிச்சபைகளாகவன்றி கூட்டுத் திருச்சபைகளாகப் பணியை மேற்கொண்டு உண்மையான பாதிப்புக்குட்பட்டவர்களுக்கு நன்மைகள் சென்றடைய பாடுபடும் கிறிஸ்தவ ஒன்றியத்தின் சேவையைப்பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம். எமது நெடுந்தீவுப் பிரதேசத்திலும் தென்னிந்தியத் திருச்சபை பகல் பராமரிப்பு நிலையத்தின் பழைய மாணவர்கள் நடாத்தும் மாலை நேர வகுப்பிற்கு பொருள் உதவியும் சம்பளமும் வழங்கி எமது இளைய தலைமுறையினரை உற்சாகப்படுத்தி ஆழமான சேவைமனப்பான்மையும், கல்வியில் நன்மையையும், உணரச் செய்திருக்கும் கிறிஸ்தவ ஒன்றியத்தினரையும், ஒன்றியத்தின் தலைவர் திரு.அருமைநாயகம், முகாமையாளர் திரு.சின்னத்துரை, மற்றும் செயலாளர், உறுப்பினர்களையும் வாழ்த்திப் பாராட்டி நிற்கின்றோம்.

தென்னிந்தியத்திருச்சபை பகல் பராமரிப்புநிலையப் பழைய மாணவ ஒன்றியத்தினர் ஆண்டு 3இலிருந்து க.பொ.த.உ.தரம் வரையான வகுப்புக்களை நடாத்தி வருவதுடன் ஆறு ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகிறார்கள். அவ்விதம் அவர்களின் பணிகள் விரிவடைந்து யாழ். குடாநாடெங்கும் பணிகள் பெருகிட வாழ்த்துக்கள். இயேசுவின் திருப்பணியில் கூறப்பட்டதுபோல் என்கண்முன் காணும் சகோதரனிடத்தில் அன்பு கூராமல் தன் கண்ணால் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவாய்? என்பதுபோல் எம்முன் உள்ளபணி என்ன என்பதை ஆய்ந்து அறிந்து தூய உள்ளத்துடன் பணியாற்றிட யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தினரையும், அவர்களின் பணியையும், அவர்கள் வெளியிடும் மலருக்கு எனது ஆசியினையும். வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். உங்கள் பணி தொடர கிறிஸ்துவின் அன்பும் ஆசியும் நிறைவாக பொழியப்படும்.

கிறிஸ்துவின் பணியில்
**அருள்திரு. ஆர். யோன்செல்வம்**
*நெடுந்தீவு*

# தினக்குரல் தலையங்கம்

இலங்கை உட்பட ஆசியாவின் தென்பிராந்திய நாடுகள் பலவற்றை பெருஞ் சோகத்தில் ஆழ்த்திய கடற்கோளுக்குக் காரணமான பூமியதிர்ச்சி ஒரு நூற்றாண்டு கால இடைவெளியில் உலகில் இடம்பெற்ற ஐந்தாவது பெரிய பூமியதிர்ச்சியென்றும் 6 தசாப்தகால இடைவெளியில் உலகில் இடம்பெற்ற மிகப் பெரிய பூமியதிர்ச்சியென்றும் ஒரு வரலாற்றுப் பதிவைப் பெற்றிருக்கிறது.

இந்தோனேசியாவின் வட பகுதித் தீவான சுமாத்ராவின் கரையோரமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற பூமியதிர்ச்சியின் அளவை 8.9 றிச்டர் அலகு என்று அமெரிக்க மண்ணியல் ஆய்வு நிறுவனம் பதிவு செய்திருந்தது. இப்பூமியதிர்ச்சி வடதிசையில் வீச்சியக்கம் பெற்று பன்மடங்கு அதிர்வுகளுடன் அந்தமான் தீவுகளை அடைந்தது. இதனால் சுமார் 15 மீற்றர் உயரத்துக்கு மேலெழுந்து ஆர்ப்பரித்த கடல் அலைகள் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு, மலேசியா, தாய்லாந்து ஆகியவற்றின் கரையோரப் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான மக்களைப் பலி கொண்டிருப்பதுடன், இலட்சக்கணக்கான மக்களின் வீடு வாசல்கள் உடைமைகளைக் கடலுக்குள் இழுத்துச் சென்று அவர்களை கணப்பொழுதில் நிராதரவானோராக்கி விட்டது.

இயற்கையின் இந்தச் சீற்றத்தினால் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. நினைவுக்கெட்டிய காலத்தில் எமது நாட்டில் இடம் பெற்ற மிகவும் பெரிதான இக் கடற்கோளினால் 2,000 இற்கும் அதிகமானவர்கள் பலியாகிருப்பதாகவும் நாட்டின் ஜனத்தொகையில் சுமார் 5 சத வீதத்தினர் (10 இலட்சத்திற்கும் அதிகமானோர்) பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று மாலை அறிவித்திருந்தது. கிழக்குக் கரையோரமும், தென் பிராந்தியக் கரையோரமுமே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பலியானோர் தொகை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகின்றது.

இலங்கையின் வரலாற்றில் அதை மிகவும் மோசமாகப் பாதித்திருக்கும் இந்த இயற்கை அனர்த்தத்தின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார இழப்பு எத்தகையதாக இருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. நாட்டு நிலைமை குறித்து லண்டனில் இருக்கும் ஜனாதிபதி திருமதி குமாரதுங்கவுக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாகவே அவர் 'தேசிய அனர்த்த நிலை' யைப் பிரகடனம் செய்து அவசர உதவிக்காக சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

தென்னிந்தியாவின் கரையோரமாக ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பலியாகிய பெரும் அழிவுகளும் ஏற்பட்டிருப்பதையடுத்து தனது நாட்டின் கடற்படையை உஷார் நிலையில் வைக்குமாறு உத்தரவிட்ட இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் இலங்கைக்கு அவசர உதவிகளை உடனடியாகவே செய்ய முன்வந்திருக்கிறார்

## இழந்த பாக்கியமும் புதிய சாபக்கேடும்

இரு வாரங்களாக வெள்ளக் கொடுமையினால் அவலத்திற்குள் தள்ளப்பட்ட கிழக்கு மாகாண மக்கள் நிவாரண உதவிகளுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் இந்த வேதனை மிகு வேளையில் இயற்கை அவர்களை மீண்டும் மிகக் கொடூரமாக வஞ்சித்திருக்கிறது. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் கரையோரப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான வீடுகள் பொங்கியெழுந்த கடல் அலைகளினால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. பலியான நூற்றுக்கணக்கானோரில் அதிகப் பெரும்பான்மையினர் பெண்களும் சிறுவர்களுமேயாவர். இழுத்துக் கொண்டு போன கடலில் மிதந்து மீண்டும் கரைக்கு வரும் சடலங்களை மக்கள் கண்ணீர் தோய்ந்த முகங்களுடன் மீட்கும் காட்சிகள் நெஞ்சை உருக்குகின்றன. திருமலை நகரம் நேற்று 6 அடி கடல் நீரில் மூழ்கிக் கிடந்தது. யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சிக் கரையோரமும் முல்லைத்தீவு கரையோரமும் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக நேற்று மாலை பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடலுக்குள் போனால் தான் ஆபத்து என்று நினைக்கும் மக்களை கடல் வீடு தேடி வந்து இழுத்துச் செல்லும் இந்த அனர்த்தம் தலை நகர் கொழும்பில் வாழ்வின் பாதுகாப்பில் ஒரு விசித்திரமான நம்பிக்கையுடன் இருக்கும் உயர்மட்டத்தவர் தொடக்கம் கரையோரங்களில் அலை சாதாரணமாகவே வாசல்வரை வந்து போகும். தொலைவில் குடிசைகள் அமைத்து வாழ்க்கையை ஓட்டும் ஏழைகள் வரை சகல தரப்பினரையும் கடற்கோள் உலுப்பிவிட்டது.



அனர்த்தத்தின் பாரதூரத் தன்மையை அரசாங்கம் வெகுவாகவே உணர்ந்திருப்பதை அதன் உடனடிச் செயற்பாடுகள் உணர்த்துகின்றன. தேசிய அனர்த்த நிலையைப் பிரகடனம் செய்த திருமதி குமாரதுங்க லண்டனில் இருந்து அவசரமாக நாடு திரும்புகின்றார் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்திருக்கிறது. பாதிக்கப்பட்டிருக்கும் இலட்சக்கணக்கான மக்களுக்கு அவசர உதவிகளையும் நிவாரணத்தையும் வழங்குவதற்கு இலங்கைச் சமுதாயம் ஒன்றுபட்டு துரிதமாகவும் அர்ப்பணச் சிந்தையுடனும் செயற்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுகின்றோம்.

சரியாக ஒரு வாரத்துக்கு முன்னர் மேல்

மாகாணத்தின் கந்தானை முதல் நீர்கொழும்பு வரை கரையோரப் பகுதிகளிலும் யக்கல, கம்பஹ மற்றும் வரக்காப்பொல வரை உட்பகுதிகளிலும் உணரப்பட்ட நில அதிர்வையடுத்து கடந்த 22 ஆம் திகதி எமது ஆசிரிய தலையங்கத்தில் 'தெற்காசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை இயற்கை அனர்த்தங்களினால் படுமோசமாகப் பாதிக்கப்படாதிருந்துவரும் பாக்கியத்தைக்கொண்ட நாடு என்று கூறப்படுவதுண்டு. உக்கிரமடைந்த உள்நாட்டுப் போரில் இரு தசாப்த காலமாக பெரும் எண்ணிக்கையானோர் பலியாகிக் கொண்டிருந்த போது அதனால் கவலைப்பட்டவர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்ட அரசியல் வாதிகள் அந்தப் பாக்கியத்தைச் சுட்டிக்காட்டி, இலங்கைக்கு ஒரே சாபக்கேடு அந்தப் போர்தான் என்று கூறியதையும் நாம் கேட்டிருக்கின்றோம்' என்று குறிப்பிட்டிருந்தோம்.

போர்ச் சாபக்கேட்டை போக்கடிக்கக்கூடிய அரசியல் துணிச்சலும் தூரநோக்கும் கொண்ட தலைவர்கள் எம்மத்தியில் இல்லாத சாபக்கேட்டுக்கு மத்தியில் ஏற்கனவே இலங்கை மக்கள் கொண்டிருந்ததாகக் கருதப்பட்ட பாக்கியத்தையும் இழந்துவிட்டார்கள்... மேலும் வேதனை தரும் துரதிர்ஷ்டம்.

நேற்றைய அனர்த்தம் எமக்கு கடற்கோள் குறித்து சிலப்பதிகாரத்தில் 'பஃறுளி ஆற்றுடன் பன்முனை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள....' என்று வருவது போல் எமது இந்தச் சிறிய தேசத்துக்கு நேராதிருக்கட்டும் என்று வேண்டுவதைத் தவிர, வேறு என்ன செய்வது?

ஆசிரியர்,
தினக்குரல்
*27.12.2004*

## மாறாத நினைவுகள்...



யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் ஊடாக காரை நகரில் 'சுனாமி'யால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்யப்பட்ட பணிகள் மிகவும் மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கின்றது. சமய, சமூக வேறுபாடின்றி எமது இடத்தில் செய்யப்பட்ட பணியானது பாதிக்கப்பட்ட மக்களின் வயிற்றில் பால் வார்த்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம் எனும் சொல் இன்று காரைநகரில் பலர் வாயினால் ஒலிக்கும் அளவுக்கு காரையூரில் அதன் பணி மிக்க மகத்துவம் பெறுகிறது. காரைநகர் மக்கள் சார்பாக ஒன்றியத்தினருக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளை நல்குகின்றேன்.

ஒன்றியத்தினரோடு இணைந்து பணி செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது மிக்க மகிழ்வாக அமைந்தது. மக்களுடைய முக்கிய தேவைகள் என்ன என்பதை தீரவே அறிந்து, அதை செவ்வனே செய்து முடித்த ஒன்றியத்தினரின் செயற்பாடுகள் இங்கே எல்லா மக்களாலும் பாராட்டுப்பெறுகின்றன. காரைநகரில் அடிப்படைப் பிரச்சனை தண்ணீர்ப் பிரச்சனையாகும். இதனை வந்து கண்ணுற்ற ஒன்றியத்தினர் மக்களுக்குப் பெரிதும் தேவையான தண்ணீர்த் தாங்கிகளை அன்பளிப்புச் செய்தனர். இந்தத் தண்ணீர்த் தாங்கிகள் இன்று மக்களுக்குப் பெரும் சேவையில் உள்ளன என்பது கண்கூடு.

பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான சப்பாத்துக்கள் அப்பியாசக் கொப்பிகள் பிள்ளைகளக்கு வழங்கப்பட்ட நிகழ்வானது பல பெற்றோரின் மனதில் நன்றிப்பெருக்கை உண்டு பண்ணியுள்ளது. செருப்புக்களோடும், வெறுங்கால்களோடும் பாடசாலை சென்ற அனேக பிள்ளைகள் இன்று சப்பாத்துக்களோடு மனமகிழ்வுடன் பாடசாலை செல்கின்றார்கள் என்பதன் பெருமை யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தினரையே சேரும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

காரைநகர் ஊழியன் என்ற வகையில் என்னுடன் வந்து கலந்தாலோசித்து உங்களது இந்த மகத்தான சேவையில் என்னையும் இணைத்துக் கொண்டதற்காக யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தினருக்கு எனது நன்றிகளை நவின்று கொள்கிறேன்.

இன்றும் இன்னும் ஒன்றியத்தினரின் சேவைகள் காரையூரில் தொடர்வது குறித்து மிக்க மகிழ்வு. மீனவர்களுக்குத் தேவையான மீனவ வாடிவீடுகள் அமைக்கப்பட்டு வருவது மிக்க மகிழ்வைத் தருகிறது. இந்த மீனவ வாடிவீடு என்பது சில காலமாக பெரும் பிரச்சனையாகவே இருந்து வருகிறது. அந்தப் பிரச்சனை இன்று நிவர்த்தியாகிவருவது மிக்க மகிழ்வைத்தருகிறது.


இவ்வாறாக உண்மையிலேயே மக்களுக்கு என்ன பிரச்சனை என்பதை சரியாகப் புரிந்து கொண்டு சரியான அளவில் கிரகித்துக் கொண்டு சேவை புரியும் கிறிஸ்தவ ஒன்றியத்தினர் என்றும் பாராட்டுக்குரியவர்களே.

இன்னும் தேவையில் உள்ள மக்களுக்கு அருஞ்சேவை செய்துவரும் ஒன்றியத்தினரின் அரிய சேவைகள் மிகவும் பாராட்டத்தக்கதும் புகழ்ந்துரைக்கப்பட வேண்டியதுமாகும்.

இவர்களது சேவைகள் இன்னும் தொடரவேண்டு மெனவும் காரையூரில் கிறிஸ்தவ ஒன்றியத்தினரின் கால்கள் இன்னும் ஆழப்பதிக்கப்பட்ட எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்துகின்றேன்.

அருள்பணி. பி. தேவ்தாஸ்
*காரைநகர் சபைக்குரு,*
*தென்னிந்தியத் திருச்சபை,*
*காரைநகர்.*

# சுனாமி பற்றிய சுவையான தகவல்கள்



ஜப்பானில் 1896ல் கடும் சுனாமி தாக்கியபோது 7 மாடிக் கட்டடத்தின் உயரம் அளவுக்கு ராட்சத அலைகள் தோன்றின. இத் தாக்குதலில் 26,000 பேர் உயிரிழந்தனர். இந்தோனேசியாவில் உள்ள ஜாவா தீவை 1883ல் பெரிய சுனாமி தாக்கியபோது. 36,000 பேர் மடிந்தனர். எனினும் சுனாமி அலை உயரத்தைப் பொறுத்தவரையில் 1958 ஜூலையில் வட அமெரிக்காவின் வடமேற்குக் கோடியில் அலாஸ்காவில் லிதுயா விரிகுடாவில் ஏற்பட்ட சுனாமிதான் மிகப் பெரியதாகும். அங்கு கடற்கரையைத் தாக்கிய அலைகள் 516 மீட்டர் உயரம் இருந்தன.

சுனாமி எனப்படும் ராட்சத அலைகள் கடலில் ஏற்படுகின்ற வேறு அலைகளிலிருந்து மாறுபட்டவை. கடலில் பொதுவாகவே அலைகள் உண்டு. இந்த அலைகளைத் தவிர வேறு மூன்று வகை அலைகள் உள்ளன. சந்திரனின் ஈர்ப்புச் சக்தி காரணமாகச் சில நாள்களில் அலைகள் அதிக உயரம் கொண்டவையாக இருப்பது உண்டு. நடுக்கடலில் புயல் தோன்றும் வேளைகளில் பெரிய அலைகள் ஏற்படுவது உண்டு. இவற்றில் ஒரு அலையின் உச்சிக்கும் சற்றுத் தள்ளி அமைந்த அலையின் உச்சிக்கும் அதிக இடைவெளி இராது. அலைகள் பல மீட்டர் உயரம் வரை இருக்கலாம். நடுக்கடலில் படகுகளும், நடுத்தரக் கப்பல்களும் புயல் அலைகளின் நடுவே சிக்கிக்கொண்டால் ஆபத்துதான். பெரிய கப்பல்களையும் இந்த அலைகள் அலைக்கழித்துவிடும். புயலின் போது புயலின் மையத்தைச் சுற்றிக் கடல் கொந்தளிப்பு இருக்கும். ஆனால் சுனாமி அலைகளால் நடுக்கடலில் படகுகள், கப்பல்கள், ஆகியவற்றுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது. நடுக்கடலில் கொந்தளிப்பு எதுவும் இராது. நடுக்கடலில் சுனாமி அலைகளில் ஒரு அலையின் உச்சிக்கும் இன்னொரு அலையின் உச்சிக்கும் இடையே சில நூறு கிலோ மீட்டர் இருக்கலாம்.


அலையின் உயரம் சுமார் ஓர் அடி இருக்கலாம். அவ்வளவுதான். சுனாமி அலைகள் பல ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் செல்லக்கூடியவை. உதாரணமாக, சுமத்ரா தீவு அருகே கடலடிப் பூகம்பத்தால் ஏற்பட்ட சுனாமி அலைகள் சுமார் 2000 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து வந்து தமிழகக் கரையைத் தாக்கியுள்ளன. இந்த அலைகள் மிக வேகமாக அதாவது மணிக்கு சுமார் 500 முதல் 600 கிலோ மீட்டர் வேகத்தில் – வானில் ஜெட் விமானம் செல்கின்ற வேகத்தில் – செல்லக்கூடியவை. பசுபிக் கடலையொட்டி உள்ள நாடுகளுக்கு சுனாமி ஆபத்து அதிகம் என்பதால் அக் கடல் ஓரமாக அமைந்த 26 நாடுகள் ஒன்று சேர்ந்து சுனாமி எச்சரிக்கை ஏற்பாட்டை அமைத்துக் கொண்டுள்ளன. இதில் ஜப்பான், சீனா, அமெரிக்கா முதலான நாடுகள் அங்கம் வகிக்கின்றன. சுனாமி அலைகள் தாக்குவதற்கு முன்னர் கடல் நீர் உள்வாங்கும் என்பதால் கடல் ஓரமாகக் கடல் நீர் மட்டத்தைத் தொடர்ந்து அளந்து தக்க சமயத்தில் எச்சரிக்கை அளிக்கின்ற கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன.

சுனாமி எச்சரிக்கை ஏற்பாட்டில் இது முக்கிய அம்சமாகும். செயற்கைக் கோள்கள் மூலம் கடல் மட்டத்தைக் கண்காணிக்கும் ஏற்பாடும் உள்ளது. எந்தெந்தப் பகுதியில் எப்போதெல்லாம் சுனாமி தாக்குதல் ஏற்பட்டுள்ளன என்று

புள்ளிவிபரக் கணக்கும் எச்சரிக்கை ஏற்பாடுகளில் முக்கிய அம்சமாகும், உதாரணமாக, பசுபிக்கில் உள்ள 'ஹவாய் தீவுகளில் ஆண்டொன்றுக்கு ஒரு சுனாமி தாக்குதல் உண்டு. ஆனாலும் 7 ஆண்டுக்கு ஒரு முறை பெரிய தாக்குதல் நடப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மேற்குக் கரையை 18 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் கடும் சுனாமி அலைகள் தாக்குகின்றன. இப்படியெல்லாம் கடல் மட்ட மாற்றங்களைக் கண்டறிந்தும் புள்ளிவிபரக் கணக்குப் போட்டும் கூட சுனாமிகள் தாக்குதல் பற்றிய முன்னெச்சரிக்கைகள் நூற்றுக்கு நூறு சரியாக இருப்பதாகக் கூற முடியாது. 1948 ம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்ட சுனாமி எச்சரிக்கைகளை ஆராய்ந்தால் அவற்றில் 75 சதவீதம் 'புலி வருகிறது' என்ற கதையாகவே அமைந்துள்ளது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். சுனாமி தாக்குதல் பற்றி எச்சரிக்கை விடுவதற்குப் பல சமயங்களிலும் போதுமான கால அவகாசம் கிடைக்கிறது. உதாரணமாக, சுமத்திரா அருகே கடலுக்கு அடியில் பூகம்பம் ஏற்பட்ட உடனேயே தமிழகக் கரையோரப் பகுதியில் எச்சரிக்கை அளித்திருக்க முடியும் என்று சுமார் இரண்டு மணி நேர அவகாசம் இருந்தது என்றும் அமெரிக்க சுனாமி எச்சரிக்கை அமைப்பைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

ஆனால் இலங்கை வழக்கமாக சுனாமி ஆபத்து கொண்ட பிராந்தியமாக இருந்திருக்குமானால் அதெல்லாம் சாத்தியமாக இருந்திருக்கும். அப்படியில்லாமல் சுனாமி திடீரெனத் தாக்கியுள்ளது. வேறு சில சமயங்களில் எச்சரிக்கை அளிக்கப் போதிய அவகாசம் இல்லாமல் போகலாம். 1998ல் ஆவுஸ்திரேலியாவுக்கு வடக்கே உள்ள பாபுவா நியூகினியை அடுத்து சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் கடலடிப் பூகம்பம் ஏற்பட்டது. 15 நிமிஷங்களில் 40 அடி உயர அலைகள் வந்து தாக்கின. எச்சரிக்கை அளிக்கப் போதிய அவகாசம் இல்லாதுபோகவே சுமார் 2,500 பேர் மடிந்தனர்.



**சேது சமுத்திரம் சாத்தியமா...**

இந்தியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழக்கக் காரணமான, பூகம்ப கடல் கொந்தளிப்பு, சேது சமுத்திர கால்வாய் திட்டம் சாத்தியம்தானா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. தமிழ்நாடு கடற்கரைக்கும் இலங்கைக்கும் இடையே கடலின் அடிப்பரப்பில், கப்பல்கள் செல்லும் வகையில் கால்வாய் அமைப்பதற்காக ரூ. 2,000 கோடியில் இத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சுற்றிக் கொண்டு செல்லாமல், வணிகக் கப்பல்களும் கடற்படைக் கப்பல்களும் அரபிக் கடலில் இருந்து இந்தியாவின் வங்கக் கடல் பகுதிக்குச் செல்வதற்கு இக் கால்வாய் வழிவகுக்கும். இதன் மூலம் நேரமும், எரிபொருளும் பெருமளவு மிச்சமாகும். கடலின் அடிப்பரப்பில் 150 கி.மீ தொலைவுக்கு, 300 மீ. அகலமும் 12 மீ. ஆழமும்கொண்ட கால்வாய் வெட்டுவதற்கு 88 லட்சம் கன மீட்டர் அளவுக்கு பொருள்களை அகழ்ந்தெடுத்து வெளியே கொட்ட வேண்டியிருக்கும். இது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சேது சமுத்திர கால்வாய் அமையும் பகுதி, மிகுதியாக வண்டல் படியும் பகுதியாகவும், அதிவேகமான கடலடி நீரோட்டங்களைக் கொண்ட சூறாவளிகள் வீசும் பகுதியாகவும் இருக்கிறது என்கிறார் திருவனந்தபுரம் நில அறிவியல் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த புவியியல் நிபுணர் சி. பி. ராஜேந்திரன். பாக்கு நீரிணையின் பல்வேறு பகுதிகளில் வண்டல் படியும் விகிதம் பற்றிய தெளிவான புரிதல் இல்லாமல், இத்திட்டத்தின் ஸ்திரத் தன்மைக்கு உத்தரவாதம் அளிக்க இயலாது என்றார் அவர். உண்மையில், சேதுக் கடலின் அடிப்பரப்பு குறித்தோ, அங்கு அகழ்ந்தெடுக்கும் பொருள்களை எங்கு கொண்டுபோய் கொட்டுவது என்பது பற்றியோ, இதனால் கடலடி நீரோட்டங்களுக்கும், அப் பகுதிக்கும் என்ன பாதிப்பு ஏற்படும் என்பது பற்றியோ விஞ்ஞானிகளுக்கு முழுத் தெளிவு இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இத்திட்டம் குறித்து விஞ்ஞானிகள் மத்தியில் ஆழமான விவாதம் இல்லை என்பது கவலை தருகிறது. செலவு மிகுந்த, மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுத்த வேண்டிய ஒரு திட்டத்தை மேற்கொள்ளும் விதம் இதுவல்ல என்றார் ராஜேந்திரன். ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட பூகம்ப கடல் கொந்தளிப்புக்கு முன்னரே பல புவியியல் நிபுணர்கள் இத் திட்டத்தை விமர்சித்துள்ளனர். சேது சமுத்திர கால்வாய் திட்டத்தால் அப் பகுதியின் புவியமைப்பு எளிதில் சேதமடையும் என்று அமெரிக்க புவியியல் நிபுணர் ரிச்சர்டு கேத்கார்ட் எச்சரித்திருந்தார்.

இந்திய தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்ட ஆய்வில், சூறாவளிகள், வண்டல் படியும் விகிதம் ஆகிய இரு முக்கிய அம்சங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக கோவை நகரில் இருந்து செயல்படும் பாதுகாப்பான சுற்றுச்சூழலுக்கு பாடுபடும் டாக்டர்கள் அமைப்பு வெளியிட்டுள்ள 71 பக்க அறிக்கையில் தெரிவித்துள்ளது. சூறாவளிகளும், வண்டல் படிவும் இத் திட்டத்துக்கு இரு பெரும் ஆபத்துகள் என நெதர்லாந்தைச் சேர்ந்த புவியியல் விஞ்ஞானி ரோல்ப் ஷெலிங் எச்சரித்துள்ளார்.


**வெப்ப நீரோட்டம்....**

எல் – நினோ என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். சுற்றுச்சூழல் வாதியர் உச்சரிக்கும் எச்சரிக்கை மந்திரம். ஆனால் அதன் பொருள் என்ன தெரியுமா? ஏசு பாலகன்–கடலின் வெப்ப நீரோட்டத்திற்குத் தென் அமெரிக்காவில் பசுபிக் கடலோர ஸ்பானிய மீனவர் வைத்த செல்லப் பெயர். பொதுவாக, கிறிஸ்மஸ் காலத்தை ஒட்டிப்

பசுபிக் சமுத்திரத்தில் எழும் ஒரு வினோத வெப்ப நீரோட்டம்.

கடல்படுகையில் எரிமலைச் சீற்றமோ அல்லது காற்று மண்டலக் கோளாறோ இன்னமும் தெளிவாகவில்லை. ஆனால் இந்த வெப்ப நீரோட்டம் பதினேழாம் நூற்றாண்டிலேயே கண்டுணரப் பட்டது. பிலிப்பைன்ஸ் நாட்டில் பினாத்துபோ மலை வெடித்துச் சிதறியதன் விளைவாக இந்த எல் – நினோ நிகழ்ந்தது என்றும் சிலர் முடுக்கி விட்டனர்.

புது கினியா முதல் பெரு நாட்டுக் கடற்கரை வரை பூமத்தியரேகைப் பகுதியில் பசுபிக் கடலின் கிழக்கில் எழும் வெப்ப ஓட்டம். 1992 பெப்ரவரியில் கலிஃபோர்னியாவில் பொங்கிய வெள்ளப் பெருக்கத்திற்கும் எல் – நினோவிற்கும் சம்பந்தம் உண்டு என்பது செயற்கைக்கோள் படங்கள் காட்டிய உண்மை.



இதன் எதிர்விளைவாக, வட ஐரோப்பா, ஆவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் ஏற்பட்ட, வெள்ளப் பெருக்கம் பசுபிக் கடலில் குளிர் நீரோட்ட விளைவாம். அதனை லா – நினோ என்கின்றனர். அதாவது பெண் குழந்தை.

1964 ஆம் ஆண்டு பெரிய வெள்ளித் திருநாளை ஒட்டி ஜப்பானுக்கும் அந்தார்டிக்காவிற்கும் இடையே பசுபிக் கடலில் ஏற்பட்ட அலைச்சீற்றம் அலாஸ்காவில் சுனாமி (Tsunami) எனும் கடல் அலைவீச்சு ஆயிற்று.

அன்றைக்கு அங்கோரேஜ் நகரமே அழுது புலம்பிற்று. இன்று சுமத்ராவிற்கும் இந்தியக் கிழக்குக் கடற்கரைக்கும் மத்தியில் ஊடாடிய அலைமோதல். வயது வித்தியாசம் பாராமல் ஆயிரக்கணக்கான பாமர உயிர்களை உண்டு உப்புத் தண்ணீர் குடித்து விட்ட அசுரன்.

1737 ஆம் ஆண்டு சைபீரியாவில் லபோத்கா தீபகற்பத்தில் நடந்த அலை எழுச்சி உயரம் 210 அடி. தஞ்சைப் பெரிய கோயில் ராஜ கோபுரத்தை லபக் கென்று விழுங்கி விடும் என்றால் வேறு சொல்வானேன்.

திறந்த கடலில் இது மணிக்கு 800 கிலோமீட்டர் வேகத்தில் பரவும். சராசரி விமான வேகம். அதுவும் ஆழமான பகுதிகளில் வேகம் அதிகரிக்கும். ஆனால் கடல் எழுச்சி உயரம் வெறும் சாண் அளவுதான். சுமார் 20 சென்டிமீட்டர். கப்பலில் சென்றாலும் அது புலப்படாது. தொடர்ந்து, 5 நிமிடம் முதல் சில மணி நேரம் இடைவெளி விட்டு அடுத்த அலைகள் வந்து மோதலாம்.

இந்த அலை எழுச்சி நில நடுக்கத்தின் ஒருவகை வெளிப்பாடு. மலைப்பகுதியில் நிலச்சரிவுடன் நிகழ்வது பூமியின் மிதவைத் தகட்டுச் சலனம் ஒன்றோடொன்று உராய்வதால் எழும் அதிர்ச்சி. அடுத்து, பூமி உட்பகுதியில் எழுவது. எரிமலைச் சீற்றத்தால் எழும் நடுக்கம். மூன்றாவதாக கடலுக்கு அடியில் இருந்து பீறிடுவது இந்தக் கடலடி எழுச்சி.

இலங்கை இந்தியா போன்ற பகுதிகளில் எரிமலை இல்லவே இல்லை. நிலநடுக்க வாய்ப்புக்கள் பற்றிக் கூறும்போது தக்காணம் பாதுகாப்பாக இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இதனோடு தொடர்புடைய சுனாமி அதுதான் துறைமுக எழுச்சி அலைகள் குறித்துக் கவலைப்பட்டாக வேண்டும்.

பூமி மேல் தகட்டில் ஆப்கானிஸ்தான், இமயமலை, பர்மா, சுமத்ரா, இந்தோனேசியா வழியே இந்தியப் பெருங்கடல் வழி தனித்துண்டம் நகர்ந்து கொண்டு இருக்கிறது.

அதனால் நிலநடுக்கம் ஏதோ முகூர்த்தம் பார்த்து வருவது இல்லை. அந்தமான் தீவில் 1941 ஆம் ஆண்டிற்குப் பிறகு தற்செயலாக அதே டிசம்பர் 26 அன்று மீண்டும் நிலநடுக்கம். இந்தியாவில் குஜராத்திலும் இதே 26 ஆம் தேதி குறித்து வரும் புத்திசாலித்தனம் பூமிக்குக் கிடையாது.

ஆனாலும் பெருத்த சேதங்கள் ஜப்பான் (யோகோஹாமா 1.10.1923), ஈரான் (16.10.1978), மத்திய மெக்சிகோ (19.10.1985), இந்தியா (லாத்தூர், 30.10.1993), தாய்வான் (21.10.1999) போன்ற நாடுகளில் அக்டோபர் மாதங்களிலும், சீனா (கான்சு, 16.12.1920), துருக்கி (எர்செங்கான், 26.12.1939), வட ஆர்மீனியா (7.12.1989) போன்ற நாடுகளில் டிசம்பர் மாதங்களிலும், சிலி (24.1.1939), ஜப்பான் (17.1.1995), மேற்கு கொலம்பியா (25.1.1999) ஆகிய நாடுகளில் ஜனவரி மாதங்களிலும் இத்தகைய அசம்பாவிதங்கள் நிகழ்ந்து வருகின்றன.

நிலநடுக்கத்தின்போது எழும் அதிர்வலைகள் மூவகைப்படும். முதனிலை அலைகள். இவை காற்றில் ஒலியலைகள் மாதிரி நீளவாட்டில் பரவும். இழுத்துவிட்ட கம்பிச் சுருள் போல முன்னும் பின்னும் தள்ளாடும் அழுத்த அலைகள் அல்லது தள்ளும் அலைகள். அதனாலேயே பி அலைகள் என்கிறோம். இவை மணிக்கு 24,000 கிலோ மீட்டர் வேகத்தில் பாயும்.

இரண்டாம் நிலை அலைகள் நீரலைகள் மாதிரி செல்லும் திசைக்குச் செங்குத்தாக அலையாடும் அதிர்வு அலைகள். இவை ஒன்றோடொன்று உராயும் உரசல் அலைகள். அதனால் எஸ் அலைகள் எனப்படும். இவற்றின் வேகம் மணிக்கு 16,000 கிலோமீற்றர்.

பூகம்ப மையத்தில் இருந்து கிளம்பும் இந்த அலைகள் பூமி மேல் தளத்திற்கு வரும்போது தளப்பரப்பு அலைகள். இவ்வித அலைகள் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்து பேரழிவுகள் நிகழ்கின்றன.

இந்த அதிர்வுகளை அளக்க சீஸ்மோகிராஃப் கருவி உதவும். நிலநடுக்க அளவி கி. பி. 132 ஆம் ஆண்டு சீனாவில் சாங்ஹெங் என்பவரின் கண்டு பிடிப்பு. இன்று லண்டன் அருங் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதனைக் கருவி என்பதைவிட தாழி எனலாம்.

அதன் எட்டுத் திசைகளிலும் வாய்பிளக்கும் வேதாளங்கள். பூகம்பத்தின் போது அது உமிழும் குண்டு ஒன்று தாழியைச் சுற்றிலும் கீழே வைக்கப்பட்ட 8 தவளைகளில் ஏதேனும் ஒன்றின் வாயில் குபுக் கென்று விழும். அந்தத் தவளையின் திசை நோக்கிய நடுக்கம் ஏற்பட்டது என்று அர்த்தம்.

**நன்றி: தொடுவானம் (ஜேர்மன்)**

# உதயன் தலையங்கம்

இயற்கையின் சீற்றம் இலங்கையின் பல பகுதிகளிலும் பெரும் அழிவுகளையும் அனர்த்தங்களையும் உண்டாக்கியுள்ளது. நாட்டின் நான்கு திசைகளிலும், குறிப்பாக கடலோரப் பிரதேசங்களில், மக்களையும் அவர் தம் உடைமைகளையும் அழித்தும் துவம்சம் செய்தும் சொல்லொணாக் கஸ்டங்களையும் துயரங்களையும் உண்டாக்கியுள்ளது கடல்கோள் எனக் கூறத்தக்க கடற்பெருக்கம்.

இப்பத்தி எழுதப்பட்ட வேளை கிடைத்த தகவல்களின் பிரகாரம், கடல் பெருக்கம் காரணமாக நாடு முழுவதிலும் 300ற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர். இதனைப்போன்று ஐந்து மடங்குக்கும் மேற்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற தகவல் தெரியவில்லை. ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடு, வாசல்களை இழந்து வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந் துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இயற்கை எப்போது மீண்டும் சீற்றம் கொண்டு, என்னென்ன கேடுகளையும் அழிவுகளையும் விளைவிக்கப்போகிறதோ என்ற ஏக்கத்துடனும் திகிலுடனும் திணறிப் போயுள்ளனர்.

இந்தோனேசியாவின் வடபகுதியில், அநேகமாக சுமாத்திரா தீவில், நேற்றுக்காலை எட்டுமணியளவில் உண்டான மிகவும் சக்திவாய்ந்த பூகம்பம் உருவானது. அதன் பக்கவிளைவே இலங்கையின் கடலோரப் பிரதேசங்களில் கடல் அலைகள் வீச்சுடன் உயர்ந்து கடல் பெருக்கத்தை உண்டாக்கியதாக முதலில் வந்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தப் பூகம்பத்தின் எதிர் விளைவுகள் சுமாத்திராவைச் சூழவுள்ள பல பிரதேசங்களில் கடல் பெருக்கத்தை உண்டாக்கியதாகப் பூகோளவியல் தகவல்கள் தெரிவித்தன. பூகம்பம் உண்டான இடத்திலிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள இலங்கையில் தாக்கம் மிகப்பெரிய அளவில் இருந்ததாக அறிவிக்கப்பட்டது.

அதிலும் மிகக் குறிப்பாக, கிழக்கிலும் வடக்கிலும் உயிர் அழிவுகளும் சேதங்களும் மிகக்கூடுதலாக இருந்தமை தெரியவந்துள்ளது. இவை முற்கொண்டு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலானவை என்பதனால், சரியான மதிப்பீடுகள் வரும்போது அவை உச்சமடையக் கூடும் என்றும் அஞ்சப்பட்டது.

இயற்கை சீற்றம் கொள்ளும் போது அது நாடு பார்த்து, பிரதேசம் பார்த்து, மக்கள் யார், எவர் என்று பார்த்து அழிவுகளைத் தருவதில்லை. இயற்கை தரும் அனர்த்தங்கள் எவரையும் இலக்கு வைத்து நடப்பதுமில்லை. அவற்றினால் பாதிப்புறும் மக்கள் எல்லோருமே மனிதர்கள் தான். அவர்களின் வாழ்வில் உண்டாகும் பாதிப்புக்கள், இழப்புக்கள் பொதுவானவை தான்.

இத்தகைய வேளைகளில் மனிதாபிமானத்துடனும் மனிதநேயத்துடனும் உதவ வேண்டியது பாதிப்புறாத ஏனையோரின் கடமை. பாதிப்படைந்தோருக்கு உதவுவதை ஓர் அவசரத் தேவையாகக் கருதி ஆற்றவேண்டும். அதில் பாகுபாடும் வேற்றுமையும் தலைதூக்கக் கூடாது.

ஆனால், இலங்கையில், இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்டைந்தோருக்கு உதவும் வேளைகளில் கூட, கொழும்பில் இயங்கும் அரசுகள் தமிழ் பிரதேசங்களையும் அங்கு வாழும் மக்களையும் புறக்கணித்தோ அல்லது பாரபட்சம் காட்டியோ வருவது ஒரு வழமையாகி விட்டது!

## அனர்த்தத்தால் பாதிப்புற்றோருக்கு உடன் உதவ முன்வருக!

கடந்த வாரம் கிழக்கில் உண்டான வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் அரசு உரிய அக்கறையும் ஆர்வமும் காட்டவில்லை என்பது மிகப்பிந்திய உதாரணம். கிள்ளித் தெளிக்கும் நடைமுறையையே அப்போதும் காணமுடிந்தது. வடக்குக் கிழக்கில் வாழும் மக்கள், மனிதர்களே அல்லர் என்றவாறான வாய்ப்பாட்டையே அரசுகள் எப்போதும் கையில் எடுக்கின்றன.

நேற்றைய அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ இந்தியாவின் உடனடி உதவியை இலங்கை அரசு கோரியுள்ளது. ஆனால், தெற்கில் சுவறும் அளவுக்குப் பெரிதாகப்பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குக்கு உதவிகள் வந்து சேருமா என்பது மெத்தவும் சந்தேகமே!

கடற்பெருக்கு அனர்த்தத்தினால் அகப்பட்டவர்களை மீட்கும் பணிகளில் பொலிசாரும், படையினரும் தெற்கில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகத் தகவல்கள் கிடைத்தன. ஆனால், வடக்கில் அத்தகைய உதவி எதுவும் பெரிய அளவில் வழங்கப்பட்டதாக அறியப்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையில், நாங்களே எங்கள் சகோதரர்களுக்கு உதவ வேண்டிய தேவை உண்டு. இதனை மனதில்வைத்து (சுனாமி) என்றழைக்கப்படுகின்ற கடற்பெருக்கினால் பாதிக்கப்பட்டு அவதியுறுவோருக்கு உதவுவதற்கு நாம் எல்லோரும் முன்வரவேண்டும். தன் கையே தனக்குதவி.

ஆசிரியர்,
உதயன்
*27.12.2004*

நீ, நோயுற்ற உள் மனதைக்
கவனிக்க மாட்டாயா?
ஆழ் மனதில் வேரூன்றிப் போன
ஒரு துயரத்தைப்
பிடுங்கிப் போட மாட்டாயா?
உன் மூளையில் எழுதப்பட்டிருக்கும்
துன்ப வரிகளை
அழித்துவிட மாட்டாயா?
உன் இதயத்தை அழுத்திப்
பிழிந்து கொண்டிருக்கும்
பயங்கர நினைவுகளை மாற்றக்கூடிய
ஓர் இனிய மருந்தை
உட்கொள்ளக் கூடாதா?

– ஷேக்ஸ்பியர்

# எங்கள் கடலுக்கு என்ன நடந்தது?

ஐயோ! கடவுளே
எங்கள் கடலுக்கு என்ன நடந்தது?
இயற்கைத் தாய்க்கேன்
ஈழத்தமிழர் மேல் இத்தனை கோபம்?
அன்னை மடியே தூக்கியெறிந்தால்
யாரிடம் நாம் அடைக்கலம் புகுவோம்?

யேசுவே!
எங்கள் தோள்களில்
ஏனிந்த நிரந்தரச் சிலுவைகளை சுமத்திவிட்டீர்?
ஒளிவிழா நிகழ்ச்சிக்காக
நாடகம் பழகிய பச்சைப் பாலகிகளை
காப்புக்கள் அணிந்த கைகளோடு
நாம் அள்ளியெடுத்த சோகத்தை
யாரிடம் சொல்லியழுவது?

அள்ளிக் கொடுத்த கடலே
அள்ளிக் கொண்டு போனால்
யாரம்மா எம்மை அணைத்துக் கொள்வது?
ஏழைக்குடில்களுக்குள் உறங்கிக் கிடந்த
ஏணைக் குழந்தைகள்
எவருக்கு என்ன பாவம் செய்தன?

ஏதுமேயறியாம்
முதல் நாளிரவின் நிலவொளி வழிந்த
மணல் முற்றங்களுக்குள்
நத்தார் பாப்பா வந்தார்
பம்பரமாய் எங்கள் குழந்தைகள்
கைதட்டிக் கைதட்டி ஆடிப்பாடினர்.
அங்காலே தாய்மார்
ஆயிரங்கனவோடு பார்த்து ரசித்தனர்.

தூக்கி ரொபிகளை தூரத்தே எறிகையில்
துள்ளியோடி எடுத்துண்டு மகிழ்ந்த
எங்கள் சிறுவர்களை
அடுத்த நாட்காலை
முட்கம்பி வேலிகளுக்குள்ளும்...
பனைமர மட்டைகளுக்குள்ளும்...
உயிர் குடித்த உடல்களாய்
கடலேன் செருகிப்போய் போனது?

கருக்கறுத்த காயங்களாலும்
கம்பிகள் கிழித்த சதைகளாலும்
வழிந்தொழுகும் குருதிகளோடு
விழிகளில் நீர் வழிய
வீதிகளில் விம்மித்தவிக்கின்றன
எஞ்சிநிற்கும் உறவுகள்

அடிபட்டு அடிபட்டு
அலையடித்து ஏற்றுண்டு போய் கிடக்கிறான்
அம்மணமாய் ஒரு சிறுவன்

நீலக் கடலே!
நீயேன் இப்படி துரோகம் புரிந்தாய்?
அதிகாலைப் பொழுதிலும் கூட
எத்தனை அமைதியாய்
அழகாய் படுத்துக்கிடந்து அலைக்கரம் அசைத்தாய்
வெண்நுரை அலையே!
நீ கவிதையெழுத
கடற்கரைமண் போதாதென்றா
எங்கள் களிமண் வீடுகளை
ஏப்பமிட்டாய்?

போர் உடைமைகளோடு எம்மை
இடம் பெயர வைத்தது
கடலோ
உடுத்த உடுப்புக்களையுமிழந்து
ஓடிவர வைத்துவிட்டதே!

போர்
எங்கள் உறவுகளை
கொள்ளை கொண்டு போனது சமாதானம்
எங்கள் வாழ்வுகளையே
காவு கொண்டு போயிற்றே!

தனக்கு 'பிட்டு' தீத்திக்கொண்டிருந்த
ஒன்றரை வயது
ஒற்றைக் குழந்தையை
கடலுக்குணவாய் கொடுத்துவிட்டு
ஓவென்று அழுகிறார் ஒரு தந்தை

கையில் அணைத்தெடுத்து ஓடிவந்த
தன் பாசநிலவுகளை
கடல்
பிரித்தெடுத்துவிட்ட வேதனையில்
படுத்துக்கிடந்து கதறுகிறாள்
தாயொருத்தி

மிதந்து வந்த படகினுள்ளே
தூக்கிக் குழந்தையை எறிந்துவிட்டு
போய்ச் சேர்ந்து விட்ட
துணைவியை எண்ணியெண்ணி
அவள் புடைவைமேல் தலைவைத்து
விம்முகிறான் கணவன்.

ஊட்டி வளர்த்த நாயொன்று
கண்மூடிக்கிடக்கும் பெண்ணின்
உடல் சுற்றி உடல் சுற்றி
ஊளையிட்டு அழுகிறது
கலைந்து கிடக்கும் சேலையை
வாயால் இழுத்து மூடி கால்கள் நக்குகிறது.

இயற்கைத் தாயே
ஈழத் தமிழனுக்கேன் இந்தச் சோதனை.
இனி என்றென்றும் ஆறாதே!
இந்தக் கடல் தந்த வேதனை

யாழ் வீரன்
நன்றி: ஈழநாதம்

## ஈழநாதம் தலையங்கம்

இயற்கையினால் தாயகப் பகுதியில் வரலாறு காணாத பெரும் அனர்த்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இவ் அனர்த்தமானது ஒரு தேசியத் துயர் எனக் கூறும் அளவிற்கு பாரிய அழிவினை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக பெரும் பாதிப்பிற்குள்ளாகியிருந்த மக்களை மீண்டும் துயருறும் வகையில் இப்பெரும் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. அந்தமான் கடற்பிரதேசத்தில் கடலடியில் ஏற்பட்ட புவியதிர்வு காரணமாக எழுந்த பேரலைகள் கிராமங்களுக்குள் புகுந்ததினால் இப் பேரனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இவ் அனர்த்தத்தினால் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் தொடர்பான உறுதியான தகவல்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. எனினும் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் காயங்களுக்கு உள்ளாகியும் உள்ளனர் என்பது பெரும்பாலும் உறுதி செய்யப்பட்ட தொன்றாகவே உள்ளது.

இதேவேளை பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான மக்களின் உடைமைகளும் அலையினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. அதாவது பெரும்பாலான மக்கள் உயிரை இழந்தது மட்டுமல்ல தமது குடியிருப்புக்கள், தொழில் உபகரணங்கள், உடைமைகள் என்பவற்றையும் இழந்து நிர்க்கதியானதொரு நிலையை அடைந்துள்ளனர்.

எதிர்வு கூறப்பட முடியாததொரு அனர்த்தமாக இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இவ் அனர்த்தத்தில் இறந்தவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் ஆகியோராகவே உள்ளனர். பலர் குடும்பமாகவே பலியாகியுள்ளனர்.

கடந்த இரு தசாப்த கால யுத்தத்தினால் பாதிப்புற்ற தமிழ் மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில், பெரும் நெருக்கடியின் மத்தியிலுமே தமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தனர். சிறிலங்கா அரசாங்கம் யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளான தமிழ் மக்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளில் அக்கறை காட்டாத நிலையில் மக்கள் தமது வாழ்விற்காகப் பெரும் போராட்டங்களை நடாத்த வேண்டியிருந்தது.

இந் நிலையில் கிராமங்களில் ஏற்பட்டுள்ள இவ் அனர்த்தத்திற்கு சிறிலங்கா ஆட்சியாளர்களிடம் இருந்து எத்தகைய உதவிகள் கிடைக்கப்பெறும் என்பது குறித்த உடனடியாக எதையும் எதிர்வு கூறமுடியாது. ஏனெனில் சிறிலங்கா அரசு மனிதாபிமான உதவிகளைக்கூட இன வேறுபாடு அற்ற முறையில் வழங்கப்படும் எனவும் எதிர்பார்ப்பதற்கில்லை.

## தேசியத்தின் துயர்!

இந் நிலையில் தாயகப் பிரதேசத்தில் பாதிப்பிற்குள்ளாகியுள்ள எமது மக்களுக்கு செய்யக்கூடிய ஒரே உதவி அவர்களின் துயர் துடைப்பதற்கு எம்மால் ஆன உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவதே ஆகும்.

இத் துயரத்தில் இருந்தும் இழப்பில் இருந்தும் மக்கள் மீள்வதென்பதும் இலகுவானதொன்றான காரியமாக இருக்கப் போவதில்லை. ஏனெனில் இது இலகுவில் மீண்டுவிடக் கூடிய துயரமாகவோ அன்றி வெறும் நிவர்த்திக்கப்படக் கூடிய இழப்பாகவோ இல்லை.

ஏனெனில் இத் துயரமானது இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமானதல்ல இது எமது தேசத்தின் துயரம். இதில் இருந்து மீண்டு வர வேண்டுமானால் அனைத்து மக்களுக்குமே இதற்குத் தம்மால் ஆன பங்களிப்பைச் செய்தல் வேண்டும்.

ஆகையால், உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி பரந்து வாழும்மக்கள் இத்துயருற்ற மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வரையிலான செயற்பாடுகளுக்கு உதவியளிக்க முன்வருதல் வேண்டும். ஏனெனில் இவர்களின் துயர் துடைக்கப்படுவதாவது எமது தேசத்தின் துயர் துடைக்கப்படுவதற்கு ஒப்பானதாகும்.

ஆசிரியர்,
ஈழநாதம்
*27.12.2004*

---

கடவுள்மீது கொண்ட அன்பால்
யாரெல்லாம்
தங்களின் உயிரை
பிறருக்காகப் பணிபுரிய
அர்ப்பணிக்கிறார்களோ
அவர்கள்
இறந்தாலும் என்றென்றும் வாழ்வார்கள்.
கோதுமை மணி
மண்ணில் மடிந்தால்தான்
பல கோதுமை மணிகளை உருவாக்கும்.
அப்படி மடியவில்லையெனில்
அது தனியாகவே இருக்கும்.

- பேராயர் ஆஸ்கர் ரெமேரோ

*24 மார்ச் 1980*

---

*பிராத்தனை என்பது பரிபூரண அன்பு. ஒரு சாதாரண மனிதப் பிறவியிடம் அன்பில் தோற்றுப்போகும் நீங்கள் எவ்வாறு தெய்வத்திடம் உண்மையான அன்பை வெற்றிகரமாகச் செலுத்தமுடியும்.*

– ஓஷோ

# இயற்கை சமநிலைகான அர்ப்பணிப்புடன் காப்பரணாவோம்

இயற்கையின் சீற்றம்
சுனாமியின் உருவில்
உலகை உலுக்கியதை
உள்ளங்கள் கலங்கியதை
உறவுகள் பிரிந்ததையே
ஆண்டொன்று கரைந்ததென
உள்ளம் உருகி நினைவு கூருகிறோம்

ஆண்டுகள் கடந்தனதான்
ஆழிப்பேரலையின் கோரஇரைச்சல்
இன்னும், இன்றும்
உள்ளத்தை உருக்குவதால்
உளக்காயம் ஆறவில்லை
அழுகுரல் ஓயவில்லை
அவல வாழ்க்கை தீரவில்லை
ஏக்கமனங்களின் எச்சங்கள்
பலவாக புதுவடிவம் பெறுகிறது
நொந்தவன் எங்கே வாழ
நோய்க்கு மருந்து நிவாரணமாய்
யார் யாரோ தீர்மானித்து
யார் யாரோ அனுபவிக்க
எங்கெங்கோ நினைவு கூருகிறார்
திட்டங்கள் தீர்மானங்கள்
சட்டங்கள் பாதுகாப்பு வலயங்களாய்
அரசியலாய் உருவெடுத்து
சுயநல சுனாமிகளாய்
அலைக்கழிவை தருகிறது
இயற்கையின் இருப்பை
இதயத்தில் எண்ணாது
இரசனை மறந்த மனிதருக்கு
இயற்கையும் தன்னையே
உணர வைத்ததுவோ,
இழந்ததை சிதைத்ததை
சீர்செய்வோர் பலராக – அன்று
உடன் கரம் கொடுத்து துயர்களைய
தேடிவந்தோரால் மனிதம் காத்த
புனித பணிகள் யாவும்
மனக் கண்ணில் பதிவாகி
வருடங்கள் ஒன்று கரைந்ததுவோ
இயற்கையின் அழிவுக்கு
காப்பரணாய் இருந்த
மனித நேய பணிகளிலே
சாதி, மத, இன பேதம் கடந்த
அந்த நாட்கள் தான்
மறக்க முடியாதவை – அவை
மீண்டும் என வேண்டும் – என்று
நம்பிக்கை கட்டி வளர்க்க வேண்டும்
இனம் பார்த்து, குலம் பார்த்து,
மொழி பார்த்து
இயற்கை எம்மை சீண்டவில்லை.
இயற்கையின் இருப்பை
சமநிலையை குழப்பிய
குற்றங்களை நாம் ஏற்று
இயற்கையுடன் மனித உறவு
சங்கமிக்க ஏது செய்வோம்
முன்னோர் காத்த இயற்கை
சமநிலைகள் கற்பனையில்
எழுந்ததல்ல அதற்கான
அர்ப்பணங்கள் பலவாக
காப்பரண்கள் அமைத்தனரே
அதன் அழகை ரசித்தனரே
அருவிகளும், ஆறுகளும்
வளங்களும், வண்ணச் சோலைகளும்
மண்வளங்கள், நீர்வளங்கள்
மாசடையா காப்பதற்காய்
தம் பங்கை செலுத்தினரே
உடலுழைப்பும் உளப்பகிர்வும்
தேசம் காக்கும் அழகுசோலையாக
அழகூட்டும் இயற்கையை ரசித்து
இழந்தவற்றை பிரிந்தவற்றை
எண்ணிக்கலங்குவதன் பாடமாக
எம் எதிர்கால நினைவாக
மனிதம் காக்கும் புனிதப்பணியில்
வருங்கால சந்ததிக்காய்
வளமான இயற்கை சமநிலைகாத்து
எம்மால் நினைவுகூர
இயற்கையின் அழகுடன்
சமநிலை சீர்கெடாது காக்க
ஏதாவது செய்வோம்
வாருங்கள் இன்று
ஏதாவது செய்வோம்
குழுவாக, தனியாக, குடும்பமாக
நண்பராக இணைந்து செய்யும்
சேவை நின்று நிலைக்க
என்பங்கு எதுஎன
தீர்மானித்து இன்றே செய்வோம்
இழப்புகள் பிரிவுகள்
தாங்கமுடியாதவைதான்
அதில் இருந்து மீளவும்,
இனி ஒரு பிரிவும் வராதுகாக்கவும்
இயற்கையுடன் எம் உறவைச் சங்கமித்து
பாலமாக கட்டி வளர்ப்போம் வாருங்கள்
காப்பரண் நாமாக
காத்திரமான பணிகள்
காத்திருக்கிறது.

***யோசப்பாலா***

நன்றி: நமது ஈழநாடு

*26.12.2005*

நீரோடை

தலையங்கம்

எங்களை கைநழுவி விட்டாரோ என்ற ஏக்கம் இறப்புக்களையும், இழப்புக்களையும் சந்தித்தவர்களின் மனங்களில் பதிந்துபோயுள்ளது.

"எல்லோர் துயர்களும் ஒரு துயராக
எல்லா துளிகளும் ஒரு துளியாக உருவெடுக்க"

# துயரத்தில் துணைக்கரம் நீட்டுவோம்

சோகத்தில் ஆழ்ந்து விட்டோம். மனித இழப்புக்கள் இறப்புக்கள் எங்கள் மக்களை பாதித்த விதங்கள் சொல்லில் அடங்க முடியாதவை தாய் பிள்ளையை இழந்த சோகம், பிள்ளை பெற்றோரை இழந்த சோகம், கணவன் மனைவியை இழந்த சோகம், மனைவி கணவனை இழந்த சோகம், உற்றார் உறவினர்கள் இழந்த சோகம் என்பதோடு மட்டுமல்லாமல் பச்சிழம் குழந்தை பாலுக்காக பரிதவிக்கும் நிலை, பசித்தவன் உணவிற்காகவும், முதியவர்கள் துணைக்காகவும், இருக்கின்ற கொஞ்ச உயிரையும் இழக்காமல் இருக்க மருத்துவ உதவியை தேடும் உள்ளங்கள், இருக்கவோ, உறங்கவோ அவதிப்படும் இலட்சக்கணக்கான மக்கள் என்பவைதான் "சுனாமி" பதித்த சுவடுகளாக இருக்கின்றன.

## சுனாமியின் வரவு

எல்லோர் வாயிலும் எல்லா வீட்டு வாசலிலும் கடந்த டிசம்பர், 26-2004 உதிர்ந்த சொல் "சுனாமி" தமிழுக்கோ புதுச்சொல் எம் தாய்நாட்டிற்கோ புது வரவுச்சொல், இந்தசொல் ஜப்பானிய வார்த்தையான 'சுனாமி' தமிழில் 'துறைமுக அலை' என்று பொருள்படும். ஜப்பானிய மொழியில் இரண்டு எழுத்துக் களால் குறிக்கப்படும்; இதன் முதலெழுத் துத்தான் "சு" என்பது 'துறைமுகம்' என்றும் மறு எழுத்தான "னாமி" என்பது 'அலை' என்றும் பொருள்படுகின்றன. தெற்காசியாவில் ஏறக்குறைய 14 நாடுகளை உலுக்கிய இந்த அனர்த்தம் ஒரு நொடிப் பொழுதில் ஏறக்குறைய இரண்டு இலட்சத்து இருபத்தைந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களைக் கொன்று குவித்து கரையோர பிராந்தியங்களை பிணக்காடாக்கியது. இந்த சோகவடுக்கள் இன்னும் மக்களின் கண்களிலும் நெஞ்சங்களிலும் குமுறிக் கொண்டிருக்கின்றன.

## சுனாமி பதித்த சுவடுகள்

வரலாற்றில் மிக கோரமான இயற்கை அனர்த்தத்தை இலங்கை சந்தித்துள்ளது. யாருக்கு யார் ஆறுதல் சொல்வதென்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றோம். இறைவன்

## நாம்பெற்ற பாடம்

இந்த நிலையில் இந்த அழிவு எனக்கும் உங்களுக்கும் உணர்த்துவது என்ன? நோவாவின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளம் மனமாற்ற வாழ்விற்கு அழைத்து நின்றது. நீதிமானாகிய நோவா காப்பாற்றப்பட்டு புதிய சமுதாயம் படைக்க அழைக்கப்பட்டார். ஆனால் இன்று இறந்தவர்கள் அனைவரும் பாவிகளும் அல்ல இருப்பவர்களனைவரும் நீதிமான்களும் அல்ல. மாறாக இந்த நிகழ்வு எம் அனைவரையும் இறைவனைத் தேடவைக்கிறது. நற்செய்தியாளர் மத்தேயு யேசுவின் வார்த்தையை எமக்கு தைரியமூட்டி தருவதை இங்கே நினைவுகூரலாம்.

"அஞ்சாதே நான் என்றும் உன்னோடு" என்ற இறை வார்த்தையே எம்மக்களின் துயரத்தில் துணைகரமாக இருக்கின்றது.

சிறப்பாக தவக்காலத்தில் நுழைந்திருக்கும் எமக்கு இச்செய்தி சிந்திக்கவைக்கின்றது. மாற்றங்கள் என்பது மனமாற்றம் மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட மக்களை மறுவாழ்விற்கு கொண்டு வருவதும், அவர்களின் துயர் துடைப்பதும் உன்னதமான நிகழ்வே.

அருள்திரு. பெனடிக்ற் இயூஜின் அ.ம.தி.
ஆசிரியர் – நீரோடை
*தை - மாசி, 2005*

சொல்லும் செயலும் முரண்படுகின்றதான
இன்றைய காலத்து நிலைமை, மனித
உரிமை விவகாரத்திலும் மெய்யாக்கப்படுகின்றது.
மனித உரிமையிலும், மனித உரிமை அமைப்புகளிடையேயும்

உண்மை அமைப்பு –
போலியமைப்பு என வகைப்படுத்திப் பார்க்க
வேண்டிய நிலை.
அரச சார்பு மனித உரிமை அமைப்புகள்,
அரசு சார்பற்ற மனித உரிமை அமைப்புகள்,
மக்கள் சார்பு மனித உரிமை அமைப்புகள்
என அமைப்புகள் மட்டும் வெவ்வேறல்ல;

அவைகளின் மனித உரிமை
தொடர்பான கருத்தியல் (Ideology)
செயற்பாடு என்பவற்றிலும் வேறுபாடுகள் காணமுடிகிறது.
இந்த முரண் நிலைமைகளை புரிந்துகொள்ளாத
வரை, இந்த முரண்களை உடைத்து சமநிலை
எய்தப்படாதவரை, மனித உரிமைகள் என்ற
பதமும் பத்தோடு பதினொன்றாக எங்கள்
அகராதிக்குள் – ஆணைக்குழுக்களுள் – பெயர்ப்
பலகைகளுக்குள் மட்டும் அடக்கப் படுவதே விதியாகும்.

*பேராசிரியர் என். சண்முகலிங்கம்*

## தெளிவு தலையங்கம்

கடல் பேரலைகள் (26.12.2004) தெற்காசிய நாடுகளின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கி ஒரு இலட்சத்தி 50 ஆயிரத்திற்கும் அதிகமான உயிர்களை காவு கொண்டது. அத்துடன் ஜீவனோபாய கடல்தொழில் உபகரணங்களையும் நாசம் புரிந்தது. கோவில்கள் – வீடுகள் – பொது நிறுவன கட்டடங்கள் எனப் பலவற்றையும் துவம்சம் செய்து அவற்றில் உள்ள பொருட்கள் எல்லாவற்றையும் உடைத்தும் நொருக்கியும் சிதைத்தும் இழுத்தும் சென்றது.

இத்தகைய அழிவின் மத்தியில் மயிர் இழையில் உயிர் பிழைத்த மக்களின் அனுபவ பகிர்வுகள் மனதை உருக்கும் ஒன்றாகவே இருக்கின்றது. இந்த ஆழிப்பேரலையால் உறவுகளை இழந்து தனிமையில் இருப்போர் அதிகம். அவர்கள் இனி எமக்கு வாழ்வே இல்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள். கடவுள் மீதும் மதநம்பிக்கை மீதும் சந்தேகம் எழுப்பும் மனிதர்களாகவும் இருக்கின்றார்கள். மற்றும் உடன் பிறப்புக்களையும் மரணபோராட்டத்தில் தவித்த சக மனிதர்களையும் காப்பாற்ற முடியவில்லையே என்ற குற்றப்பழி உணர்விலும் தவிக்கின்றவர்களும் இருக்கின்றார்கள்.

கடற்கோளைத் தடுத்து நிறுத்துவதற்கு யாராலும் முடியவில்லை. உயிர் சேதங்களையும் சொத்தழிப்புக்களையும் குறைத்துக்கொள்ள, சக்தியற்றதாகவே இவ்வுலகம் விளங்குகின்றது. எனினும் இனிவரக்கூடிய பேரலைகளை தடுப்பதற்கு மனிதனிடம் சக்தியுண்டு, அறிவுண்டு அதற்கு நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

கடல்பேரலை கணப்பொழுதில் வந்து சென்றுவிட்டது. இனி வரப்போகின்ற அலை நிலைக்கக்கூடியது. அது கடல் பேரழிவைவிட கொடியதாக இருக்கும். இதற்கு முகம் கொடுக்க ஆயத்தமாக இருப்பதுடன் எதிர்த்துப் போராடவும் அதில் இருந்து மீளவும் சக்தி வேண்டும்.

இங்கு அடுத்துவரக்கூடிய அலை என்று குறிப்பிடுவது விரக்திநிலை – குற்றப்பழியுணர்வு – தனிமையுணர்வு – மற்றவர்களில் தங்கியிருத்தல் – கவலையை போக்கவென்று குடிபோதையில் மூழ்கியிருத்தல் – முகாம்களில் கற்பழிப்புகள் இடம்பெறல் – சிறுவரிடம் துஷ்பிரயோகமாக நடந்து கொள்ளல் – கல்வி கற்பதற்குரிய வழிவகை திறக்கப்படாமை – போசாக்கு குறைந்துபோதல் – நிவாரணங்களில் பக்கச்சார்பு காட்டல் – தொழில்சார் பிரச்சனை – வறுமை இவ்வாறு அநேக அலைகள் தோன்றியுள்ளது.

இவற்றின் மத்தியில் எமக்குப் பாரிய பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நேரத்தில் சக மனிதர்களின் ஆரோக்கிய உதவியும், ஆறுதல் வார்த்தைகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசியம். ஏனெனில் இன்று பொதுவாக தம்மைத் தனியே ஒதுக்கி வைத்துக்கொள்ளும் போக்கு வேகமாக வளர்ந்து வருகின்றது. இதனால், தற்கொலையும் மன உழைச்சலும் அதிகரிக்கின்றது. இத்தன்மை பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதி மக்களிடம் அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு. இதனால், அவர்களைப் பாதுகாக்க எம்மையே அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும்.

"சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழ்வது அதாவது, தனிப்பட்ட உணர்ச்சிகளைத் தெரிவிப்பதற்கோ, நெருக்கமான உறவை வைத்துக்கொள்ளுவதற்கோ ஒருவருமே இல்லை என்பது வியாதியை அல்லது மரணத்தை உண்டாக்கும்" இவ்வாறு டாக்டர் டேனியல் கோல்மன் கூறுகிறார்.

ஆகவே, இயற்கை தந்த துன்பம் நீங்கிப்போக, இனி தாங்களே தங்களுக்குள் துன்பத்தினை உருவாக்கிக் கொள்ளுகின்ற நிலை வரப்போகிறது. இனிவரும் காலங்களில் மனித வாழ்வு கெட்டதாகவே இருக்கும் என அச்சப்பட வைக்கின்றது. காரணம் "மனிதனுடைய செயல்கள் இந்த உலகையே மாற்றிவிடலாம், இதனால் நாம் இப்பொழுது காண்பது போல், உயிர் வாழும் இடமாக அது இராமற்போகலாம். ஏனெனில் இப்போது கூட, சாப்பிட போதுமான உணவின்றி ஐந்தில் ஒருவர் வறுமையிலும் கொடிய வறுமையில் வாழ்கின்றார், பத்தில் ஒருவர் கடும் ஊட்டச் சத்துக்குறைவால் அவதியுறுகிறார்கள்" என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

# அடுத்துவரும் அலை கொடியதாகும்!

இறைவன் மனிதனை படைத்து சுயமாக இயங்கவிட்டார். தெரிந்தெடுக்கும் உரிமையைக் கொடுத்தார். உலகைப் பாதுகாக்க கட்டளை கொடுத்தார். ஆனால், மனிதன் இந்த உரிமையைத் தவறாகப் பயன்படுத்துகிறான். இதனால் துன்பம் அதிகமாக ஏற்படுகிறது.

இயற்கை மனிதனுக்கு பகைவனாக மாறிவிட்டது. காரணம் மனிதன் இயற்கைச் சமநிலையை கெடுத்தமையே ஆகும். இறைவன் வெறும் மூளை இல்லாத 'ரோபோக்களாக' மனிதனைப் படைக்கவில்லை. சிந்திக்கின்ற ஆற்றலுள்ள மனிதனாகவே படைத்தார். ஆனால், மனிதன் இந்த சிந்தனா சக்தியைத் தவறான வழியிலே பயன்படுத்தி இயற்கையை மாசுபடுத்துகிறான். அதனால் தான் கடல் பேரலை – பூமி அதிர்ச்சி – வெப்பம் – சூறாவளி – எரிமலை – வெள்ளப்பெருக்கு போன்றன ஏற்படுகின்றது. இங்கு யாரோ செய்யும் குற்றத்தினால் குற்றம் செய்யாதவர்களும் பாதிக்கப்படுகின்ற அவலமும் நிலவுகின்றது.

இன்று காணப்படுகின்ற அநேக துன்பங்களுக்கு மனிதனின் கட்டுப்பாடற்ற போக்கே அடித்தளமாக இருக்கிறது. போர் – கலவரம் – வறுமை – குற்றச்செயல் – பஞ்சம் – நோய் என்று நீள கூறிக்கொண்டே போகலாம். ஆனால், வயோதிபத்தினாலும், மரணத்தினாலும் ஏற்படும் துன்பங்கள் இயற்கையானது. ஏனெனில் இவை மனித தவறினால் உண்டாவது இல்லை. இது இவ்வாறு இருக்கும்போது, 'இறைவன் அன்பில்லாதவர்' என்றும், 'மனித துன்பங்களை நீக்காது மௌனமாக உறங்கிக்கொண்டு இறைவன் இருக்கிறார்' என்றும், விமர்சிப்பது சரியானதா?

மாறாக இறைவன் மனிதர்களில் கரிசனை உள்ளவராக இருக்கிறார் "கடவுள் அன்பாய் இருக்கிறார், நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது" (1யோவான் 4:8-9)

ஆகவே, இழப்புக்கள் - சோர்வுகள் எம்மைச் சூழ்ந்து நெருங்கி வரும் போது, இறை நம்பிக்கையை தளரவிடாது வாழ்வை முன்னெடுத்து, இத்தவக் காலத்தை உரிய முறையில் அனுசரித்து, அழிவின் மத்தியில் ஓர் ஆக்க சக்தியுள்ளவர்களாக புது உலகைப் படைப்போம்!

**வி. பி. தனேந்திரா**
**ஆசிரியர் – தெளிவு**
*தை – மாசி, 2005*

# நமது ஈழநாடு தலையங்கம்

இயற்கை இப்படியொரு கோரமான அனர்த்தத்தை விளைவிக்கும் என எவரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

இயற்கையின் இந்தச் சீற்றத்துக்கு காரணம் ஏதுவாக இருந்தாலும் அதன் கோரக் குமுறல் ஏற்படுத்திய தாக்கங்களின் எதிரொலிகளும், அதனால் ஏற்பட்டுள்ள பேரழிவுகளும், உயிரிழப்புகளும் மனித இதயங்களில் ஏற்படுத்தியுள்ள அதிர்ச்சியும், வேதனையும், வலியும் வார்த்தைகளால் எழுதமுடியாதனவாகும்.

சில நாட்களின் முன்னர்தான், தொடர் – அடைமழை காரணமாக வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட இயற்கையின் அனர்த்தம் மக்களுக்கு ஏற்படுத்திய துன்ப துயரங்களில் இருந்து மீள்வதற்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் கடலன்னையின் சீற்றம் மற்றொரு பேரழிவுக்கும் காரணமாகியுள்ளது.

இப்படியொரு அவலம் ஏற்படுமென எவரும் எதிர்பார்த்திருக்க முடியாத சூழலில் தன்னை நம்பியே வாழும் மக்களை கடலன்னையின் கோபம் காவுகொண்டுவிட்டதே....!

கொல்லப்பட்டவர்கள், கடலால் அள்ளுண்டு அடித்துச் செல்லப்பட்டவர்கள், அங்கவீனமுற்று காயமுற்று அவலப் படுபவர்கள், உறவுகளை உடைமைகளை, உறைவிடங்களை பறிகொடுத்து திக்கற்றுஏதிலியராக நிற்பவர்கள் இந்தோனேஷியர்கள், தாய்லாந்துக்காரர், இந்தியர்கள், பங்களாதேஷ்காரர், இலங்கையர்கள் எவராய் இருந்தாலும் மனிதர்கள்.......

அவலத்திற்கும் துயரத்திற்கும் ஜாதி, மத, தேசிய பேதமே கிடையாது.

கண்ணீரின் நிறமும், இழப்பின் துயரமும் மரணத்தின் வலியும் எல்லோருக்கும் ஒன்றே.

இயற்கையின் சினமும், சீற்றமும் எல்லோரையும் ஈவிரக்கமின்றி ஒரே மாதிரியே பலிவாங்கியுள்ளது.

கரை தழுவி கதைபேசிச் செல்லும் அலைகளுக்கு கரையோர மக்களைக் காவுகொள்ளும் வெறி ஏற்படக் காரணம் என்ன?

அப்பாவி மக்கள் அலையோடு ஒன்றாய் அலைந்து அலைந்து அன்றாடம் வாழ்வோடு போராடும் மக்களுக்கு அலைகளே துரோகம் செய்துவிட்டதே.

மருத்துவமனைகளில் கொண்டு வந்து அடுக்கப்பட்டுள்ளஅந்தப் பிஞ்சுக் குழந்தைகளையும், சிறுவர்களையும் கடலம்மா இப்படி ஈவிரக்கமற்று தண்டித்துக்கொள்ள அவர்கள் செய்த பாவம்தான் என்ன?

கடலை நேசித்ததும், அலைகளை ரசித்ததும் குற்றமா?

கடற்கரையில் வந்தொதுங்கும் சடலங்கள் ஊடாக இயற்கை நமக்குக் கூறும் செய்திதான் என்ன?

மனித சக்திக்கு அப்பாற்பட்ட அனைத்தையும் மேலாதிக்கம் செய்யும் வலு தனக்கேயுரியது என உணர்த்தவா விரும்புகிறது?

எதுவானாலும் பொங்கிக் கொந்தழித்தும் பிரவேசித்து கடல் நீரின் உப்பை விடவும், கரையோர மெங்கும் இழப்புக்களின் வலிதாங்காது அலறி - கதறித் துடிக்கும் மக்களின் கண்ணீராய் உதிரும் உப்பின் கனம் கனமானது.... கரிப்பானது.

இயற்கையால் எப்போதுமே சபிக்கப்பட்ட மண்ணாக இருக்கும் கிழக்கு இந்தமுறையும் கடற் கொந்தழிப்பால் மேலும் பழிவாங்கப்பட்டுள்ளது. வடக்கு கரையோரத்தை ஆழியின் ஆவேசக் குமுறல் துவம்சம் செய்துள்ளது... தெற்கிலும், மக்களின் அவலம் அலையோசையை மிஞ்சிக் குமுறிக்கொண்டிருக்கிறது.

## இயற்கை வெல்லலாம்
## ஆனால்
## மனிதம் தோற்கக்கூடாது...

திசைப் பறவைகள் யாவும் துயரச் செய்திகளையே சுமந்து வருகின்றன.

இந்தச் சோகங்களிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் இயல்பு வாழ்வுக்கு புத்துயிர்கொள்ள வைப்பது எப்படி?

இதுவே இப்போதுள்ள பாரிய பிரச்சினை.

சோகங்களைக் கருணையாலும், அனுதாபத்தாலும் நிரந்தரமாக நீக்கிவிட முடியாது.

ஆனாலும், அவர்களை ஆறுதல்படுத்த அதுவும் தேவை.

அதற்குமேலும் மிக அவசியமாக அவர்களுக்குத் தேவையானவை அநேகம். அவர்களுக்கான அத்தியாவசிய நிவாரணப் பணிகள், சுகாதாரத் தேவைகள், வாழ்வாதார மூலங்கள், உடனடி வதிவிடங்கள்... எனப் பலதையும் கவனிக்கவேண்டியுள்ளது ஏனைய மக்களின் பொறுப்பேயாகும்.

சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காதவராக நாம் இருக்கலாமா?

அந்த மக்களுக்கு புதுவாழ்வளிக்க எழுவோம். எமது மனிதத்தை நாம் நிரூபிப்போம். இயற்கை அவர்களை அழித்தாலும், இயல்பு வாழ்வை அவர்களுக்கு மீள உருவாக்கிக் கொடுத்து நாம் அவர்கள் ஏதிலிகள் அல்ல என்பதை உணர்த்துவோம்.

அதே சமயம் –

இயற்கையின் சீற்றத்தால் இழப்புக்களை பல வகையிலும் சுமந்து நிற்கும் மக்களுக்கு எமது ஆதரவையும் அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன், தம் இன்னுயிரை இழந்தோர்க்கு அஞ்சலியையும் செலுத்துகிறோம்.

ஆசிரியர் – நமது ஈழநாடு


*27.12.2004*

# சுனாமியும் புனைவுகளும்

அப்துல் றஸாக்
அக்கரைப்பற்று

ஒரு அழிவிற்குப் பின் நிகழும் ஆரம்பம் அவ்வழிவின் சுவடுகளை இல்லாமற் செய்வதோடு, அழியும்போது அஃதிருந்த ஆரம்ப நிலையையும் விஞ்சி விடுகிறது. இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னே ஜெர்மனி கட்டியெழுப்பப்பட்டதும், ஜப்பான் விஸ்வரூபம் கொண்டெழுந்ததும் அழிவின் பின் நிகழ்ந்த ஆரம்பங்களே. இவ்விழிப்புணர்வு சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக மட்டுமன்றி கலாசார பண்பாட்டுத் தளங்களில் நிகழும் துரித முன்னேற்றத்திற்கும் காரணமாக அமைவதுண்டு.

படைப்பிலக்கியச் சூழலிலும் இதன் செல்வாக்கை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது. எங்கோ ஒரு சூழலில் ஏற்படும் மாற்றம் தெரிந்தோ தெரியாமலோ நிகழ்ந்துவிட்ட ஒரு படைப்பின் அல்லது ஒரு புனைவின் வழியே நிகழ்வது என்ற உண்மை சற்றுத் தாமதித்தேனும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே. ஓரிரு வருடங்களுக்கு முன் வெளிவந்த Day After Tomorrow (நாளை மறுநாள்) என்கின்ற திரைப்படத்தை பார்த்த எமக்கு அதன் புனைவு சற்று மிகைப்படுத்தப் பட்டதாக இருந்திருக்கக்கூடும். எனினும் 26.12.2004 அன்று கொதித்துக்கொண்டு மேலெழுந்த கடலலைகள் அப்புனைவை விஞ்சி நின்றதான ஆச்சரியம் இன்னும் எம்மை விட்டு அகலவில்லை. சங்கங்கள் கடற்கோளினால் அழிந்ததென்ற தமிழ் வரலாற்றுக் குறிப்புகளும், ஜப்பான் போன்ற நாடுகளில் அடிக்கடி நிகழும் பேரலை அனுபவங்களும் இப்படியானதொரு நிகழ்வை (நாம் அனுபவிக்கும் வரை இது ஒரு புனைவே) மூன்று தலைமுறைக்கும் பொதுவான மறக்கமுடியாத சுவடுகளை அண்மைய அனர்த்தம் நிகழ்த்தி விட்டுப் போயிற்று.



இவ்வனர்த்தத்தின் பிந்தைய சமூக, அரசியல், பொருளாதார கட்டமைப்பு நடவடிக்கைகள் பல்வேறு மட்டங்களிலும் பேசப்பட்டுக்கொண்டு வருகின்ற சூழலில் நலிவடைந்து போயிருக்கின்ற ஈழத்துப் படைப்பிலக்கியச் சூழலுக்கு மேலும் நலிவு சேருமோ என்கின்ற அச்சம் மேலோங்கத் தொடங்கியிருக்கிறது.

எம்மிடையே பல நினைவுச் சின்னங்களை தோற்றுவித்துவிட்டுக் கடந்துள்ள யுத்தம் பற்றிய பதிவுகளையே தமது படைப்பிலக்கியச் சூழலுக்குள் முழுதாக இன்னும் கொண்டுவந்து சேர்க்காத நிலையில் நிகழ்ந்த இவ்வனர்த்தம் நமது படைப்புகளினால் சுமக்க முடியாத பெருஞ்சுமையே. இடையிடையே படிக்கக் கிடைத்த ஒருநூறு கவிதைகளுக்குள்ளே தேறுகின்ற ஓரிரண்டு கவிதைகளிலேயே கடலின் விம்பத்தை தரிசிக்கக் கிடைத்ததை மட்டும் பெரிதாக பறைசாற்றிக்கொள்ள முடியவில்லை. சிறுகதை, நாவல் போன்றவற்றின் நிலையை கேட்கவே வேண்டாம். பொதுவான பார்வையில்கூட கவிதை, சிறுகதை ஓரளவு தப்பித்துக் கொண்டாலும் நாவல் போன்ற பெரிய படைப்பிலக்கிய வடிவங்களில் நாம் பெருந்தோல்வியே. இந்நிலையில் நமது படைப்பிலக்கிய அல்லது புனைவு முயற்சிகள் பற்றிய மீள்பார்வைகள் அவசியமானதே.

கிழக்கிலங்கைச் சூழலைப் பொறுத்தவரை கடல்கோள் அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னும் பின்னும் ஏற்பட்ட மனநிலை சார்ந்த எண்ணங்கள், சிந்தனைகள் பல்வேறு புனைவுகளை நாள்தோறும் தோற்றுவித்துக் கொண்டிருப்

பதை அவதானிக்க முடிகிறது. இவை பின்பு ஏற்படவிருக்கும் உன்னதமான நமது படைப் பிலக்கியத் தோற்றத்திற்கு எவ்வகையிலேனும் உதவக் கூடும். இப்புனைவுகள் இங்கு இன்று வரையிலும் எச்ச சொச்சமாக நீடித்து நிற்கும் வாய்மொழி இலக்கியப் பாரம்பரியத்திற்கு மிக நெருக்கமான சூழலில் வைத்து நோக்கப்படத்தக்கதாகவும் அமைந்து காணப்படுகின்றன. இத்தகைய புனைவுகளில் சிலவற்றை எடுத்துக் கூறுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.



### பாம்புகள் தோன்றியமை

கடல் அனர்த்தம் ஏற்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு மட்டக்களப்பு வாவியில் பாம்புகள் எண்ணிக்கையில் பெருக்கமெடுத்துக் காணப்படுவதாக கூறப்பட்டது. இது பற்றிக் கூறிய ஒரு கோயிலின் பூசாரி அவர்கள் "ஒருநாள் இரவு கோயிலின் முற்றத்தில் நான் நின்று கொண்டிருக்கும் போது வானில் ஒரு ஒளிக்கீற்றுத் தெரிந்தது. வால்வெள்ளி போன்ற அவ்வொளிக்கீற்று கண்மூடி மறையும் நேரத்திற்கு வேகமாகக் கடந்து அருகிலிருந்த வாவிக்குள் விழுந்து மறைந்து விட்டது. மறுநாளிலிருந்துதான் பாம்புகள் கூட்டங் கூட்டமாக வாவியில் தென்பட்டன" என்றார். இப் பாம்புகள் ஒன்றையொன்று பின்னிக்கொண்டு பந்துகள்போல சுருண்டு கிடந்தன வென்றும், அவை பல்வேறு நிறங்களின் கலவைகளாக இருந்தனவென்றும் பல தகவல்கள் வெளிவந்த வண்ணமிருந்தன. இவற்றைப் பார்ப்பதற்கு மக்கள் கூட்டம் ஒதுங்கியபோதும் இதனைத் தெளிவாகக் கண்டறிந்த ஒருவரையேனும் சந்திக்க முடியாமற் போயிற்று. தவிர, மூன்றாவது தினம் இப் பாம்புகள் யாவும் திடீரென மாயமாய் மறைந்து விட்டன என்றும் பேசப்பட்டன. கடல் அனர்த்தம் ஏற்பட்டதன் பின்பு இப்பாம்புகளின் வருகை இவ்வனர்த்தத்திற்குரிய முன் சமிக்ஞை என்று கூறப்பட்டது. அனர்த்தத்தின் பின்னர் சுமார் ஒரு மாதம் கடந்த நிலையில் மீண்டும் வாவியில் பாம்புகள் பெருக்க மெடுத்திருப்பதாக தகவல் பரப்பப்பட்டு பரபரப்பாக எங்கும் பேசப்பட்டது. ஒரு வெள்ளிக்கிழமை தினம் இதுபற்றிய ஜிம்மா பிரசங்கம் ஒன்றும் நிகழ்த்தப் பட்டது. இப்பாம்புகள் வெளிப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குப் பின்னர் இன்னுமொரு கடல் அனர்த்தம் ஏற்படலாம் என்று சில மக்கள் இதனை நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

### கடற்கன்னிகள் தோன்றியமை

அக்கரைப்பற்று 40 ஆம் கட்டை எனுமிடத்தில் ஒரு இராணுவக் காவலரண் காணப்படுகிறது. "கடல் அனர்த்த தினத்தன்று அக்காவலரண் அருகே நான்கைந்து இராணுவச் சிப்பாய்கள் (STF) நின்று கொண்டிருந்தார்கள். அப்போது அழகிய தோற்றமுடைய மூன்று பெண்கள் அச்சிப்பாய்களை கடந்து வீதியால் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் அழகில் மதிமயங்கிய அச்சிப்பாய்கள் அப்பெண்களையே பார்த்துக்கொண்டு நின்றார்கள். கொஞ்சம் தொலைவு சென்ற அப்பெண்கள் மூவரும் திரும்பிப் பார்த்தார்கள். சற்றைக்குள் அவர்களது அழகிய முகங்கள் பாம்பின் முகங்களைப்போல மாற்றம்பெற ஆரம்பித்தன. அவர்களின் உடல் மீனின் உடலைப் போன்ற தோற்றத்தில் மின்னின. அருகில் இருந்த கடலுக்குள் மிக வேகமாகச் சென்று அவர்கள் இறங்கிக் கலந்தார்கள். அடுத்த கணமே மிக ஆவேசமாய்ப் பொங்கிக்கொண்டு கடலலைகள் கரையை நோக்கி வந்தன" இதனை நேரில் கண்டது போன்ற பிரமையுடன் ஒரு வயது முதிர்ந்த பெண்மணி கூறினார். பின்தான் அதனைக் காணவில்லையென்றும் கேள்விப்பட்ட விடயமே என்றும் கருத்துத் தெரிவித்தார்.

### சந்நியாசி கூறிய ஆரூடம்


இதுபற்றிக் கூறிய ஒருவர் "சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட தினத்தன்று மிக அதிகாலையில் நாட்டின் பல பாகங்களில் ஒரு சந்நியாசி போன்ற தோற்றமுடைய ஒருவர் அனர்த்தம் பற்றியே கூறித் திரிந்திருக்கின்றார். இன்று கரையோரங்களில் ஏதோ வேண்டாத ஒன்று நிகழப் போகிறது என்றவாறாக மலைநாட்டுப் பகுதிகளில் அங்குமிங்கும் அலைந்திருக் கின்றார். புராதன மனிதர்களின் ஆடைபோன்ற மேலங்கி அணிந்திருந்த இவர் நீண்ட தாடி கொண்டவராகவும் இருந்திருக்கின்றார். பசிய பச்சை நிறம் கொண்ட சுருக்குப்பை ஒன்றும் இவர் கையில் இருந்திருக்கின்றது" மேலும் இது பற்றிக் கூறிய ஒரு மலைப்பிரதேச முஸ்லிம் பிரமுகர் ஒருவர் "அவர் ஹயாத்து நபியாக இருக்கலாம். இவரது கையில் இருந்த பைக்குள் இருந்தது உலகம் அழியும் வரைக்கும் உயிர்வாழக்கூடிய சஞ்சீவித் தைலமாக இருக்கலாம்" என்றார். (இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவம் ஒன்று இவரது கூற்றுக்கு காரணமாக இருக்க வேண்டும்.)

### கடலின் இடையே ஒருவர் நடந்து சென்றமை

பாரிய கடலலைகள் ஊருக்குள் பிரவேசித்தபோது சில குறிப்பிட்ட இடங்களில் கடலுக்குள் நீர்மட்டம் குறைந்து நிலம் தெரிந்திருந்தது. இதிலும் குறிப்பாக அட்டாளைச்சேனைப் பகுதியில் இரண்டாம் உலக மகா யுத்த காலத்தின் போது நீரில் மூழ்கிய ஒரு பாரிய கப்பல் முழுத்தோற்றத்துடன் வெளித்தெரிந்தது. இவ்வாச்சரியத்தைக் கண்ட சில பொதுமக்கள் விபரீதம் புரியாது அக்கப்பலை நோக்கி ஓடிச் சென்றனர். அப்போது தங்களுக்கு முன்னே கப்பலருகே ஒருவர் மிகவேகமாக சென்று மறைவதை தான் கண்டதாக ஒருவர் கூறினார். அந்நபர் மிக அழகிய தோற்றம் கொண்டவராக இருந்தாரென்றும் இதைக் கண்டபோது தான் பின்வாங்கி விட்ட தாகவும் கொஞ்ச நேரத்தில் அவ்விடத்தை கடல் மூடிவிட்டதென்றும் அவர் கூறினார்.

### கோடு வரைந்த பெரியார்

இது பற்றிய சம்பவமானது கடல் அனர்த்த தினத்தன்று கடற்கரை யோரத்தில் மீன் வாங்குவதற்காக பலர் குழுமியிருந்தனர். தூரத்தே திடீரென எழும்பிய அலைப்பிரவாகத்தை




Design & Print. Judeson. 0777 446973